# வேரில்லாத மரங்கள்



சிவசங்கரி

நகர், சென்னை

# வேரில்லாத மரங்கள்

பஸ் ஒன்று தெரு முனையில் துவங்கி, கடைசிவரை விடாமல் ஹாரனை நாராசமாய் ஒலித்துக் கொண்டு போனதில் விழிப்புக் கொடுத்துவிட்டது.

சட்...

நிம்மதியாய் உறங்கவிடாமல் தினமும் இது ஒரு அவஸ்தை...

பஸ் ஹாரனைத் தொடர்ந்து, அடுத்த கட்டடத்தில் இயங்கிவரும் ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப்பில் யாரோ இரும்புத்தகட்டைச் சுத்தியால் ஓங்கித் தட்டும் 'டொம்' சத்தமும், எங்கோ ஒரு குழந்தை வீராட் வீராட்டென்று நாக்கு இழுத்துக்கொள்ள அலறுவதும் செவிப்பறையைத் தாக்க, மாதவன் அவசரமாய் தலைகாணிக்கு அடியில் தலையை நுழைத்து, ஒலிகள் உண்டாக்கிய அவஸ்தையைக் குறைக்கப் பார்த்தான்.

ம்ஹூம்... பலன் இல்லை...

பஞ்சுத் தலைகாணி கவசத்தையும் ஊடுருவிக்கொண்டு சத்தங்கள் காதில் நுழைந்து, மூளையைத் தொட்டு, விழிப்புணர்வை அதிகமாக்கினதில், தூங்கினது போதும் என்று அலுப்புடன் தீர்மானித்தான்.

'நான் மட்டும் மந்திரியானால் முதலில் இந்த மாதிரி காட்டுத்தனமாய் ஹாரனை ஒலிக்கும் ஓட்டுநரின் ட்ரைவிங் லைசென்ஸைப் பறிமுதல் செய்வேன்... ஊருக்குள் ஆட்டோ மொபைல் ஒர்க்ஷாப் இருக்கக் கூடாது என்றும், காலை வேளையில் குழந்தைகளை பெற்றவர்கள் அழவிடக் கூடாது என்றும் சட்டம் கொண்டுவருவேன்' என்று எரிச்சலுடன் நினைத்தவன் தலைகாணியைத் தள்ளிவிட்டு, கண்களை மூடியபடியே எழுந்து உட்கார்ந்தான்.

இரண்டு உள்ளங்கைகளையும் சூடுபறக்கத் தேய்த்து கண்களில் ஒற்றிக் கொண்டான். உள்ளங்கைகளை நேராகப் பிடித்தபடி கண்களைத் திறந்தான்.

பார்வை உள்ளங்கை ரேகைகளில் விழுந்தது.

நினைவு தெரிந்த நாளாய் அவனுக்கு இப்படி ஒரு பழக்கம்.

சின்ன வயசில் ஆயா - அப்பாவைப் பெற்ற பாட்டி - சொல்லித் தந்த வழக்கம், இன்றைக்கும் விட்டுப் போகாமல் இருக்கிறது.

ஆயாவுக்கு இவன் ஏகச் செல்லம். மூத்தபிள்ளை மூலம் பிறந்திருக்கும் முதல் பேரன் என்று சலுகைகள் எக்கச்சக்கம்...

பெற்றவள் என்கிற பேர் மட்டும்தான் அம்மாவுக்கு... மற்றபடி குளிப்பாட்டுவது, சோறு ஊட்டுவது, அலங்கரிப்பது, தூங்க வைப்பது எல்லாம் ஆயாதான்...

மாதவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது...

சனிக்கிழமை ஆனால் வெற்றிலை. மஞ்சள் போட்டுக் காய்ச்சின எண்ணெய்க் கிண்ணத்தை கையில் எடுத்துக் கொண்டு, 'என் ராசா இல்ல, என் தங்கம் இல்ல, என் கண்ணு



இல்லை,' என்று ஆயா பின்னால் வர, இவன் தோட்டத்து மரங்களைச் சுற்றிச்சுற்றி ஓடி, அவள் பிடிக்கு அகப்படாமல் டபாய்ப்பான்...

பட்டம் வாங்க நாலணா, அடுத்தவார அம்மன் கோவில் திருவிழாவில் பஞ்சுமிட்டாய், தீபாவளிக்கு ஸில்க்ஷர்ட் என்று வாக்குறுதிகள் ஏகமாய்ப் பெற்று ஒரு வழியாய் அவள் இஷ்டப்படி எண்ணெய் தேய்த்துக் குளித்து முடிப்பதற்குள் வீடு இரண்டுபட்டுப்போகும்...

ஆயா ராமாயண மகாபாரதங்களை நீளநீளமாய், ஸ்வாரஸ்யமாய்க் கூறி சோறு ஊட்டுவாள். ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்கனர்களின் வீரதீர பிரதாபங்களை உணர்ச்சி பொங்க அவள் விவரிக்கையில், நேரில் பார்க்கிற துடிப்பு உண்டாகி, மாதவனுக்குக் கண்கள் கலங்கிவிடும்...

ராத்திரி ஆனால் படுக்கை ஆயாவுக்குப் பக்கத்தில்தான்; விரித்த பாயில் படுத்து அவள் இடுப்பில் குறுக்காக ஒருகாலை போட்டுக்கொள்வான். 'கதை சொல்லு ஆயா' என்று கேட்டு, அவள் ராஜா கதை சொல்ல ஆரம்பித்ததும் இவன் மனசும் கற்பனையில் இறங்கிவிடும்.

பெரிய மண்டபம்...

மந்திரி பிரதானிகள் நிறைந்த கொலு மண்டபம்...

நவரத்தினங்கள் பதித்த கிரீடம், முத்துக் குண்டலங்கள் ஜொலிக்க...

''ராஜாதிராஜ, வீராதிவீர, பராக்ரம மாதவன் ராஜா பராக்...''

''யாரங்கே, மன்னர் வந்துவிட்டார்; நாட்டியம் ஆரம்பமாகட்டும்...''

ஆயாவின் செப்பிப்போன குரல் காதில் விழுந்தபடியே இருக்க உறக்கத்தில் ஆழ்ந்துபோன நாட்கள் ஏராளம்...

காலையில் எழுந்ததும் உள்ளங்கைகளைத் தேய்த்து, கண்களில் ஒற்றி, பிறகு விழிகளைத் திறக்கும் பழக்கம் அப்போது ஆயா சொல்வதைப் பார்த்து இவனும் செய்யத் தொடங்கியபோது உண்டானதுதான்...

"வலது, இடது உள்ளங்கைலே லட்சுமியும், சரஸ்வதியும் இருக்காங்க ராஜா... அதனால்தான் 'கண்ண விழிச்சதும் உள்ளங்கைகளைப் பார்க்கணும்'னு பெரியவங்க ஒரு பழக்கத்தை வச்சிருக்காங்க... பொழுது நல்லபடியா போகணும்னு வேண்டிக்கிட்டு, உள்ளங்கையப் பாத்தம்னா நாள் பூரா லட்சுமி, சரஸ்வதியோட கடாட்சம் இருக்கும்னு சொல்வாங்க..."

லட்சுமி, சரஸ்வதியின் அருள் கிட்டியதோ இல்லையோ, ஆயா சொல்லித்தந்து செய்ய ஆரம்பித்தது, தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்கிற பழமொழிக்கு சாட்சியாய் இன்றைக்கும் இருந்துகொண்டுதான் இருக்கிறது!

மாதவன் பெரிசாய் கொட்டாவி விட்டபடி எழுந்தான்.

மேஜைமேல் இரவு கழற்றி வைத்திருந்த கைக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்தான்.

ஆறேகால்...

ப்ச்... எட்டு வரைக்கும் தூங்கினால்கூடத் தட்டிக் கேட்க ஆள் இல்லை - ஆனாலும் பாழும் உறக்கம் வந்தால்தானே?

சுற்றுப்புற சத்தங்கள் ஒரு பக்கம் என்றால், கிராமத்தில் ஆயாவிடம் வளர்ந்ததில் ஆறு மணிக்கெல்லாம் விழிப்பு கண்மடலைத் தட்டி உட்கார வைத்து விடுகிறதே, அதை என்ன செய்ய?



"பொழுது விடிஞ்சு தூங்கினா, வீட்டுல தரித்திரம்தான் தாண்டவமாடும்... எந்திரி ராஜா... மொகத்தக் கழுவிகிட்டு, படிக்க உக்காரு... என் தங்கமில்ல..."

ஒரு நாளைக்கு நூறு தரமாவது 'என் தங்கமில்ல, என் செல்லமில்ல' என்று ஆயாவுக்கு அவனைக் கொஞ்ச வேண்டும் - ஸ்னேகிதர்கள் எதிரில் சீராடினால் அவர்கள் 'என்னடா பொட்டைப் பிள்ளையாட்டம் இப்படிக் கொஞ்சறாங்க?' என்று கேலி பண்ணுவார்கள் என்பதால், நண்பர்கள் கூட இருக்கையில் ஆயாவை சந்திப்பதையே அவன் தவிர்க்கப் பார்ப்பான்.

மீறிப்போய் "என்ன ஆயா நீ - என் ஃப்ரெண்ட்ஸ் நடுவுல செல்லம் கொஞ்சாதேனு சொன்னா காதுல வாங்க மாட்டேன்றியே..." என்று கத்தின நாட்களும் உண்டுதான். ஆனால், எதற்கும் ஆயா மசியமாட்டாள். "போக்கத்தவனுக கேலி காட்டறாங்கறதுக்காக என் பேரனை நா கொஞ்சாம இருக்க முடியுமா? என் பேரன் எனக்கு ஒஸ்தி..." என்று சிரித்துக் கொண்டே பதில் கூறுவாள்.

ஆயா இருந்தவரைக்கும் அதே சீராடல்தான்... அப்புறம், இவன் எட்டாவது படிக்கையில் ஒருநாள் திடுமென நினைத்த நினைப்பில்லாமல் அவள் போய்ச் சேர்ந்தாள். பெரிசாக ஒன்றும் இல்லை. வெறும் வயிற்றுப் போக்கு... இரண்டு நாளாகவே இருந்திருக்கிறது. ஆயா வாயைத் திறந்து ஒருத்தரிடமும் ஒன்றும் சொல்லவில்லை, மூன்றாம் நாள் கை, கால் வலிப்பு வந்தமாதிரி இழுக்க ஆரம்பித்ததும், அள்ளிப் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். டீஹைட்ரேஷனாம்! உடம்பில் உள்ள தண்ணீர் குறைந்து விட்டதாம். ஸலைன் ஏற்றிக் கொண்டிருக்கையிலேயே,

தப்பின நினைவு திரும்பாமலேயே சாயங்காலம் செத்துப் போனாள்.

ஆயாவின் மறைவுக்குப்பின் பள்ளிப்படிப்பை முடிக்கும்வரை மாதவன் பெற்றவர்களோடு தங்கிப் படித்தான். பின்னர் அப்பா ஊர் ஊராக மாறும் புது வேலையில் சேர்ந்ததும் பட்டிணத்துக்கு வந்து ஹாஸ்டலில் தங்கிப் படிக்க ஆரம்பித்தான்.

சின்ன வயது பூராவும் ஆயாவிடம் வளர்ந்துவிட்டதாலோ என்னவோ ஒற்றைப்பிள்ளையாக இருந்தும் மாதவனுக்கு, அப்பா அம்மாவிடம் அத்தனை ஒட்டுதல் கிடையாது. லீவுக்கு லீவு அப்பா எந்த ஊரில் இருக்கிறாரோ அங்கு போவான்... ஒன்றோ இரண்டோ மாசங்கள் தங்குவான். அதிகம் எதிலும் பட்டுக்கொள்ளாமல், ஒருவித விட்டேத்தியான குணத்தோடு இருந்துவிட்டு லீவு முடிந்ததும் புறப்பட்டு ஹாஸ்டலுக்கு வந்துவிடுவான்...

ஸ்வபாவத்திலேயே மாதவன் அத்தனை கலகலப்புப் பேர்வழி இல்லைதான். 'சைலண்ட் டைப்' என்று முத்திரை குத்தும் பிரிவு...

காகம் ஒன்று ஜன்னல் கதவில் வந்தமர்ந்து கட்டைத் தொண்டையில் 'க்கா...கா' என்று கத்தியது.

பிரஷ்ஷில் பேஸ்டை நீட்டி, வாயில் வைத்துத் தேய்த்தபடி ஜன்னலருகில் வந்து அவன் நின்றதும், காகம் பறந்து போயிற்று.

கீரைக் கட்டுகளைக் கூடையில் சுமந்தபடி செல்லும் பெண்; யார் வீட்டுத் தோட்டத்திலிருந்தோ திருட்டுத்தனமாய் பறித்த செம்பருத்திப் பூக்களுடன் போகும் முதியவர்; சைக்கிளில் பேப்பர்களை சுமந்துகொண்டு வீடுவீடாக



விசிறிவிட்டு ஓடும் பையன்; நாலைந்து எருமை மாடுகள், வைக்கோல் திணித்த எருமைக் கன்று, பொருட்டு கூடை... கால் கயிறு, குவளை சகிதம் 'டுரு... டுரு...' என்று சத்தம் போட்டுக் கொண்டே பின்னால் செல்லும் பால்காரர்; மூன்றாவது வீட்டு வாசலில் குனிந்து கோலம் போடும் இளசு...

இளசு மேல் விழுந்த பார்வை ஒரு சில கணங்களுக்கு வேறு எதன் மேலும் தாவாமல் நிலைத்து நின்றது.

குனிந்து கோலம் போடுபவளை மாதவனுக்குத் தெரியும்தான். அவள் பேர் கோகிலா... வயசு பதினாறோ பதினேழோ ஆகிறது... பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, டைப்பிங், ஷார்ட் ஹாண்ட் கற்றுக் கொண்டிருக்கிறாள்.

நிறைய பேசுவாள், பேச ஆரம்பித்தால் ஓயமாட்டாள், வாயாடி என்று ஒர்க்ஷாப்பில் வேலை பார்க்கும் ஜொனந்தம் சொல்லி மாதவன் கேட்டிருக்கிறான்.

கோகிலாவுக்கும், ஜொனந்தத்துக்குள் இடையில் ஒரு 'இது' இருக்கிற மாதிரிதான் கொஞ்ச நாளாகவே மாதவனுக்குப் படுகிறது...

அந்தப் பார்வை, வேண்டாத சிரிப்பு... அவற்றுக்கு அர்த்தம்தான் என்ன?

நிச்சயம் ஏதோ சமாசாரம்தான்...

கோலம் போட்டு நிமிர்ந்த கோகிலா ஒர்க்ஷாப் பக்கம் திரும்பி ஊடுருவும் பார்வையினால் தேட, 'பார், பார், ஜொனந்தத்தைத் தேடுகிறாள் பார்' என்று மாதவனின் மனசு குரல் கொடுத்தது...

கோகிலா திரும்பி வீட்டுக்குள் போய்விட்டாள்.

இப்போது மாதவனின் கவனம் தெருவோடு போன ஆட்டோவில், அதனுள் பயணித்த பெண்மணிமேல் சென்றது.

நடுத்தர வயசு. நல்ல சிகப்பு.

ஆட்டோ வேகத்தைக் குறைத்து, லாட்ஜைத் தாண்டுவதற்கு எடுத்துக்கொண்ட நொடிகள் கையில்லாத ரவிக்கையையும், காற்றில் அலைந்த செம்பட்டை முடியையும் பார்க்கப் போதுமானதாகவே இருந்தது.

கட்டாயம் வடக்கத்தியப் பெண்மணிதான்...

வாழைத்தண்டு போல கை இருப்பவர்கள் ஸ்லீவ்லெஸ் போட்டால், தனி அழகுதான்.

அது என்னமோ தெரியவில்லை, தலைமுடியைக் குட்டையாக வெட்டி, கையில்லாத ரவிக்கை அணிந்து மென்மையாகச் சிரிக்கும் பெண்களை நினைத்து விட்டால், நெஞ்சுக்குள் வண்ணத்துப்பூச்சிகள் பறக்கத்தான் செய்கின்றன...

'வயசாயிகிட்டே போகுதேடா, மாது, காலாகாலத்துல உனக்குனு ஒருத்தி வந்தாதானே எங்க பொறுப்ப நாங்க செஞ்சு முடிச்ச நிம்மதி எங்களுக்கும் வரும்?... எம்.ஏ. படிக்கணும்னு சொன்னே, பாங்க் வேலை வேணும்னு சொன்னே... ரெண்டும் நடந்திட்டது... இனியும் தனிக்கட்டயா லாட்ஜில தங்கிட்டு, வெந்ததும் வேகாததுமா ஹோட்டல் சோத்தத் தின்னு கஷ்டப்படறது எதுக்கப்பா?...ம்...னு சொல்லு... நாளைக்கே நல்ல பொண்ணா பாத்து முடிச்சிடறோம்...'' என்று ஊருக்குப் போகும்போதெல்லாம் அம்மா புலம்பவே செய்கிறாள்...

அம்மா கூறும் 'நல்ல பெண்ணை' - முகத்தில் மஞ்சளும், எண்ணெய்த் தலையும், பூவுமாய் - நினைத்தாலே எரிச்சல்தானே நமநமவென்று படர்கிறது!

''சார்...''



மாதவன் பார்வையை குரல் வந்த திசையில் திருப்பினான்.

துரை...

அந்த லாட்ஜில் தங்கியிருக்கும் இவனைப் போன்றவர்களின் தேவைகளை கவனிக்கும் எடுபிடி ஆள்...

கீழே நின்றிருந்தவன் மாதவனைப் பார்த்துக் கத்தினான்.

''எழுந்துட்டீங்களா? டீயும், பேப்பரும் கொண்டாரவா?''

மாதவன் சரி என்று தலை அசைத்துவிட்டு அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான்.

அந்த லாட்ஜில், தளத்துக்கு எட்டு அறைகள் வீதம், மொத்தம் பதினாறு அறைகள். இவன் அறை மாடியில்...

வராந்தாவின் கோடியில் எட்டு அறைகளுக்கும் பொதுவாக இரண்டு கழிவறைகள், குளியலறைகள் உண்டு.

மாதவன் பல் விளக்கி, முகம் கழுவிக்கொண்டு, மீண்டும் தன் அறைக்குள் வந்தபோது துரை டீ டம்ளர், பேப்பருடன் காத்திருந்தான்.

டீ டம்ளரை கையில் கொடுத்து துரை கேட்டான்;

''முத்துவேல் சாரை ஆஸ்பத்திரிலே சேர்த்திருக்காங்க தெரியுமா சார்?''

உதட்டை டீ சுட, அவசரமாய் டம்ளரை மாதவன் தாழ்த்தான்.

''முத்துவேலையா? ஆஸ்பத்திரிலியா? எதுக்கு?''

''ஆபீஸ்ல நேத்து திடும்னு ரொம்ப வயித்த வலிக்க ஆரம்பிச்சதாம். டாக்டராண்ட கொண்டு போனதும்

ஆஸ்பத்திரிலே சேர்த்து உடனே ஆபரேஷன் பண்ணனும்னு சொல்லிட்டாராம்...''

அபெண்டிஸைடிஸ்?

முத்துவேல் அந்த லாட்ஜின் கீழ்த் தளத்தில் இருப்பவன். பல்லாவரத்தில் இருக்கும் இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனியில் வேலை பார்ப்பவன். சாயங்காலம் பாங்கில் வேலை முடிந்ததும் போய்ப் பார்க்க வேண்டும்.

''எந்த ஆஸ்பத்திரி துரை?''

சொன்னான்.

''நீங்க நேத்து வர ரொம்ப லேட்டாயிருச்சே... ஸினிமாவா சார்?''

''ம்.''

''இங்கிலீஸ் படமா?''

''இல்லை ஹிந்தி... மும்தாஜ் நடிச்சது...''

டம்ளரோடு துரை போனதும், மும்தாஜின் சற்றே தூக்கின மூக்கு, ஸ்லீவ்லெஸ் அணிந்த கைகளை நினைத்தபடியே மாதவன் குளித்தான்.

ஈரத் தலையை வாரி, பெல்ஸ் பாண்ட், ஷர்ட்டை அணிந்து கண்ணாடியில் இப்படியும், அப்படியும் திரும்பிப் பார்த்தபோது பிரதிபலித்த பிம்பம் திருப்தியைத் தந்தது.

இரவு பார்த்துவிட்டு மேஜை மேல் வைத்த பிலிம்பேர் பத்திரிகை கண்களில் விழ, எடுத்தான். அட்டையில் ஷர்மிலா டாகுர், திருமணமாகி, குழந்தை பிறந்தும் என்னமாய் இருக்கிறார்! உள்ளே ஹேமமாலினியின் வர்ணப்படம்!



அட, முழுக்க முழுக்க ஹேமமாலினி, மும்தாஜ் மாதிரி மனைவியாக வருபவள் அமையாவிட்டாலும், அவர்களின் கவர்ச்சியில் கால் பங்காவது அவளுக்கு இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்ப்பது தவறா என்ன?

மாதவன் குனிந்து மீண்டும் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டான்.

எனக்கு என்ன குறை?

எனக்கு மனைவியாக வருபவள் 'இந்தந்த தகுதிகளோடு இருக்கவேண்டும்' என்று ஆசைப்படுவது நியாயமான எண்ணம்தானே?

கண்ணாடிக்கருகில் பிளாஸ்டிக் டப்பாவில் வைத்திருந்த பழனி விபூதியை ஆள்காட்டி விரலால் தொட்டு நெற்றியில பூசி - இதுவும் ஆயா உண்டாக்கின பழக்கம்தான் - 'பாழும் நெத்தியா இருக்கக் கூடாது ராஜா' கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பின நிமிஷத்தில், சென்ற வாரம் உறவினர் வீட்டுத் திருமணத்துக்காக சென்னைக்கு வந்திருந்த அம்மா -

''ஊரவா கல்யாணம், கார்த்தினு வந்து போகக்கூட கூச்சமா இருக்கு மாது... பிள்ளைக்கு இருபத்தியாறு வயசாகிடுச்சு, கைநிறைய சம்பாதிக்கறான், அம்மாவா லட்சணமா உன் பொறுப்ப செய்யாம சும்மா இருக்கியே -னு கண்டவங்களும் ஏசறாங்கப்பா'' என்று பொருமினது மறுபடியும் ஞாபகத்துக்கு வந்தது.

''ஏன் கல்யாணம் வேணாங்கறே... நாகப்பட்டினம் வேலாயுதம் மாமாவத் தெரியுமில்ல?... போனமாசம் கூட, காஞ்சிபுரத்துக்கு வந்தாரு - 'கையில இருபதாயிரம் கொடுக்கறேன்; முப்பது பவுன் போடறேன் - கனகாவ உன் பையனுக்குக் கட்டி வச்சிடு'னு சொல்றாரு... கனகா பத்தாவது

படிச்சிருக்கா... அடக்க ஒடுக்கமானவ... நெருங்கி கேட்டா, வேலாயுதம் இன்னும் பத்து, பதினைஞ்சுகூட சேர்த்தே கொடுப்பார்தான்... நாலையும் யோசனை பண்ணிப் பாக்கறப்போ, அந்தப் பொண்ணுக்கு ஒரு குறையும் இருக்கறதா எனக்குப் படல... நீ என்ன சொல்றே?''

என்ன சொல்வது?

என்ன சொல்லி புரிய வைப்பது?

எனக்கு இருபதாயிரம் பணமும், முப்பது பவுனும் பெரிசில்லை. ஆனால் மும்தாஜ் மாதிரி நாகரிகமாக உடை அணிய, கவர்ச்சியாய் சிரிக்க அவளுக்குத் தெரியுமா? கனகா அப்படி இல்லாதது ஒன்றுதான் குறை... வேறு எதுவும் இல்லை என்று எப்படிக் கூறுவது?

சொன்னால்தான் அம்மாவுக்குப் புரியுமா?

தெருவில் இறங்கி நடந்தான்.

அடுத்த தெருவில் இருந்த 'மீனாட்சி சைவ உணவு விடுதியில்' நுழைந்து வழக்கமாய் உட்காரும் இடத்தில் அமர்ந்து, அன்றாடம் சாப்பிடுவதுபோல இட்லி, பூரி சாப்பிட்டான்.

கணக்கில் குறித்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வெளியில் வந்து, பெட்டிக்கடையில் சிகரெட் ஒன்றை வாங்கி பற்ற வைத்தான்.

எட்டு முப்பத்தைந்து.

மெதுவாக நடந்து, எட்டு ஐம்பது பஸ்ஸைப் பிடித்தால் ஒன்பதே முக்காலுக்குள் பாங்க் வாசலில் இருக்கலாம்.

சிகரெட்டை வாயில் வைத்து, புகையை உள்ளுக்கு இழுத்து நடந்தவன் தெருமுனையில் இருந்த சர்ச்சை



நெருங்கினபோது உள்ளிருந்து அந்த சிறுகும்பல் வெளியே வந்தது.

கூட்டத்தில் அவள் தனித்துத் தெரிந்தாள்.

நல்ல உயரம், சிவப்பு என்று கூற முடியாவிட்டாலும், மாநிறத்துக்கும் மேல்பட்ட நிறம். ஷாம்பு போட்டு குளித்திருக்க வேண்டும், நெற்றியில் முடி சற்று அலட்சியமாய் விளையாடியது. வெள்ளைப் புடவையில், ஸ்லீவ்லெஸ் ரவிக்கையில் ஒரு இளவரசி மாதிரி தோன்றியவள் சட்டென்று திரும்பியதில் இருவர் பார்வையும் சந்தித்தபோது, தங்கச்சங்கிலியில் அவள் நெஞ்சுக்கு மேலாக தொங்கிக் கொண்டிருந்த சிலுவை காலை வெயிலில் பளபளத்தது.

# 2

''அத்தம்மா...''

பால் பாக்கெட்டுகளை கவனத்துடன் ஓரத்தில் வெட்டி, ஒவ்வொன்றாய் பாத்திரத்தில் ஊற்றிக்கொண்டிருந்த பரிமளம், திரும்பாமலேயே 'அட!' என்றார்.

''ஆறரைமணி ஆனாலும் எழுந்திருக்க மொரண்டு பண்ணுறவ, இன்னிக்கு இத்தனை வெள்ளன எழுந்திட்டியே!''

வசந்தா 'ப்ச்' என்று அலுத்துக் கொண்டாள்.

அருகில் வந்து சுவரில் சரிந்தபடி நின்றாள்.

''தூக்கம் வரல அத்தம்மா...''

காலி பாக்கெட் ஒவ்வொன்றுக்குள்ளும் கொஞ்ச நீரை விட்டுக் குலுக்கி, அதைப் பால் இருந்த பாத்திரத்தில் பரிமளம் விட்டார்.

"ராத்திரியே கவனிச்சேன்... பொரண்டுகிட்டேதான் இருந்தே... உடம்புக்கு முடியலையா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தம்மா... மனசு படபடனு இருக்கறதுல தூங்க முடியல..."

"ஞானஸ்னானம் நல்லபடியா நடந்து முடியணுமேனு எனக்குக் கூடத்தான் கவலையா இருக்கு... குழந்தைக்கு நாலு நாளா காய்ச்சல்... நேத்துதான் மட்டுப்பட்டிருக்கு... இதோட கோயிலுக்கு எடுத்துப் போய் அலைக்கழிக்கறதுல மறுபடியும் காய்ச்சல் வராம இருக்கணுமேனு பதைப்பா இருக்கு..."

வசந்தா உதட்டை மடித்து முகத்தைக் கவிழ்த்தாள்.

"எனக்கொண்ணும் ஞானஸ்னானம் நல்லபடியா நடக்கணுமேனு பதட்டமா இல்ல... அத நினைச்சு பதட்டப்பட என்ன இருக்கு? கோயிலுக்கு எடுத்துப் போனா, சாமியார் நடத்தி வைக்கப் போறார்..."

பாலைக் கிளறிய வண்ணம் பரிமளம் திரும்பி மருமகளை ஏறிட்டார்.

"அப்புறம்?"

"என்ன அத்தம்மா, ஒண்ணுமே நினைப்பில்லாதது போலக் கேக்கறீங்க? இன்னிக்குத்தான் நா முதமுதல்ல வேலைக்குப் போகப் போறேன்... மெய்யாலுமா மறந்திட்டீங்க?"

பரிமளம் சிரித்து சமாளிக்க முயன்றார்.

"அ— ஆமா? இன்னிலேந்து நீ வேலைக்குப் போய்ப்போற இல்ல! ஞானஸ்னானம் நடக்கப் போற அமர்க்களத்துல அத நா நினைக்கவேயில்ல... கர்த்தரோட ஆசிர்வாதத்துல எல்லாம் நல்லபடியா நடக்கும்... கவலைப்



படாதே... பல் விளக்கிட்டியா? பீடத்துல விளக்கேத்தி வச்சிருக்கேன்... போய் ஜபம் சொல்லிட்டு வா... காபி கலந்து தரேன்..."

பேரி அரை நிமிஷம் ஆகியும் வசந்தா நகராமல் நிற்க, பரிமளம் கொஞ்சலாகப் பேசினார்.

"போம்மா... பல் விளக்கிட்டு, ஜபம் சொல்லிட்டு வானு சொல்றேன் இல்ல..."

"பல் விளக்கிட்டேன் அத்தம்மா..."

"அப்போ, பீடத்து கிட்ட போய், ஜபம் சொல்லிட்டு வந்திடு."

"ஜபம் சொல்லாட்டி காபி தர மாட்டீங்களா!"

"யேசுவே" என்று முணுமுணுத்த பரிமளம் "ஏன்தான் இந்தப் பொண்ண இப்படிக் கால வேளைல மொரண்டு பண்ண வைக்கிறியோ!" என்றார் தொடர்ந்து.

எதற்கும் மசியாமல் வசந்தா நிற்க, பாலைக் கிண்டுவதை விட்டுவிட்டு அவள் கையை வாஞ்சையுடன் பரிமளம் பிடித்துக்கொண்டார்.

"உறங்கி எழுந்து முகம் கழுவிக்கிட்டதும், பீடத்து விளக்கை ஏத்தி, ஜபம் சொல்லிப் பிரார்த்திக்கறது நல்ல வழக்கம் வசந்தா. இந்தப் பிறவியைக் கொடுத்த ஆண்டவருக்கு நன்றி சொல்லி, நாளை நல்லபடியா கழிக்க வேண்டி பெரியவங்க ஏற்பாடு செஞ்சு வச்ச பழக்கத்தை ஏனோ புரிஞ்சிக்கவே மாட்டேங்கறே... ம்... இப்படியே நீ இருந்தா... உன்னை ஒருத்தரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. ஆனா, தாய் தகப்பன் இல்லாத பொண்ணுக்கு அடிப்படை நல்ல விஷயங்கள் கூட இந்த அத்தைக்காரி கத்துத் தரலை பாருனு

என்னத்தான் ஏசுவாங்க... போம்மா, போய் ஜபம் சொல்லிட்டு வா... அரை நிமிஷம் கண்ணை மூடிகிட்டு நின்னு 'ஏசுவே எம்மை ரட்சியும்'னு பிரார்த்திச்சிட்டு வர்றது அத்தனை கஷ்டமான வேலையாம்மா? ம்?... போ...''

அவளைத் திருப்பி, பீடம் இருந்த உள்ளறை பக்கம் லேசாக பரிமளம் தள்ள, மனசில்லாமல் வசந்தா போனாள்.

முந்தின வருஷம் அந்த வீட்டுக்கு குடி வந்த பிறகு, பங்குச் சாமியாரை அழைத்து, வீட்டை மந்திரித்து, அந்த அறையில் இருந்த அலமாரியில் ஏசு படத்தை ஸ்தாபித்திருந்தது. அதுதான் அந்தக் குடும்பம் வழிபடும் பீடமாக இருந்து வருகிறது.

அலமாரி ஷெல்ஃபில் நடுநாயகமாய் உங்களின் நன்மைக்காக நான் ரத்தம் சிந்துகிறேன் என்னும் அர்த்தத்தில், ரத்தம் வடியும் இருதயத்தோடு காணப்படும் ஏசுவின் படம்.

இரண்டு பக்கமும் மெழுகுவர்த்தி ஸ்டாண்டுகள்.

இந்தியக் கலாச்சார வழக்கத்தின்படி எண்ணெய் திரிபோட்டு ஏற்றப்பட்ட விளக்கு, பிளாஸ்டிக் பூ மாலை...

உள்ளே வந்த வசந்தா பீடத்தின் முன் மண்டியிட்டாள்.

நெற்றியில் துவங்கி நெஞ்சில் சிலுவை குறி இட்டுக் கொண்டாள்.

கண்களை மூடி ஜபித்தாள் -

-பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே

உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக,

உம்முடைய ராஜ்யம் வருக

உம்முடைய சித்தம் பரலோகத்தில்



செய்யப்படுவதுபோல்

பூலோகத்திலும் செய்யப்படுவதாக... ஆமென்..

அவள் மீண்டும் சமையல்கட்டுக்குள் சென்றபோது காபியுடன் பரிமளம் தயாராக இருந்தார்.

ஒரு டம்ளரை அவளிடம் நீட்டிய பரிமளம், இன்னொன்றை தான் கையில் எடுத்துக்கொண்டார்.

கண்களை மூடி உரக்க தியானித்தார். ''சர்வேஸ்வரா ஸ்வாமி - என்னையும், உமது அருளினால் நான் புசிக்கப் போகும் இந்த உணவையும் ஆசீர்வதித்து அருளும்... ஆமென்...''

''ஆமென்...'' என்று முனகின வசந்தா காபியை ஒருவாய் குடித்துவிட்டு, சின்ன குரலில் 'அத்தம்மா' என்று அழைத்தாள்.

''ம்?''

''வந்து இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை வைபவத்துக்கு நா கோயிலுக்கு வந்தே ஆகணுமா?''

''என்னது?''

''கோயிலுக்கு வந்திட்டு, கிளம்பறதுன்னா நாழியாயிடும்... முதல் நாளே யாராச்சும் வேலைக்கு தாமதமா போவாங்களா?''

''அதுக்காக வரமாட்டேன்னு சொல்றதா? தாஸ் காதுல விழுந்தா கத்தப்போறான்...''

''அதனாலதானே உங்ககிட்ட சொல்லறேன்... அத்தம்மா... அண்ணன்கிட்ட பக்குவமா...''

முடியாது என்று தலை அசைத்தார் பரிமளம்.

"ரெண்டு பொண்களுக்கப்புறம் பிறந்திருக்குற மகனுக்கு தடபுடலா ஞானஸ்னானம் பண்ணனும்னு உங்கண்ணன் ஆசைப்படறப்போ, நீ வரமாட்டேன்னு சொன்னா நல்லா இருக்குமா, வசந்தா? எத்தனை மணிக்கு நீ ஆபீஸ்ல இருக்கணும்? ஒன்பதரைக்கா? ஒன்பதுக்குள்ள ஞானஸ்னானம் செஞ்சு வச்சிடறதா சாமியார் தாஸ்கிட்ட சொல்லிட்டு இருந்தாரு... கோயில்லேந்தே நீ நேரா போயிடலாம். வீணா எதையாவது பேசி, அண்ணன் கோவத்துக்கு ஆளாகாத... கையில டிபன் கட்டித் தரட்டுமா? இல்ல இன்னி ஒரு பொழுதுக்கு ஆபீஸ்லேயே பாத்துக்கறியா?"

அத்தை தீர்மானமாக பேசின பிறகு இனியும் அங்கு நிற்பதில் அர்த்தம் இல்லை என்பது புரிய, வசந்தா காலி டம்ளரை முற்றத்தில் கழுவிக் கவிழ்த்துவிட்டு, வாசல் பக்கமாய் நடந்தாள்.

அவளுடைய அண்ணன் தாஸ், அண்ணி மல்லிகாவின் அருமை புத்ரனுக்கு அன்று ஞானஸ்னான வைபவம் நடக்கப் போகிறது.

வெள்ளன கோயிலுக்குப் போனால்தான், எல்லாம் முடிந்து ஒன்பதுக்குள் இவள் கிளம்ப முடியும்...

ஆறுமாசமாய்த் தேடியலைந்த வேலை கிடைத்து, முதல் நாள் வேலைக்குப் போகும் இன்றைக்குத்தானா இந்த ஞானஸ்னானம் அமர்க்களமும் சேர்ந்துகொள்ள வேண்டும்?

அண்ணன் அண்ணியிடம் இது குறித்து எதுவும் பேச முடியாது. அண்ணனுக்குக் கோயில், வழிபாடு என்று வந்துவிட்டால் தலைகால் புரியாது. 'கோயிலுக்கு வர முடியாம தடுக்குற அந்த வேலைக்கு நீ போக வேண்டிய



தில்லை... நீ வேலைக்குப் போய்தான் இங்க குடும்பம் நடக்கணும்னு எந்த முடையும் இல்ல.. புரியுதா?' என்று உறுமலோடு நிற்கமாட்டார். வேலையை விடச்செய்து விட்டுத்தான் உட்காருவார்.

ஏனோ, அண்ணனுக்கு இவள் வேலைக்குப் போவதில் அவ்வளவு விருப்பம் இல்லை.

"தாய் தகப்பன் இல்லாத பொண்ணை வேலைக்கு அனுப்பிட்டு இவன் வேடிக்கை பார்க்கறான்பாருன்ற கெட்ட பேர்தான் எனக்கு வரப்போவுது. சொன்னா நீ கேக்க மாட்டேங்குற... தையல் கிளாஸ், குக்கரி க்ளாஸ்னு போய் வந்தா பத்தாதா? வர்ற வருஷம் எப்படியும் உனக்குக் கல்யாணம் பண்ணிடறதாதான் இருக்கேன். அருள்சாமியோட பையன் ஆல்பர்ட் அமெரிக்காலேந்து தை மாசம் வர்றானாம்... வந்ததும் முடிச்சிடுவோம்னு அருள்சாமி சொல்லிட்டாரு. அதுக்குள்ள உனக்குப் பொறுக்கல... வேலைக்குப் போயே தீர்வேன்னு பிடிவாதம் பிடிச்சு, சாதிச்சிட்ட... கூடாதுனு திட்டவட்டமா சொல்லவும் மனசாகல... தாய், தகப்பன் இல்லாத பொண்ணுக்கு நம்பளவிட்டா யாருனு தயக்கமா இருக்கு..."

எப்படியோ கெஞ்சி, அழுது, வாதாடி வேலைக்குப் போக அனுமதி வாங்கியது ஒரு கதை என்றால், நல்ல இடத்தில் மனசுக்குப் பிடித்த வேலை அமைய தேடியது இன்னொரு கதை...

இந்த சமயத்தில் 'கோயிலுக்கு வரலை, வேலைக்கு போகணும்' என்றால் அத்தை சொல்வது போல வேண்டாத வம்பை விலை கொடுத்து வாங்குவதாகத்தான் ஆகிவிடும்...

வசந்தா மாற்றுடைகளை எடுத்துக்கொண்டு குளிக்கப் போனாள்.

கவனம் அண்ணன் இவளுக்காக குறிவைத்திருக்கும் ஆல்பர்ட்டிடம் ஓட, அடிவயிற்றில் குமட்டியது.

எருமை மாடு மாதிரி ஒரு அசட்டு வளர்த்தி... தொந்தியும், தொப்பையுமாய்... சிகரெட் பிடித்துப் பிடித்து கறுப்பேறிய உதடுகளும், பொறுக்கிப் பார்வையுமாய்... குடிப் பழக்கம் கூட எக்கச்சக்கமாய் உண்டு என்று பேசிக் கொள்கிறார்கள்.

ஏனோ இவனைப் போய் அண்ணன் நல்ல இடம் என்று தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடுகிறார்...

தை மாசத்துக்கு இன்னும் எத்தனை மாசங்கள் இருக்கின்றன? ஆறு... ஏழு? அதற்குள் எப்படியாவது பக்குவமாய் அத்தை மூலம், அண்ணி, அண்ணன் மனங்களை மாற்றி இந்த சம்பந்தம் வேண்டாம் என்று சொல்ல வைத்துவிட வேண்டும்.

பின்னே?

புருஷன் என்றால், நம்பி வந்த பெண்ணை வழிநடத்தி அழைத்துப் போகக்கூடிய ஆண் மகனாக அல்லவா இருக்க வேண்டும்?

கம்பீரமானவனாய், கண்ணுக்கு லட்சணமானவனாய், மனைவியின் அருமை பெருமை தெரிந்தவனாய்...

"வசந்தா பாத்ரூமுக்குள்ள இன்னும் என்ன பண்ணிட்டு இருக்கே... மளமளனு தயாராகி குழந்தைய ரெடி பண்ணறத விட்டுட்டு..."

தயாரானாள்.

வெள்ளை ஜார்ஜட் புடவை, ஸ்லீவ்லெஸ் வெள்ளை டைட் ரவிக்கை அணிந்து, முடியை பிரஷ் செய்து காற்றில்



பறக்கவிட்டாள். கழுத்தில் எப்போதும் அணியும் செயின், இடது கையில் ரிஸ்ட் வாட்ச்.

ஞானத்தாய், தகப்பனாக பொறுப்பேற்க முன்வந்துள்ள பால்பாண்டியன் தம்பதி வந்துசேர்ந்ததும், பெற்று நாளாகாத காரணத்தால் மல்லிகா வரமுடியாது என்பதால் பதினாறு நாட்கள் ஆன சிசுவை பரிமளம் தூக்கிக்கொள்ள, கிளம்பினார்கள்.

நாலு தெரு தள்ளி இருந்த சர்ச்சை அடைந்ததும் ஞானத்தாய் ரோஸி, குழந்தையை கையில் வைத்துக் கொண்டார்.

சடங்குகளைத் துவங்கும் முன், வாசலில் அவர்களை நிறுத்தி "பிசாசை விட்டு விடுகிறாயா? அதன் ஆதிக்கத்தை விட்டு விடுகிறாயா? கடவுளை ஏற்றுக் கொள்கிறாயா? விசுவாசப் பிரமாணம் செய்ய முன் வருகிறாயா?" - என்று பாதிரியார் வினவி, குழந்தையின் சார்பில் அத்தனைக்கும் ஞானத்தாய் சரி, சம்மதிக்கிறேன் என்று கூறினதும், உள்ளே வந்தார்கள்.

ஞானஸ்நானத் தொட்டியை அடைந்ததும், ஒரு கையில் மெழுகுவர்த்தியை ஏற்றிக்கொண்டு இன்னொன்றில் வெள்ளை உடை உடுத்தின குழந்தையை ஞானத்தாய் ரோஸி அழுத்தமாக பிடித்துக்கொண்டார்.

பங்குச் சாமியார் குழந்தையின் நாக்கில் உப்பை தடவினதும், என்றும் நல்ல கிருஸ்துவனாகத் திகழும் உத்தேசத்துடனும், ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட குலம் என்பதை உணர்த்தவும் குழந்தையின் நெற்றி, நெஞ்சு, முதுகில் பரிமள தைலம், உடையை விலக்கி பூசப்பட்டது.

பிறகு தொட்டித் தண்ணீரை சிலுவை ரூபத்தில் மூன்று தரம் குழந்தையின் தலையில் ஊற்றியவாறு பாதிரியார்

"தாமஸ் சந்திரன் - பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் நான் உன்னைக் கழுவுகிறேன்" என்று கூற, ஞானஸ்நானம் நல்ல விதமாய் நடந்து முடிந்ததை உணர்த்த கோவில் மணி அடிக்கப்பட்டது.

விசேஷப் பிரார்த்தனையைத் தொடர்ந்து, பிரசாதம் அளிக்கப்பட்டதைப் பெற்றுக்கொண்டு, பாதிரியாரிடம் ஆசீர்வாதம் பெற்று, அவருக்கு நன்றி சொல்லிவிட்டு அண்ணன் விடைபெற்றுக் கொள்வதற்குள் 'மணி ஆகி விட்டது' - என்று இருப்புக்கொள்ளாமல் வசந்தா தவித்துத் தான் போனாள்.

சர்ச் வாசலில் ஒவ்வொருவரிடமும் ஞானஸ்நான வைபவத்துக்கு வந்திருந்து கௌரவித்தமைக்கு தாஸ் நன்றி கூறின நிமிஷத்தில பரிமளத்திடம் சென்று 'நா கிளம்பறேன், அண்ணன் கிட்ட சொல்லுங்க...' என்று வசந்தா முணுமுணுக்க, குழந்தையுடன் தாஸிடம் பரிமளம் சென்றாள்.

"அப்ப, வசந்தா இங்கிருந்தே கிளம்பிப் போகட்டுமா, தாஸ்? அவளுக்கு ஒன்பதரைக்கெல்லாம் ஆபீஸ்ல இருக்கணுமாமே!"

நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த தாஸ் லேசான கோபத்தில் புருவங்களை உயர்த்தினான்.

"இப்படியே எப்படி அத்தம்மா அனுப்பறது? வீட்டுக்கு வந்து குழந்தைய மல்லிகாகிட்ட கொடுத்திட்டு, இனிப்பு சாப்பிட வேணாமா?"

"குழந்தையோட வீட்டுக்கு வர, அதான் நாங்க இத்தனை பேருங்க இருக்கமே... அவ எதுக்கு? முதநாளே வேலைக்கு லேட்டா போனா எப்படி?... அனுப்பிச்சிடு..."

அண்ணனின் சம்மதமாய் தலை அசைவு கிடைத்த சந்தோஷத்தோடு பரிமளத்தை அணைத்து 'வரேன் அத்தம்மா'



என்று கூறி, திரும்பின நிமிஷத்தில் வசந்தா அவனைப் பார்த்தாள்.

பெல்ஸ் பேண்ட், கோடு போட்ட ஷர்ட்டில், கம்பீரமாய், ஒரு இளவரசனைப் போன்ற தோற்றத்துடன் எதிரில் நின்றவன் சட்டென்று திரும்பியதில் இருவர் பார்வையும் சந்தித்துக்கொண்டபோது, நெற்றி விபூதி பூச்சு, அந்தக் காலை வெயிலில் பளிச்சென்று தெரிந்தது.

## 3

பத்திரிகையில் கவனம் பதியவில்லை.

அந்த வாரப் பத்திரிகை, அவன் விரும்பிப் படிக்கும் எழுத்தாளரின் தொடர் வெளியாகும் பத்திரிகை. வழக்கமாய் கையில் எடுத்தால் 'தொடரும்' என்கிற வார்த்தை வரையில் ஒரே மூச்சில் படித்து முடிப்பவனால், இன்று அப்படிச் செய்ய இயலவில்லை. எழுத்தில் புத்தி போகாதபடி ஜெயராஜின் ஓவியம் பாடாக வைப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

லேசாக கொழுமொழுத்த உடம்பு, குறுகி, கவர்ச்சியாய் விரியும் இடை, மேகமூட்டமாய் மார்புப் புடவை...

அப்படியே 'அவள்'தான்...

மாதவன் கண்களை மூடிக்கொண்டான்.

சொடுக்குப் போட்டுக் கூப்பிட்டதும் ஓடிவரும் நாய்க் குட்டி மாதிரி அவள் நினைவு மனசில் ஏறி உட்கார்ந்தது.

அதே வாளிப்பான உடல், பரவசமூட்டும் பார்வை, நளினம்...

ஹோ! யாரிவள்...?

கிட்டத்தட்ட பதினைந்து நாட்களாகப் போகின்றன. ஆனாலும் அவள் யார், பேர் என்ன, எங்கு வேலை பார்க்கிறாள் என்கிற விவரங்கள் இன்னமும் தெரியவில்லை...

எட்டு ஐம்பது பஸ்ஸைப் பிடிக்க தினமும் வருகிறாள்; யாரிடமும் ஒரு வார்த்தை பேசாமல் நிற்கிறாள்; பயணிக்கிறாள்; ஆயிரம் விளக்கு நிறுத்தத்தில் இறங்கி விடுகிறாள்... அப்புறம்? எந்த அலுவலகத்தில் வேலை பார்க்கிறாள்? தெரியாது. எத்தனை மணி பஸ்ஸில் மாலையில் திரும்புகிறாள்? தெரியாது. இங்கு எங்கு வசிக்கிறாள்? தெரியாது.

முதல் நாலு நாட்கள் அவளைத் தொடர்ந்து அந்த பஸ் ஸ்டாப்பில் பார்த்த பிறகு அவளைப் பற்றின விவரங்களை இன்னும்இன்னும் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் தோன்றியதும் அவள் பின்னோடு ஆயிரம் விளக்கில் இறங்கிச் சென்று எங்கு வேலை பார்க்கிறாள் என்று தெரிந்து கொள்ளலாமா என்று நினைத்தவன் ஒரு சில நிமிஷங்களிலேயே 'வேண்டாம், அது சரியல்ல' என்று தன் நினைப்பை மாற்றிக் கொண்டு விட்டான்.

பின்னே?

அவள் யார், திருமணம் ஆனவளா, ஆகாதவளா, எப்படிப்பட்ட குணம் கொண்டவள் போன்ற எந்த விவரமும் தெரியாத நிலையில் அவள் பின்னோடு சென்று வேவு பார்த்தால், 'யாரிவன், பொறுக்கித்தனமாய் நடந்து கொள்கிறான்?' என்று நினைத்துவிட மாட்டாளா?

ம்ஹூம் - வேண்டாம்.

பஸ்ஸிலும், பாங்கிலும் எத்தனையோ பெண்களை தினமும் பார்க்கிறேன். அழகாய் இருந்தால் ரசிக்கிறேன், அதோடு மறக்கிறேன். அப்படித்தானே இவளும்!



ஒரு சிறுசாய் சமாதானம் செய்துகொண்டு அவளைப் பற்றி நினைக்காமல் இருக்கத் தீர்மானித்ததை செயலில் காட்ட முடியாதபடி, அடுத்து வந்த நாட்களில் காலை நேரத்தைத் தவிர மாலைப்பொழுதில், அறுவை சிகிச்சை செய்துகொண்டு நர்சிங்ஹோமில் படுத்திருந்த முத்துவேலைக் காணச் சென்ற போது அங்கும், ஞாயிறு மாலை மெரினா கடற்கரையிலும் எதேச்சையாய் அவளை மீண்டும் பார்க்க நேர்ந்தபோதும் மாதவன் வாஸ்தவமாகவே ஆச்சர்யித்துதான் போனான்.

எங்கிருந்து இவள் திடுமென முளைத்திருக்கிறாள்!

இத்தனை நாட்களாய் கண்களில் படாமல் இருந்தவள் இப்போது அடுத்தடுத்து பார்வையில் விழுவதோடு மனசையும் அவ்வப்போது வருடிக்கொடுப்பது ஏன்?

காலையில் பஸ் ஸ்டாப்பில் பார்க்கிறோம், சரி - இப்போது இங்கும் அங்கும் செல்லும்போதும் கண் எதிரில் வலியத் தோன்றி நின்று சிந்தனையை ஆக்ரமிப்பது ஏன்?

வியப்போடு தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டபோது தெளிவாக பதில் ஏதும் கிடைக்காவிட்டாலும், சின்ன வயசில் ஆயா கூறின வார்த்தைகள் ஞாபகத்தில் முட்டி, அவன் வியப்பை அதிகமாக்கின.

'தெய்வ சங்கல்பம்னு ஒண்ணு இருக்கு ராஜா. அத மீறிக்கிட்டு யாரும் எதுவும் செஞ்சிட முடியாது. நமக்கு ஒண்ணு நடக்கணும்னு இருந்தா, நீ என்னதான் வேணாம்னு ஒதுங்கி நின்னாலும் மடில வந்து விழத்தான் செய்யும். இதுக்குப் பேர்தான் விதி. அதது நடக்க வேண்டியப்ப கட்டாயம் நடந்தே தீரும். ஆமா...'

நிஜமாகவா?

ஆயா சொன்ன மாதிரி இவளும் நானும் அடிக்கடி சந்தித்துக்கொண்டே தீரவேண்டும் என்று விதிக்கப் பட்டிருக்கிறதா?

எதற்காக?

புரியவில்லை.

ஆனால், அந்த ஞாயிறு மாலை, அந்தி சூரியன் மலை வாசலில் விழுந்துகொண்டிருந்த ரம்யமான அந்தச் சூழ்நிலையில் தேவதை மாதிரியான தோற்றத்தோடு, புடவையும், தலைமுடியும் காற்றில் பறக்க மணலில் நடந்தவளைப் பார்த்த பிறகு மனசு அன்று இரவு பூராவும் வேறு எதையும் நினைக்க முடியாதபடி ரொம்பத்தான் ஹோ ஹோ என்று பொங்கிப் போயிற்று.

மறுநாள் காலை பஸ்ஸுக்காகக் காத்திருந்த நாழிகையில் இவனைப் புரிந்து கொண்ட தினுசில் அவள் உதடுகள் மிகமிக சன்னமாய் முறுவலிப்பதை உணர்ந்தபோது மனசின் குதிப்பு இன்னும் அதிகமாகித்தான் போனது.

அந்தக் குதிப்பின் காரணமாய்த்தான் மறுநாள் இவன் அவளைப் பார்த்து சிரித்தான், அதற்கும் அடுத்த நாள் தலை அசைத்து மௌனமாய் வரவேற்றான், அதற்குப் பிறகு பிறந்த தைரியத்தோடு அருகில் சென்று 'குட்மார்னிங்' என்று 'விஷ்' செய்தான், 'இந்தக் காலை நேரத்துலயே வெயில் அதிகமாக இருக்கு இல்லை?' என்று பொதுவாகப் பேசினான்.

மேற்கொண்டு நட்பைத் தொடர முடியாதபடி விடுமுறை நாட்கள் வந்துவிட, எப்போதடா மறுபடியும் வேலைக்குப் போகலாம் என்கிற துடிப்போடு காத்திருக்கும் நாழிகையில், ஓவியத்தைப் பார்த்தால்கூட அவள் நினைவு எழுவதில் ஆச்சர்யம்தான் என்ன?



மாதவன் கண்களைத் திறந்து கையிலிருந்த பத்திரிகை ஓவியத்தை மீண்டும் ஒருமுறை ஏறிட்டான்.

அவளேதான்... அசல் அவளேதான்.

மாதவனுக்குப் பெண்கள் அதிகமாக ஒல்லியாய் இருந்தால் பிடிப்பதில்லை. துருத்திய தோள்பட்டை எலும்பும், அணைத்தால் உறுத்துமோ என்கிற பயத்தை உண்டாக்கும் உடம்பும்... தத்... என்ன இருந்தாலும், லேசான மொழு மொழுப்புடன் ரவிவர்மா ஓவியம்போல இருக்கும் பெண்களின் தோற்றம் தரும் கிளுகிளுப்பு அலாதிதான்...

சட்டென்று மாதவனுக்கு ஒரு தரம் உறவினர் வீட்டு திருமணத்துக்கென திருவனந்தபுரம் போயிருந்தபோது அங்கிருந்த அரண்மனையில் ரவிவர்மாவின் ஓவியங்களைப் பார்த்து ரசித்தது நினைவுக்கு வந்தது.

மெழுவர்த்தி போல வழவழவென்று விரல்களும், வெங்கலக் குத்துவிளக்கை ஏற்றி வைத்த மாதிரி வாளிப்பான உடற்கட்டும், பெரிய கண்களும், கறுப்புத் தலைமுடியும்...

பெண் என்றால் அப்படி அல்லவா இருக்கவேண்டும்... ரவிவர்மா ஓவியம் மாதிரி... நடிகை மும்தாஜ் மாதிரி...

இவள் அப்படித்தானே இருக்கிறாள்?

லேசாய் உயர்ந்த மூக்குநுனியும் கதுப்புக் கன்னங்களுமாய்?

யாரிவள்?

பேர் என்ன என்றுகூடத் தெரியவில்லையே...

என்னவாக இருக்கும்? ரம்யா? மாலினி? சித்ரா?

மானசீகமாய் அவளைத் துளிதுளியாகப் பார்த்தபோது மார்பு மேல் மின்னும் சிலுவை நினைவுக்கு வர, மாதவன்

புருவங்களை யோசனையுடன் உயர்த்தினான். ஆமாம், கழுத்தில் சிலுவை தொங்குகிறதே. அப்படியென்றால் கிறிஸ்துவக் குடும்பத்தைச் சார்ந்தவளா?

அது எப்படி இத்தனை நாட்களில் அதுபற்றி யோசித்துப் பார்க்கத் தவறினேன்?

அவள் அழகையும், பேர் என்ன, எங்கு வேலை பார்க்கிறாள் என்பது குறித்தும் சிந்தித்தவன் இந்த விஷயத்தை நினைக்காமல் இருந்தது எப்படி?

நகத்தைக் கடித்தபடி யோசனையில் ஆழ்ந்தபோது 'அதனால் என்ன?' என்கிற எதிர் கேள்வி எழுந்தது...

சரி, கிருஸ்தவப் பெண்ணாகவே இருக்கட்டுமே... அதனால் என்ன?

ஒரு பெண்ணைத் தெரிந்துகொள்வதற்கும் அவளோடு நட்போடு பழகுவதற்கும் மதம் எதற்காகக் குறுக்கே நிற்க வேண்டும்?

பஸ் ஸ்டாப்பில் சந்திக்கிறோம், சௌக்கியமா என்று ஒரு வார்த்தை பரிமாறிக்கொள்ளப் போகிறோம். பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் நாழிகையில் முடிந்தால் அவரவர் பற்றின விவரங்களைக் கொஞ்சமாகப் பேசிக் கொள்ளப் போகிறோம், அவ்வளவுதானே! இதற்கு ஜாதி, மதம் என்ன என்கிற குறுக்கு விசாரணை எதற்கு?

தவிர, அவளை...

மேலே சிந்தனையைத் தொடரவிடாமல் துரை [illegible] மாடிக்கு ஓடி வந்து 'ஸார்' என்று அழைத்ததில், மாதவன் திரும்பினான்.

"விஷயம் தெரியுமா ஸார்?"



"என்ன?"

"பஸ் கண்டக்டர் ஒருத்தரை யாரோ அடிச்சிட்டாங் கன்றதுக்காக அத்தனை பஸ்காரங்களும் அங்கங்க வண்டியை நிறுத்திட்டு வீட்டுக்குப் போயிட்டாங்களாம்... ஸ்டிரைக் ஸார்.. இன்னிக்கு எங்கேயும் பஸ் ஓடாதாம்..."

மாதவன் தூக்கிவாரிப்போட எழுந்து நின்றான்.

"பஸ் ஓடாதா? அதான் கொஞ்ச நேரமா தெரு இத்தனை அமைதியா இருக்கா? எனக்கு பாங்குக்குப் போகணுமேடா?"

"அது கொண்டுதானே ஸார் நா இந்த ஓட்டம் ஓடி வரேன்? ஆட்டோ மாணிக்கண்ணன் ஏதோ அடைப்பு இருக்குதுனு ஒர்க்ஷாப்புக்கு வண்டியை எடுத்துட்டு வந்திருக்காரு... அவருதான் விஷயம் இப்படினு சொல்லிட்டு, 'மாதவன் ஸார் பாங்குக்குப் போகணும்னா நா கொண்டு விடறேன்னு சொல்லு, பாரிஸ் கார்னருக்குப் போக வேண்டிய வேலை இருக்கு...'னு சொன்னாரு... என்ன சொல்றீங்க?"

சொல்ல என்ன இருக்கிறது?

பஸ் ஸ்டிரைக் என்று வீட்டில் உட்கார்ந்துவிட முடியுமா? நேரத்தோடு பாங்கில் இல்லை என்றால் மானேஜர் முகரு முறைப்பானே!

இந்த மாணிக்கம் ஒரு காலத்தில் மாதவனோடு பள்ளியில் படித்தவன். மேலே படிக்க வசதியில்லாமல் இப்போது ஆட்டோ ஓட்டிப் பிழைப்பை நடத்துபவன். பழைய நட்பை விடாமல் நினைத்துக் கொண்டிருப்பதால் சமயத்தில் வலிய வந்து உதவுகிறான். வாழ்க!

பத்திரிகையை மூடி வைத்துவிட்டு எழுந்த நிமிஷத்தில் 'அவள்' நினைவு மறுபடியும் குதித்துக்கொண்டு எழுந்தது.

'அவள்' என்ன பண்ணுவாள்?

இந்த ஏரியாவில் வேளையில் ஆட்டோ, டாக்ஸி ஒன்றும் கிடைக்காது என்பதோடு, அப்படிக் கிடைத்தாலும் அவனவன் இன்னைக்கு சம்பாதித்தால்தான் என்பதுபோல ஏகத்துக்கு பணம் கேட்பானே!

ஆயிரம் விளக்கு நடந்து போகும் தூரத்திலும் இல்லையே பாவம்...

மாணிக்கம் ஆட்டோவை பஸ் ஸ்டாப் வழியாக ஓட்டச் சொல்லி, அவளையும் ஏற்றிக் கொண்டு போனால் என்ன?

தீர்மானம் எக்கச்சக்கமாய் சந்தோஷம் தர, மாதவன் பரபரப்புடன் எழுந்தான்.

அவசரமாய் குளித்து, தயாராகி ஒர்க் ஷாப்புக்குச் சென்றபோது வண்டியுடன் மாணிக்கம் காத்திருந்தான்.

''தாங்க்ஸ் மாணிக்கம் - சமயத்துல நீ வந்து விஷயத்தைச் சொல்லலைன்னா, நா வழக்கம் போலக் கிளம்பி பஸ் கிடைக்காம தவிச்சிருப்பேன்...''

பேசிக்கொண்டே மாதவன் ஏறி அமர்ந்ததும் மாணிக்கம் ஆட்டோவைக் கிளப்பினான்.

''உனக்குப் பாரிஸ் கார்னர்ல ஏதோ வேலை இருக்கறதா துரை சொன்னாரே - உடனே போகணுமா?''

''பத்து மணிக்கு இருந்தா போதும்... ஏன் கேக்கறே?''

''அப்படின்னா டிபன் சாப்டுட்டுப் போகலாமா?''

மீனாட்சி சைவ உணவு விடுதியில் நிதானமாக சாப்பிட்டு, மாணிக்கத்துக்கும் சேர்த்து பணம் தந்துவிட்டு வெளியே வந்தபோது கைக்கடிகாரம் மணி எட்டே முக்கால் என்றது.

மாதவனின் கணக்கு தப்பவில்லை.



பஸ் ஸ்டாண்டில் கவலையுடன் காத்திருந்த நபர்கள் மத்தியில் 'என்ன செய்யப்போகிறோம்?' என்கிற பதைப்புடன் அவளும் நின்றிருக்க, ''ஒரு நிமிஷம் மாணிக்கம்'' என்று வண்டியை நிறுத்தச் சொன்ன மாதவன் இறங்கி நேராக அவளிடம் சென்றான்.

''மன்னிக்கணும் மிஸ்... இன்னிக்கு பஸ் ஸ்டிரைக்... தெரியும்னு நினைக்கிறேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லாட்டி என்கூட நீங்களும் ஆட்டோல வரலாம். உங்களை ஆயிரம் விளக்குல இறக்கிவிட்டு நா மௌண்ட்ரோடு போறேன்...''

அவள் அரை நிமிஷம் தயங்கினாள். பிறகு வேறு வழியில்லை என்பதை உணர்ந்தவளாய் ஆட்டோவில் ஏறி உட்கார -

அந்த பதினைந்து நிமிஷ பயணத்தில் அவள் பேர் வசந்தா மேரி, தாய் தகப்பன் இல்லாதவள், ஒரு டிராவல் ஏஜன்ஸியில் வேலை பார்க்கிறாள் என்பதை அவனும்; அவன் பேர் மாதவன், பெற்றவர்கள் காஞ்சிபுரத்தில் இருக்கிறார்கள், ஒற்றைப்பிள்ளை, பாங்கில் வேலை பார்க்கிறான் போன்ற விவரங்களை அவளும் தெரிந்து கொண்டார்கள்.

ரொம்ப தாங்க்ஸ் - என்று கண்ணைகல கூறி ஆபீஸ் முன் இறங்கிக் கொண்டவள் சாயங்காலமும் ஆட்டோவில் வந்து கூட்டிச் செல்வதாக மாதவன் கூறியதை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள, உற்சாகத்தோடு ஜனித்த அவர்களின் அறிமுகம், மளமளவென அடுத்து வந்த வாரங்களில் செழித்து வேர்விட்டு வளர்ந்து, மூன்று மாசம் முழுசாய் முடிவதற்குள் அலுவலகத்துக்கு லீவு போட்டுவிட்டு ஸபையர் தியேட்டருக்கு மதிய ஆட்டத்துக்குச் சென்று, இருட்டில் ஒருவர் கையை ஒருவர் பற்றியபடி மெய்மறந்து உட்காருவதில் வந்து நின்றது.

# 4

சர்வர் கொண்டு வைத்த காபியில் இன்னொரு ஸ்பூன் சர்க்கரையைப் போட்டு ஓசையுடன் கலக்கிய மாதவன், எதிரில் இருந்தவளை ஏறிட்டான்.

"காலைல நா ஏன் வழக்கமா வர்ற பஸ்ல வரலைனு கேக்கவேயில்லயே, வசந்தா?"

வசந்தா விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அத்தனை ஸ்வாரஸ்யம் இல்லாத முகபாவனையுடன் 'சொல்லுங்க' என்றாள்.

"எங்க தெருவுல இருக்கிற மோட்டார் ஒர்க்ஷாப், அதுல வேலை பார்க்கற சிவா, எதிர் வீட்டு கோகிலா பத்தி உன்கிட்ட சொல்லி இருக்கேன் இல்ல?"

"ம்."

"நேத்து ராத்திரி அவங்க ரெண்டு பேரும் வீட்ட விட்டு ஓடிட்டாங்களாம்."

காபியைக் குடிக்கவென உதட்டருகில் கொண்டு போன வசந்தா, அதைத் தவிர்த்தாள்.

"கோகிலாவுக்கு வயசு பதினாறோ, பதினேழோதான்னு சொன்னீங்க?"

"ஆமா... மைனர்தான்... அதான் தெருவே அல்லோல கல்லோலப் பட்டுப் போயிருக்கு..."

"நிச்சயமா ஒண்ணாப் போயிருக்காங்கனு தெரியுமா? ஏதாவது 'நோட்' எழுதிவச்சிட்டுப் போயிருக்காங்களா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல... காலைல எழுந்தா கோகிலாவையும் அலமாரில இருந்த செயின், வளையல்,



கொஞ்சம் பணத்தையும் காணோம்... சிவாவுங் மிஸ்ஸிங்... ரெண்டும் ரெண்டும் நாலுனு சொல்ல கால்குலேட்டரா வேணும்?"

"அப்புறம்?"

"கோகிலாவோட அப்பா அங்க தெருவையே கலக்கிட்டு இருக்கார்... ஒர்க்ஷாப் ஓனரைக் கூப்பிட்டுக் கத்தினார். அவர் தன் பங்குக்கு மத்த மெக்கானிக்குகளை விசாரிச்சப்போ, முத நாளே பாங்குல சேமிச்சு வச்சிருந்த பணத்தை சிவா எடுத்து வந்திருக்குறதும் திருப்பதிக்குப் போக எந்த பஸ் வசதியா இருக்கும்னு விசாரிச்சிட்டிருந்ததும் தெரிய வந்திருக்கு... திட்டம் போட்டுதான் போயிருக்காங்கன்னு தோணுது..."

சில நிமிஷங்களுக்கு ஏதோ யோசனையுடன் மௌனமாய் இருந்த வசந்தா மீண்டும் பேசியபோது குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

"இது பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க மாதவன்?"

"சிவா, கோகிலா ஓடிப்போனதைப் பத்தியா கேக்கறே?"

"ஓடிப்போனாங்கனு ஏன் மட்டமா சொல்லணும் - ஒண்ணா வாழப் போயிருக்காங்கனு குறிப்பிடறது தேவலை இல்லையா?"

"ஓகே - ஒண்ணா வாழப் போயிருக்காங்க...... ம்ம்... நிஜம்மா சொல்லணும்னா யோசிக்காம உணர்ச்சிவசப்பட்டு காரியத்துல எறங்கிட்டாங்களோனுதான் பயமா இருக்கு!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"பின்னே? கோகிலாவுக்கு வயசு பதினேழுதான்... மைனர் பெண். ஸ்கூல் பைனல் முடிச்சிட்டு, ஷார்ட் ஹாண்ட்,

டை பிங்கத்துகிட்டிருக்கா... வேலைனு எதுவும் இல்ல... அந்த சிவா ஒரு மெக்கானிக். பிரமாத வருமானமோ சொத்து, பத்துனு எதுவும் இருந்ததாவோ எனக்குத் தெரியல... இவளை வச்சு அவனால இப்போதைக்குக் குடித்தனம் பண்ண முடியுமா? பிடிபட்டாங்கன்னா மைனர் பொண்ணைக் கடத்திட்டுப் போனதா கேஸ் போடுவாங்கன்ற விளைவுகளை எல்லாம் யோசிச்சு இருப்பாங்களானு எனக்கு சந்தேகமாதான் இருக்கு..."

வசந்தா காபியைக் குடிக்கப் பிடிக்காமல் தள்ளி வைத்தாள்.

"எனக்கென்னமோ, மஞ்சா புடிக்கப் போனப்புறம் அது, இதுனு பயந்துகிட்டு நிக்காம தைரியமா ஒரு முடிவெடுத் தாங்களேனு சந்தோஷமாதான் இருக்கு..."

"பிடிபட்டா?"

"பிடிபடட்டும், அப்புறமா அதுபத்தி யோசிக்கலாம்..."

மாதவன் அவளுக்குப் பதில் கூறாமல் தெருவைப் பராக்குப் பார்த்தான்.

கண்முன் போலீசிடம் சிவாவும், கோகிலாவும் பிடிபட்டு விடுகிற மாதிரி காட்சி ஒன்று படர்ந்தது.

அழுது சிவந்த கண்களுடன் கோகிலா...

உருட்டு விழிகள், துடிக்கும் கோபத்துடன் அவள் அப்பா.

தலை குனிந்து நிற்கும் சிவா...

அவன் முடியைப் பிடித்து உலுக்கி முகத்தில் ஒரு குத்து விடுகிறார் போலீஸ்காரர்...



உள் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டுகிறது...

மைனர் பொண்ணைக் கடத்திட்டுப் போனது தப்புனு ஒத்துக்கறியா... ஒத்துக்கறியா?

ஆளாளுக்கு தர்ம அடி போடுவதில் சிவா இரண்டாக மடிந்து சரிகிறான்...

"பில் கொண்டு வரவா ஸார்? இல்ல, இன்னும் ஏதாவது சாப்பிடப் போறீங்களா?"

சர்வர் அருகில் நின்று குரல் கொடுக்க, மாதவன் கற்பனையிலிருந்து மீண்டான்.

"ஐஸ் க்ரீம் சாப்பிடறியா வசந்தா?"

"ம்ஹூம்."

"அப்ப பில் கொணாந்துடுங்க சர்வர்."

அவன் நகர்ந்ததும் மாதவன் வசந்தாவைப் பரிவுடன் ஏறிட்டான்.

"ஏன் காபிய சாப்பிடாம வச்சிருக்கே? அடடே... ஈ விழுந்திருக்கே... அதனாலியா?" அவளுடைய காபி கப்பை கையில் எடுத்தவன் மென்மையாய் சிரித்தான்.

"காபில ஈ கிடக்கறதப் பாக்கறப்போ ஜோக் ஒண்ணு நினைவுக்கு வருது... ஒருத்தன் காபி குடிக்க கிளப்புக்குப் போனானாம்... காபில ஈ ஒண்ணு செத்துக் கிடந்ததாம்... முதலாளிகிட்ட போயி, 'என்னங்க காபில செத்த ஈ போட்டு தர்றீங்க?'ன்னதும், முதலாளி சிடுசிடுப்பா, 'ஆமாய்யா, நீ குடுக்கற காசுக்கு ஈ போடாம, யானையா போட்டுத் தருவாங்க'னு..."

தன் துணுக்கைத் தானே ரசிக்கும் தினுசில் மாதவன் வாய்விட்டு சிரிக்க, இந்தப் பேச்சுக்களில் எல்லாம் தனக்கு

சுடுபாடு இல்லை என்பது போல வசந்தா 'ப்ச்' என்று சூள் கொட்டினாள்.

மாதவன் சிரிப்பை மறந்துவிட்டு, முன்னால் சாய்ந்தான்.

''என் எப்படியோ இருக்கே வசந்தா?''

அப்பாடி... இப்போதாவது புரிந்ததே என்கிற பார்வை ஒன்றைப் பார்த்துவிட்டு வசந்தா தலையைக் குனிந்து கொள்ள, கேட்ட கேள்வியை மாதவன் மீண்டும் கேட்டான்.

''ஒண்ணுமில்ல...''

''அட, சொல்லும்மா... வந்து உட்கார்ந்ததுமே கேக்கணும்னு நினைச்சேன்... ஆனா, ஆபிஸ்ல வேலை அதிகமா இருக்கும், அதான் டயர்டா இருக்கே, டிபன் சாப்பிட்டுக் காபி குடிச்சேன்னா கலகலப்பாயிடுவேனு நினைச்சு கேக்கல... சொல்லு... உடம்பு சரியில்லையா? தலை வலிக்குதா?''

''ம்ஹூம்.''

''அப்புறம்?''

சர்வர் பில்லைக் கொண்டு தர, பணத்தைத் தட்டில் வைத்துவிட்டு மாதவன் எழுந்தான்.

''வர்றியா, பீச்சுல போய் உட்கார்ந்துகிட்டுப் பேசலாம்... வீட்டுக்கு உடனே போக வேண்டிய அவசியம் ஒண்ணும் இல்லையே...''

''இல்லாம? நேத்தே அண்ணன் அத்தைகிட்ட கோச்சுகிட்டாராம்... என்ன இது, வரவர இருட்டி நேரமானப்புறம் வீட்டுக்கு வரா.... வயசுப்பொண் பொழுதோட வீட்டுக்கு வந்திட வாணாமானு...''



மாதவன் நடப்பதை நிறுத்தினான்.

''அப்ப, பீச்சுக்குப் போகலாமா, வேணாமா?''

''போலாம்... அரைமணி இருந்திட்டுக் கௌம்பிட லாம்... என்ன?''

மாதவன் ஆட்டோ ஒன்றைப் பிடித்தான்.

ஔவையார் சிலைக்கு அருகே அதிகக் கூட்டம் இல்லாத பகுதியில் இறங்கிக் கொண்டார்கள்.

கொஞ்சம் நடந்து மணலில் உட்கார்ந்தார்கள்.

''சுண்டல் வேணுமா சார்?''

''வேணாம்ப்பா...''

அரை நிமிஷத்தில் ஒரு பெரியவர் வந்தார்.

''முறுக்கு சாப்பிடறேளா? கை முறுக்கு; ஆத்துல செஞ்சது...''

''வேணாம் பெரியவரே...''

அடுத்த ஒரு நிமிஷத்தில் இன்னும் இரு சிறுவர்கள் வந்தனர்.

''மிளகு வடை, மசால்வடை ஸார்?''

அவர்களையும் அனுப்பினபின், 'நா மட்டும் மந்திரியா இருந்தா, பீச்சுல தனியா உக்காந்து பேச விடாம இப்படி தின்பண்டம் விக்க தொணதொணக்கறவங்களப் பிடிச்சு குறைஞ்சபட்சம் அஞ்சு வருஷம் உள்ள தள்ளிடுவேன்'' என, வழக்கமாக அவன் இப்படி 'நா மட்டும் மந்திரியா இருந்தா' பேச்சைப் பேசும்போதெல்லாம் குழந்தைத்தனமாய் சிரித்து மகிழும் வசந்தா இன்று சுரத்தில்லாமல் இருக்க, மாதவன் குனிந்து அவள் கையைப் பற்றினான்.

''ஹேய்... என்ன யோசனை?'' என்றான் சின்னக் குரலில்.

''......''

''சொல்லு வசந்தா... என்ன எப்படியோ இருக்கே?''

வசந்தா அவன் பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டாள்.

நிமிர்ந்து அவளை அழுத்தமாகப் பார்த்தபோது கண்கள் லேசாகக் கலங்கின மாதிரி தோன்றியது.

''நாலு நாளா எங்க வீடு ரொம்ப அமர்க்களப்படுது மாதவன்...''

''எதுக்கு?''

''அருள்சாமி வந்திட்டுப் போனார். அவர் மகன் ஆல்பர்ட் அமெரிக்காலேந்து திரும்பிட்டாராம்...''

''சந்தோஷம்... இப்ப அதுக்கு என்ன?''

''யார் இந்த அருள்சாமி, ஆல்பர்ட்னு கேக்காம சந்தோஷம், கிந்தோஷம்னு என்னத்துக்காக வாழ்த்தறீங்க?''

''சரி வாழ்த்தலை... யார் இவங்க?''

''அருள்சாமி, அண்ணனுக்கு ரொம்ப வேண்டியவரு... ஆல்பர்ட் அமெரிக்காவுக்கு ஏதோ பயிற்சி பெறப் போனாரு... முடிஞ்சு வந்தாச்சு...''

''வரட்டுமே... அதுக்காக நீ ஏன் இப்படி வருத்தப் படணும்?''

''குறுக்கே பேசாம கேக்கறீங்களா?'' நிஜமான எரிச்சலுடன் வசந்தா பேச, மாதவன் அசட்டுச் சிரிப்புடன் 'ஸாரி' என்று முணுமுணுத்தான்.



''என்னை அந்த ஆல்பர்ட்டுக்குக் கட்டி வச்சிடணும்னு அருள்சாமியும் எங்கண்ணனும் குறியா இருக்காங்க...''

ஓ!

மாதவன் தூரத்து வானத்தில் பறந்த பட்டங்களில் கவனத்தைத் திருப்பினான்.

பெரிய பெரிய பட்டங்கள்...

வண்ண வண்ணமாக...

விதவித ஏரோப்ளேன் உருவங்களில்...

சின்னப் பையனாய் இருக்கும்போது கிராமத்திலிருந்து சென்னைக்கு வரும் நாட்களில் பீச்சுக்கு வந்துவிட்டு, இந்த விமானப்பட்டங்களையும் அது விர்விர்ரென்று சத்தத்தோடு வானத்தில் எழும்பிப் பறப்பதையும் கண்டு அசந்து போய், ஆயாவை நொணநொணத்து தனக்கு ஒன்று, எதிர் வீட்டு நாகுவுக்கு ஒன்று, பள்ளித் தோழன் காசிக்கு ஒன்று என்று மஹா பெருமிதத்துடன் வாங்கிக்கொண்டு போனதும், கடற்கரைக் காற்றுக்கு கலபமாய் பறந்த பட்டங்கள், கிராமத்து மைதானத்தில் என்ன முயன்றாலும் தரையை விட்டுக்கூடக் கிளம்பாததும் இப்போது நினைவில் எட்டிப் பார்த்தன.

''நா சொல்றதக் காதுல வாங்காம என்ன வேடிக்கை பாத்துட்டிருக்கீங்க?''

மாதவன் திரும்பினான். புன்னகைத்து சமாளிக்க முயன்றான்.

''வேடிக்கை பார்க்கல வசந்தா... யோசனை பண்ணிட்டுதான் இருக்கேன்...'' என்றவன் குரலைத் தழைத்துத் தொடர்ந்தான்.

''அந்த ஆல்பர்ட்டக் கட்டிக்கறதுக்கு உனக்கு விருப்பம் இல்லையா?''

இது என்ன அசட்டுக் கேள்வி என்கிற மாதிரி வசந்தா முறைக்க, மாதவன் அவசரமாய்ப் பேசினான்.

"கோபப்படறதுல அர்த்தம் இல்லை வசந்தா... நீ சொன்னதைப் பார்க்கறப்போ ஆல்பர்ட் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்றது புரியுது... அமெரிக்காவுல படிச்சிட்டு வர்றதுன்னா பேசாம நாளைக்கு உன் வாழ்க்கை நல்லா இருக்கும்னா, வசதியா வாழ முடியும்னா அதப்பத்தி யோசிக்கறதுல என்ன தப்பு?"

"அப்ப, வசதி ஒண்ணுதான் வாழ்க்கைல முக்கியம்னு நினைக்கறீங்க?"

"அப்படிச் சொல்ல வரலை வசந்தா... வலிய வர்ற ஸ்ரீதேவியத் தள்றது முட்டாள்தனம்னு எங்க ஆயா சொல்வாங்க..."

"பணம் முக்கியம்னா நீங்க சொல்றது சரிதான்... ஆனா, அதைவிட மனசு, அதன் ஆசை முக்கியம்னு நா நினைக்கிறேன்..."

மாதவன் கவனத்தை மீண்டும் பட்டத்திடம் திருப்பினான்.

கிராமத்தில் இந்த அளவு காற்று கிடையாது என்பதை உணராமல் வாங்கிப் போனதால் நண்பர்கள் நடுவில் அவமானம் அடையக் காரணமான பட்டங்கள்...

மாதவன் பிரயத்தனப்பட்டு சிந்தனையை பட்டங்களிலிருந்து மீட்டு, வசந்தாவிடம் கொண்டு வந்தான்.

கொஞ்ச நாட்களாகப் பேசிவிட வேண்டும் என்று தவியாய் தவிக்கிற விஷயத்தை, இன்று வசந்தாவாகவே வலியத் துவக்கியும் அது குறித்து எதுவும் கூறமுடியாதபடி



ஏதோ நாவைக் கட்டிப் போடுவதை உணர முடிய, மணலில் ஆள்காட்டி விரலால் கோலம் போட்டான்.

"நம்ம நட்பைப்பத்தி என்ன நினைக்கிறீங்க மாதவன்?"

"ம்? ரொம்ப உசந்தது... யாருக்கும் லேசில இப்படி அற்புதமானதா அமைஞ்சிடாதுனு நினைக்கிறேன்..."

"அவ்வளோதானா?"

மாதவன் பேசியவளின் கண்களை நிமிர்ந்து பார்த்தான். மெதுவாகப் பேசினான்.

"அதுக்கு மேல கூட சொல்ல ஆசைதான்... ஆனா, அது நடைமுறைக்கு சரிப்பட்டு வருமானுதான் பயமா இருக்கு!"

"பயந்துகிட்டே இருந்தா ஒண்ணும் நாலா நடந்துடாது மாதவன்."

"தெரியும்.. ஆனாலும் அவசரப்படற விஷயமா இது, வசந்தா?"

"அவசரம்தான். பத்து நாள்ல அருள்சாமிகிட்ட பேசிடறதா அண்ணன் சொல்லிட்டிருந்ததைக் கேட்டதால தான் வெட்கத்தை விட்டு நானே இந்தப் பேச்சை எடுத்திட்டேன்..."

அவள் குரல் செம்முவதைப் புரிந்துகொள்ள முடிய, மாதவன் தாளமாட்டாத தாபத்துடன் அவள் கையைப்பற்றி தட்டிக் கொடுத்தான்.

"ஷ்... ஷ்... இப்ப என்ன நடந்து போச்சினு இப்படி வருத்தப்படறே வசந்தா? எப்படா இது சம்மந்தமா உன்கிட்ட பேசுவோம்னு நா துடிச்சிட்டு இருக்கறது எனக்குத்தான் தெரியும்... ஆனாலும், நிதானமா சிந்திக்கறது அவசியம் இல்லையா? அதான்..."

அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே, கேட்ட வரை போதும் என்பது போல வசந்தா அவன் பிடியை விலக்கினாள். எழுந்து நின்றாள். புடவையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டி விட்டாள்.

''நாழியாச்சு,'' அண்ணன் திட்டுவார்...'' என்று முணகலாய்ப் பேசியவள், சாலையைப் பார்க்க வேகமாய் நடக்க முற்பட்டதும், ''வசந்தா... ஹேய்... நில்லேன்... அட, நா சொல்றதக் கேளேன்... இங்க பாரேன்...'' என்று கெஞ்சலாய் பேசியபடி மாதவனும் அவசரமாய் அவளைப் பின்தொடர்ந்தான்.

# 5

குருவி ஒன்று ப்ரேமில் தொத்திக்கொண்டு உட்கார்ந்து, கண்ணாடியில் பிரதிபலித்த தன் பிம்பத்தையே எதிரியாகக் கருதி, விடாமல் நக்நக்கென்று கொத்தி ஓசை எழுப்பியது...

அடுத்த அறை சுந்தரவதனத்தைத் தேடி விருந்தாளிகள் வந்திருந்ததில், அவ்வப்போது சிரிப்பு உரக்கக் கிளம்பி இவன் அறைக்குள் வியாபித்தது.

மாதவன் கண்களை மூடி உறக்கத்தைத் தொடரப் பார்த்தான். ம்ஹூம்...

இப்போது வசந்தா என்ன செய்து கொண்டிருப்பாள்?

தூங்கி எழுந்து அத்தைக்கு சமையலில் உதவியாக இருப்பாளா?

அண்ணன் குழந்தையைக் குளிப்பாட்டி சீராட்டிக் கொண்டிருப்பாளா?



இல்லை. இன்னும் எழுந்திருக்கக்கூடச் செயலில்லாமல் படுக்கையிலேயே ஞாயிற்றுக்கிழமை தரும் சோம்பேறித் தனத்தோடு புரண்டு புரண்டு?

ஓ!

இன்று ஞாயிறு...

அப்படியென்றால் காலையிலேயே தயாராகி சர்ச்சுக்குப் போய்விடுவாள் இல்லையா?

வசந்தாவை நினைவிலிருந்து அகற்றும் உத்தேசத்தோடு எழுந்து உட்கார்ந்து, துரை சற்றுமுன் கொணர்ந்து வைத்து விட்டுப் போன ஞாயிறு பேப்பரைக் கையில் எடுத்தான்.

செய்திகளைப் படிக்காமல் ஜோசியப் பகுதிக்குத் தாவினான்.

''வேலையில் கவனமாய் இருக்கவேண்டிய நாட்கள். மாமூல் காரியங்களைத் தவிர புதுசாக எதையும் செய்ய முற்படவேண்டாம். நண்பர்களிடமும் உறவினரிடமும் சுமுகமாக இருக்கப் பாருங்கள். லாட்டரியில் பரிசு விழ வாய்ப்பு உண்டு. இதுவரை சீட்டு வாங்காதவர் என்றால், துணிந்து வாங்கவும். ரொம்ப நாட்களாகக் குழப்பிக் கொண்டிருந்த பிரச்சினைக்குத் தீர்வு உண்டாகும்...''

ஒரு வாரத்துக்கு இரண்டு தரமாக ஜோஸியக் குறிப்பைப் படித்தபோது மாதவனுக்குச் சிரிக்கத் தோன்றியது.

ஒரு முறை ஹோட்டல் வாசலில் இருந்த எடை மிஷினில் ஏறி நின்று, அது தந்த அட்டையில் இருந்த எதிர்காலக் குறிப்பைப் பார்த்துவிட்டு வசந்தா சொன்னது திடுமென ஞாபகத்துக்கு வந்து, சிரிப்பை அதிகமாக்கியது.

''கர்ப்பமாயிருக்கிற பெண் கிட்ட, 'பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தாலும் இருக்கலாம், பெண்ணாகவும்

இருக்கலாம்'னு சொல்ற இதுசில என்ன வழவழா ஜோசியர் இது...''

உண்மைதானே?

புதுசாக எதுவும் செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறும் அதே சமயத்தில் 'லாட்டரிச் சீட்டு வாங்கவில்லை என்றால் துணிந்து வாங்கு' என்றும் தூண்டிவிடுவதற்கு அர்த்தம் என்ன?

முதல் முறையாக எந்தக் காரியத்திலும் ஈடுபட வேண்டாம் என்றால், இதுநாள்வரை வாங்காமல் இருந்து விட்டு இப்போது லாட்டரிச் சீட்டு வாங்குவது மட்டும் புது காரியம் இல்லையா?

என்ன அசட்டுத்தனம் இது!

இப்படி எதையாவது எழுதித் தொலைத்துவிட்டு ஏற்கனவே குழம்பி இருப்பவர்களை இன்னும் அதிகமாய்க் குழப்புவதே இவர்களுக்கெல்லாம் வேலையாகி விட்டது.

நான் மட்டும் மந்திரியாக இருந்தால் பத்திரிகைகளில் ஜோஸியப் பகுதியை நிறுத்தும்படி ஆணை......

சிந்தனை பாதியில் நின்றது.

நான் மந்திரியும் இல்லை, என்றாவது ஒருநாள் ஆகப்போவதும் இல்லை... அப்புறம் என்னத்திற்காக வெட்டி கற்பனை?

அது என்னவோ சின்ன வயசிலிருந்தே ஒரு பக்கமாய், தனியாய் உட்கார்ந்து வேண்டாத கற்பனையில் மூழ்கி, நேரம் காலத்தை வீணடிப்பது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது......

சுய அலசல் சன்னமாய் தன்மீதே எரிச்சலை உண்டாக்க, பத்திரிகையைச் சுருட்டி படுக்கைமேல் போட்டுவிட்டு எழுந்து நின்றான்.



கண்ணாடியைக் கொத்திக் கொண்டிருந்த குருவியை விரட்டினான். அது அறையை ஒருதரம் வட்டமடித்துவிட்டு மீண்டும் கண்ணாடி முன் வந்து உட்கார்ந்ததும் கொடியில் கிடந்த துண்டை எடுத்து வீசி 'ஷூ' என்று அடிக்குரலில் அதட்ட, குருவி நிஜமாய் பயந்துபோய் ஜன்னல் வழியாகப் பறந்து வெளியேறியது.

மாதவன் சலிப்போடு குனிந்து கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டான்.

இரண்டு நாள் தாடி. அயர்ந்து உறங்க முடியாததன் காரணமாய் கண்களடியில் உண்டாயிருந்த கருவளையங்கள்.

என்ன ஆயிற்று எனக்கு?

எதற்காக ஜுரத்தில் விழுந்து எழுந்தவன் மாதிரி காணப்படுகிறேன்?

சாதாரணமாய் ஞாயிற்றுக் கிழமையென்றால், நிதானமாய் உறங்கி எழுந்து, அக்கடா என்று குளித்து, உண்டு, மாட்னி, மாலை என்று முடிந்தால் இரண்டு சினிமாவுக்கு நண்பர்களோடு போய் பொழுதை சந்தோஷமாகக் கழிப்பவன் இன்று என்னத்திற்காக இப்படி சிக்காளி வேஷம் போடுகிறேன்?

சுருசுருவென்று கோபம் எழ, மாதவன் ஷேவிங்ரேஸர், சோப், பிரஷ்ஷை எடுத்து மேஜைமேல் வைத்தான். பானை ஜலத்தைக் குவளையில் ஊற்றி, பிரஷ்ஷைத் தோய்த்து முகவாயில் தேய்த்தான். துளி சோப்பைத் தடவி நுரை புஸுபுஸுத்ததும், இடது கையால் காதருகே மேலே இழுத்துப் பிடித்து, கன்னத்தை உப்பி, ரேஸரால் மழுங்க வழித்தான்.

புத்தி ஏனோ மறுபடியும் வசந்தாவிடம் ஓடியது.

'..........'

"கொஞ்சம் அடர்த்தியா மீசை வச்சிக்கிட்டா இன்னும் ஹேண்ட்ஸமா, நல்லா இருப்பீங்கனு நா நினைக்கிறேன் மாதவன்... வச்சிக்கறீங்களா? ப்ளீஸ்... எனக்காக?"

ஒரு மாசம் முன்னால் ஒருவித உரிமையோடு அவள் கூறியதை ஏற்று, சற்றே மெலிதாய் இருந்த மீசையை அடர்த்தியாக்கி, கவனத்தோடு இரண்டு நாட்களுக்கொருதரம் ட்ரிம் பண்ணி... 'என்னங்க வாவா ட்ரஸ் பண்ணிக்க ரொம்ப நேரம் எடுத்துக்கறீங்க?' என்று கண்களில் குறும்பு வெளிச்சம்போட துரை கூடக் கேட்கும் அளவுக்கு சதா கண்ணாடி முன் நின்று......

முகவாயை உயர்த்தி வேகமாய் ரேஸரை இழுத்த போது உணர்ச்சி வசப்பட்டுப் போனதில் ரேஸர் லேசாக சதையைப் பதம் பார்க்க, வெட்டுப்பட்ட இடம் எரிந்தது.

ரேஸரைக் குவளைத் தண்ணீரில் போட்டுவிட்டு டவலால் முகத்தில் மிஞ்சியிருந்த சோப்பை அழுந்தத் துடைத்தான். அடிக்கழுத்தில் கீறல் விழுந்த இடம் சிகப்புக் கோடாக நிறம் மாறியிருந்தது.

துடைத்தான்; எரிந்தது.

ஷெல்பில் வைத்திருந்த லாவ்லான் பாட்டிலை எடுத்து விரலினால் தொட்டு வெட்டுப்பட்ட இடத்தில் தீற்றினான்.

முதலில் எரிந்தது. அப்புறம் சில்லென்று சுகமாய் இருந்தது.

ஷேவ் செய்தது போதும் என்கிற தீர்மானத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தான்.

மனசு இருப்புக்கொள்ளாமல் வசந்தா, வசந்தா என்று அவளையே சுற்றி வந்து முணுமுணுப்பது புரிந்தது.



கிட்டத்தட்ட நாலு நாட்களாக இதே அவஸ்தைதான்.....

அன்று கடற்கரையில் 'ஆல்பர்ட்டுக்கு என்னைக் கட்டி வைக்க அண்ணன் துடிப்பாய் இருக்கிறார்' என்று கூறிவிட்டு 'நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று வசந்தா கேட்காமல் மௌனித்த நிமிஷத்திலிருந்து இதே சங்கடம் தான்...

வசந்தா......

அந்த அழகு முகம், கவர்ச்சியான உடம்பு...

தோழமை நிறைந்த குணம்... எப்பொழுதும் உதட்டில் ஒட்டிக்கொண்டிருக்கும் சிரிப்பு...... இதெல்லாம் எனக்கு வேண்டுமா, வேண்டாமா?

கேள்வி பிறந்ததுமே மனசு வேண்டும் என்று குரல் எடுத்துக் கத்தியது.

சரி, வேண்டுமென்றால் அந்தத் துடிப்பு எந்த அளவுக்கு என்னைத் துணிய வைக்கிறது?

தாலி கட்டி மனைவியாக்கி, ஊர் மெச்ச குடித்தனம் பண்ணிக் காட்டும் அளவுக்கு?

முடியுமா?

ஏன் முடியாது?

எத்தனையோ பெண்களை இத்தனை வருஷங்களாகப் பார்த்து, பழகியும் வசந்தா பேரில் உண்டான கவர்ச்சி ஈடுபாடு வேறு யாரிடமும் உண்டாகவில்லை என்பது தானே நிஜம்...?

நிஜமா, பொய்யா விவாதம் இருக்கட்டும்; வசந்தாவை மணப்பதென்பது நடைமுறைக்கு சரிப்பட்டு வருமா?

அப்பா, அம்மா கிராமத்தைச் சார்ந்தவர்கள். வசந்தாவோ வேலை பார்க்கும் நாகரிகமான ஒரு பெண். அதுவும்

கிருஸ்துவ மதத்தைச் சேர்ந்தவள். இவளை அவர்களுக்குப் பிடிக்குமா? மனசுக்குப் பிடிக்காத மருமகளை ஏற்றுக் கொள்வார்களா? நானோ ஒற்றைப் பிள்ளை... அப்புறம்? ம்ஹ்?

வசந்தா அழகி, புத்திசாலி, கெட்டிக்காரி, நாகரிகமாய் என் மனசுக்கு ஏற்பப் பழகத் தெரிந்தவள் என்று கெஞ்சி, கூத்தாடி, வாதாடி அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியாதா?

'உன் சந்தோஷம்தான் எங்க சந்தோஷம்' என்று அடிக்கடி சொல்வீர்களே, அது நிஜம் என்றால் வசந்தாவை மருமகளாக்கிக் கொள்ளுங்கள் என்று காலில் விழுந்து விட்டால்?

தனக்குத்தானே தீவிரமாய் யோசனை பண்ணிய போது, பெற்றவர்கள் எதை ஆட்சேபிக்கா விட்டாலும், மதம் விட்டு இன்னொரு மதத்திலிருந்து பெண் எடுப்பதை கண்டிப்பாக எதிர்க்கவே செய்வார்கள் என்பதை முதல் நாளே துல்லியமாகப் புரிந்துகொள்ள முடிய, சரி, மேற்கொண்டு இதே ரீதியிலேயே சிந்தித்து குழப்புவதில் அர்த்தம் இல்லை - அடுத்த முறை வசந்தாவை சந்திக்கும்போது 'என் நிலைமையை நீ புரிந்துகொள்ள வேண்டும். நம் கல்யாணம் நடக்கும் காரியமாகத் தோன்றவில்லை. நானோ, ஒற்றைப்பிள்ளை! பெற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் நிறைய உள்ளன. ஆக, நண்பர்களாகப் பிரிந்துவிடுவோம்' என்று உறுதியாய் கூறி விடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று ஒரு வழியாய் தீர்மானித்தான்.

ஆனால் இந்த முடிவை, வைராக்கியத்தோடு அவனால் தன்னுள் நிலைநிறுத்திக்கொள்ள முடியாமல் மஹா போராட்டத்தில் ஈடுபடுவதுதானே ஒவ்வொரு கணமும் நடக்கிறது?



வசந்தாவை மறந்து விடுவதா?

'நண்பர்களாக இருப்போம்' என்று கூறிப் பிரிந்து விடுவதா?

எங்கே?

கண்ணை மூடினால் வசந்தா, திறந்தால் வசந்தா, உட்கார்ந்தால் வசந்தா, நடந்தால் வசந்தா என்று அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் அவள் புகுந்து ஆக்கிரமித்த பிறகு நண்பர்களாகப் பிரிவதாவது, மண்ணாங்கட்டியாவது...

வசந்தாவைச் சந்திக்காமல் இருந்தால் ஒருவேளை குழப்பம் தெளியுமோ என்று நினைத்தவன் அடுத்து வந்த இரண்டு நாட்கள் லீவு போட்டுவிட்டு ஊரைப் பார்க்கப் போனான். ஒருநாள் முழுசாய் போவதற்குள் இருப்புக் கொள்ளாமல் போக, "என் குட்டிபோட்ட பூனையாட்டம் அல்லாடறே தம்பி? என்ன ஆச்சு உனக்கு? எதுக்காக சொல்லாம கொள்ளாம வந்தே? இப்ப எதுக்காக கால்ல வெந்நீரை ஊத்திகிட்டு ஓடறே?" என்ற அம்மா கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறாமல் திரும்பப் புறப்பட்டு வந்தான்.

என்ன ஆனாலும் சரி, திங்கள் வரைக்கும் அவகாசம் எடுத்துக் கொண்டு மறுபடியும் நடந்தவைகளை, நடக்க வேண்டியவைகளை அலசிப் பார்ப்பது என்று நேற்று இரவு புதுசாய் எடுத்திருந்த முடிவைச் செயலாக்க முடியாதபடி 'வசந்தா வசந்தா' என்று என்னவோ அவளைப் பார்த்து, பேசி, யுகம் ஆகிவிட்ட ரீதியில் நெஞ்சு ஏங்க, உட்கார்ந்திருந்தது போதும் என்று மாதவன் எழுந்தான்.

அவசரமாய் குளித்து, தயாராகி, காலை டிபனைக் கூட உண்ணப் பிடிக்காமல் சர்க்கக்குப் போனான்.

உள்ளே நுழைந்து, எட்டாவது வரிசையில் தலையை வெள்ளை புடவையின் தலைப்பில் மூடி இருப்பவளை அடையாளம் கண்டுகொண்டு, பிரார்த்தனைக் கூட்டம் முடியும் வரை ஒரு பக்கமாய் நின்றபோது... யதேச்சையாய் தலை நிமிர்ந்த வசந்தா இவனை இனம் கண்டு கண்களில் சந்தோஷும் வெளிச்சம் போடப் புன்னகைத்து, 'எங்கே போய் விட்டீர்கள், நாலு நாட்களாய்? நான் தவித்துப்போனேன் போங்கள்' என்று கூறும் பார்வையாய் பார்க்க, உள்ளத்தில் அதுகாறும் படர்ந்திருந்த சந்தேகம், குழப்பம், எல்லாம் பனிச்சென்று மறைகிற மாதிரியே மாதவனுக்குத் தோன்றியது.

## 6

"மாதவன்..."

"......"

"மாது..."

இந்த முறை சற்று அழுத்தம் திருத்தமாக வசந்தா அழைத்ததும் மாதவன் திரும்பினான்.

"ம்?"

"நா பாட்டுக்கு பேசிட்டே இருக்கேன், உங்க கவனமெல்லாம் எங்க இருக்கு?"

மாதவன் புன்னகைத்தான்.

"எங்கேயுமில்லை... அந்தக் கொழந்தைங்க விளையாட்டத்தான் பாத்துகிட்டு இருந்தேன்..."

அவன் பார்வை விழுந்த இடத்தை வசந்தா எறிட்டாள்.



சறுக்கு மரத்தில் இரண்டு குழந்தைகள் சறுக்க முற்பட, எதிர்ப் பக்கமாய் இன்னொன்று ஏறி அவர்களை சறுக்க விடாமல் முன்னால் நின்று முரண்டியதில் சின்னதாய் வாக்குவாதம் எழுந்திருப்பது, சிவுசிவுத்துப்போன முகங்களில் வெளிப்படையாய்த் தெரிந்தது.

வசந்தா அலுப்புடன் 'ப்ச்' என்றாள்.

"முக்கியமான விஷயத்தை பேசறப்போ பராக்கு பாக்கற, கற்பனைல மூழ்கிடற பழக்கத்தை எப்பத்தான் விடப்போறீங்களோ!"

அவள் எரிச்சலை சமாளிக்கும் நோக்கத்தோடு மாதவன் அவசரமாய் முன்னால் சாய்ந்து அவள் கையைப் பற்றினான். கண்களைச் சிமிட்டி சிரித்து, "நீ இப்படி சொல்றத கேக்கறப்போ, ஒரு ஜோக் நினைவுக்கு வருது... சொல்றேன், கேக்கறியா?" என்றவன் அவள் பதிலுக்குக் காத்திராமல் தொடர்ந்தான்.

'ஒரு கணவன் கிட்டே ஒரு மனைவி பேசிட்டு இருந்தாளாம். கணவன் கையில பேப்பர வச்சுகிட்டு மனைவி சொன்னதுக்கெல்லாம் ம்,ம்னு 'ம்' கொட்டிகிட்டே இருக்க மனைவி எரிச்சலோட சொன்னாளாம், நா பேசி முடிக்க முழுசா ரெண்டு நிமிஷம் ஆயிடுச்சு, நீங்க 'ம்' கொட்டறத நிறுத்தறீங்களா?'-னு... எப்படி? அந்த அளவுக்கு கவனத்தோட..... ஓ... ஹி..."

தான் கூறிய ஜோக்கை மாதவன் அனுபவித்து சிரிக்க, வசந்தா மீண்டும் 'ப்ச்' என்று சூள் கொட்டி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

மாதவன் பிடித்திருந்த பிடியை லேசாக இறுக்கினான்.

"என்ன வசந்தா, சிரிப்பு வரலியா?"

"சிரிக்க நல்ல நேரம் பார்த்திங்க மாது..."

"சிரிக்கன்னு தனியா நேரம் ஒதுக்கணுமா என்ன? எப்ப வர்றதோ அப்ப சிரிச்சிட வேண்டியதுதானே? சிரிக்க சிரிக்கத்தான் ஆயுசு கூடும்னு எங்க ஆயா சொல்வாங்க வசந்தா... அப்புறம்..."

வசந்தாவின் முகத்தில் சிடுசிடுப்பு அதிகமாவதை உணர முடிய, மாதவன் "ஓகே... ஓகே... ஸீரியஸா பேசலாம்... என்ன பேசணும் சொல்லு..." என்றான்.

"வேற என்ன? நம்ம பிரச்சனையைப் பத்தித்தான்..."

"அதான் பத்து நாளா வேண அளவுக்கு பேசி ஒரு முடிவுக்கு வந்திட்டமே!"

வசந்தா கண்களை இடுக்கிக்கொண்டு எதிரில் இருந்தவனை ஏறிட்டாள்.

"நீங்க உறுதியாதான் இருக்கீங்களா மாதவன்?"

"என்னைப் பாத்தா அப்படித் தெரியலையா?"

"தெரியுதுதான்... ஆனாலும் அப்பப்ப விளையாட்டா என்னன்னலாமோ குறுக்கே பேசிடறதுல, சந்தேகமாயும் இருக்கு..."

மாதவன் சிகரெட் டப்பாவை பையிலிருந்து எடுத்து ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டான்.

"இத்தனை பேசியும் சந்தேகப்பட்டா எப்படி வசந்தா? உன் வார்த்தைகளை நா அப்படியே ஏத்துக்கலியா?"

"நா துவக்கத்துலேந்தே என் முடிவுல உறுதியா நிக்கறேன் மாது. ஆனா, நீங்க அப்படித் தீர்மானமா இருக்கறதா படலியே..."



"நிக்காதயேன் - காலை வலிக்கப் போகுது..." என்று மீண்டும் ஜோக் அடிக்க எண்ணியவன், அவள் முகத்தைப் பார்த்துவிட்டு புகையை இழுத்து, நெஞ்சுள் நிரப்பிக் கொண்டான்; தணிந்த குரலில் பேசினான்.

"தீவிரமா இல்லாட்டி இப்படி உன்னோட உட்கார்ந்து பேசிட்டிருப்பேனா வசந்தா?"

"ஐம் ஸாரி... உங்களைப் புண்படுத்தணும்னு நா அப்படிப் பேசல... சந்தேகத்தை பேசித் தீர்த்திடறது நல்லதுனு நீங்கதானே சொல்வீங்க, அதான் கேட்டேன்... ஓ... கே... உங்க முடிவுல நீங்க உறுதியா இருக்கீங்க அப்படித்தானே?"

"ம்."

"ரெண்டு பேரும் தீர்மானிச்சிட்டப்புறம் மேல ஆக வேண்டியது என்னனு யோசிக்கறதுதானே புத்திசாலித்தனம்?"

மாதவன் சிகரெட்டை அணைத்து தூர எறிந்து "என்ன அவசரம் வசந்தா?" என்று மெள்ள கேட்க,

அடங்கியிருந்த எரிச்சல் வசந்தாவிடம் மீண்டும் தலை தூக்கியது.

"ஆரம்பிச்சிட்டீங்களா? நாலு வார்த்தைக்கொருதரம் இந்தக் கேள்விய கேக்காட்டி உங்களுக்கு மேல பேச வராதா?"

"அதுக்கில்ல வசந்தா வந்து..."

"வந்துமில்ல... போயுமில்ல... என் நிலைமை புரிஞ்சா, 'என்ன அவசரம்'னு கேப்பீங்களா? மனசில ஏதாச்சும் சந்தேகம் இருந்தா பட்டுனு சொல்லிடறது தேவலை மாது... இந்த மாதிரி தயங்கித்தயங்கி பேசினா என்னால புரிஞ்சிக்க முடியல... 'ஸாரி வசந்தா என்னால இஷ்டம் இல்லியா? சரி...

முடியாது'னு தெளிவா, வார்த்தைல சொல்லிடுங்க... ப்ளீஸ் டோண்ட் கீப் மி கெஸ்ஸிங்.''

கோபத்தைத் தாண்டிக்கொண்டு, ஏமாற்றத்தில் அவள் கண்கள் கலங்க முற்பட... 'அடடா...' என்றபடி மாதவன் பரிதவித்தான்.

''இப்ப நா என்ன சொல்லிட்டேன் நீ பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசற. ம்? அவசரப்படாம, நிதானமா செய்ய வேண்டியத யோசிக்கலாம்ன்றதுல என்ன தப்பு?''

''எங்க வீட்டுல அவசரப்படறதால, நானும் அவசரப்படறேன். ரெண்டு நாளைக்கொருதரம் அந்த ஆல்பர்ட் எங்க வீட்டுக்கு வர்றதும், அசடு வழிய சிரிக்கறதும் என்னால தாங்கமுடியல... வீட்டுல எல்லாரும் இலைமறைவு, காய்மறைவா எங்கள சம்பந்தப்படுத்தி பேச ஆரம்பிச்சிட்டாங்க... ஆல்பர்ட் அம்மாவுக்கு ஹிஸ்டரெக்டமி ஆபரேஷன் ஆயிருக்கு. அவங்க வீட்டுக்கு நல்லபடியா வந்து, கொஞ்சம் உடம்பு தேறினப்புறம் கல்யாணப் பேச்சு எடுக்கலாம்னு காத்திட்டிருக்காங்க... மிஞ்சிப் போனா இன்னும் ஒரு மாசம்... அதுக்குள்ள என் வழிய நா பாத்துக்கிட்டாதான் உண்டு... உங்களுக்கு எங்கண்ணனைத் தெரியாது... சரியான மொரட்டு ஆசாமி... 'பிடிச்ச முயலுக்கு மூணு கால்'னு நிரூபிக்க, நாலாவது கால வெட்டக்கூடத் தயங்க மாட்டாரு... இத்தனை சொன்னப்புறமும் என் நிலைமை, அவசரம் உங்களுக்கு புரியலைனா, மேக்கொண்டு நா பேசறதுல அர்த்தமே இல்லீங்க...''

உணர்ச்சிவசப்பட்டுப் பேசுபவளின் முகமும், பாவனையும் ஒருவித பரிதாபத்தை உண்டாக்க, மாதவன் நாற்காலியை கிட்டத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டான்.



யார் பார்த்தாலும் அக்கறை இல்லை என்கிற எண்ணத்துடன் அவள் கையைப் பிடித்துக்கொண்டான்.

''உன் நிலை நல்லாவே எனக்குப் புரியுது வசந்தா... நாளைக்குச் சின்னதா ஒரு குத்த உணர்ச்சியோ, ஏமாத்தமோ வராம இருக்க வேண்டிதான் 'நிதானமா யோசிக்கலாமே'னு சொன்னேன்...''

''என்னைப் பொறுத்தவரை நீங்க சொல்லுற எந்த குத்த உணர்வும் வராது மாது...''

''நிச்சயமா?''...

''சத்தியமா!''

கண்களை மலர்த்தி, மனப்பூர்வமாக அவள் பேச, மாதவன் நெகிழ்ந்தான்.

''உன்னை கட்டிக்க நா கொடுத்து வச்சிருக்கணும் வசந்தா...''

''உண்மையாதான் சொல்றீங்களா?''

''சத்தியமா.''

''இப்ப, மேல ஆக வேண்டியதப்பத்தி யோசிக்கலாமா?''

''செஞ்சிட்டாப்போவுது... ம்ம்?... முதல்ல இரண்டு பக்கத்து பெரியவங்ககிட்டயும் பேசணும்... அதான் முதகாரியம்... பக்குவமா பேசி, சம்மதம் வாங்கற வழியப் பாக்கணும்...''

வசந்தா புருவம் நெரிய யோசித்தாள்.

''இது நடக்கற காரியமா தோணுதா, மாது?''

''ஏன் நடக்காம?''

''சம்மதம் தருவாங்கனு, மெய்யாலுந்தான் நம்பறீங்களா?''

''......''

வசந்தா கையை அவன் பிடியிலிருந்து உருவிக் கொண்டு, தண்ணீர் டம்ளரை எடுத்து ஒரு வாய் குடித்தாள்.

''உங்க வீட்டப்பத்தி எனக்குத் தெரியாது. ஆனா கண்டிப்பா எங்க அண்ணன் நம்ப கல்யாணத்துக்கு ஒத்துக்கமாட்டாரு...''

''அப்ப? அவராண்ட விஷயத்த சொல்லி சம்மதம் வாங்க நீ முயற்சிக்கறதா இல்லியா?''

''கிடைக்காதுன்றப்போ என் முயற்சிக்கணும், மாது?''

''அது தப்பில்லியா வசந்தா?''

''என்ன தப்பு? என் மனசுக்கு பிடிக்காதவனை மணக்கச்சொல்லி அவங்க நிர்பந்தப்படுத்தறது மட்டும் தப்பில்லியா?''

''......''

வசந்தா குனிந்து நகங்களை ஆராய்ந்தாள். கீழே கிடந்த குச்சி ஒன்றை எடுத்து நக இடுக்கில் இருந்த அழுக்கை வெளியேற்றினாள்.

''ஆனா, எங்க அத்தம்மாகிட்ட சொல்லாம எந்தக் காரித்தையும் இதுநாள்வரை நா செஞ்சதில்ல... அதனால அவங்கிட்ட மட்டும் சொல்லலாம்னு இருக்கேன்...''

மாதவன் ஆர்வத்தோடு வினவினான்.

''அவங்க நம்ப கல்யாணத்துக்கு சம்மதிப்பாங்கனு நினைக்கறியா? அவங்க மூலமா உங்கண்ணனைச் சரிபண்ண முடியுமா?''



வசந்தா உதட்டைப் பிதுக்கி, தோளைக் குலுக்கினாள்.

''தெரியல... அத்தம்மா என்னிக்குமே என் மனசு புரிஞ்சு நடந்துப்பாங்கதான்... அவங்ககிட்ட முதல்ல சொல்றேன்... அப்புறமா பார்த்துக்கலாம்...''

''ஒரு வேளை உங்க அத்தை இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலைனா?''

வசந்தா நிமிர்ந்து அவன் கண்களை நேராகப் பார்த்தாள்.

''கிடைக்குதோ, கிடைக்கலையோ - யாருக்காகவும் என் முடிவ மாத்திக்க நா ரெடியா இல்ல மாது.''

அவளுடைய உறுதியான பதில் அலாதி நிறைவைத் தர மாதவன் மறுபடியும் நெகிழ்ந்து போனான்.

''சொந்தக்காரங்க எல்லாரையும் பகைச்சுக்கிட்டாவது என்னோட வாழ வர்ற அளவுக்கு நா அத்தனை உசந்தவன்னு நீ நினைக்கறியா?''

வசந்தா மயக்கத்தோடு புன்னகைத்தாள்.

''என் சாய்ஸ்ல எனக்கு நம்பிக்கை இருக்கு மாது... அத விடுங்க... எனக்காக உங்க உறவு மனுஷங்களை விட்டுட்டு வர நீங்க தயாரா இருக்கீங்களா?''

''கண்டிப்பா... ஆனா, அது அவசியமா, இல்லையானு தெரியத்தான், பெத்தவங்கிட்ட மனசு திறந்து பேசிடணும்னு இருக்கேன்...''

''ஒத்துப்பாங்களா?''

''தெரியாது... அம்மாவ சுலபமா எம்பக்கம் சாய்ச்சிட லாம்... அப்பாவக் கொண்டுவர்றது கஷ்டம்... இருந்தாலும் முயற்சி பண்ணத்தான் போறேன்...''

"பெஸ்ட் ஆஃப் லக்... ஆனா, செய்யறத உடனே செஞ்சிட்டாங்கன்னா தேவலை..."

"நீ இவ்வளவு உறுதியாப் பேசினப்புறமும் காலங்கடத்தறதுல அர்த்தம் இல்லதான்... வர்ற சனி, ஞாயிறு காஞ்சிபுரத்துக்குப் போய் பேசிட்டு வந்திடறேன்... ஓகே?"

"நானும் ஞாயித்துக்கிழமை சர்ச்சுக்குப் போறப்போ அத்தம்மாகிட்ட சொல்லிடறேன்..."

"ஆல் தி பெஸ்ட்..."

"தாங்க்யூ..."

ஒரு நிமிஷ மௌனத்துக்குப் பின் மாதவன் தயக்கத்தோடு கேட்டான்...

"ஒரு வேளை எங்க வீட்டுல உன்னை ஏத்துக்க சம்மதிச்சாங்கன்னா, நீ மதம் மாறத் தயாரா வசந்தா?"

வசந்தா உடனே பதில் கூறாமல் மேஜைமேல் சிந்தியிருந்த சொட்டு நீரை இழுத்து கோலம் போட்டாள். பின், சின்னக் குரலில் பதில் கேள்வி கேட்டாள்.

"இதையே நா திருப்பி உங்ககிட்ட கேட்டா?"

இதை எதிர்பார்க்காத திணுசில் மாதவன் திடுக்கிட்டது அப்பட்டமாகத் தெரிந்தது.

"நா...? கிறிஸ்ட்டியனா... வந்து... நோ... நோ..."

மேற்கொண்டு அவனைப் பேசவிடாமல் வசந்தா கையை குறுக்கே நீட்டித் தடுத்தாள்.

"ப்ளீஸ் வேணாம்... தேவையில்லாத தர்க்கமே வேணாம்... நீங்க நீங்களா இருங்க, நா நானா இருக்கேன்... அன்பு இருக்கறப்போ மதம் மாற வேண்டிய அவசியம்



இருக்கிறதா நா நினைக்கல... ஒருத்தர் மதம், பழக்க வழக்கத்த மற்றவர் மதிக்கக் கத்துக்கிட்டா போதும்... ஏற்று வாழணும்ன்றது கட்டாயம் இல்ல... நாம ஒருத்தர ஒருத்தர் நேசிக்கறோம்... இதான் முக்கியம்... இல்லையா மாது?"

தெளிவோடு அவள் பேசுவதாகத் தோன்ற, மேலே எதுவும் விவாதிக்க மனமில்லாமல் குனிந்து "ஐ லவ் யூ" என்று மாதவன் கூற, வசந்தாவும் மெதுவாய் பதிலுக்கு தன் உள்ளத்துக் காதலையெல்லாம் கண்களில் தேக்கி 'ஐ லவ் யூடூ' என்று முணகினாள்.

# 7

**ப**ஸ் ஸ்டாண்டில் நின்றிருந்த வசந்தாவுக்கு மிக சமீபத்தில் சரக்கென்று வந்து நின்றது அந்த ஆட்டோ.

"ஆட்டோ வேணாம்பா..." என்று இயந்திரத்தனமாய் பதில்சொல்லி, மறுபடி தெருவில் பார்வையை அவள் அலையவிட்டபோது, வேண்டாம் என்று சொல்லியும்கூட நகராமல் நின்றிருந்த ஆட்டோவிலிருந்து டிரைவர் இறங்கி வசந்தாவை நோக்கி வந்தான்.

"நீங்க மாதவனோட...?"

தன்னையும் மாதவனையும் அறிந்து வைத்திருக்கும் இந்த நபர் யார் என்ற கேள்விக்குறியோடு வசந்தா திரும்பினாள்.

"என் பேர் மாணிக்கம். நா மாதவனோட சினேகிதன்... அன்னிக்கு பஸ் ஸ்டிரைக் இருந்தப்ப, உங்களையும் அவனையும் ஆபீஸ்ல இறக்கி விட்டேனே... நினைப்பிருக்கா?"

''ம்...''

''உங்களைப்பத்தி மாதவன் சொல்லியிருக்கான்... உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல... அ... அது கூடத் தெரியும்!''

வசந்தா வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஆபீஸுக்குத்தானே போறீங்க? வர்றீங்களா, இறக்கி விட்டுடறேன்... இன்னிக்கு நீங்க லேட் போலருக்கே, மணி ஒம்பதரைக்கு மேல ஆயிடுச்சு!''

''இல்லே... நா வரலே... நீங்க போங்க...'' என்று சமாளிக்கப் பார்த்தவள், திடுமென நினைத்துக்கொண்ட மாதிரி, ''வந்து... உங்களுக்கு மாதவனோட ரூம் எங்க இருக்குனு தெரியுமா? என்னைக் கொஞ்சம் அங்க கொண்டு போய் விட முடியுமா?'' என்று கேட்க, மாணிக்கம் சற்றே திகைப்போடு பார்த்தான்.

''உமக்கா? நீங்களா? எதுக்கு அங்க போகணும்?''

''வந்து... வந்து...''

''இல்லே தப்பா எடுத்துக்காதீங்கம்மா... அது ஆம்பிளைங்க மட்டும் இருக்கிற லாட்ஜ்... அங்க உங்களை மாதிரி டீசென்ட்டான லேடீஸ் சாதாரணமா வர மாட்டாங்க... அதான்... நா சொல்றது புரியும்னு நினைக்கறேன்...''

அவன் முடிப்பதற்குள், அண்ணா சாலை போகும் பஸ் ஒன்று வேகமாக வந்து சடன் பிரேக் போட்டு நின்றது. காத்திருந்த நபரில் சிலர் முண்டியடித்துக்கொண்டு அதற்குள் திணித்துக் கொண்டதும் அதே அவசரத்துடன் கிளம்பிப் போயிற்று.



''இது உங்க ஆபீஸ் வழியா போற பஸ்தானே? என் விட்டுட்டீங்க? மாதவன் கூட லாட்ஜ்ல இருக்க மாட்டானே ஆபீஸுக்கு போயிருப்பான்...''

''இல்லே போகலே... நா காலைல எட்டு மணிலேந்து இங்கதான் நிக்கறேன்... அவரு நேத்தும் ஆபீஸுக்குப் போகலை. இன்னிக்கும் ஏன் இத்தனை நேரம் வரை வரலைனு தெரியலை... அதான் ரூமுக்குப்போய் பார்த்தா...''

மாணிக்கம் ஒரு நிமிஷம் நிதானித்துவிட்டு, பின் சங்கடத்துடன் ''வாங்க...'' என்றான்.

ஆட்டோவில் ஏறி உட்கார்ந்து இரண்டு நிமிஷங் களுக்குள் லாட்ஜ் வந்துவிட்டது.

மாணிக்கத்தைத் தொடர்ந்து மாடிப்படியில் ஏறினவள், ஒருசில அறைகளிலிருந்து எட்டிப்பார்த்த தலைகளைக் கண்டு பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

மாதவனின் அறை திறந்தே இருந்தது.

கட்டிலில் ஓரமாக முத்துவேல் உட்கார்ந்திருக்க, வெறும் லுங்கியோடு குப்புறப் படுத்திருந்த மாதவன் இவர்களைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான்.

''வா... வசந்தாவா! நீ இங்க... எப்படி! மாணிக்கம் அழைச்சிட்டு வந்தானா? வா... வா... உள்ள வந்துரு... வா மாணிக்கம்...''

கீழே கிடந்த பெட்டியையும், பேண்ட் சட்டைகளையும் பரபரப்பாக நகர்த்தி ஓரமாகத் தள்ளினான். மேஜை முன் இருந்த நாற்காலியை இழுத்துப்போட்டு, கட்டியிருந்த லுங்கி முனையினால் துடைத்து விட்டான்.

''உக்காரு வசந்தா... மாணிக்கம் நீயும் உட்காரு...''

வசந்தா நாற்காலியில் உட்கார, முத்துவேலும் மாணிக்கமும் மாதவனும் கட்டிலில் நெருக்கிக்கொண்டு உட்கார்ந்தார்கள்.

சனி, ஞாயிறு லீவில் காஞ்சிபுரத்துக்குப் போய், பெற்றவர்களைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிவிட்டு வருகிறேன் என்று போனவன், திங்கள் அன்றும் வராமல் இன்று செவ்வாய்க்கிழமையும் வராமல் இருக்க, இரவி லிருந்து உட்கார முடியாமல், கவனத்தை வேறு எதிலும் செலுத்த முடியாமல் வசந்தாவுக்குப் பதட்டமாகவே இருந்தது. அந்தப் பதட்டத்திலேயே, யார் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று லாட்ஜ் ரூமுக்கே போய் பார்த்துவிடத் தீர்மானித்து வந்தவளுக்கு மாதவனைப் பார்த்ததும் ஏமாற்றமாக இருந்தது.

ஒருவேளை உடம்பு கிடம்பு சரியில்லையோ என்று இதுவரை இருந்த பயம் விட்டுப்போய், வெறுமே முத்துவேலுடன் பேசிக்கொண்டு படுத்திருப்பவனைப் பார்த்தபோது சன்னமாய் எரிச்சல்கூட மண்டியது.

மாணிக்கம் முதலில் மௌனத்தைக் கலைத்தான்.

"இவங்க பஸ் ஸ்டாண்டுல நின்னுக்கிட்டிருந்தாங்க... நான்தான் அழைச்சிட்டு வந்தேன்... என்னப்பா, ரெண்டு நாளா ஆபீஸுக்குப் போகலையாமே? என்ன சே..."

அவன் முடிப்பதற்குள் காத்திருக்க முடியாத அவசரத்துடன் குறுக்கிட்டாள்.

"நல்லவேளை இவரு வந்தாரு... இல்லேன்னா உங்கள நா எங்கேனு தேடறது? லாட்ஜுல இருக்கீங்கனு தெரியுமே ஒழிய, நம்பர், கிம்பர் எதுவும் தெரியாது... ஞாயிற்றுக்



கிழமையே வந்துடுவேன்னு சொல்லிப் போனவர்கிட்டே யிருந்து எந்த சேதியும் இல்லையேனு பதறிட்டேன்... ஊர்லேருந்து எப்ப வந்தீங்க மாது?"

மாதவன் சங்கடத்துடன் குரலைத் தழைத்துப் பேசினான்.

"சண்டேயே வந்திட்டேன்... வசந்தா."

"அப்ப ஏன் ஆபீஸுக்குப் போகலை? எனக்குப் போன் பண்ணக்கூட இல்லியே?"

"அது... வந்து..."

வசந்தா 'ப்ச்' என்று சலித்துக்கொண்டாள்.

"சொல்லுங்க மாதவன்... ரெண்டு நாளா உங்களக் காணுமேனு தவியா தவிச்சிகிட்டு வந்திருக்கறது புரியாம சரியா பேசக்கூட மாட்டேன்னா எப்படி! எவ்வளவு விஷயம் பேச வேண்டியது இருக்கு, தெரியுமா?"

முத்துவேல் மெள்ள எழுந்து நின்றான். மேஜையி லிருந்த மண் கூஜாவிலிருந்து தண்ணீர் சரித்துக் குடித்தான். பின் யோசனையோடு பேசினான்.

"உரிமையோட தலையிடறதுக்கு மன்னிச்சுக்கங்க... மாதவன் பெரிய குழப்பத்துல இருக்கான்... எல்லாம் உங்க விஷயம்தான்! நேத்துலேந்து அதப்பத்திதான் பேசிக் கிட்டிருக்கோம்..."

என்ன என்பது போல வசந்தா கண்களை விழிக்க, இப்போது மாதவனே ஆரம்பித்தான்.

"இல்லே வசந்தா... நம்ம விஷயத்தப்பத்தி எங்க வீட்ல சொன்னேன்.. அவங்க..."

"சொல்லிட்டீங்களா? அப்பாடா! எங்க ஒண்ணுமே சொல்லாம வந்திடுவீங்களோனு பயந்திட்டேன்! என்ன சொன்னாங்க உங்கம்மா?"

"ம்.. சொன்னாங்க... சும்மாக்கிடடா போக்கத்தவனேன்னு!"

"அப்ப... அவங்க சம்மதிக்கலையா நம்ம கல்யாணத்துக்கு?"

மாதவன் விரக்தியாய் சிரித்தான்.

"கல்யாணம் வரைக்கும் போயிடாதே வசந்தா! அப்பறம் அவங்க காதுல விழுந்திடப் போகுது! பொசுக்குனு இங்கயே வந்து நின்னு என் கையக்காலை உடைச்சாலும் உடைப்பாங்க!"

"என்ன நடந்ததுனு விவரமா சொன்னாதானே எனக்குப் புரியும் மாது?"

மாணிக்கம் குரலில் சலிப்போடு, "அடப்போங்கம்மா..." என்றான். "இவ்வளவு சொல்றான், இதுலயே உங்களுக்குப் புரிஞ்சிருக்கணுமே! உங்கள இவன் கல்யாணம் பண்ணிக்க வீட்டுல சம்மதிக்கலைங்கறான்! என்ன, சினிமா டிராமாவுல வர்ற மாதிரி, 'வேத்து ஜாதிப் பொண்ணைக் கட்டிக்கிட்டா சொத்துல சல்லிக்காசு கிடையாது'னு டயலாக் அடிச்சிருப்பாங்க! அதானே மாதவன்?"

ஆமாம் என்பதுபோல் மாதவன் தலையசைத்தான்.

"இது ஒண்ணும் புரியாம இல்ல எனக்கு... இவர் ஹிந்து, நான் கிறிஸ்டியன். எங்க கல்யாணத்த அவ்வளவு சுலபமா யாரும் வாழ்த்துப்பாடி வரவேற்பாங்கனு நானும் நினைக்கலேதான். ஆனால், இவருதான் சொன்னார், ஊர்ல



போய் பேசிப்பாக்கறேன், முயற்சி பண்ணா அம்மாவை வழிக்குக் கொண்டுவரலாம்னு... அதான் என்ன நடந்ததுனு கேட்டேன். முடிவு ஏற்கனவே தெரிஞ்சதுதானே. இத வந்த அன்னிக்கே படக்குனு என்னை சந்திக்க சொல்லியிருக்கலாமே!"

"எப்படியாவது பேசி ஜெயிச்சிடலாம்னுதான் போனேன். ஆனா, இந்த மாதிரி ஒரு பொண்ணுகூட பழக்கம்னு நா ஆரம்பிச்ச உடனேயே அம்மா காதப் பொத்திக்கிட்டாங்க. 'போதும்ப்பா, காதல் கீதல்னு எதையாவது சொல்லி எங்களப் புண்படுத்திடாதே. இருக்கற ஒரே புள்ளைய தனியா விட்டுட்டு இருக்கறமேனு ஏற்கனவே எங்களுக்கு வருத்தமா இருக்கு... இதுல இந்தக் கன்றாவி வேற வேணாம். மெட்ராஸுக்குப் போய் முதகாரியமா அப்பாவுக்குத் தெரிஞ்ச பெரிய மனுஷரப் பாத்து மாத்தலுக்கு ஏற்பாடு செய்யற வழியப் பாரு... அப்படி மாத்தல் கிடைக்கலேன்னா வேலையவே விட்டுட்டு வந்திடு... இங்க கால்மேல கால்போட்டு உக்காந்துகிட்டு விவசாயத்தை கவனி... உன்னைப் பிரிஞ்சு எங்களால இருக்க முடியல'னு பெரிசா அழ ஆரம்பிச்சிட்டாங்க... அப்புறம்தான் ரோக்கொண்டு எதையும் பேச மனசில்லாம வந்திட்டேன்... இதப்போயி உன்னண்ட...."

வசந்தா கோபத்துடன் எழுந்து நின்றாள்.

"எப்படிச் சொல்றதுன்னா என்ன அர்த்தம்? யோசிச்சிக்கிட்டே படுத்திட்டிருந்தீங்கன்னா மட்டும் பிரச்னை தீர்ந்திடுமா?"

"இல்லே வசந்தா... வந்து... உங்கிட்ட நம்பிக்கை யோட..."

நண்பர்கள் கூட இருப்பதை மறந்து வசந்தா படபடத்தாள்.

"ஆ...மா! பெரிய்ய நம்பிக்கை! நம்ம பழக ஆரம்பிச்ச காலத்துலேந்தே எனக்கு நம்பிக்கை கிடையாது. எல்லாம் சுமுகமா முடியும்னு எதிர்பார்த்ததுதானே! நாங்கூடத்தான் எங்க அத்தம்மாகிட்ட விஷயத்தச் சொல்லிட்டு, அவங்க புலம்பலை வாங்கிக் கட்டிக்கிட்டிருக்கேன்! எங்க வீட்டுல மட்டும், 'அடியே ராஜாத்தி! மகராசியா போயிட்டுவா'னு ஆசீர்வாதம் பண்ணிட்டாங்களா, என்ன!"

மாதவன், முத்துவேல், மாணிக்கம் மூன்று பேருமே நிமிர்ந்தார்கள்.

"உக்காரு வசந்தா... ப்ளீஸ், கோபப்படாதே! உங்க அத்தம்மா என்ன சொன்னாங்க? அண்ணனுக்குத் தெரிஞ்சு போச்சா?"

"அண்ணனுக்கு இன்னும் தெரியாது. அத்தம்மாகிட்ட மட்டும் அன்னிக்கு சர்ச்சுக்குப் போயிட்டு வர்றப்ப மெதுவா சொல்லிட்டேன். என்னமோ சாவு செய்தியக் கேட்ட மாதிரி 'ஏசுவே'னு பதறிப்போயிட்டாங்க... 'உன்னை வேலைக்கு அனுப்ப வேணாம்னு தாஸ் அப்பவே அடிச்சிக்கிட்டான். நாந்தான் புத்தி கெட்டுப்போய் உனக்கு ஆதரவா பேசிட்டேன்! இப்ப தாஸுக்கு விஷயம் தெரிஞ்சா நம்ம ரெண்டு பேத்தையுமே உண்டு இல்லைனு ஆக்கிடுவானே'னு புலம்ப ஆரம்பிச்சிட்டாங்க! அத்தம்மாவே இந்த ஆர்ப்பாட்டம் செஞ்சாங்கன்னா, அண்ணனைப் பத்தி கேக்கவே வேணாம்! என்னை கழுத்த நெரிச்சு புதைச்சிட்டுதான் மறுவேலை பாப்பாரு!"

"அதுக்காக? சொல்லாம இருக்கிறது தப்பில்லையா? என்ன வசந்தா சொல்றே நீ? இது என்ன, எங்கம்மா அப்பாவுக்குத் தெரியாம நா சிகரெட் புடிக்கற விஷயம்னு நினைச்சியா? உங்க அத்தம்மாவே சொல்லிட மாட்டாங்களா?"



"மாட்டாங்க! அவங்களுக்கு எம்மேல ரொம்ப பிரியம் உண்டு. ஆனா, அண்ணன்கிட்ட பயமும் உண்டு. 'உங்கிட்ட நான் சொன்ன விஷயத்தை அண்ணன்கிட்ட சொல்லக்கூடாது. சொன்னீங்கன்னா நா தற்கொலை பண்ணிக்கிடுவேன்'னு பயமுறுத்தி வெச்சிருக்கேன்!"

மேலே என்ன கேட்பது என்று புரியாமல் மாதவன் பேசாமல் இருக்க, மாணிக்கம் எழுந்து நின்று கொட்டாவி விட்டான். பேசாமல் தலையைக் குனிந்துகொண்டு உட்கார்ந்திருந்த மற்ற மூவரையும் பார்த்து, "என்னப்பா, எல்லாருமே இப்பிடி உக்காந்திருக்கீங்க? எனக்கு வேலை இருக்கு... காலைலேர்ந்து ஒரு உருப்படியான சவாரி கூட இன்னும் கிடைக்கலே... ஆட்டோ வேற வெளியே நிக்கிது... இப்ப என்ன பண்ணப் போறீங்க?" என்றவன், வசந்தா பக்கம் திரும்பி, "நீங்க இப்ப கிளம்புவீங்களாம்மா?" என்று கேட்டான்.

முத்துவேல் அவசரமாய் கையை நீட்டி, "இருப்பா, என் அவசரப்படறே! இந்த விஷயமா யோசிக்கறதுக்காக நா கூடத்தான் லீவு போட்டுட்டேன். இவங்க பிரச்னைக்கு ஏதாவது ஒரு வழி சொல்ல வேணாமா? மாதவனுக்கு நெருக்கமா இருக்கிற நாமே உதவாட்டி எப்படி?" என்று தடுத்தான்.

"வழி என்ன வழி, பெரிசா ரெண்டு பேர் வீட்டிலயும் கல்யாணத்துக்கு ஒத்துக்கலை! அவங்களா செஞ்சு வெக்கலேன்னா, இவங்களே செய்துக்க வேண்டியதுதான். இதுல என்ன பெரிய பிரச்சனை!" என்று சொன்னபோது மாதவன் முகத்தில் கலவரம் வெளிச்சம் போட்டது.

"நாங்களேவா? அப்படீன்னா, ஓடிப்போகச் சொல்றியா?"

"அதெல்லாம் எம்பா! நீங்க ரெண்டு பேருமே மேஜரானவங்க... படிச்சவங்க, வேலையில இருக்கறவங்க ஓடி, கிடி போகாம இங்கேயே நல்ல விதமா கல்யாணத்தப் பண்ணிக்கிட்டு வாழ்ந்து காட்டறத விட்டுட்டு, சின்னச்சின்ன பசங்க மாதிரி 'தெய்வீகக்காதல்'னு பேத்திக்கிட்டு யோசிக்காம ஓடிப்போற பிஸினெஸ் எல்லாம் எதுக்கு? நம்ம மெக்கானிக் ஷெட் சிவாவும், கோகிலாவும் பைத்தியக்காரத்தனமா ஓடிப் போயிட்டு, அதனால எத்தனை கஷ்டங்கள்... மறந்திட்டியா மாதவா?"

சிவாவையும், கோகிலாவையும் மாணிக்கம் ஞாபக மூட்டியதும், புது சிந்தனையுடன் மாதவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

நிரந்தர வருமானமோ, அதைத் தேடிக்கொள்ளும் அளவுக்கு படிப்போ அனுபவமோ இல்லாத சிவா, கோகிலா போன்றவர்களே உலகத்தை எதிர்த்து கஷ்டங்களைத் தோளில் சுமந்து வாழ துணிச்சலோடு காரியத்தில் இறங்க முடியும் என்றால், ஓரளவு நல்ல அந்தஸ்துள்ள எங்களால் முடியாதா என்ற நம்பிக்கை துளிர்விட ஆரம்பிக்க, குழப்பம் குறைந்து வசந்தாவைப் பார்த்தான்.

"உனக்கு என்ன தோணுது வசந்தா?"

"ப்ச்... நீங்க திருப்பித் திருப்பி பேசினதையே பேசிக்கிட்டு இருக்கீங்க மாது... யாரும் சம்மதம் கொடுக்காட்டியும் கூட நா என் முடிவுல தீர்மானமாதான் இருப்பேன்னு உங்ககிட்ட அடிச்சு சொல்லிட்டேன். அதை மறந்திட்டு என்ன கேள்வி இது? ம்? இங்க பாருங்க. கடைசி தரமா சொல்றேன். நம்ப ஒண்ணா வாழணும்ன்ற நினைப்பு உங்களுக்கு உண்மையாகவே இருந்தா, மேலமேல பேசறத நிறுத்திட்டு உருப்படியா ஏதாவது ஒரு முடிவுக்கு வாங்க!"



அழுத்தமும் தீர்மானமுமாக வசந்தா பேசி நிறுத்த, மாதவன் எழுந்து நின்றான். இப்படியும் அப்படியும் நடந்தான். நகத்தைக் கடித்தான். யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்துவிட்ட இறுதியில் பேசினான்.

"சரி வசந்தா, யாரையும் எதிர்பார்க்காம நாமளே கல்யாணம் பண்ணிக்கறோம். அதுவும் கூடிய சீக்கிரத்துல... போதுமா? எப்போ, எப்பிடி கல்யாணம் நடக்கப் போவுதுனுதான்..."

முத்துவேல் கேலியான குரலில், "மறுபடி யோசிக்க ஆரம்பிச்சிடாத மாதவா... பெத்தவங்களை எதுத்துகிட்டு கல்யாணம் செஞ்சிகிட்டா, நின்னு நிதானமா மாப்பிள்ளை அழைப்பெல்லாம் வெச்சு பிரமாதமா எதுவும் நடத்த முடியாது! அதனால, ஏதாவது ஒரு கோவில்ல நாலு நண்பர்கள் சாட்சியா வெச்சி தாலியக் கட்டிட வேண்டியதுதான்! திருநீர்மலைல வேணா..." என, அவன் முடிக்கும் முன் வசந்தா குறுக்கிட்டாள்.

"சர்ச்சைக்கூட நாங்க கோவில்னுதான் சொல்வோம்... அப்ப சர்ச்சுல வெச்சிக்கலாமா?"

"சர்ச்சுலயா? அதுல... நா எப்படி..." என மாதவன் தயங்க, வசந்தா வேதனையுடன் புன்னகைத்தாள். "வேணாம் மாதவன்... கோவிலும் வேணாம், சர்ச்சும் வேணாம்... இந்த விவாதமெல்லாம் வேணாம்னு நாம எத்தனவே தீர்மானிச்சிட்டதை இவங்ககிட்ட சொல்லுங்க... சிம்பிளா ரிஜிஸ்டர் மாரேஜ் சீக்கிரமே பண்ணிக்கறதுதான் பெஸ்ட்னு நா நினைக்கறேன்..."

முத்துவேல் லேசாக விஸில் செய்தான்.

"ஸிம்பிளா ரிஜிஸ்டர் மாரேஜா? ரிஜிஸ்டர் பண்றது கூட நினைச்ச உடனே பண்ற சமாசாரம் இல்ல, தெரியுமா? எங்க ஆபீஸ் ஃப்ரெண்டு ஒருத்தருக்காக முன்ன நா அலைஞ்சிருக்கேன்! அப்ளிகேஷன் எழுதிக் கொடுத்து, கொஞ்ச நாள் வெயிட் பண்ணினப்புறம்தான் அவங்க கல்யாணத்த பதிவு செய்வாங்க! இத்தனைக்கும் அவங்க ரெண்டு பேருமே ஹிந்து மதம்தான்! உங்கள மாதிரி வேற வேற மதத்த சேர்ந்தவங்களா இருந்தா, அப்ளிகேஷன் கொடுத்தப்புறம் ஒரு மாசத்துக்கு மேல வெயிட் பண்ணனுமாம்..."

வசந்தா கண்களை விரித்தாள்.

"ஒரு மாசமா? அதுக்குள்ள எங்கண்ணனுக்குத் தெரிஞ்சுபோச்சு, ஏதாவது ஆயிடுச்சுன்னா? அந்த ஆல்பர்ட் வேற தினம் வீட்டுக்கு வர ஆரம்பிச்சிடுச்சு! ஒரு மாசம் வரை எப்படி தாக்குப் பிடிக்கறது?"

மாணிக்கம் தலையைக் கோதியபடி எழுந்து நின்றான்.

"சமாளிச்சுதான் ஆகணுங்க... வேற வழி இல்ல... ப்ராக்டிகலா யோசிக்கணும், சட்டப்படி ஒரு மாசம் தேவைனு சொல்லலேனா கூட, மத்த ஏற்பாடுகள கவனிக்க ஒரு மாச காலம் நிச்சயமா தேவைப்படும். இப்பவே கல்யாணத்தப் பண்ணிக்கிட்டீங்கனு வெயுங்க! அதுக்கப்புறம் என்ன செய்வீங்க? கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரினு நீ லாட்ஜுலயே தங்கிட்டு, அவங்கள அவங்க வீட்டுக்கு அனுப்பிடுவியா? குடும்பம் நடத்தறத்துக்கு ஒரு இடம் வேணாமா? சமைச்சு இமைச்சு சாப்பிட நாலு பாத்திரம் பண்டமாவது வேணாமா? உக்கார, படுக்கனு..."

"ஆமா மாது... இவர் சொல்றதப் பத்தியெல்லாம் நாம யோசிக்கவே இல்லியே! குடிசையா இருந்தாலும், நமக்குனு



ஒரு வீடு வேணும்... அத முதல்ல ஏற்பாடு பண்ணிட்டு, அப்புறம் அதுல குடும்பம் நடத்தத் தேவையான சாமான்கள சேகரிக்கணும்! எல்லா ஏற்பாடுகளையும் சரியா செஞ்சு வெச்சிக்கிட்டாதான் மாரேஜ் பண்ணிக்கிட்டு வந்த கையோட யார் தயவும் இல்லாம இருக்கலாம்."

பிரச்னை ஒரு வழியாய் தீர்ந்துபோன மாதிரி தோன்ற, முத்துவேலும் எழுந்து மாணிக்கத்தை ஒட்டி நின்றான்.

"ஜோனா - ஒரு முடிவுக்கு வந்திட்டாங்க... கங்க்ராட்ஸ்... இன்னிக்கே போய் ரிஜிஸ்டர் ஆபீஸ்ல ஒரு அப்ளிகேஷன் எழுதிக் கொடுத்திட்டு, மத்த ஏற்பாடுங்கள கவனியுங்க... எப்பப்ப எங்க உதவி தேவைப்படுதோ தயங்காம கேளுங்க... அப்புறம்..."

முத்துவேலும் மாணிக்கமும் கிளம்பிப் போனபிறகு, தானும் தயாராகி வசந்தாவோடு ஜோடியாய் லாட்ஜை விட்டு வெளியேறிய நிமிஷத்தில், பெற்றவர்களை மீறிச்செயல்படும் வருத்தத்தை தலையில தட்டி உட்கார வைத்துவிட்டு மாதவனுள் எதிர்காலத்தைப் பற்றின வண்ணக் கனவுகள் மெதுமெதுவாய் விரிய முற்பட்டன.

# 8

"நம்ம வசதிக்கேத்த ஒரு வீடு வேணும்னு சொன்னா, அதுக்கு எவ்வளவு வாடகை கொடுக்க வேண்டி வரும் வசந்தா..."

"அது நம்ம தேவையைப் பொறுத்திருக்கு மாது... ரெண்டு பேர் இருக்க ஒரு குட்டி வீடு போதாது?"

"ம்... போதும். ஒரு சமையலறை, ஒரு பெட்ரூம், ஒரு ஹால், சாப்பாட்டு அறை. பாத்ரூம், டாய்லெட்... எதையாவது விட்டுட்டேனா, வசந்தா?"

"எதையும் விடலே. அதான் ப்ராப்ளம்! நீங்க சொல்ற அத்தனை வசதிகளும் வேணும்னா, வாடகை எக்கச்சக்கமா ஆகும்... நம்மால முடியுமா?"

"முடியாம என்ன? எங்க பாங்க்குல வாடகை அலவன்ஸ்னு நிறைய உண்டு. அதை வேஸ்ட் பண்ணாம உபயோகப்படுத்திக்கலாமே... சொல்லப்போனா, கைக்காசுல காலணாகூட செலவழிக்க வேண்டி வராது... அட்வான்ஸ்தான் எவ்வளவுனு தெரியல..."

"மாது, இப்பிடி செஞ்சா என்ன... நம்மகிட்ட மொத்தம் எவ்வளவு பணம் இருக்குனு ஒரு கணக்கு பாப்பமா? அப்புறமா அத வெச்சு மத்த விஷயங்களை ஏற்பாடு செய்யலாம்..."

"எங்கிட்ட ரொம்ப ஒண்ணும் இல்லே வசந்தா... பாங்க்ல ஒரு ஆறாயிரத்துச் சில்லறை ரூபா இருக்கு அவ்வளவு தான்..."

"எங்கிட்ட அதுகூட இல்லே மாது... நா இப்பதான் வேலைக்கே போக ஆரம்பிச்சிருக்கேன்... இத்தல நாலு அண்ணங்கிட்டேயிருந்து அஞ்சு பத்துதான் கிடைச்சிதே தவிர, பெரிசா எதுவும் இல்லை... ஆனா, எங்கம்மா முன்னே வெச்சிருந்த நகை எல்லாம் எனக்குதான்னு அண்ணன் சொல்லியிருக்காரு... அது அத்தனையும் இல்லாட்டி கூட, கொஞ்சத்தையாவது எடுத்துகிட்டு வர முடியும். ஒரு சமயம் சந்தர்ப்பம்னு வந்தா, அத வித்து உபயோகப்படுத்திக்கலாம்... சரி, இந்த ஆறாயிரத்துல ஆயிரத்த அவசரத் தேவைகளுக்குனு



ஒதுக்கிடுவோம். மீதிப்பணத்துல, வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுக்கணும். சமையலுக்குத் தேவையான பாத்திரங்கள வாங்கணும்... ம்ம்... ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினா பத்தாது!"

"நாலு டம்ளர் டபராவும், ரெண்டு சாப்பாட்டுத் தட்டும், மத்த சாமானுங்களுக்கும் ஆயிரம் வேணுமா வசந்தா?"

"ப்ரஷர் குக்கர் இருந்தா காலை வேளைல சமையல முடிச்சிட்டு ஆபீஸுக்குப் புறப்பட வசதியா இருக்கும்... காஸ் அடுப்புக்கு ஏற்பாடு பண்ண முடியுமா மாது? அதுக்கு வேற எக்கச்சக்கமா ஆகுமே... இதத்தவிர, பாத்ரூம் உபயோகத்துக்கு பிளாஸ்டிக் சாமான்கள் வாங்கணும்!"

"சரி, குளியல், சமையல், சாப்பாடு ஆயிடுச்சு அப்புறம்?"

"சாப்பாடு இன்னும் முழுக்க முடியலியே மாது! எங்க உக்காந்துகிட்டு சாப்புடறது? ஒரு சின்ன டேபிள் ரெண்டு நாற்காலியாவது வேணாமா?"

"வேணும்தான்... ஆனா வசந்தா, இதெல்லாம் வாங்க இப்போகாசிருக்குமா? ஹால்ல போட நாலு குடை நாற்காலி அவசியமா வேணும்! வீடுன்னு இருந்தா, நாலு பேர் வரப்போகத்தானே செய்வாங்க... அவங்கள எங்க உக்காரச் சொல்றது?"

"கரெக்டுதான்! டைனிங் டேபிள் வேணா நம்ம லிஸ்டுலேந்து அடிச்சிடலாம்... கொஞ்ச நாளைக்கு தரையில உக்காந்து சாப்பிட்டா தேஞ்சிட மாட்டோம்... அப்புறம்? ஆங்... பெட்ரூமை மறந்திட்டோமே! இப்ப அங்க வாங்க..."

"இப்பவேவா? வந்திடட்டுமா வசந்தா?"

"ம்ம்... ஆசையப்பாரு... கட்டில் வாங்கலாமா வேணாமா?"

''அதெல்லாம் எதுக்கு? அதப்பத்தி அப்புறமா யோசிக்கலாம்... இப்ப நீ வா...''

''இப்பவா? எங்க மாது?''

''பெட்ரூமுக்கு வாறனு சொல்லிட்டு, ஆசையப்பாருனு பழிச்சா?''

''ஜீஸஸ்! என்ன மாது, இப்பக்கூட விளையாடறீங்க? சீக்கிரமா பிளான் பண்ணி முடிச்சு, நா ஆபீஸுக்கு வேற போகணும், தெரியுமில்லே! ரெண்டு மணி நேரம்தான் பர்மிஷன் போட்டிருக்கேன். இப்பிடி அடிக்கடி ஆபீஸ்ல டிமிக்கி கொடுத்திட்டு சந்திக்கறதும், சாயந்தரம் பீச்சுக்குப் போறதும் இன்னும் எத்தனை நாளைக்கு அண்ணன் கண்ணுல படாம இருக்கும்னு பயமா இருக்கு! அதுசரி, வீட்டு புரோக்கர் யாரையோ பார்க்கப் போறதா சொன்னீங்களே, பாத்தீங்களா?''

''பாத்தேன் வசந்தா... எந்த ஏரியாவுல வீடு வேணும், எந்த மாதிரி வேணும்னு என்னென்னவோ கேக்கறாரு... எனக்கு ஒண்ணும் புரியலை...''

''இதுல புரிய என்ன இருக்கு? நம்ம ரெண்டு பேர் வாழற மாதிரி வீடு வேணும்... ரொம்ப ஜகஜகனு ஒண்டுக் குடித்தனமா இல்லாம தனி வீடாவோ, இல்லே ஃப்ளாட்டாவோ இருந்தா நல்லது. போர்ஷனா இருந்தாக்கூட பரவாயில்லே... பஸ் ஸ்டாண்ட், மார்க்கெட் பக்கத்துலயே கிடைச்சா! ரொம்ப வசதி...''

''நாம செய்துக்கப் போறது ரகசியக் கல்யாணம்... அதனால, இந்த ஏரியாவ விட்டு எவ்வளவு தள்ளிப் போறோமோ அத்தனை நல்லது... உங்க அண்ணன் கண்ணுல படாம இருக்கறது பெட்டர்தானே! சுத்து வட்டாரத்துல



ரெண்டு மைல் தள்ளியே வீடு பாக்கச் சொல்றேன். அப்பத்தான், நாம இருக்கற எடத்தக் கண்டு பிடிக்கிட்டு யாரும் வர மாட்டாங்க!''

''அ... கல்யாணம் ஆயிட்டப்புறம் யாரு என்ன செய்ய முடியும்! என்னவோ தப்பு தண்டா பண்ணிட்ட மாதிரி யாருக்கும் தெரியாம குகைக்குள்ள போய் எதுக்காக ஒளிஞ்சிக்கணும்? நா ஆபீஸுக்கு எப்படியும் போய்த்தானே ஆகணும்... கண்டுபிடிக்கணும்னு தீர்மானிச்சிட்டா அங்க வந்து கலாட்டா பண்ண மாட்டாங்களா?''

''வரட்டும்... வரட்டும்... ஆபீஸ்னா நமக்கு ஆதரவா நாலு பேர் பேசுவாங்க... வீடுன்னா, நம்ம மட்டும் தனியா மாட்டிக்கிட்டு இல்லே முழிக்கணும்! வேணாம்பா, வம்பே வேணாம்...''

''என்ன மாது இப்பிடி பயப்படறீங்க? நம்மள திட்டறவங்க மத்தில ஜம்முனு வாழ்ந்து காட்ட வேணாம்?''

''அதெல்லாம் அப்புறம் காட்டலாம்... இப்போதைக்கு ஒரு பிரச்சனையும் வேணாம்! சரி, புரோக்கர் காட்டற வீட்டப் பாத்து நானே ஏற்பாடு செஞ்சிடட்டுமா?''

''ஐயோ, நா பாக்க வேணாமா? எனக்குத் தேவையான வசதிகள் அந்த வீட்டுல இருக்கானு பாக்கணும்... எனக்குப் பிடிச்சிருந்தாதான் அட்வான்ஸ் கொடுக்கணும், சரியா மாது?''

''சரிதான்... ஆனா நீ எப்ப வீட்டப் பாக்கறது?''

''ஒரு நாளு முழுக்க ஆபீஸுக்கு லீவு போட்டுடறேன்... புரோக்கர்கிட்ட சொல்லி, விலாசமெல்லாம் வாங்கி வெச்சுக்கங்க... ஒவ்வொண்ணாப் பாத்து முடிவு பண்ணிடலாம். அப்ப நா கிளம்பறேன் மாது. நீங்க அப்புறமா எனக்கு போன் பண்ணுங்க...''

"**எ**ன்ன மாது, இந்த வீட்டைப் பத்தியா புரோக்கர் ஓஹோஹோனு அப்படிப் புகழ்ந்தாரு?"

"ஏன்? உனக்குப் பிடிக்கலியா வசந்தா?"

"பிடிக்கலேனு இல்லே... ஆனா, என்னவோ புது வீடு, இதுதான் முதல் குடித்தனம், நல்ல கொகாவிட்டினு என்னென்னவோ கதை அளந்தாரே... இதுல ஒண்ணுகூட இந்த வீட்டுக்குப் பொருந்தலையே!"

"புது வீடுதானே இது!"

"ஆஹா... புத்தம்புது வீடு! அதான் இன்னும் சிமெண்டே பூசி முடிக்கலை! அவசர அரிதாரம் பூசின மாதிரினு சொல்வாங்க தெரியுமா! அந்த மாதிரி சுவத்துல பூச்சு வேலையே சரியா முடியாம, வெள்ளை வெளேர்னு சுண்ணாம்பு மட்டும் அடிச்சி வச்சிருக்கு! பாத்ரூமுக்குள்ள நுழைஞ்சா, கதவு தாழ்ப்பாள் போட திரும்பக்கூட முடியாது போலருக்கு! அவ்வளவு சிறிசா இருக்கு!"

"நீ ஏன் தாழ்ப்பாள் போடறே! இருக்கப் போறது நாம ரெண்டு பேர் மட்டும்தானே!"

"ஆரம்பிச்சிட்டீங்களா? எனக்கு இந்த வீடு பிடிக்கலை மாது!"

"வசந்தா, இப்படி பாக்கற வீடுங்களை எல்லாம் பிடிக்கலே, பிடிக்கலேனே சொல்லிட்டிருந்தா எப்படி? நிதானமா தெருத்தெருவா போய் வீடு தேடற நிலைமையில நாம இப்ப இல்லே... காலையிலேர்ந்து எத்தனை இடம் பாத்துட்டோம்? இன்னிக்கு இதுதான் கடைசி! இதுவும் பிடிக்கலைனா, மறுபடி புரோக்கர்கிட்ட சொல்லி, அவரு விசாரிச்சு நமக்கு சொல்ல இன்னும் ஒரு வாரமாவது ஆயிடும்!"



"ஆனா என்ன ஆபீஸ்ல சொன்ன கெடு முடிய இன்னும் பத்து நாளுக்கு மேலேயே இருக்கு... அதுக்கு அப்புறம்தானே கல்யாணமே நடக்கப் போகுது!"

"கல்யாணத்துக்காக சொல்லலை வசந்தா... நேத்து காஞ்சிபுரத்துலேருந்து அம்மா லெட்டர் போட்டிருக்காங்க..."

"என்னனு?"

"அப்பாவோட நண்பரப் போய் பாத்தியா? ஆபீஸ்ல மாத்தலுக்கு எழுதிக் கொடுத்திட்டியா, எப்ப இங்கே வரே, உடனே நீ இங்கே வரலைனா, நாங்க அங்கே ஒரு நடை வந்து போறதா முடிவு பண்ணிட்டோம்னு எழுதியிருக்காங்க... ரெண்டு நாள் பாத்திட்டு, நேர்ல தடால்னு வந்தாலும் வந்திடுவாங்க... வந்திட்டா, நாம சந்திக்கறதும், இப்படி வீடு செட்டில் பண்ண அலையறதும் கஷ்டம். அதுக்குத்தான் சொல்றேன், ஏதாவது ஒரு வீட்ட ஆச்சுனு ஏற்பாடு செஞ்சிடலாம்னு!"

"ம்ம்... உங்க அவசரம் எனக்குப் புரியுது. ஆனால் ஒண்ணும் சரியா அமையலியே!"

"இப்ப இதுவரைக்கும் பாத்ததுல, இந்த வீடு எவ்வளவோ தேவலை! நாலு மாடி ஏறினப்புறம் கொட்டகையைக் காட்டி வீடுனு சொல்லலை; ஒரே வாசப்படிய வெச்சு ஒவ்வொரு ரூமும் ஒவ்வொரு போர்ஷன்னு சொல்லலை; ஒம்பது மணிக்குள்ள லைட்டை அணைக்கணும்னு கண்டிஷன் எதுவும் போடலை! இப்பக்கூட பாரு, நாம பேசி ஒரு முடிவுக்கு வரணும்னிட்டு நம்மள இந்த ரூம்ல தனியா விட்டுட்டு வீட்டுக்காரர் வெளியே போயிட்டார்! பாத்தா டீசெண்டான மனுஷராதான் தெரியறாரு... அதுக்கென்ன; என்ன பணமுடையோ என்னவோ, வீட்டை முழுசா கட்டி முடிக்காம பாதியிலேயே நிறுத்திட்டாரு..."

"சரி அப்ப என்னதான் சொல்றீங்க மாது? இந்த வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்திடலாம்ன்றீங்களா?"

"ம்ம்... அட்வான்ஸ்தான் கொஞ்சம் அதிகமா கேக்கறா?... நம்மால கொடுக்க முடியும்னாலும் வேற செலவு எதையாவது குறைச்சிக்க வேண்டி வரும்..."

"வேற செலவுன்னா? இன்னும் கல்யாணச் செலவு வேற இருக்கு... அதையா சொல்றீங்க?"

"இல்லே வசந்தா, வீட்டுக்குக் கட்டில், பீரோன்னு ஒண்ணும் வாங்க முடியாது..."

"ப்ச்... இப்பிடி ஒவ்வொண்ணா குறைச்சிக்கிட்டே வந்து, வெறும் பிளாட்பாரத்துல படுத்துக்கற மாதிரி ஆயிடப்போவுது நம்ம குடித்தனம்... சரி விடுங்க, கையில பணம் கொண்டு வந்திருக்கீங்க இல்லே? கையோட வீட்டுக்காரர்கிட்ட அட்வான்ஸ் குடுத்திட்டுக் கிளம்புங்க... இதென்ன பாக்கெட்ல? நகைப்பெட்டியா?"

"ம்... உனக்காக மோதிரம் வாங்கினேன் வசந்தா... சைஸ் சரியா இருக்கா சொல்லு..."

"கொஞ்சம் லூஸா இருக்கு... ஆனா, என்ன இது, என்னவோ டிசைன் போட்டிருக்கு?"

"என்ன அப்படிக் கேட்டுட்டே வசந்தா? இது வெறும் டிசைன் இல்ல... 'ஓம்'னு சம்ஸ்கிருதத்துல எழுதியிருக்கு..."

"'ஓம்'னு மந்திரத்தையா சொல்றீங்க?"

"ஆமா - நா சின்னப்பையனா இருந்தப்ப 'ஓம்' போட்ட மோதிரத்ததான் ரொம்ப நாளைக்குப் போட்டிட்டிருந்தேன். எங்க தாத்தா ஊருக்கே பெரிய மனுஷனா வாழ்ந்தவரு... அவரு கையில எப்பவும் 'ஓம்' மோதிரம் இருக்குமாம்... 'உங்க தாத்தா மாதிரி நீயும் ஓஹோனு வாழணும் தம்பி'னு சொல்லி சின்ன வயசுல ஆயா செஞ்சு போட்டாங்க... அவங்க செத்தப்புறம் மோதிரத்தைப் பாக்குறப்ப எல்லாம் ரொம்ப அவங்க நினைப்பு வந்ததால கழட்டி வச்சிட்டேன். அப்புறம் சைஸ் சின்னதாயிட்டது. இப்ப, உனக்கு மோதிரம் வாங்க கடைக்குப் போனப்போ இதப் பாத்ததும் ஆயா, தாத்தா நினைப்பு வந்திடுச்சு... அதான் வாங்கிட்டேன்... எப்பிடி, நல்லா இருக்கா இல்லே?"



"ம்ம்? நல்லாதான் இருக்கு... ஆனாலும் இது தேவையானு தோணுது... என் கையில இருக்கற இந்த சிலுவை போட்ட மோதிரத்தையே உங்களுக்குப் போட்டுடட்டுமா மாது?"

"அ? அது எப்படி முடியும் வசந்தா? என் கையில சிலுவை மோதிரமா? அ... வேணா... அதோட சைஸ் வேற சரியா இருக்காது... பேசாம இத அழிச்சு புதுசா செஞ்சிடேன்..."

"சிலுவைய அழிக்கறதா? அது முடியாது... வீணா ஏன் ரெண்டு பேரும் வாக்குவாதம் செய்யணும்... அவங்கவங்க மதத்த அவங்கவங்க மதிச்சா போதும், மத்தவங்க மேல திணிக்கவேணாம்னு தீர்மானிச்சிருக்கறத அப்பப்ப ஏனோ மறந்திடறோம். பேசாம நீங்க வாங்கின மோதிரத்த நீங்களே போட்டுக்கங்க, என் கையில இருக்கறது அப்பிடியே இருக்கட்டும்."

"அப்ப கல்யாணத்தன்னிக்கு என்ன செய்யறது?"

"மனசு பொருத்தம் பத்தாதா மாது? இந்த வெளி அலங்காரமெல்லாம் எதுக்கு? வேணும்னா, ரெண்டுபேரும்

மோதிரத்தைக் கழட்டி வெச்சிட்டு, அன்னிக்குதான் புதுசா போட்டுக்கற மாதிரி போட்டுக்கிடலாம்... என்ன?''

''இருந்தாலும் வசந்தா...''

''தயங்காதீங்க மாது... வீட்டுக்காரர்கிட்ட போய் பணத்தைக் குடுத்திட்டு வந்திடுங்க.. அப்புறம் ரெண்டு நாளு கழிச்சு உங்க லாட்ஜ் ரூமைக் காலி பண்ணி சாமான்களை இங்க கொண்டு வச்சிடுங்க...''

சந்தேகம் இல்லாமல் அவள் பேசியதும், மாதவன் பணத்தைக் கொண்டுபோய் வீட்டுக்காரரிடம் கொடுத்து வந்தான்.

இரண்டு நாள் கழித்து, வசந்தா சொன்னதுபோல், லாட்ஜ் ரூமை ஒழித்து சாமான்களை மாணிக்கத்தின் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு வந்து புது வீட்டில் இறக்கினான்.

ஞாயிற்றுக்கிழமையாக இருந்தால் சர்ச்சுக்குப் போக வேண்டி வரும். அதனால் யாருக்கும் சந்தேகம் வராத மாதிரி ஒரு சனிக்கிழமை திருமணத்தை வைத்துக்கொள்ளலாம் என்று வசந்தா சொன்னதை ஏற்றான்.

முத்துவேலும் மாணிக்கமும் இவனுக்குத் துணையிருக்க வசந்தாவுக்கு அவள் அலுவலகத் தோழி ஒருத்தி கூட நிற்க அந்த சனிக்கிழமை காலை பதினோரு மணி அளவில் பதிவுத் திருமண அலுவலகத்தில தங்கள் திருமணத்தைப் பதிவு செய்துகொண்டபின் 'ஓம்' மோதிரத்தை வசந்தா மாதவனுக்கும், சிலுவை மோதிரத்தை அவன் அவளுக்கும் அணிவிக்க, கூட இருந்த மூன்று நண்பர்களும் ''கங்க்ராட்ஸ்'' என்று வாழ்த்த, வேறு எந்தச் சடங்குகளும் இன்றி தம்பதியானார்கள்.

# 9

**கா**பி குடிக்கவென டம்ளரைக் கையில் எடுத்து வாய்க்கருகில் கொண்டு சென்றபோது 'அந்த வாடை' துல்லியமாய் நாசியில் ஏறி, க்ஷண காலத்தில் வயிற்றைப் புரட்டியது.

நாலு நாளாய் காபி, டீ, தண்ணீர் என்று எதை குடிக்கக் முனைந்தாலும் கூடவே இந்த 'கவிச்ச வாடை' எழுந்து, குடலை முடிச்சுப் போட வைக்கிறது...

வாடை ஊறிவிட்ட ஒரே டம்ளரே திரும்பத் திரும்ப வந்து சேருகிறதா, இல்லை வீட்டில் இருக்கும் நாலு டம்ளரிலுமே ஆக்ரமிப்பு இருக்கிறதா?

கையிலிருந்த டம்ளரைப் புரட்டிப் பார்த்தவரையில் எதுவும் புரியாமல் போக, லேசான எரிச்சலுடன் மாதவன் அதைக் கீழே வைத்தான்.

கவிச்ச வாடை... ...

பச்சை முட்டைக்கே உரித்தான அலாதியான நாற்றம்...

சின்ன வயசில் ஆயா வீட்டில் வளர்ந்தபோது, உடம்பு ரொம்ப சோனியாக இருக்கிறது, இப்படியே விட்டால் பேரப்பிள்ளை நாளைக்கு சரியான நோஞ்சானாகத்தான் இருப்பான் - என்று போவோர், வருவோர் கூற, சம்பிரதாயத்தை, ஆசார அனுஷ்டானங்களை ஒதுக்கி வைத்து விட்டு இவன் நித்தம் முட்டை சாப்பிட ஆயா ஏற்பாடு பண்ணிய நாளில்தான் இந்த வாடை அவனுக்கு முதன் முதலில் பரிச்சயம் ஆனது.

'முட்டை' என்றுகூட வாயால் ஆயா சொல்ல மாட்டாள். பண்ணை ஆளை அழைத்து 'பேர் சொல்லாதத வாங்கிட்டு வந்தியாடா, கண்ணாயிரம்?' என்று கேட்டு, அவன் அதை உடைத்து, லோட்டாவில் ஊற்றி, ஸ்பூனால் அடித்து பால், சர்க்கரை போட்டு கலந்து, பேரப்பிள்ளையிடம் கொடுக்கும்வரை தலைப்பால் மூக்கைப் பொத்திக் கொண்டாவது கூடவே நிற்பாள்!

'நாறுது ஆயா' என்று முகத்தைச் சுளுக்கி இவன் நாள் தப்பாமல் மறுக்க, 'என் தங்கமில்ல, என் ராசா இல்ல... டபக்குனு குடிச்சிடு கண்ணு...... இப்ப சமத்தா குடிச்சின்னா, சாயங்காலம் அதிரசம் சுட்டுத் தருவேன், கடலை மிட்டாய் வாங்க காசு தருவேன்...' என்று ஆயாவும் விடேன் தொடேன் என்று ஆசை காட்டுவாள்.

மூக்கை ஒரு கையால் அழுந்தப் பிடித்துக்கொண்டு கண்ணாயிரத்தின் உதவியோடு மளமளவென்று லோட்டாவில் இருக்கும் பால் கலந்த முட்டையை வாயில் ஊற்றினாலும், வழவழா என்கிற அந்த பானம் விழுங்கின கையோடு வயிற்றில் சங்கடத்தை உற்பத்தி பண்ணியதில் வாந்தியாக வெளியே வந்து விழுந்ததுதான் பாதி நாட்கள் நடந்திருக்கிறது...

ஒருமாசம்போல இப்படி மன்றாடிவிட்டு சரி போ... முட்டை சாப்பிடாவிட்டால் போகிறான்... பாலும், தயிரும் வெண்ணையும் கொடுத்து பேரனைத் தேத்தி விடலாம் என்று தீர்மானித்த ஆயா, பேர் சொல்லாததை வாங்குவதை நிறுத்தினாளோ, இவன் பிழைத்தானோ!

சின்ன வயசில் வேண்டா வெறுப்பாக, செய்யக்கூடாத பாவத்தை செய்கிற அவஸ்தையுடன் அதைச் செய்து



விட்டதில் இன்றைக்கும் 'அசைவம்' என்றாலே உடம்பும் மனசும் அருவருப்பில் உதறித்தான் போகின்றன.

பச்சைமுட்டை வாடை...

அலாதியாய் எழும் கவிச்ச வாடை...

ஒருதரம் கண்ணாயிரம் கை தவறி கிணற்றடியில் பேர் சொல்லாததைப் போட்டு உடைத்துவிட்டு உடனே அதை நன்றாகக் கழுவிவிட மறந்துவிட்டதில், நாலு நாட்களுக்கு அந்தப் பக்கம் போனாலேயே என்னமாய் நாற்றம் ஆளை விரட்டியது!

ஆட்டுக்கறி விற்கும் கடையைத் தாண்டிப் போனாலும் கூட அந்த அளவுக்கு கவிச்ச வாடை வீசி மாதவன் உணர்ந்ததில்லைதான்...

இரண்டு நாட்கள் முட்டை அடிக்க உபயோகிப்பதற்குள் லோட்டாவில் அந்த நாற்றம் ஏறிவிட, 'டே, கண்ணாயிரம், லோட்டால வாடை வருதாமேடா, தம்பி சொல்லுதே... வெந்நி ஊத்தி கழுவி அத்த தனியா வச்சிடுடா... மறந்து போய்க்கூட வீட்டுப் பாத்திரங்களோட துலக்கப் போட்டுடாதடா...' என்று கவனமாய் ஆயா அந்த லோட்டாவை தனிமைப்படுத்தினது இப்போது நினைவுக்கு வர, மாதவன் கீழே வைத்த டம்ளரை மறுபடியும் கையில் எடுத்து, மூக்கருகே கொண்டு சென்றான்.

யக்...

தப்பாமல் அதே துர்மணம்தான்...

நிச்சயம் இது முட்டை வாடைதான்...

டம்ளரைத் தழைத்தவன் மடியில் இருந்த பேப்பரைக் கீழே போட்டுவிட்டு எழுந்து, சமையல்கட்டுக்குள் சென்றான்.

வசந்தா பூண்டு உரிப்பதில் கவனமாய் இருந்தாள்.

ஒருபக்கமாய் பொடியாய் நறுக்கி வைக்கப்பட்ட வெங்காயம்...

அதை நறுக்கும்போது கண்களில் நீர் பெருகியதற்கு சாட்சியாய் வசந்தாவின் கண்களும், மூக்கு நுனியும் சிவந்திருந்தன.

இவனைக் கண்டதும், மூக்கை உறிஞ்சிக்கொண்டு அவள் புன்னகைத்தாள்.

''என்ன காபி சாப்பிட்டீங்களா? நேத்துகூட ஹோட்டல் காபியாட்டம் என் நெஸ்கஃபே'னு நீங்க சலிச்சுக்கிட்டதால, சாயங்காலம் ஆபீஸ்லேந்து வர்றப்போ கால் கிலோ காப்பிப்பொடி அரைச்சு வாங்கிட்டு வந்து, மாடி வீட்டம்மாகிட்ட ஃபில்டர் கடன் வாங்கி, டிகாஷன் இறக்கி, காபி கலந்திருக்கேன்... எப்படி? நல்லா இருக்கா?''

தனக்காக இத்தனை பாடுபட்ட சந்தோஷத்தோடு பேசுபவளிடம் குற்றப்பத்திரிகை வாசிக்கப் பிடிக்காமல் மாதவன் சில கணங்களுக்குத் தயங்கினான். அப்புறம் மெள்ள டம்ளரை அவளிடம் நீட்டினான்.

''இதக் கொஞ்சம் சாப்ட்டுப் பாரு வசு...''

''ஏன்? இதுல என்னா அப்படி ஸ்பெஷலா இருக்கு... நீங்க குடிங்க... நா சாப்டாச்சு...''

''பரவாயில்ல... இந்த டம்ளர்லேந்து கொஞ்சம்...''

''பூண்டு கையா இருக்கே!''

அவன் நீட்டியதைக் கையில் வாங்காமல் வசந்தா அப்படியே வாயைத் திறக்க, மாதவன் ஒரு வாய் காப்பியை ஊற்றினான்.



வசந்தா முகத்தைச் சுளித்தாள்.

''அறிடிச்சே... இத்தனை கஷ்டப்பட்டு நல்லதா காபி போட்டுத்தந்தா, ஏன் ஆறவிட்டுட்டீங்க?''

அவளுக்கு பதில் சொல்லாமல் மாதவன் எதிர்க் கேள்வி கேட்டான்.

''ஏதாவது வாடை வருதா வசு?''

''வாடையா? காபி வாசனைதான் கும்முனு வருது... ஏன் கேக்கறீங்க?''

''இல்ல... வந்து...''

வசந்தா பூண்டு உரிப்பதை நிறுத்திவிட்டு அவனை ஏறிட்டாள்.

எதற்காக இத்தனை தயக்கம் என்று அந்தப் பார்வை கேட்டது.

மாதவன் அவள் அருகில் உட்கார்ந்துகொண்டான். மடியில் விழுந்திருந்த பூண்டுத் தோலை தட்டிவிட்டான். சின்னக் குரலில் கேட்டான்.

''நீ, நீ, வந்து... முட்டை சாப்பிடறியா என்ன?''

உடனே பதில் கூறாமல் வசந்தா அவனை வெறித்தாள். சற்று மௌனித்துப் பேசியபோது கோபம் அந்தக் குரலில் நன்றாகவே மண்டியிருந்தது.

''வீட்டுல அசைவம் சமைக்க வேணாம்னு கேட்டுகிட்டீங்க... நா சரினு ஒத்துக்கிட்டேன்... மாசம் மூணு ஆவப் போவுது; நாக்கு துப்புரவா செத்தாலும்... இன்னும் ஒருதரம் கூட உங்களுக்குக் கொடுத்த வார்த்தய நா மீறல... கால வேளைல இட்லியும், தோசையும் பிடிக்க மாட்டேங்குது... சரி, பச்சை முட்டைய பால்ல கலந்து சாப்ட்டா உடம்புக்குத்

தெம்பு, பசியும் ஆறும் - னு ஒரு வாரமா சாப்பிடறேன்... அது கூட தப்பா? சமைக்கக் கூடாதுனிட்டுதான் கேட்டுக்கிட்டிருங்களே தவிரவும் பச்சையா முட்டை கூட சாப்பிடக் கூடாதுனிட்டு கண்டிஷன் போடலியே!''

மாதவன் அவசரமாய்க் குனிந்து அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

''எதுக்காக இப்படி படபடக்கறே வசு? நா இப்ப என்ன சொல்லிட்டேன்? ம்? முட்டை சாப்பிடறியானு சாதாரணமா தானே கேட்டேன்?''

கையை நீட்டி அவனிடமிருந்த டம்ளரை வாங்கினவள், மூச்சை நீளமாய் இழுத்து வாசனை பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினாள்.

''எனக்கொண்ணும் வரலியே!''

''அப்ப, நா சும்மா சொல்றேன்னு நினைக்கறியா?''

''அப்ப, நா வேணும்னு மறுக்கறேன்னு சொல்றீங்களா?''

மாதவன் எழுந்து நின்றான்.

''விதண்டாவாதம் பண்ணினா, எதையுமே சரியா பேச முடியாது வசு... நா என்ன சொல்லவரேன்... வா...''

அவனை முடிக்கவிடாமல் வசந்தா குறுக்கிட்டாள்.

''புதுசா என்ன சொல்லிடப் போறீங்க? முட்டை சாப்பிடாத, எனக்குப் பிடிக்கலைனு... அதானே... அசைவம் சமைக்கக்கூடாதுனு சொன்னீங்க, சரி! இந்தச் சின்ன விஷயத்துல என் விருப்பப்படி நடந்துக்கக் கூடவா எனக்கு உரிமை இல்ல? எனக்குப் பூண்டு பிடிக்காது... ஆனாலும் உங்களுக்காக தினமும் சமையல்ல நா அத சேர்த்துக்கலியா?''



''அட, நா இப்ப என்ன சொல்லிட்டேன்னு நீ இந்த குதி குதிக்கறே?''

''குதிக்கறேனா? நானா? அதுசரி, நீங்க உங்க இஷ்டத்துக்கு என்ன வேணா குத்தம் சாட்டுவீங்க, ஆனா நா வாயத் திறந்து பதிலுக்கு 'இது நியாயமாங்க'னு கேக்கக்கூடாது - அப்படித்தானே? இது என்ன வீடா? இல்ல ஜெயிலா? சொல்லிடுங்க...''

உதடுகள் துடிக்க, கண்கள் கலங்கப் பேசினவள், கையை உயர்த்தி ரவிக்கையால் கண்களைத் துடைத்துக்கொள்ள, மாதவன் மனதாளாமல் அவள் அருகில் உட்கார்ந்து, தோளை அணைத்துக்கொண்டான்.

''அசடு... இப்ப எதுக்கு கண்கலங்கறே? ம்? முட்டை சாப்பிடணுமா, தாராளமா சாப்பிடேன், யார் தடுக்கறாங்க? பச்சையா என்ன, ஆம்லட் பாயில்ட்னு சமைச்சு சாப்பிட்டாக்கூட... நான் வாணாம்னா சொல்லப் போறேன்? முட்டை அசைவத்தோட சேர்த்தியா? இல்லையே... இப்ப ஹோட்டலுக்குப் போனா கேக்கு, ஐஸ்க்ரீம்ல முட்டை சேக்கறாங்கதான்... எனக்குத் தெரியாதா என்ன? வாடை மூக்குல அறைஞ்சாதான் பிடிக்கலைனு சொல்றேன்... வேணும்னா ரெண்டு கண்ணாடி டம்ளர், தோசைக்கல்லுனு தேவையானதை வாங்கி தனியா உன் உபயோகத்துக்குனு வச்சிட்டா போவுது. எல்லாத்துலேயும் ஒண்ணடி மண்ணடியாய் கலந்திட வேணாம்னு சொல்ல வந்தா... என்ன வசு இது... பச்சக் குழந்தையாட்டம், கண்கலங்கி... இந்த மாதிரி சின்ன விஷயத்த நீ பெரிசு பண்றது எனக்கு வருத்தமா இருக்கு... சிறைல வைக்கிற மாதிரியா உன்னை நடத்திட்டு இருக்கேன். என் தேவதையை தங்கத்

தாம்பாளத்துல தாங்கி உசத்தியா வச்சிக்கணும்ன்ற என் ஆசை புரியாம என்ன வசு நீ...''

கோபத்தை வெளிப்படுத்தும் உத்தேசத்தோடு எதுவும் பேசாமல் வசந்தா தலையைக் குனிந்து பூண்டு உரிக்க முற்பட, மாதவன் குழைந்த குரலில் பேசினான்.

''காபி, தண்ணி குடிக்கறப்போ, நாலைஞ்சு நாளாவே டம்ளர்ல ஒரு கவிச்சவாடை வருது... அதான் கேட்டேன்.''

வசந்தா, 'சக்' கென்று தலையை நிமிர்த்தினாள்.

''காபி டம்ளர்ல வருதா? எங்க?''

கொஞ்சலாய் பேசி, நெற்றியில் பறந்த முடியை விலக்கி, கண்ணீர் ததும்பிய விழிகளில் மாதவன் முத்தமிட, அந்த அரவணைப்புக்காகக் காத்திருந்த நினைப்பில் வசந்தா பெரிசாய் விசும்ப முற்பட்டாள்.

''ஷ்... ஷ்... வசு எதுக்கும்மா அழறே?''

மாதவன் பதற அழுகையூடே வசந்தா பேசினாள்.

''ரெண்டு நாளாவே மனசு சரியாவே இல்ல மாது... முந்தாநாள் எங்க சொந்தக்காரர் ஒருத்தர பஸ் ஸ்டாப்ல பாத்தேன்... நா வீட்டை எதிர்த்துக்கிட்டு வந்ததுல அத்தம்மா ரொம்ப அப்செட் ஆயிட்டாங்களாம். அண்ணன் வீட்டுல இருக்கறப்போ மூச்சு விடாம இருந்திட்டு தனியா இருக்கறப்போ 'வசு, வசந்தா'னு என் பேரைச் சொல்லி பொலம்பிகிட்டே இருக்காங்களாம். 'பரிமளம் பாதி உடம்பாயிட்டா - பெத்த பாசத்தைவிட வளர்த்த பாசம் பெரிசில்லையான்'னு சொந்தக்காரங்க சொன்னப்போ, ரொம்ப வருத்தமாயிருச்சு... என்னால எத்தனை பேருக்கு என்னென்ன மனக்கஷ்டம்னு... சரி, எதையும் உங்கக்கிட்ட



காட்ட வேணாம், பாவம் நீங்களும் பெத்தவங்களை விட்டுப் பிரிஞ்சு நொந்துதானே போயிருக்கீங்கன்னு பேசாமே இருந்தேன்... உங்களுக்காக நா அத்தனையும் தாங்கிக்கிட்டு இருக்கறதைப் புரிஞ்சிக்காம, 'என் முட்டை சாப்பிட்டே'னு நீங்க கேட்டதும், துக்கம் தாளமாட்டாமப் போயிடுச்சு...''

விசும்பல் அழுகையாய் மாற, அவளை என்ன சொல்லித் தேற்றுவது என்று புரியாத அவஸ்தையில் மாதவன் சில நிமிஷங்களுக்குத் தடுமாறினான். பிறகு, அணைப்பை இறுக்கி, முகத்தைத் தன் பக்கமாய் திருப்பி, கண்களைத் துடைத்துவிட்டான்.

''இதுக்கெல்லாம் வருத்தப்பட ஆரம்பிச்சம்னா நாள் பூரா அழுதுகிட்டே இருக்க வேண்டியதுதான். தேத்திக்கவசு.. யார் எப்படி வீராப்பா இருந்தாலும், உங்க அத்தம்மாவும் எங்கம்மாவுமாவது நம்ப கடத்தையாவ உடைஞ்சு போயிடுவாங்கன்றது நாம எதிர்பார்த்த விஷயம்தானே... விடு... நாளைவுல மனசு மாறி நம்பள ஏத்துப்பாங்கன்ற நம்பிக்கையோட வாழணுமே தவிர, இப்படி இடிஞ்சி போகக்கூடாது... நா ஒண்ணு சொல்றேன் கேக்கறியா? ம்?''

''என்ன?''

''பூண்டு, வெங்காயத்த அப்படியே வச்சிட்டு எழுந்திரு சொல்றேன்...''

''எழுந்து?''

''சட்டுப்புட்டுனு குளிச்சிட்டு, ரெண்டு பேரும் தயாராகி, புகாரில் சாப்டுட்டு, அப்படியே மௌண்ட் ரோட்ல மாட்னி படம் பாத்துட்டு வரலாம்... ஞாயிற்றுக் கிழமைகூட வீட்டுலேயே அடைஞ்சு கிடந்தா எப்படி? ம்?''

''புகாரில என்ன சாப்பாடு கிடைக்கும் தெரியுமா?''

''நல்லாவே தெரியும்... நீ சிக்கன் சாப்பிடு. நா ஆப்பம் வெஜிட பிள் குர்மா சாப்பிடறேன்...''

''நிஜம்மாதான் சொல்றீங்களா மாது?''

''நிஜம்மா...''

''பணம் எக்கச்சக்கமா ஆகுமே!''

''அதப்பத்தி நீ கவலைப்படாதம்ம தங்கம்... மாசம் பொறந்து ஒரு வாரம் ஆகல. அதுக்குள்ள என்ன சிக்கனம்? கிளம்பு, கிளம்பு... அந்த வெள்ளை ஜார்ஜெட் புடவை, ஸ்லீவ்லெஸ் ரவிக்கையப் போட்டுகிட்டு ஜம்முனு தேவதை மாதிரி கிளம்பு பார்க்கலாம்...''

கிளம்பினாள்.

திட்டமிட்டபடி புகாரியில் சாப்பிட்டு, சாந்தியில் மாட்னி பார்த்துவிட்டு, அவர்கள் வீடு திரும்பியபோது மணி மாலை ஏழு...

'ராத்திரி சாப்பாட்டுக்கு சமைக்கணும்' என்றபடி உள்ளே போக இருந்தவளை மடக்கி, 'என்ன அவசரம் - நாள் பூரா தள்ளியே இருந்திட்டு இப்பவும் சமையல் கிமையல்னு ஓடினா எப்படிம்மா?' என்றவாறு மாதவன் குனிய,

'இருங்கள் மாது - நான் சிக்கன் சாப்பிட்டிருப்பது மறந்துவிட்டதா - வாயை கழுவிக் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்க நினைத்த வசந்தா - 'எதற்கு? அவரே மறந்து விட்டதை நான் ஏன் வலிய ஞாபகப்படுத்த வேண்டும்' என்கிற மாற்று எண்ணத்துடன், கைகளை அவன் கழுத்தில் மாலையாக்கியபடி மார்பில் ஒண்டிக்கொண்டாள்.

# 10

குளித்து முடித்துத் தலையைத் துவட்டிக்கொண்டே சமையலறைக்குள் மாதவன் எட்டிப் பார்த்தபோது, வசந்தா இன்னமும் அதே நிலையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

அலமாரிக்குக் கீழே சுவரில் சாய்ந்து, முழங்கால்களைக் குத்திட்டு அணைத்து, தலையை அதில் ஒரு பக்கமாய்ப் புதைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். வலது கை தன்னிச்சையாய் எரிந்து முடிந்த தீக்குச்சி ஒன்றின் கரிமுனையால் தரையில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தது.

அடுப்பின் மேல், அரை மணிக்கு முன்னால் ஏற்றி வைக்கப்பட்ட அலுமினியச் சட்டி. அதனுள் கொதித்து சுண்டிப்போன குழம்பு தீய ஆரம்பித்திருந்தது.

அவசரமாய் உள்ளே நுழைந்து அடுப்பை அணைத்தான் மாதவன்;

''என்ன வசந்தா, குழம்பு ஒட்டிப்போச்சு... கவனிக்கலையா?''

அவன் நுழைந்ததோ, அடுப்பை அணைத்ததோ கண்ணில் படாத மாதிரி வசந்தா அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

''வசந்தா... வசு...'' என்று மறுபடி கூப்பிட்டவன், அவளருகில் மெள்ள குனிந்தான். தோளைத் தட்டி மீண்டும் ''ஏய்... வசு... என்னாச்சு?'' என, அவள் திடுக்கிட்டவள்போல விழித்து, ''எ... என்ன?'' என்றாள்.

''சரியாப் போச்சு! பத்து நிமிஷமா உன்னைப்போட்டு உலுக்கிட்டு இருக்கேன், நீ என்னடான்னா...''

''ஸாரி மாது, ஏதோ நினைப்புல இருந்திட்டேன்... என்ன வேணும் உங்களுக்கு?''

''எனக்கு ஒண்ணும் வேணாம்மா... அடுப்புல பாரு... குழம்பு ஓட்டிப்போய் சட்டியோட ஒட்டிக்கிடுச்சு; நா குளிக்கப் போறதுக்கு முந்தி அடுப்புல எத்தி வெச்சது! இத்தன நேரம் அதக்கூட கவனிக்காம என்ன யோசனை பண்ணிக்கிட்டிருக்கே? ம்?''

''ப்ச்...''

ஒன்றுமில்லை என்பதை அந்தச் சூள்கொட்டல் பொதுவாகத் தெரிவிக்க, மெதுவாக எழுந்தாள் வசந்தா. மாதவன் கரிசனத்தோடு அவளை அணைத்துக் கொண்டான்.

''சொல்லும்மா... உடம்பு சரியில்லையா? தலைய வலிக்குதா?''

''இல்லே...''

''அப்ப என்னதான் விஷயம்?''

''......''

கிட்டத்தில் குனிந்து ஆள்காட்டி விரலால் மெல்ல அவள் முகவாயை உயர்த்தியவன் ''வீட்டு நினைப்பு வந்திடுச்சா? அத்தம்மாவப் பாக்கணும்போல இருக்குதாம்மா?'' என்றான் சின்னக் குரலில்.

''அதெல்லாம் இல்லே...''

''எதக்கேட்டாலும் இல்லேனு சொல்றே... ஆனா காலையிலேர்ந்து நானும் பாத்துகிட்டுதான் இருக்கேன், ஸம்திங் ஈஸ் டெஃபனெட்லி ராங் வித் யூ... என்கிட்ட சொல்லக் கூடாதுனா வேணாம்...''



''......''

''சரிவிடு! சொல்ல இஷ்டமில்லாட்டி வேணாம். மணி எட்டாயிடுச்சு! இனிமே சமைச்சு எப்ப சாப்பிட்டு எப்ப ஆபீஸுக்கு போறது? நீ இன்னும் குளிக்கக்கூட இல்லே...''

''நா அப்பறமா குளிச்சுக்கறேன். நீங்க கிளம்புங்க...'' பேசியவாறு இரண்டு அடி வைத்து நடந்தவள், நின்றாள். திரும்பி யோசனையுடன் கேட்டாள். ''டிபன் என்ன சாப்பிடறீங்க? ப்ரெட் இருக்கு... லாட்டித் தரவா? வேணாம்னா வெளில சாப்டுக்கறீங்களா?''

''இப்ப அதான் பெரிய பிரச்னையா? முதல்ல நீ கிளம்பற வழியப் பாரு. ரெண்டு பேரும் வழக்கம்போல ஒண்ணாத்தானப் புறப்படப்போறோம்... போற வழில சேர்ந்தே டிபன் சாப்டிட்டா போச்சு...''

என்ன சொன்னாலும் புரிந்துகொள்ளாமல் சின்னக் குழந்தையாக அவன் பிடிவாதம் பிடிக்க, எரிச்சலுடன் வசந்தா விலுக்கென்று நிமிர்ந்தாள்.

''எதுக்காக இப்பிடி அடம் பிடிக்கறீங்க மாது? நீங்க முன்ன போங்க, நா அப்பறமா வரேன்னு சொல்றேனில்லே? என்னமோ தெரியல, கொஞ்ச நேரம் தனியா இருந்தா தேவலைபோல இருந்துச்சு... அதக்கூட புரிஞ்சுக்காம...''

அவள் எரிச்சலைப் பொருட்படுத்தாமல் ''அதுக்கில்லே வசு...'' என்று ஆரம்பித்தவன், அவள் அறையை விட்டு வெளியேறுவதைப் பார்த்து நிறுத்திக்கொண்டான்.

எதுவும் புரியாத குழப்பத்தோடு அரை நிமிஷம் அப்படியே நின்றுவிட்டு தோளைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கியவன், படுக்கையறைக்கு வந்து, லுங்கியை அவிழ்த்து 'ஷூ' மாட்டிக்கொள்ள பாண்ட், சர்ட் அணிந்துகொண்டான்.

நேரமில்லாமல் அவசரமாய் செருப்பில் காலை நுழைத்து, ப்ரீஃப் கேஸைத் தூக்கிக்கொண்டான்.

வாசல்வரை போனவன், ஏதோ நினைத்த மாதிரி உள்பக்கமாய் திரும்பி, "நா வேணா உங்க ஆபீஸ"க்குப் போன் பண்ணி லீவு சொல்லிடட்டுமா? இல்லே, ஒரு மணி நேரம் பர்மிஷனாவது சொல்லட்டுமா வசு?'' என, வசந்தா வெளியே வராமல் அங்கிருந்தே குரல் கொடுத்தாள்.

''எதுவும் வேணாம்... நா பாத்துக்கறேன், நீங்க கிளம்புங்க...''

கிளம்பினான்.

மதியத்துக்கு மேல் அலுவலக வேலை ஓரளவுக்கு முடிந்து சற்றே நிமிர்ந்தபோது வசந்தா நினைவில் வந்தாள்.

தொலைபேசியை எடுத்து அவள் அலுவலக எண்ணைச் சுழற்றி, ''மிஸஸ் வசந்தா ப்ளீஸ்'' எனக் கேட்டவனுக்கு, ''ஸாரி, அவங்க இன்னிக்கு வரலை, லீவு...'' என்று பதில் கிடைத்தது.

லீவா?

காலையில் கேட்டபோது லீவு சொல்ல வேண்டாம் என்றாளே?

என்னதான் ஆயிற்று வசந்தாவுக்கு?

அதற்கு மேல் வேலை ஓடாமல், என்ன என்கிற கேள்வி குடைய முற்பட, மானேஜரிடம் சொல்லிவிட்டு அலுவலக நேரம் முடிவதற்கு முன்பாகவே கிளம்பி வீட்டுக்குப் போனான்.

வீடு பூட்டித்தான் இருந்தது.



தன்னிடம் இருக்கும் சாவியினால் திறந்துகொண்டு உள்ளே போனான்.

வீட்டிலும் இல்லாமல், ஆபீஸுக்கும் போகாமல் எங்கேதான் போனாள்?

பிறந்த வீட்டு நினைவு வந்து அத்தையைப் பார்ப்பதற்குப் போயிருப்பாளோ?

சரி, அதைத்தான் சொல்லிவிட்டுப் போனால் என்ன? எதற்காக அந்த முகச்சுளுக்கல்? எரிச்சல்?

யோசிக்க யோசிக்க எதுவுமே புரிபடாமல் போக, உடைகளைக்கூட மாற்றாமல் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான்.

ஆறரை மணிக்கு மேல் வசந்தா வந்தாள்.

தினம் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் பரபரவென்று உள்ளே ஓடி, இரண்டு டம்ளர்களில் காப்பி கலந்து எடுத்து வந்து ஹாலில் கிடந்த குட்டி மேஜையில் வைத்துவிட்டு, 'உங்களுக்கு முன்னாடி வந்துரணும்னு பாக்கறேன், முடியலை மாது! பேசாம நீங்க ஒரு ஸ்கூட்டர் வாங்கிட்டு எனக்கு ஒரு மொபெட் வாங்கிக் குடுத்திடுங்க, என்ன?' என்று சிரிக்கிறமாதிரி இன்று எதும் பேசவில்லை.

தளர்ந்து நடந்து வந்தவள், இவன் வந்து உட்கார்ந்திருப்பதைகவனியாத நினைவில் உள்ளே நுழைந்து செருப்பை உதறிப் போட்டுவிட்டு, தரையில் ஒரு பக்கமாய் உட்கார்ந்து சுவரில் சரிந்துகொண்டாள்.

தோளிலிருந்த கைப்பையைக்கூடக் கழற்றி வைக்காமல் தலையைப் பின்னுக்குச் சாய்த்து கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் செய்கை குழப்பத்தை இன்னும் அதிகமாக்க, மாது எழுந்து நின்றான். அவள் அருகில் வந்தான். மெள்ள குரல் கொடுத்தான்.

''வசந்தா...''

''.........''

''என்ன விஷயம்மா?''

''.........''

''ரொம்ப டயர்டா இருக்கற மாதிரி தோணுதே... எங்கே போயிட்டு வரே? காபி சாப்பிடறியா? நானும் இன்னும் சாப்பிடல... இன்னிக்கு நானே ரெண்டு பேருக்கும் கலந்து எடுத்திட்டு வரேன்... ஓ.கே?''

வசந்தா அலுப்பு விலகாமலேயே நிமிர்ந்தாள். வேண்டாம் என்று தலையசைத்தாள்.

இப்போது மாதவன் நிஜமாகவே பயந்து போனான்.

''இங்கே பார் வசு, என்கிட்ட ஏன் சரியா பேசவே மாட்டேன்றே? என்மேல ஏதாச்சும் கோபமா? சொன்னாத் தானே விளங்கும்? இல்லியா? சரி அப்புறம்? உடம்பு சரியில்லைனா டாக்டர்கிட்டயாவது போய்ட்டு வரலாம்... இல்ல வேற ஏதாவது விஷயம்னா, அதையாவது சொல்லு... இப்பிடியே இருந்தா எப்படி?''

வசந்தா 'ப்ச்' என்றாள்.

''டாக்டர்கிட்டயா? அதாம் போயிட்டு வந்திட்டேனே...''

மாதவன் புருவத்தைச் சுருக்கினான்.

''டாக்டர் வீட்டுக்கா போனே? அதான் இன்னிக்கு



''ஒண்ணும் செய்யலை... உடம்பு ரொம்ப வெஸ்த்தியாவே இருக்கு, அதான் டாக்டர்கிட்ட போனேன்...''

அவள் பேசுவது எதுவும் புரியாமல் விழித்தவன், சலிப்போடு பக்கத்தில் உட்கார்ந்தான்.

''எனக்கு ஒண்ணும் புரியலை வசு... சொல்றத ஒழுங்கா சொல்லப் போறியா இல்லியா? எதுக்கு டாக்டர்கிட்ட போனே?''

வசு கண்களைத் தழையவிட்டாள். கிசுகிசுப்பாய் பேசினாள்.

''வந்து... வந்து... நீட்டு வாராம தள்ளிப்போயிருக்கு மாது!''

''எ...என்னது?''

அந்த 'என்னது!' என்கிற வார்த்தையில் உள்ள அதிர்ச்சி புரிந்த மாதிரி வசந்தா மௌனிக்க, மாதவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு படபடப்பாய் பேசினான்.

''விளையாடாதே வசு.''

''விளையாட இதுல என்ன இருக்கு மாது?''

''அப்ப! கர்ப்பமாயிருக்கேனா சொல்றே?''

''அப்படித்தான் தோணுது...''

'முருகா!' என்று முனகின மாதவன் எழுந்து குட்டி போட்ட பூனை போல குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

''நாமதான் எல்லா ப்ரிகாஷனும் எடுத்துகிட்டு இருக்கோமே வசு... அப்புறம்... எப்பிடி?''

"எனக்கும் புரியலைங்க... எங்கேயோ ஏதோ தவறாயிருக்கணும்..."

"ஆர் யூ ஷ்யூர்?"

"எப்பவும் இருவத்தஞ்சு இருவத்தாறு நாள்ல வந்திடற தீட்டு, இந்த முறை நாப்பது நாளாகியும் வரலை. நானும் முன் ஜாக்கிரதையா இருக்கமென்ற தைரியத்துல சரியா கவனிக்கப் பண்ணாம இருந்திட்டேன்... ரெண்டு நாளு முன்னதான், எதேச்சையா காலெண்டரைப் பார்த்தப்ப தூக்கிவாரிப் போட்டுச்சு..."

"எப்பிடி? எப்பிடி வசந்தா? நீ... நீ மாத்திரையெல்லாம் ஒழுங்கா..."

"சரியாத்தான் சாப்பிட்டேன் மாது! அதான் எங்க, எப்பிடி தப்பாப் போச்சுன்னு புரியலைன்னு அப்பப்பிடிச்சு சொல்லிட்டிருக்கேனே இன்னியோட நாப்பது நாளாவுது..."

"அதெல்லாம் சரி, டாக்டர் என்ன சொல்றாங்க? கர்ப்பம்னுதான் உறுதியா சொல்றாங்களா?"

"இல்ல... உறுதியா எதுவும் சொல்லல. இன்னிக்கு மத்தியானத்துக்கு மேல என் ஃப்ரெண்டக் கூட்டிக்கிட்டுப் போனேன். 'நாப்பது நாள்ல கன்ஃபர்ம்டா சொல்ல முடியாதும்மா, ஐம்பது ஐம்பத்தஞ்சு நாளாவது ஆகணும்'னு சொல்றாங்க. பத்து நாள் கழிச்சு மறுபடி வரச் சொல்லியிருக்காங்க... எதுக்கும் இருக்கட்டும்னு யூரின் டெஸ்டுக்கு எழுதிக் குடுத்தாங்க..."

"என்ன வசந்தா இது? இது எதுக்கு இப்பப்போயி... இன்னும் நாம சரியா செட்டில்கூட ஆகல... உனக்கு இப்பத்தான் வேலை கன்பர்ம் ஆயிருக்கு... வேற பொறுப்பு



எதுவும் இல்லாம ரெண்டு வருஷமாவது ஃப்ரீயா இருக்கணும்னு நினைச்சோம் இல்லே! அதுக்குள்ளப்ச்..."

"என்னமோ நா தப்பு பண்ணின மாதிரி இல்லே சலிச்சுக்கறீங்க! எனக்கு மட்டும் இப்ப குழந்தை பெத்துக்கறதுல விருப்பமா என்ன? ஆபீஸ்ல இப்பத்தான் வேலையே புரிய ஆரம்பிச்சிருக்கு... கன்ஃபர்ம் ஆகி ஒரு மாசம்தான் ஆவுது... அதுக்குள்ள மெடர்னிடி லீவு அது இதுன்னு எடுத்தா மதிப்பாவா இருக்கும்! என்னடா செய்யப்போறோம்னு நானே ரெண்டு நாளா கலங்கிப் போயிருக்கேன்..."

வசந்தாவிடம் காணப்பட்ட சோர்வு தனக்கும் தொற்றிக் கொண்ட மாதிரி மாதவனும் தளர்ந்து போனான்.

வெகு நேரம் எதுவும் பேசாமலேயே உட்கார்ந்திருந்து விட்டு, தனக்குத்தானே ஏதோ யோசனை பண்ணியவாறு மாதவன் எழுந்தான்.

"எழுந்திரு வசந்தா, போய் முகத்தைக் கழுவிக்கிட்டு வா... இப்படியே உட்கார்ந்திருந்தா எப்பிடி?"

"முகத்தைக் கழுவிக்கிட்டா பிரச்னை தீர்ந்துடுமா? ஏதாவது ஒரு வழி சொல்லுங்க..."

"என்னத்த சொல்றது? டாக்டர்தான் இன்னும் தீர்மானமா எதுவும் சொல்லலியே! நீயாத்தானே சந்தேகப்படறே? அவங்க சொல்லட்டும் இது கர்ப்பம்தான்னு. அப்புறமா பாப்போம்... இப்ப எழுந்திரு..."

அன்றைக்கு ஏதோ சொல்லி மாது சமாளித்தாலும் கூட, அடுத்து வந்த நாட்களில் வசந்தாவிடம் காணப்பட்ட மாற்றங்கள் கர்ப்பம் உறுதிப்பட்டுவி[illegible] தீர்மானமாக தெளிவாய் புரிய வைத்தன.

காலை படுக்கையை விட்டு எழுந்திருக்க விடாமல் வயிற்றைப் புரட்டியது. தலை சுற்றியது. ஒரு வாய் காப்பியோ, சாப்பாடோ உள்ளே போனாலும் குடமாய் வெளியே வந்தது. கண்ணடியில் கருவளையம் மைபூசிற்று. பூவோ, காய் கறியோ, வாசனைத் தைலமோ, ஊதுவத்தியோ - எதன் வாசமும் மூக்கைத் தொடுவதற்கு முன் குமட்டியது.

எப்படியோ சமாளித்துக்கொண்டு ஆபீஸ் போனால், டேபிளிலேயே தலை கவிழ்ந்துகொள்ள, ஒரு மணியும், அரை நாளுமாய் பர்மிஷன் கேட்டுக்கேட்டு வீட்டுக்கே வந்து விழுந்தாள்.

சரியாய் ஐம்பத்து மூன்றாம் நாள் காலை அவளைக் கட்டாயப்படுத்தி எழவைத்து, ஆட்டோவில் மறுபடி டாக்டரின் கிளினிக்கிற்கு அழைத்துப் போனான் மாதவன்.

ரத்தம், மூத்திரம் பரிசோதனை செய்து, எல்லா ரிப்போர்ட்டுகளையும் டாக்டரிடம் காண்பித்து, அவர் மகிழ்ச்சிச் சிரிப்போடு, "கங்க்ராட்ஸ் மிஸ்டர் மாதவன்... உங்க மனைவி உண்டாகி இருக்காங்க..." என்று கூறுவதற்கு முன்பாகவே இருவருக்கும் தெரிந்து போயிருந்ததால், இப்போது கர்ப்பம் உறுதிப்பட்டதில் புதுசாய் அதிர்ச்சி எதும் இருக்கவில்லை.

கல்லில் செதுக்காத குறையாய் விஷயம் தெளிவானதும், இனியும் தயங்குவதில் அர்த்தம் இல்லை என்கிற தீர்மானத்தோடு, டாக்டரின் கிளினிக்கிலிருந்து ஆட்டோவில் வீடு திரும்பி வீட்டின் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய் மாது சொன்னான்-

"இப்ப குழந்தை பிறக்கறதுல ரெண்டு பேருக்குமே விருப்பம் இல்லே... அதனால... அதனால... இந்த கர்ப்பத்த உடனடியா, தாமதப்படுத்தாமே கலைச்சிட்டா என்ன வசந்தா?"

# 11

சண்டை...

முதல் சண்டை.

முத்தின முதல் சண்டை.

இரண்டு மணி நேரத்துக்கு முகத்தைத் தூக்கிவைத்து, கேட்கும் எந்த கேள்விக்கும் பதில் கூறாமல் மௌனித்து, கடைசியில் கிட்டத்தில் வந்து அணைத்து, 'ஸாரிப்பா' என்றதும் அத்தனையும் மாயமாய் மறைந்து போக அவன் மார்பில் புதைந்து கொள்வது போலவோ, அன்றி,

கோபம் என்பதை உணர்த்த சாப்பாட்டுத்தட்டை நகர்த்தி 'எனக்குப் பசியில்ல' என்று முனகி எழுந்து, எதற்கும் ஒற்றை வார்த்தையில் பதில் கூறி, பின்னர் 'நா இப்ப என்ன பண்ணிட்டேன்னு இப்படி கோவிக்கறீங்க?' என்று கண் கலங்க உதடு துடிக்க வினவினால், அத்தனையும் மாயமாய் மறைந்து போக 'உன்னைக் காயப்படுத்தி விட்டேனா' என்கிற தவிப்புடன் ஆரத் தழுவிக்கொள்வது போலவோ,

இல்லாமல்-

இந்த முறை நிஜமான சண்டை.

ஒருவரோடு ஒருவர் பேசாமல், நீ எக்கேடு கெட்டாலும் வாஸ்தவமாய் எனக்கு அக்கறை இல்லை என்கிற கோபத்தோடு வளையவர வைக்கும் சண்டை...

நாலு நாட்கள் முன்பு, "நீ அபார்ஷன் செஞ்சுக்கிட்டா என்ன?" என்று மாதவன் கேட்ட நிமிஷத்தில்கூட இப்படி யொரு மனஸ்தாபத்துக்கான வித்து அழுத்தமாக ஊன்றப்

பட்டுவிடும் என்று அவர்கள் இருவருமே எதிர்பார்க்க வில்லை...

ஆனாலும் அஸ்திவாரம் போடப்பட்டது என்னவோ அந்த ஒரு கேள்வியின் மூலம்தான்...

''இப்ப குழந்தை பிறக்கறதுல ரெண்டு பேருக்குமே விருப்பம் இல்லை... அதனால... அதனால... இந்த கர்ப்பத்தை உடனடியாக, தாமதப்படுத்தாம கலைச்சிட்டா என்ன வசந்தா?''

தயக்கத்தோடு, ஆனால் தீர்மானமான குரலில் மாதவன் வினவினதும், முகத்தில் அதிர்ச்சி வெளிச்சம் போட, நம்பமுடியாமல் வசந்தா கண்களை விழித்தாள்.

அப்புறம், 'இல்லை - நான்தான் ஏதோ தவறாகக் கேட்டுவிட்டேன்' என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டு திரும்பினவளின் கையை மாதவன் எட்டிப் பிடித்தான்.

சற்றுமுன் கேட்ட கேள்வியை மீண்டும் கேட்க, இப்போது வசந்தாவின் உடம்பு லேசாக உதறிப்போட முற்பட்டது.

பேசக்கூடாத சமாசாரத்தை விடாமல் மாதவன் தொடருவது எரிச்சலைவிட வேதனையை மனசு பூராவும் வியாபிக்கச் செய்ய சட்டென்று எழுந்து அழுகையுடன் நாற்காலியில் அமர்ந்து கவிழ்ந்துகொண்டாள்.

அவள் நிலை புரியாமல் மாதவன் கிட்டத்தில் வந்து தலைமுடியை கோதிக் கொடுத்தான். சின்னக் குரலில் தொடர்ந்தான்.

''வருத்தப்படாதே, வசு. எனக்கு மட்டும் இப்படிச் செய்யப்போறதுல சந்தோஷமா என்ன? வேற வழி



இல்லையே... நாம சின்ன வயசுக்காரங்க... ரெண்டு வருஷத்துல நல்ல விதமா குழந்தை பெத்துகிடுவோம்னு தேத்திக்க வேண்டியதுதான். முதல்ல, இப்ப 'ப்ராக்டிகலா' செய்யவேண்டியது என்னனு யோசிக்கறது முக்கியம் இல்லையா?''

நீர், கன்னத்தில் கோடு போட வசந்தா சரக்கென்று தலையை நிமிர்த்தினாள்.

''எது மாது 'ப்ராக்டிகல்'னு சொல்றீங்க? ஒரு உசிர கொல்றதையா?''

''தேவையில்லாதத ஒதுக்கிடறது விவேகம் இல்லாம வேற என்ன வசு?''

''பெரிய்ய விவேகம்... இப்படிச் பேச உங்களுக்கு வெக்கமா இல்ல?''

குரல் எடுத்து அவள் கத்த, எதுவும் புரியாமல் மாதவன் விழித்தான்.

''இதுல வெக்கம், அவமானம் என்ன? லேசா வருத்தம் வேணா...''

அவனை முடிக்க விடாமல் வசந்தா பாய்ந்தாள்.

''நிறுத்துங்க... நா 'ஷாக்' காயிருக்கறது புரியாம மேல மேல பேசிட்டே போகாதீங்க... 'அபார்ஷன்'னு சொல்லக்கூட நா கூசுது... இன்னொருதரம்... நீங்க... நீங்க...''

சொல்ல வந்ததை முடிக்கத் தெரியாமல் மீண்டும் கவிழ்ந்து கொண்டு வசந்தா அழ முற்பட, மாதவனின் குழப்பம் அதிகமானது.

என்ன பேசுகிறாள் இவள்?

அபார்ஷன் என்று சொல்லக்கூட நா கூசுகிறது என்றால் என்ன அர்த்தம்?

''என்ன சொல்ல வரே? இப்ப நமக்கு குழந்தை பெத்துக்க வசதி இல்ல - அதனால அபார்...''

வசந்தா கையை முன்னால் நீட்டிக் கத்தினாள்.

''ஸ்டாப் இட்... வேணாம்... இந்தப் பேச்சே வேணாம்னு சொல்றதக் காதுல வாங்காம, மேலமேல பேசறீங்களே!''

''ஏன் பேச வேணாம்? ப்ராக்டிகலா என்ன செய்யறதுனு யோசிக்கலாம்னு சொன்னா...''

''வேணாம்... உங்க ப்ராக்டிகல் பேச்சக் கொண்டு போய் கிணத்துல போடுங்க... எனக்கு எதுவும் வேணாம்... பத்திகிட்டு வர்றது கூட புரியாம...''

''சரி... பேச வேணாம்... அப்புறம்? சும்மா இருந்தா கர்ப்பம் தானா கலைஞ்சிடுமா? நாளாக ஆக, அபார்ஷன் செய்யறது ரொம்ப சிரமமாயிடும் வசு... புரியாம கோணவாதம் பண்ணாத...''

வசந்தா எழுந்தாள். நாலடி தள்ளிப்போய் நின்று அவனை அழுத்தமாகப் பார்த்தாள்.

''கோணலா பேசல... நேரடியாகவே சொல்லிடறேன். குழந்தை வேணாம்னு தீர்மானம் பண்ணாதானே இந்தப் பேச்சைப்பேச வேண்டி வரும்?''

''அ... அப்படீன்னா...?''

''நீங்க சொல்றதுல எனக்கு அடியோட சம்மதம் இல்லேன்னு அர்த்தம்... இது புரிய இத்தனை நாழியா?''



மாதவன் அவசரமாய் அவள் அருகில் வந்தான். தோளை உலுக்கினான்.

''விளையாடாதே வசு''

''நா விளையாடல... நீங்கதான் என் மனசைப் புரிஞ்சுக்காம காயப்படுத்தறீங்க...''

''நமக்கு இப்ப குழந்தை பெத்துக்க வசதி இல்லேனு தெரிஞ்சப்புறம் மேற்கொண்டு நடக்க வேண்டியது என்னனு யோசனை பண்ணறது தப்பா வசு?''

''மேற்கொண்டு என்ன செய்யணும்னு யோசிக்கறது ரொம்ப அவசியம்... நா இல்லேனு சொல்லல... ஆனா, நீங்க சொல்ற காரியத்துலதான் எனக்கு உடன்பாடு இல்ல...''

''ஏன் இல்ல?''

''ஏன்னா... அது பாவச் செயல்... மனுஷனா பிறந்த யாரும் செய்யக்கூடாத காரியம்...''

''யார் சொன்னா?''

''எங்க மதம் சொல்லுது... எங்க பைபிள் சொல்லுது...''

''கடவுளே!'' - எரிச்சலுடன் முனகிய மாதவன் நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

''என்ன ஆச்சு உனக்கு?''

''......''

''என்னதத்துக்காக இப்ப திடும்னிட்டு 'ரிலீஜன்' இந்தப் பிரச்சனைல இழுக்கறே? ம்?''

''......''

''நம்ப குடும்பம் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்துலேயும் மதம் குறுக்கிட விடமாட்டம்னு தீர்மானம் பண்ணினத மறந்துட்டியா?''

''அதுக்காக எந்த பாவச் செயலுக்கும் சரினு சம்மதிச்சு கண்ணை மூடிட்டு இருக்கச் சொல்றீங்களா?''

''இது பாவச்செயல்னு எப்படிச் சொல்றே வசு?''

''உசிர அழிக்கறது பாவச்செயல் இல்லாம புண்ணியமா மாது? இப்ப குதர்க்கமா வாதம் பண்றது, நீங்களா, நானா?''

மாதவன் பொறுமையின்றி எழுந்து மறுபடியும் அவள் அருகில் வந்தான். கையைப் பற்றி அழைத்து வந்து நாற்காலியில் அமர்த்தி தானும் அருகில் உட்கார்ந்து கொண்டான்.

''வசு... உன் நிலை எனக்குப் புரியுது... முத முதல்ல உண்டாகியிருக்குற சந்தோஷத்த அனுபவிக்க முடியாம அபார்ஷனைப் பத்தி பேச வேண்டிய நிர்ப்பந்தம் உனக்கு வேதனை தர்றத என்னால புரிஞ்சிக்க முடியுது... நா ஏற்கனவே சொன்ன மாதிரி எனக்கு மட்டும் வருத்தம் இல்லையாம்மா?''

''வாஸ்தவமாவே ரெண்டு பேருக்கும் வருத்தம்னா எதுக்கு மேல்மேல பேசிட்டே போகணும்... இதோட விட்டுட வேண்டியதுதானே?''

''என்ன வசு, குழந்தை மாதிரி அடம் பண்ணிகிட்டு? ப்ராக்டிகலா பேசாம...''

வசந்தா 'ப்ச்' என்றாள். எழுந்து நின்றாள்.

''கண்ணைக் கட்டி விட்ட குதிரையாட்டம் சொன்னதையே தான் சொல்லுவேன்னு நீங்க பிடிவாதம் பண்ணினா எனக்கு உங்களோட பேச எதுவுமே இல்ல- நா உள்ளே போறேன். என்ன பேசணுமோ அத்தனையும் தனக்குத்தானே சந்தோஷமா பேசிக்கங்க...''



மாதவன் அதட்டினான்.

''நில்லு - அப்ப, என்னதான் செய்யணுங்கறே?''

நடந்தவள் திரும்பாமலேயே பேசினாள்:

''ஒன்னும் பண்ண வேணாம்னுதான் சொல்லறேன்''

''அதாவது அபார்ஷன் செஞ்சுக்க மாட்டேன்றே?''

''ம்''

''குழந்தையைப் பெத்துக்கப் போறேன்றே?''

கோபமாக வினவினதற்கு பதில் கூறாமல் வசந்தா அப்படியே அரை நிமிஷம் நின்றாள்.

அப்புறம், எதையும் புரிந்துகொள்ளாமல் பேசும் உன்னோடு எனக்கென்ன பேச்சு என்கிற பார்வை ஒன்றைப் பார்த்துவிட்டு உள்ளே போனாள்.

அன்று இந்தப் பேச்சு அதோடு முடிந்தது.

அவள் புரிந்துகொள்ளாமல் முரண்டுகிறாள் என்கிற எரிச்சலுடன் மாதவன் ஆபிஸுக்குப் போக, 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று என்ன பிடிவாதம், அடுத்தவர் உணர்ச்சிகளை மதிக்காமல்' என்கிற கோபத்தில் அலுவலகத்துக்கு லீவு சொல்லி போன் பண்ணிவிட்டு நாள் முழுவதும் சுருண்டு படுத்தாள் வசந்தா...

மாலை போய் இரவு வரும் வரையில் இந்த மௌன நாடகம் நீடித்தது.

சமைத்தேன் என்று அவள் பேர் பண்ணியதை, சாப்பிட்டேன் என்று அவன் பேர் பண்ணிய பிறகு, இதை இப்படியே விட்டுவிடக்கூடாது என்கிற ஞானோதயம் பிறந்த தினுசில் மாதவன் தானாகப் பேச்சை எடுத்தான்.

''ஒருத்தர்மேல ஒருத்தர் கோவிச்சுக்கிட்டு இருக்கறதால பிரச்சனை தீர்ந்திடப் போறதில்ல... வீணா நாளக் கடத்தினா நாளைக்குக் கஷ்டம் நமக்குத்தான்...''

''......''

யாரிடமோ, யாரோ பேசுகிற அலட்சியத்துடன் ஒருக்களித்துப் படுத்திருப்பதை வசந்தா தொடர, குரலை உயர்த்தி எரிச்சலுடன் ''பேசறது காதுல விழல?'' என்றான் மாதவன்.

வசந்தா திரும்பாமலேயே பதில் கூறினாள்.

''நல்லாவே விழுது...''

''அப்ப, பதில் சொல்றது...''

''அதான் காலையிலேயே சொல்லிட்டேனே...''

''பிடிவாதம் பண்ணாத வசு...''

''வசந்தா எழுந்து உட்கார்ந்தாள்.

''நீங்கதான் அழும்பா இருக்கீங்க... எங்க மதம் இது 'பாவம்'னு கருதுதுனு நா சொன்னப்புறம் செய், செய்னு பிடிவாதம் பண்ணா?''

''பாவம், புண்ணியம் பாக்கற விஷயம் இது இல்ல வசு... இல்லேன்னா அரசாங்கத்துல இதச் சட்டபூர்வமா அனுமதிச்சிருப்பாங்களா?''

''அரசாங்கம் இன்னிக்கு ஒண்ணு சொல்லும், நாளைக்கு ஒண்ணு சொல்லும்... அது சட்டம் போட்டதக் காட்டி தலைமுறையா பெரியவங்க 'பாவகாரியம்'னு சொல்லியிருக்கறதத் துணிஞ்சு செய்யலாமா? போப்பாண்டவர்ல தொடங்கி, அத்தனை பெரியவங்களும் கருக்கலைப்ப



எதிர்க்கறாங்க மாது... ஆண்டவன் உருவாக்கற உயிர அழிக்க மனுஷனுக்கு உரிமை இல்லைன்றது அவங்க கருத்து... யோசிச்சுப் பாத்தா அவங்கள நீங்க மதிக்காததும் புரியும், அவங்க கருத்துல இருக்கற நியாயமும் உங்களுக்குப் புரியும்...''

உறுதியான குரலில் பேசுபவளை என்ன சொல்லி வழிக்குக் கொண்டுவருவது என்று புரியாமல் மாது சலிப்புடன் நீளமாய் பெருமூச்சுவிட்டான்.

தலைமுடியைக் கோதிக்கொண்டான், முகவாயைப் பரக்பரக்கென்று சொறிந்து கொண்டான்.

ஆயாசம் நிறைந்த குரலில் மெதுவாகப் பேசினான்.

''இந்த மாதிரி உன் மனசை குறுக்கிப்பேனு சத்தியமா நா நினைக்கவேயில்லை... ரெண்டு வருஷம் குழந்தை வேணாம்னு தீர்மானிக்கக் கொண்டுதானே அபார்ஷனை செஞ்சிடலாம்னு நா சொல்றேன்?... உங்க மதமோ பெரியவங்களோ நியாயம்னு நினைக்கறத, எதிர்க்கறது என் நோக்கமே இல்ல... இத நீ நம்பணும்... வீணா பிடிவாதம் பிடிக்காம கொஞ்சம் அனுசரிக்கப் பாரு... ப்ளீஸ்...''

''இதுவரைக்கும் என்னென்ன விஷயத்துல நா அனுசரிச்சுப் போயிருக்கேன்றத ஒரு நிமிஷம் நினைச்சுப் பார்த்திட்டு அப்புறமா புகார் படிங்க மாது... அசைவம் சமைக்கிறேனா? சர்ச்சுக்குப் போறேனா? ஜபம் சொல்றேனா? ஒண்ணும் இல்ல... உங்கள என் காரியம் எதுவும் புண்படுத்திடக்கூடாதுனு வாயத்திறக்காம இருக்கேன்... சரியாச் சொல்லணும்னா, எங்கமதம் குழந்தை உண்டாறத செயற்கையா தடுக்கறதக்கூடத் தப்புன்றதை மீறி உண்டாயிட்டதக் கலைக்கறதுதான் பாவம், உண்டாறதத்

இருக்கறது பாவமில்லேனு எனக்கு நானே சமாதானம் செஞ்சுகிட்டு மாத்திரைகூட சாப்பிட்டுட்டுதானே இருந்தேன்? அத்தனையும் பலிக்காம குழந்தை வந்திருக்குன்னா அது ஆண்டவன் சித்தம் இல்லியா? எதையும் புரிஞ்சிக்காம 'அநுசரிக்கப் போ'னு எடுத்தேன், கவிழ்த்தேன்னு பேசினா ஆச்சா?''

மாதவன் கையைப் பின்னால் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

பின், ''அப்ப, இதான் உன் முடிவா?'' என, அவள் ஆம் என்று தலையசைக்க, எதுவும் பதில் பேசாமல் கூடத்து நாற்காலியில் வந்து அமர்ந்து, இரவு முழுவதையும் பெட்ரூமுக்குள் நுழையாமல் கழித்துத் தன் கோபத்தை வெளிப்படுத்த, அவன் நடத்தை குறித்து கவலைப்படாமல் இருந்து, அப்படி அவன் புரிந்து கொள்ளாமல் இருப்பதில் தனக்கும் அதிருப்திதான் என்பதை நன்றாகவே வசந்தாவும் உணரவைத்தாள்.

## 12

மூச்சிறைத்தது.

நாலு படிகளைத் தொடர்ந்து ஏற முடியாமல் அடி வயிற்றில் கனம் ஆளை அசத்தியது.

தொண்டைக்குழியில் என்னவோ சிக்கிக்கொண்ட மாதிரி மூச்சு சிரமத்துடன் வெளிப்பட்டது.

வசந்தா அரை நிமிஷம் மேல்படியில் நின்று தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டாள்.



இன்னும் ஏறவேண்டிய படிகள் பூதமாய் பயமுறுத்தின.

தினமும் இது ஒரு அவஸ்தை...

வந்தோமா, இருக்கையில் சென்று அமர்ந்தோமா, வேலையை மளமளவென்று கவனிக்க ஆரம்பித்தோமாவென்று இல்லாமல் இரை தின்ற மலைப்பாம்பு மாதிரி மெல்ல ஊர்ந்து மாடிகளை ஏறி, அலுவலகத்துக்குள் காலடி வைக்கையில் போதும் போதும் என்றுதான் ஆகிவிடுகிறது.

சாதாரண நாட்களிலேயே இப்படி லொங்குலொங்கு என்று மாடிப்படிகளில் ஏறுவது அவளுக்குப் பிடிக்காது. இப்போது கல்லைக் கட்டித் தொங்கவிட்ட தினுசில் வயிறு சுமையும் சுமந்துகொண்டு, பத்துப் படிகளுக்கு ஒரு தரம் சிரமப்பரிகாரம் செய்து, நாலுபேர் நமுட்டாகச் சிரிப்பதை லட்சியம் செய்யாமல் ஏறி வருவதற்குள் 'சீ' என்றுதான் அலுத்துப் போகிறது.

வசந்தா தனக்குத்தானே 'ப்ச்' என்று சூள்கொட்டிக் கொண்டு, புடவைத் தலைப்பால் நெற்றியில் குண்டுசி குண்டுசியாகத் துளிர்த்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டாள்.

நின்றது போதும் என்கிற எண்ணத்துடன் கொஞ்சம் வேகமாகப் படிகளில் ஏற முற்பட்டாள்.

வழக்கமாக சுமக்கும் டிபன் டப்பா அடங்கின கைப்பையோடு, புடவை ரவிக்கை வைத்த மற்றொரு பையும் சேர்ந்துகொண்டு தோளிலிருந்து தொங்கி கனமாய் கனத்தது.

அன்று மாலை அவளுடைய நெருங்கின ஸ்னேகிதி ரோஸ்லினுக்கு சாந்தோம் சர்ச்சில் திருமணம். இவள் செய்து கொண்டதைப் போலல்லாமல், பெரியவர்கள் முன்னின்று

செய்து வைப்பதால் சர்ச்சில் உற்றாரும் சுற்றாரும் சூழ தடபுடல் அமர்க்களத்துடன் நடக்கவிருக்கும் வைபவம்.

இவள் வீட்டுக்கு தானே நேரில் வந்து ரோஸலின் அழைப்பிதழைக் தந்து "உன் கல்யாணத்துக்கு என்னை நீ கூப்பிடாதத மனசுல வச்சிக்காம, நானே நேர்ல வந்திருக்கேன்... கட்டாயம் சர்ச்சுக்கும் தொடர்ந்து வீட்டுல நடக்கப்போற விருந்துக்கும் வந்திடுங்க..." என்று கூப்பிட்டு விட்டுப் போயிருக்கிறாள். அவசியம் போயே தீரவேண்டும்.

எல்லாம் சரியாக இருந்தால் ஆபீஸுக்கு அரை நாள் லீவு எடுத்துக்கொண்டு, வீட்டுக்கு வந்து, நிதானமாய் அலங்கரித்து, மாதவனுடன் சேர்ந்து சர்ச்சுக்குப் போயிருக்கலாம். இதுதான் போன வாரம் அவர்கள் போட்ட திட்டம். ஆனால், மாதவனுக்குத்தான் நாலு நாளாகக் காய்ச்சலான காய்ச்சல் வருத்தி எடுக்கிறதே!

நூற்றி இரண்டு, மூன்று என்று தணல் கட்டியை எடுத்து வாய்க்குள் அடக்கிக்கொண்ட மாதிரி எப்போது தர்மா மீட்டரை நாக்கடியில் வைத்தாலும் சரசரவென்று பாதரசம் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிக்கு தாவி விடுகிறது! முதல் இரண்டு நாட்கள் என்னடா இது, டைஃபாயிட் கிய்ஃபாயிடாக இருந்து விடுமோ என்று பயமாகக்கூட இருந்தது. ஆனால் கர்த்தரின் கருணையால் இன்று காலை நூறுக்கும் குறைவாக டெம்பரேச்சர் இருந்தது ஆறுதலான சமாசாரம்.

"ஏற்கனவே எனக்காக நீ ரெண்டு நாள் லீவு எடுத்தாச்சு... இன்னிக்கும் வேணாம் வசு... போயிட்டு, அப்படிய உன் ஃப்ரெண்ட் கல்யாணத்துலேயும் தலையைக் காட்டிட்டு வந்திடு. வீட்டுக்கு வந்திட்டு இங்கேயிருந்து போறதுன்னா, அது வேற அலைச்சல்... சாந்தோம் சர்ச் உன் ஆபீஸ்லேந்து பக்கம்



தானே?" என்று காலையில் கணவன் கூறிய வார்த்தைகளில் நியாயம் இருப்பதை உணர்ந்து மறு பேச்சில்லாமல், பட்டுப்புடவை ஒன்றை எடுத்து பையில் வைத்துக்கொண்டு கிளம்பி வந்திருக்கிறாள்.

நாலு மணி அளவில் ஆபீஸ் டாய்லெட்டிலேயே முகம் கழுவி, உடை மாற்றி, தயாராகிக் கிளம்பினால், ஐந்து மணிக்குள் சர்ச்சில் இருக்கலாம்... மெய் விவாகச் சடங்குகள் நடந்து முடிக்க ஒரு மணி நேரம் என்று வைத்துக் கொண்டாலும், ஏழுக்குள் வீட்டுக்குப் போய் விடலாம்.

"இருட்டுல பஸ்ஸுக்காகக் காத்துகிட்டு நின்னு அவஸ்தைப்படாதே வசு, ஆட்டோ ஒண்ணைப் பிடிச்சுகிட்டு வசதியா வந்திடு, என்ன?"

புறப்படும் நிமிஷத்தில் பரிவுடன் மாதவன் கூறின வார்த்தைகள் நினைவுக்கு வர, வசந்தாவின் உதடுகளில் சின்னதாய் முறுவல் ஒன்று உட்பக்கத்திலிருந்து தலைகீறியது.

என்ன இருந்தாலும் மாதவன் காட்டும் அன்பு, அக்கறையின் பரிமாணமே அலாதிதான்...

பிள்ளை வேண்டாம், கர்ப்பத்தைக் கலைத்துவிடு என்று பிடிவாதமாக முரண்டி, இவள் அதைவிட உறுதியாக நின்று மறுத்தபோது மாதவனுக்கு கழுத்துவரை கோபம்தான். கிட்டத்தட்ட ஒரு மாசம் போல, சேர்ந்தாற்போல இரண்டு வார்த்தை பேசாமல் அழுக்கமாக இருந்து தன் எதிர்ப்பை தெரிவித்தவன்தான். ஆனால், நாட்கள் போகப்போக துளித்துளியாக அந்த மனஸ்தாபம் குறைந்ததுதானே கடைசியில நடந்தது?

அவ்வப்போது இவள் உடம்புக்கு முடியாமல் தலை சுற்றல், வாந்தியுடன் மயக்கமாய் படுத்தாலோ, அல்லது

'அசதியா இருக்கு மாது!' என்று முனகி அசந்து உட்கார்ந்தாலோ மட்டும் அலுப்பட்டாசாய் சர்ரென்று 'இதுக்குத்தான் சொன்னேன் இது வேணாம்னு' என்று சுத்துவது உண்மைதான். என்றாலும் இவளிடம் காட்டும் அன்பில் எந்த மாற்றமும் இல்லை என்பதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

அதுவும்...

வசந்தா ஒரு தரம் தலையை அசைத்து தன்னைத் தானே உலுக்கிக் கொண்டாள்.

எதற்கு? பழங்கதை எல்லாம் எதற்கு?

இப்போது உறவு சுமுகமாக உள்ளது, கோபதாபம் குறைந்துள்ளது என்பதுதானே முக்கியம்... அதை விட்டு விட்டு வேண்டாத பழங்கதை ஆராய்ச்சி எதற்கு?

திட்டமிட்டபடி நாலரை மணி சுமாருக்குத் தயாராகி அக்கௌண்டண்டிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினவள், சர்ச்சை அடைந்து அங்கு குழுமியிருந்த நண்பர்களோடு சேர்ந்துகொண்டாள்.

பல பரிச்சயமான முகங்கள்.

''அட, வசந்தா மேரியா? எப்படி இருக்கே? உண்டா யிருக்கியா? எத்தனாம் மாசம்? போவுது... அன்னையையும் கோவிலையும் எதுத்துக்கிட்டாலும் சுகமா, மகிழ்ச்சியா இருந்தா சரி...'' என்றார்கள் சிலர்.

'நம் மதத்தில் கிடைக்காத மாப்பிள்ளைகளா? அத்தனையும் விட்டுவிட்டு வேற்று மதத்தைச் சார்ந்தவனோடு ஓடிப்போனவளோடு எங்களுக்கு என்ன பேச்சு?' என்று அலட்சியமாய் முகத்தைச் சிலர் திருப்பிக்கொள்ள -



சட்டென்று யார் கண்ணிலும் விழாத இடமாகத் தேர்ந்தெடுத்து நின்றுகொண்டாள் வசந்தா.

ரோஸலின் குடும்பத்தாரை அண்ணனுக்கு நன்றாகவே தெரியும்... ஒருவேளை வந்து விடுவாரோ?

பயமாக இருந்தது... நேருக்கு நேர் அண்ணனையோ அண்ணியையோ பார்த்துவிட்டால் என்ன செய்வது என்கிற படபடப்பு எழுந்தது...

தனியாக வந்தது அசட்டுத்தனமோ?

போய்விடலாமா?

யோசித்துக் கொண்டிருக்கையிலே வருகைச் சடங்கு ஆவங்கி விட, வசந்தா படபடப்பைக் குறைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக கவனத்தை வாசலுக்குத் திருப்பினாள்.

சாமியார் பூசைக்குரிய திருஉடைகள் அணிந்து, பணியாளரோடு ஆலய வாசலில் நின்று மணமக்களை வரவேற்று வரவேற்புரை வழங்கினார்.

''அன்புமிக்க மணமக்களே, திருமண திருவருட் சாதனத்தை முறையே நிறைவேற்றி, இறைவனின் அருள் பெற அவரது திருச்சன்னதியை நாடி வந்திருக்கிறீர்கள், உங்களோடு இன்று திருச்சபையும் மகிழ்கிறது. 'பரமனின் திருமுன் பக்தியுடன் வருக!' என உங்களை அன்புடன் அழைக்கிறேன்.''

வரவேற்று முடிந்ததும் பணியாளர் முன்னே செல்ல, குரு, மணமக்கள், பெற்றோர், சாட்சிகள் என்று ஒருவர் பின் ஒருவராக அனைவரும் பவனி பீடத்தை நோக்கிசென்றபோது வருகைப்பாடல் பாடப்பட்டது.

"ஆண்டவர் தம் திருத்தலத்தினின்று
உங்களுக்குத் துணை செய்வாராக;
சீயோனிலிருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.
உங்கள் இதயம் விரும்புவதை
அவர் உங்களுக்கு அருள்வாராக.
உங்கள் கருத்தையெல்லாம்
நிறைவேற்றுவாராக!"

சேர்ந்த குரலில் வருகைப்பாடல் பாடின பிறகு திருப்பலி நடந்தது.

மறையுரை முடிந்தபின் சாமியார் மணமக்களின் அருகில் வந்து நின்றுகொள்ள திருமணச் சடங்குகள் ஆரம்பமாயின.

மணமக்கள், விருந்தினர்கள் உள்பட, வந்திருப்பவர் அனைவரும் எழுந்து நின்றுகொள்ள குரு கணீரென்ற குரலில், "அன்புமிக்க புனிதம் ரோஸலின், பாண்டியன் செபாஸ்டியன், திருச்சபையின் திருப்பணியாளர் முன்பாகவும், இத்திருக் கூட்டத்தின் முன்னிலையிலும் உங்கள் அன்பை நம் ஆண்டவர் முத்திரையிட்டுக் காத்தருளுமாறு இங்கு வந்திருக்கின்றீர்கள். உங்கள் அன்பை கிறிஸ்து நிறைவாக ஆசீர்வதிக்கின்றார். ஏற்கனவே அவர் உங்களைப் புனித ஞானஸ்நானத்தால் அர்ச்சித்துள்ளார். இப்போதோ மற்றொரு திருவருட்சாதனத்தின் வழியாக உங்களுக்கு அருள்வளம் ஈந்து நீங்கள் ஒருவருக்கொருவர் என்றும் பிரமாணிக்கமாய் இருக்கவும், திருமணத்தின் ஏனைய கடமைகளை ஏற்று நிறைவேற்றவும் உங்களுக்கு ஆற்றல் அளிக்கின்றார். எனவே உங்கள் கருத்தை அறிந்துகொள்ள திருச்சபையின் முன்னிலையில் உங்களை வினவுகிறேன். புனிதம்



ரோஸலின், பாண்டியன் செபாஸ்டியன் - நீங்கள் இருவரும் முழு மனச்சுதந்திரத்துடன் திருமணம் செய்துகொள்ள எவ்வித வற்புறுத்தலுமின்றி இங்கு வந்திருக்கின்றீர்களா" என்று வினவ, மணமக்கள் ஒருமித்தமாய், "வந்திருக்கின்றோம்" என, குரு, "நீங்கள் மணவாழ்க்கை நெறியைப் பின்பற்றி வாழ்நாளெல்லாம் ஒருவரையொருவர் நேசிக்கவும், மதிக்கவும் தயாராயிருக்கிறோம்" என மீண்டும் குரு "இறைவன் உங்களுக்கு அருளும் மக்களை நீங்களும் அன்புடன் ஏற்று கிறிஸ்துவின் போதனைக்கும் திருச்சபையின் சட்டத்திற்கும் ஏற்றபடி வளர்ப்பீர்களா?" என, மணமக்கள் தயங்காமல் "வளர்ப்போம்" என்று கூறி முடித்ததும் சாமியார் மெய்விவாகத்தின் அடுத்த சடங்கைத் துவக்கினார்.

மணப்பெண், மணமகன் இருவரையும் கைகோர்த்துப் பிடிக்க வைத்து அவர்களின் மன ஒப்புதலை பகிரங்கமாக அறிவிக்கவைத்து, குழுமியிருந்த விருந்தினர் 'ஆமென்' என்று கூறியதும், சாமியார் இணைத்த கைகளின்மீது புனித நீரைத் தெளித்து ஆசீர்வதித்தார்.

இதைத் தொடர்ந்து சாமியார் மாங்கல்யத்தை ஆசீர்வதித்து, அதன்மேல் புனித நீர் தெளித்து, மணமகன் கையில் கொடுக்க, மணமகன் "புனிதம் ரோஸலின், என் அன்புக்கும் பிரமாணிக்கத்திற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல்யத்தைப் பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே அணிந்து கொள்" என்கிற வாசகங்களோடு அதை அணிவிக்க, "என் அன்புக்கும், பிரமாணிக்கத்திற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல்யத்தைப் பிதா, சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே அணிந்து கொள்கிறேன்" என்று மணமகள் பணிவுடன் கூறி அதை ஏற்க, மங்கல சேதியை பறைசாற்ற கோவில்மணி விடாமல் அடிக்கப்பட்டது.

மோதிரம், மாலைகளை சாமியார் ஆசீர்வதித்து மணமக்களிடம் கொடுத்து அணியச் சொன்ன நிமிஷத்தில் தோள்மீது யாரோ கைவைக்கிற உணர்வில் திரும்பினால்...

உதடு துடிக்க, கண்கள் கலங்க, மெலிந்து வாடின... பரிமளம்!

''அத்தம்மா...''

சூழ்நிலையை மறந்து எதிரில் நின்றவளைத் தாவி அணைத்தபோது குரல் கேவலாக வெளிப்பட்டது. காணாததைக் கண்ட பரிதவிப்போடு ஒருவரை ஒருவர் ஆரத்தழுவிய நிமிஷத்தில் இருவர் கண்களிலும் முளைத்த நீர் கன்னத்தில் கோடுபோட்டுக்கொண்டு இறங்கியது.

''எப்படி இருக்கே வசு?''

''நல்லா இருக்கேன் அத்தம்மா... நீங்க?''

பரிமளம் நீளமாகப் பெருமூச்சு விட்டார்.

''என்ன அத்தம்மா?''

''சொல்றேன். ஒரு குரல் உன்னைக் கட்டிகிட்டு அழுதிட்டுப் போகத்தானே தாஸ் கோச்சுகிட்டாலும் பரவாயில்லேனு 'ஆஸ்பத்திரில இருக்கற எலிசபெத்தப் பாத்திட்டு வரேன்'னு பொய் சொல்லிட்டு வந்திருக்கேன்.''

இதற்குள் மெய்விவாகத்தின் அடுத்த நிகழ்ச்சியாக விசுவாசிகளின் மன்றாட்டு தொடங்கிவிட, அதில் பங்கெடுக்க முடியாமல் இவர்களின் பேச்சு தொணதொணப்பாக இருப்பதை வெளிப்படுத்தும் வகையில் 'ப்ச்' 'ச்சு' என்று குரல்கள் எழும்ப, கொஞ்சம் அடங்கினார்கள்.

பீடத்தில் சாமியார் மன்றாட்டை, ''இப்புதிய மணமகனும், மணமகளும் தங்கள் இல்லத்தில் சமாதானத்



தோடும் மகிழ்ச்சியோடும் வாழவேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோம்'' என்று துவக்கி வைக்க, கூடியிருந்த விருந்தினர்கள் ''ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்'' என்று கோரஸாக வேண்டுகோள் விடுக்க, இதே ரீதியில் மன்றாட்டு தொடர்ந்தது.

சில நிமிஷங்களுக்கு எதுவும் பேசாமல் மௌனித்து, பின்னர் அப்படி இருப்பது மிகுந்த சிரமத்தைத் தர சடங்குகளில் பங்கெடுத்தவரை போதும் என்று தீர்மானித்து பரிமளம் வசந்தாவின் கையைப் பற்றி வெளியில் வந்தார்.

சந்தடியில்லாமல் ஒதுக்குப்புறமாய் சென்று வசந்தாவை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு, ''பெத்த பாசத்த விட வளர்த்த பாசத்துக்கு வலு அதிகம்னு சொல்வாங்க... இப்ப நா முழுமையா அனுபவிக்கறேன்... உன்மேல அன்பு வச்சிட்டக் கொண்டு, நெதைக்கும் உங்க அண்ணன் வாயில விழுந்து எழுந்துக்கறேன். ஆறுதலா ரெண்டு வார்த்தை சொல்லக்கூட அந்த வீட்டுல யாருக்கும் மனசில்ல... போக்கிடம் இல்லாம நாய் படற பாடு படறேன். கர்த்தர் கருணை காட்டி என்ன சீக்கிரமா கூப்டுகிட்டார்னாதான் விமோசனம்... ஏசுவே... ஏசுவே...'' என்று வாய் மூடாமல் அரற்ற-

அரை மணிக்குப் பிறகு ஒரு தினுசாய் அத்தையை சமாதானம் பண்ணி அனுப்பிவிட்டு, தானும் சுதாரித்துக் கொண்டு புறப்பட்டபோது வசந்தாவினுள் 'இப்படிச் செய்தால் என்ன?' என்கிற கேள்வி விஸ்வரூபம் எடுத்து ஆட்டம் போடத் தலைப்பட்டது.

# 13

ரோஸலின் திருமணத்துக்குப் போய்விட்டு வசந்தா வீட்டுக்குத் திரும்பியபோது, மாதவன் வாசல்கேட் அருகேயே ரொம்பவும் களைத்துப்போய் காத்திருந்தான்.

காய்ச்சல் அதிகமாகிவிட்டதா?

இல்லை, இருட்டி நேரமாகிவிட்டதே, இவளை இன்னும் காணவில்லையே என்கிற கவலையா?

எதுவானாலும் வாசலிலேயே வந்து நிற்கவேண்டிய அவசியம் என்ன?

கேட்டைத் திறக்கும் முன்னர் கரிசனத்துடன் வசந்தா கேட்டாள்.

''என்ன மாது, ஏன் இப்படி காத்துல நிக்கறீங்க? காய்ச்சல் இன்னும் முழுசா நார்மலுக்கு வரலைன்றத மறந்திட்டீங்களா?''

அவள் கேட்டதை லட்சியம் செய்யாதவன் போல மாதவன் பதிலுக்கு படபடத்தான்.

''கொஞ்சம் சீக்கிரமா வந்திருக்கக்கூடாதா வசு? ஒரு மணி நேரமா நா இங்க தவியாத்தவிச்சுக்கிட்டு இருக்கேன்...''

வசந்தா தலையைச் சாய்த்து, லேசான புன்சிரிப்போடு எதிட்டாள். பின், அவன் கையைப் பற்றி வீட்டுக்குள் அழைத்துப் போனாள்.

''நாந்தான் பத்திரமா வந்திடறேன்னு சொன்னேன் இல்லே? எதுக்கு தவிக்கணும்? நீங்க கவலப்படுவீங்கனுதான் விருந்துக்குக்கூடப் போகாம, சர்ச்சுலேர்ந்தே நேரா வந்திட்டேன்...''



''அதெல்லாம் இருக்கட்டும் வசு. ஊர்ல அம்மாவுக்கு உடம்பு சரியில்லயாம்... சேதி கேட்டதுலேர்ந்து என்னவோ, ஏதோனு ரொம்ப தவிப்பா இருக்கு...''

மாதவன் காத்திருந்ததும், தவித்ததும் தனக்காக அல்ல என்பது புரிந்ததும் வசந்தா நிமிர்ந்து கேள்விக்குறியோடு அவனைப் பார்த்தாள்.

''உங்கம்மாவுக்கா? உடம்பு சரியில்லையா? யார் சொன்னாங்க?''

''ப்ச்... நூறு கேள்வி கேக்காத வசு... இப்ப உடனே நாம ரெண்டு பேரும் ஊருக்குப் போயாகணும். பஸ்லேயா, ரயிலேயா, இல்லை டாக்ஸியானாலும் - ஏது கிடைக்குதோ அதுல போயிடலாம். விவரமெல்லாம் அப்புறமா சொல்றேன்... முதல்ல கிளம்பற வழியப் பாரு...''

''இருங்க... இருங்க... ஒரு அஞ்சு நிமிஷம் உக்காந்து பேசிடறதால நாழி ஆயிடாது... எனக்கு ஒண்ணுமே புரியலை... உங்கம்மா உடம்புக்கு என்ன? சொல்லுங்க... ப்ளீஸ்...''

மாதவன் எரிச்சலோடு அவள் கையை உதறிவிட்டு உள்ளே சென்று அங்கிருந்தபடியே கத்தினான்.

''நிலமை புரியாம சொல்லு, சொல்லுனா? ரெண்டு ரெண்டு செட் துணிமணி எடுத்து பெட்டில வெச்சிக்கிட்டு கிளம்பற வழியப் பாரு வசு...''

''சரி... கிளம்பறேன்... ஆனா, நம்ப கல்யாணத்துக்கு அப்புறம் நாம அவங்கள இன்னும் பார்க்கவே இல்லே... 'உங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்க நாங்க வரலாமா?'னு கேட்டு நீங்க எழுதின லெட்டருக்குக்கூட அவங்க பதிலே போடல... இப்ப திடும்னு நாமா போனாலும், 'வீட்டுக்

குள்ளேயே நுழையாதீங்க'னு துரத்தி விட்டுட்டாங்கன்னா என்ன செய்றது'' ராத்திரி நேரம் வேற... இதெல்லாம் கொஞ்சம் யோசனை பண்ணிட்டுக் கிளம்பறது நல்லதில்லியா?''

வசந்தா சொல்வதில் உண்மை இருக்க, முழுசாய் ஒரு நிமிஷம் யோசனையோடு நின்ற மாதவன், மெதுவாகப் பேசினான்.

''அப்பிடியெல்லாம் செய்ய மாட்டாங்கனு தோணுது வசு... நுழையக்கூட விடமாட்டேன்ற முடிவோட இருக்கறவங்கன்னா, அப்பாவே போன் பண்ணி விஷயத்தச் சொல்லியிருப்பாங்களா?''

'அப்பாவா? எப்ப போன் பண்ணினாங்க? எங்க பண்ணினாங்க?''

''எங்க ஆபீஸுக்குத்தான்... பாங்க் மூடற சமயத்துக்கு போன் வந்திச்சாம். எனக்கு உடம்பு சரியில்லே, ரெண்டு நாள் லீவுனு சொன்னதும், 'இங்க அவங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லே, உடனே மாதுவப் பாக்கணுங்கறாங்க. தயவு பண்ணி எப்பிடியாவது செய்தியத் தெரிவிச்சு அவனை வரச் சொல்லிடுங்க'னு அப்பா கெஞ்சிக் கேட்டுக்கிட்டாராம். உனக்கு விஷயத்த சொல்லிடலாம்னு உங்க ஆபீஸுக்கு போன் பண்ணியிருக்காங்க... நீ பர்மிஷன் போட்டுட்டுப் போயிட்டேன்னு தெரிஞ்சப்பறம் என்ன செய்யறதுன்னே புரியலியாம்...''

''இதெல்லாம் உங்களுக்கு யாரு சொன்னாங்க?''

''பாங்க் பர்ஸனல் ஆபீஸர் கேசவன்தான்.. அவருதான் அப்பா கூட போன்ல பேசினாராம்... வேற வழியில்லாம, ஆபீஸ்லேர்ந்து வீட்டுக்குப் போற வழில இங்க நேர்ல வந்து விஷயத்தச் சொல்லிட்டுப் போனாரு...''



''அம்மாவுக்கு என்ன உடம்புனு சொன்னாரா?''

''அப்பாதான் சொல்லலியா, இல்ல கேசவன்தான் என்ன கவலைப்படுத்த வேணாம்னு தெரியாதுனு சொல்றாரோ... தெளிவா ஒண்ணும் புரியல... ஆனா, 'காஞ்சிபுரம் கவர்மெண்ட் ஆஸ்பத்திரில சேர்த்திருக்கேன், மாது... மாதுனு புலம்பிக்கிட்டே இருக்காங்க'னு அப்பா சொன்னாங்களாம். ஆஸ்பத்திரில சேர்க்கற அளவுக்குன்னா ஏதோ பெரிசாதான் வந்திருக்கும்... அதான் சொல்றேன் நாம ரெண்டு பேருமே போய்ப் பாக்கலாம்னு...''

''பார்க்கலாம்தான்... ஆனா, இப்ப நா இருக்கிற நிலைமைல பஸ்ல போக முடியுமானு தெரியல. ஏழு மாசத்துக்கு மேல ஆயிடுச்சன்னா பஸ்ல ரொம்ப தூரம் பயணம் செய்றது கூடாதுனு டாக்டர் சொன்னதை நினைச்சுப் பாக்கறப்போ தயக்கமா இருக்கு... நாளைக்கு வேணா டாக்டர்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுகிட்டு...''

மாதவன் கோபத்துடன் கத்தினான்.

''அப்ப போகவே வேணாம்னு சொல்றியா? அம்மா ஆஸ்பத்திரில இருக்குறப்போகூட...''

அவனை முடிக்க விடாமல் வசந்தா அவசரமாய் பேசினாள்.

''இருங்க... என்னத்துக்காகக் கோவப்படறீங்க? என்னால தான் வரமுடியாதுனு சொன்னேனேக்கொண்டு, நீங்க போக வேணாம்னு தடுக்கலியே? கேளுங்க மாது, இப்படி பேசிக்கிட்டே இருந்தா நேரமாயிடும்... இப்ப நீங்க மட்டும் முதல்ல போயிட்டு வாங்க... இருக்கற நிலைமைல என்னை வேற பார்த்து உணர்ச்சிவசப்பட்டுட்டாங்கன்னா என்ன பண்றது? கொஞ்சம் குணமானப்புறம் ரெண்டு நாள்ல

நானும் வர்றேன்... முதல்ல நீங்க போயிட்டு வாங்க... கிளம்புங்க. நாளைக்குக் காலைல மறக்காம எனக்கு ஆபீஸுக்கு போன் பண்ணி அம்மாவுக்கு எப்படி இருக்குனு சொல்லுங்க...''

அவன்கையை உலுக்கி மீண்டும், ''கிளம்புங்க மாது...'' என்றவள் லேசான கவலையோடு ''ஸ்வெட்டர் எடுத்து வெக்கறேன்... மறக்காமப் போட்டுக்குங்க... மாத்திரைங்கள ஒழுங்கா சாப்பிடுங்க... அம்மாவப் பத்தி விசாரப்படறதுல உங்கள கவனிக்கத் தவறிடாதீங்க'' என, பேசியவளின் கையை மாது பிடித்துக்கொண்டான்.

''அதெல்லாம் இருக்கட்டும்... உன்னத் தனியா விட்டுட்டு எப்பிடிப் போறது வசு?''

''சரியாப் போச்சு... இப்ப அத நினைச்சு தயங்கறீங்களா? ஏதாச்சும் தேவைன்னா பக்கத்து போர்ஷன்காரங்களக் கூப்பிட்டுக்கறேன்... நீங்க கிளம்புங்க...''

முதலில் தயங்கினாலும் அம்மாவுக்கு என்னாயிற்றோ என்ற கவலை மனசை முழுக்கப் பரவியிருந்ததில், 'பத்திரம், பத்திரம்' என்று பத்து தரம் கூறி தயக்கத்தை உதறிவிட்டு மாதவன் கிளம்பிப் போனான்.

மறுநாள் காலை வசந்தாவின் அலுவலகத்துக்கு போன் செய்து, ''...அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டிருக்கு வசு... பயப்படற கட்டத்தத் தாண்டிட்டாலும் டாக்டருங்க பார்வையிலேயே இன்னும் மூணு வாரமாச்சும் இருக்கணுங்கறாங்க. என்னப் பார்த்ததுல ரொம்ப உணர்ச்சிவசப் பட்டாங்கதான். ஆனாலும் கையப் பிடிச்சுகிட்டு, 'இனிமே எனக்கு ஒண்ணும் இல்லே. நீதான் வந்திட்டியே'னு உறுதியா பேசினாங்க... நா நேர்ல வந்து விவரமா சொல்றேன். ஜாக்கிரதையா இரு'' என்றவன்



பெண்டாட்டி யாருடைய துணையும் இன்றி தனித்திருப்பது மனசாகாமல் தடக்கென்று அன்று மாலையே ஏழு மணி அளவில் நேரிலேயே வந்தும் விட்டான்.

''...நேத்துதான் நீ தனியா இருந்திட்டே. இன்னிக்கும் இருக்க வேணாம்னுதான் வந்திட்டேன் வசு. ராத்திரி நேரத்துல வலி எடுத்தா என்ன பண்ணுவே? அம்மா அப்பாவுக்கு நீ உண்டாயிருக்கறதுல ஏக சந்தோஷம். 'தனிச்சு விடாதடா'னு அவங்களும் சொல்லக்கொண்டுதான் வந்தேன்...''

''அம்மாவ வீட்டுக்கு எப்ப அழைச்சிட்டுப் போலாம்னு டாக்டர் சொல்வாரா?''

''இன்னும் இல்லே... ரெண்டு மூணு வாரமாவது அங்கேயே இருக்கவேண்டி வரும்னுதான் நெனைக்கறேன்... அபாயக்கட்டத்தத் தாண்டிட்டாலும், இன்னும் கொஞ்ச நாளைக்கு எச்சரிக்கையாதான் இருக்கணுமாம்.''

''நிலமை அப்படி இருக்கறப்ப நீங்க ஏன் அதுக்குள்ள வந்திட்டீங்க? உங்க ஆபீஸ்ல கூட 'அவர் வர்றதுக்கு ஒரு வாரமாவது ஆவும்'னு சொல்லி வெச்சிருக்கேனே!''

''அம்மாவப் பத்தி கவலப்படற அதே நேரத்துல உன்னை நினைக்காம நா இருக்க முடியுமா வசு? நிறைமாசப் பிள்ளைதாச்சிப் பொண்ணை தன்னந்தனியா விட்டுட்டு... எப்படி வசு? இருப்புகொள்ள மாட்டேங்குதே! பேசாம உன்னையும் லீவு போட வச்சுட்டு என்னோட கூட்டிட்டுப் போயிடலாம்னு பாத்தா, ஆஸ்பத்திரிலேயும் நீ இருக்க முடியாது... கிராமத்துலயும் தனியா இருக்கிறது கஷ்டம்... அதுக்கு இங்கயே பழகின இடத்துல தங்கிக்கறது தேவலைனு தோணுது. அப்பாகிட்ட பேசினேன்... 'பகல்ல வேணா நீ வந்து அம்மாவப் பாத்துக்க, ஊர்லயும் அறுப்பு நேரம்... நா ராத்திரி

தங்கி கவனிச்சுக்கறேன்'னு சொல்றாரு. நாளைலேருந்து பதினைஞ்சு நாள் லீவு போட்டுட்டு நெதைக்கும் காலைல போயிட்டு, சாயங்காலம் வந்திடறதத் தவிர வேற வழி இல்லை..."

வசந்தா யோசனையுடன் நகத்தைக் கடித்தாள்:

"நெதைக்கும் இப்படி மெட்ராஸுக்கும் காஞ்சிபுரத்துக்குமா அல்லாடினா உங்களுக்கு ஒத்துக்குமா? பேசாம அங்கியே தங்கிடுங்களேன்... அம்மாவுக்கு நல்லா குணமானதும் திரும்பி வந்தா பத்தாதா?"

மாதவன் தீர்மானமாய் தலையசைத்தான்.

"முடியாது வசு... உன்னைத் தனியா விட்டுட்டு அங்க நிம்மதியா இருக்கவும் முடியாது. அங்க போகாமயே இருக்கவும் என்னால முடியாது... அம்மாவையும் அப்பாவையும் பார்த்தா ரொம்பக் கஷ்டமா இருக்கு. பாவம், அவங்களுக்கும் என்னை விட்டா வேற யாரு இருக்காங்க! அவங்களை மீறி நா கல்யாணம் செய்துக்கிட்டதைப் பத்தியெல்லாம் பேச்சே எடுக்காம, பழையபடியே என்கிட்ட எத்தனை அன்பா இருக்காங்க... தெரியுமா? அதை இத்தனை மாசமா எப்படிக் காட்டிக்காம வீம்பா இருந்தாங்களோதான் ஆச்சர்யமா இருக்கு! அந்த அன்புக்காகக் கொஞ்சம் சிரமப்பட்டாதான் என்ன?"

ஆனால் திட்டமிட்டபடி மறுநாளிலிருந்து முடிவெடுத்ததைச் செய்து காட்டுவதற்குள் மாதவன் திக்கு முக்காடித்தான் போனான்.

தினம் காலையில் எழுந்து ஆறு மணிக்கெல்லாம் புறப்பட்டு காஞ்சிபுரம் போய், மாலை எட்டு மணிக்குள் திரும்பி வருவது என்பது லேசான காரியமாக இல்லை.



அதுவும், காய்ச்சல் அடித்து பலவீனமாக இருந்த உடம்பில் இப்படி தினம் பிரயாணம் செய்யும் அலுப்புமாக சேர்ந்துகொண்டு விட்டதில், நாலு நாட்கள் போவதற்குள் அவன் சோர்ந்துதான் போனான்.

ஐந்தாம் நாள் காலை படுக்கையை விட்டு எழவே முடியாதபடி உடம்பு சண்டி பண்ணியது.

தூக்கம் கலைந்தும்கூடக் கண்களைத் திறக்காமல் படுத்தபடியே கிடந்தான்.

கணவனுக்காகக் காபி எடுத்து வந்த வசந்தா, அவன் இன்னமும் எழுந்திருக்காமல் இருப்பதைப் பார்த்து, காபியை தரையில் ஒரு ஓரமாக வைத்துவிட்டு அவன் பக்கத்தில் படுக்கையில் அமர்ந்துகொண்டாள்.

"மாது..."

"ம்"

"முழிச்சுக்கிட்டீங்களா? காபியக் குடிச்சிட்டு கிளம்புங்க, நேரமாவுது..."

"ஆவட்டும் வசு, என்னால இப்ப எழுந்திருக்க முடியாது..."

"முடியாதா? அப்ப இன்னிக்கு ஊருக்குப் போகலையா?"

"போகணும்தான். ஆனா எழுந்திருக்கவே முடியலை. முதுகு, இடுப்பெல்லாம் ஒடஞ்சிப் போயிட்டாப்பல வலிக்குது... பழக்கமே இல்லாம தினம் இவ்வளவு தூரம் பஸ்ல பிரயாணம் செய்ய முடியவே இல்லை வசு..."

வசந்தா பதிலேதும் சொல்லாமல் சற்று நேரம் அவனையே பார்த்தாள். பிறகு, "திரும்பிப் படுங்க... நா

கொஞ்சம் முதுகப் பிடிச்சு விடறேன்...'' என்று அவனைப் புரட்டிப் படுக்க வைத்தாள்.

இடுப்பிலிருந்து ஆரம்பித்து முதுகையும் தோள்களையும் இதமாகப் பிடித்துவிட்டபோது, காலைந்து நாட்களாய் நினைப்பில் எட்டிப்பார்த்துக் கொண்டேயிருந்த விஷயம் இப்போது தலைதூக்குவதை வசந்தாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

அன்று சர்ச்சில் அத்தம்மாவைப் பார்த்ததைப் பற்றி மாதவனிடம் இப்போது சொன்னால் என்ன என்று தோன்றியது.

வந்தவுடன் அவனிடம் சொல்லிவிட வேண்டும் என்று முதலில் நினைத்தது நடக்காமல், அவள் உடனே ஊருக்குப் போகும்படி ஆகிவிட்டது.

தொடர்ந்து, இருவரும் சாதாரணமாகப் பேசிக் கொள்வதற்குக்கூட நேரமில்லாமல் மாதவன் இரவு வருவதும், காலை அவசரமாக எழுந்து போய்விடுவதுமாக இருந்தான்.

இன்று வசமாய் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறதே!

வசந்தா மெதுவாக ஆரம்பித்தாள்.

''நீங்க இப்படி தினம் போயிட்டுப் போயிட்டு வர்றது எனக்கு வேதனையா இருக்கு மாது...''

''அதுக்காக, 'நா தனியா இருக்கேன்'னு பழையபடி பேச ஆரம்பிச்சிடாத வசு... உன்னத் தனியா விட முடியாதுனுதான் நா ஏற்கனவே சொல்லிட்டேன்...''

''ப்ச்... முழுசா கேட்டுட்டுதான் பேசுங்களேன். அன்னிக்கு ரோஸலின் கல்யாணத்துல அத்தம்மாவப் பார்த்தேன்...''



''உன்கூடப் பேசினாங்களா?''

''பேசாம? பிழியப் பிழிய அழுதிட்டாங்க... 'நீங்க செல்லம் கொடுத்துக்கொண்டுதான் வசந்தா அப்படி என் மானம் போகும்படி செய்திட்டா'ன்னு அண்ணன் எப்போதும் ஏசிக்கிட்டே இருக்காராம். 'போக்கிடம் இல்லாத அனாதையாகி, எல்லார்கிட்டயும் பேச்சு கேக்க வேண்டி வந்திடுச்சே'ன்னு வேதனைப்பட்டுக்கிட்டாங்க. என்மேல அவ்வளவு ஆசையா இருந்தவங்கள இப்படி கஷ்டப் படுத்திட்டமேன்னு எனக்கு உறுத்தலா இருக்கு மாது...''

''..........''

''நா ஒண்ணு சொன்னா கேப்பீங்களா?''

''என்ன?''

''அத்தம்மாவ நம்ம வீட்டுலேயே வந்து இருக்கச் சொல்லிட்டா என்ன?''

மாதவனின் அதிர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது.

''நம்ம வீட்டுலயா? அதெப்படி முடியும் வசு? அவங்களுக்கு இங்க சரிப்பட்டு வருமா?''

''வரும்... எங்கிட்ட அலாதி பிரியம் வெச்சிருக்காங்க. எனக்காக எது வேணா செய்வாங்க மாது... எனக்கும் மனுஷங்களே இல்லாம இப்பிடி எல்லா வேலைகளையும் செய்றது கஷ்டமாஇருக்கு. பிரசவ நேரம் வேற நெருங்கிட்டே இருக்கு... குழந்தைய, வீட்டைக் கவனிக்கனு பொறுப்பா ஒரு பெரியவங்க நம்மகூட இருந்தா நல்லதுதானே? குழந்தை பிறந்தப்பறம் கூட வேலையை விட வேணாம்னு முடிவு பண்ணியிருக்கோம். அப்ப குழந்தைய யாரு பாத்துப்பாங்க மாது? அத்தம்மானா நல்லா கவனிச்சுப்பாங்க... என்னையே எடுத்து வளர்த்தவங்கதானே!''

மாது எழுந்து உட்கார்ந்துகொண்டு அவளை அழுந்த ஏறிட்டான்.

"எல்லாம் சரிதான், அவங்க இங்க வருவாங்களா?"

"கட்டாயம் வருவாங்க. 'வீட்டுக்குப் பெரியவங்களா வந்து எங்களோட தங்கிக்குங்க அத்தம்மா'னு கெஞ்சிக் கேட்டுக்கிட்டம்னா, நிச்சயம் வருவாங்க... உடனடியா அவங்கள வரச் சொல்லிட்டம்னா, எனக்கு நல்ல துணையா இருப்பாங்க. நீங்களும் நிம்மதியா காஞ்சிபுரத்துலயே பத்து நாளு தங்கி அம்மா உடம்பு நல்லா தேறினப்பறம் வந்தா போதும். இந்த அலைச்சல் இருக்காது உங்களுக்கும்..."

இதுவரை அகவாரஸ்யமாகப் பேசிக்கொண்டு வந்தவன், வசந்தா கடைசியாக சொன்னதைக் கேட்டு சற்றே நிமிர்ந்தான்.

பெற்றவர்களுக்கு அருகில் இருந்து கவனிக்கக்கூட முடியவில்லையே என்ற ஏக்கம் தீர இப்படி ஒரு வழி இருக்கிறதா!

அத்தம்மா வருவது எல்லா விதத்திலும் வசதி என்பதோடு, 'என்னைப் பெற்றவர்களோடு நான் சமாதான மாகிவிட்ட பிறகு வசந்தாவையும் அவள் உறவினரோடு இணைப்பது நியாயமான செய்கை அல்லவா' என்கிற கேள்வியும் எழுந்ததில், "நீ சொல்றது சரிதான். வீட்டுக்குப் பெரியவங்களா ஒருத்தங்க இருக்கிறது நல்லதுதான் வசு... அத்தம்மாவ இங்க வந்து இருக்கச் சொல்லி கேட்டுக்க..." என்று மனப்பூர்வமாகப் பச்சைக்கொடி காட்டினான்.

அன்று மதியமே சர்ச்சில் சொல்லவேண்டியவர்களிடம் சொல்லி அத்தம்மாவை எப்படியோ மாலையே சந்தித்து வசந்தா அழைப்பு விடுக்க,



மஹா சந்தோஷத்தோடு மறுநாளே அத்தம்மா தன் மூட்டை முடிச்சுகளோடு வசந்தாவின் வீட்டில் வந்து இறங்க,

அந்த மூட்டை முடிச்சுகளோடு முதல் முறையாக ஏசுநாதர் படமும், பைபிள் புத்தகமும், மெழுகுவர்த்தி ஸ்டாண்டுகளும் அந்த வீட்டுக்குள் நுழைந்தன.

# 14

**கா**ற்று ஓஷ் ஓஷ் என்ற சத்தத்தோடு வீசியது.

சற்றே முன்னால் சாய்ந்து ஜன்னல் கம்பிகளில் கன்னத்தைப் பதித்து அந்தக் காற்றை ரசித்தபோது மனசு சந்தோஷமாக இருப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

சந்தோஷம்தான்...

கடவுளின் ஆசீர்வாதத்தில் அம்மா உடல் நலம் தேறி வீடு திரும்பிவிட்ட சந்தோஷம்.....

அவரைக் கிட்டத்தில் இருந்து கவனித்து, நல்ல பிள்ளையாய் லட்சணமாய் கடமையைச் செய்த சந்தோஷம்...

பெற்றவர்கள், நடந்து போன எதையும் எண்ணி மனம் கசந்து போகாமல், பழைய அன்புடனேயே பழகும் சந்தோஷம்...

முக்கியமாய், காஞ்சிபுரத்தில் தங்கிவிட்ட பதினாறு நாட்களாய் 'வசுவைத் தனியாகத் தவிக்கவிட்டு இப்படி வந்துவிட்டோமே' என்று குற்றஉணர்வு எழ முடியாததினுசில் தக்க துணையாய் அத்தையம்மாவை வீட்டோடு வசிக்க ஏற்பாடு பண்ணிவிட்ட சந்தோஷம்...

என்ன இருந்தாலும் வசு கெட்டிக்காரிதான்... பேசுகிற விதமாய்ப் பேசி ஒரே நாளில் அத்தையம்மாளை வரவழைத்து விட்டாளே!

அப்படி அத்தை மட்டும் வந்திராவிட்டால், தினமும் காலையில் காஞ்சிபுரத்துக்கு வந்து, பகலெல்லாம் ஆஸ்பத்திரியில அம்மாவை கவனித்து, மாலையில் மீண்டும் பஸ் பிரயாணம் மேற்கொண்டு, இருட்டினபிறகு ஆய்ந்து, ஓய்ந்து படுக்கையில் விழுவதுதானே நடந்திருக்கும்! இந்த அல்லாட்டத்தில் உடம்பு சுருண்டு போவதோடு யாருக்கும் உருப்படியாய் எந்த உதவியும் செய்ய முடியாமல் களைத்துப் போவதுதானே நடந்திருக்கும்?

அத்தையை வீட்டோடு வரவழைத்துக்கொண்டுவிட்ட ஏற்பாட்டினால், வசு சொன்ன மாதிரி எத்தனை உபயோகங்கள்!

வாயும், வயிறுமாக இருக்கும் மனைவிக்கு அகாலமாய் வலி எடுத்தால் என்ன செய்வது என்கிற கவலை இல்லை; மாசம் ஆன பிறகும் இப்படி வீட்டு வேலைகளை மாடு மாதிரி செய்கிறாளே என்கிற சங்கடம் இல்லை தனியாக இருக்கிறோமே, பிரசவத்திற்குப் பிறகு குழந்தையை வளர்ப்பது எப்படி என்கிற அவஸ்தை இல்லை... ஒன்றும் இல்லை...

இதெல்லாவற்றையும்விட அத்தையம்மாளை வீட்டோடு அழைத்துக்கொண்டு வந்து விட்டதற்கு இவனைப் பெற்றவர்கள் மனப்பூர்வமாக சம்மதித்ததுதான் ஆச்சரியத்திலும் ஆச்சர்யமான சமாசாரம்!

''ஏன் தம்பி... ராவுக்குத் தங்கிடப்போறேன்னு சொல்றியே - அங்க உன் பெண்டாட்டி தனிச்சு இருப்பாளே, அத நினைச்சுப் பாத்தியா? கர்ப்பிணிப் பொண்ணை தன்னந்



தனியா விடறது சரியான காரியமா படலியே'' என்று இவன் போய் இறங்கி, அங்கேயே இரவும் கழிக்கப் போவதாகச் சொன்னவுடன், புருவத்தைச் சுருக்கிக்கொண்டு அப்பா கேட்கவே செய்தார்.

கொஞ்சம் தயங்கி, பின் சின்னக் குரலில், வசந்தாவின் அத்தை தங்களோடு நிரந்தரமாய்த் தங்க வந்து விட்டதைக் கூற, ஒரு நிமிஷம் அப்படியே நின்று அவன் சொன்னதைக் காதில் வாங்கியவர் மீண்டும் பேச வாயைத் திறந்தபோது வாஸ்தவமாகவே ஒருவித நிறைவு அவர் கண்களில் வெளிச்சம் போட்டிருப்பதை உணர முடிந்தது.

''நல்ல காரியம் பண்ணினேதம்பி... ஆயிரம் இருந்தாலும் இந்த சமயத்துல பெத்தவங்களோ, இல்ல இந்த மாதிரி பெரியவங்களோ கூட இருக்கறதுதான் முறை... எந்த மதமானா என்ன, ஜாதியானா என்ன... உணர்ச்சின்றது எல்லாருக்கும் பொதுதானே!''

வெறும் பேச்சோடு நிற்காமல் அம்மாவிடமும் இதைக் கூறி அப்பா சந்தோஷப்பட்டதையும், பிற்பாடு அம்மா மருமகளைக் காண வேண்டும் என்று ஆசைப்பட்டதனால், முதல் நாளே போன் மூலம் வசந்தாவுக்கு விஷயத்தைக் கூறி, மறுநாள் லீவுபோட வைத்து, காலையில் தானே புறப்பட்டுப் போய் அவளை அழைத்துவந்து பெற்றவர் முன் மஹா கலக்கத்தோடு நிறுத்தியதையும் இப்போது மாதவன் நினைத்துப் பார்த்தான்.

எத்தனை பரபரப்பான நிமிஷங்கள் அவை. என்ன சொல்வார்களோ, எது பழிப்பார்களோ என்று அஞ்சியதெல்லாம் பொய்த்துப்போக, எதிரில் நின்றவளின் கையைப் பற்றிக்கொண்டு சன்னமாய் விசித்துவிசித்து அம்மா அழுததுதானே கடைசியில் நடந்தது?

எத்தனை பேருக்கு இப்படி ஒரு அன்பான பெற்றோர் அமைவார்கள்?

எத்தனை பேருக்கு இப்படி நிலைமையைப் புரிந்துகொண்டு பக்குவமாய் நடக்கும் பெரியவர்கள் கிடைப்பார்கள்?

எத்தனை பேருக்கு...

பஸ் ஒரு குலுக்கலோடு நிற்க, மாதவன் எழுந்தான். கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு இறங்கி நடந்தான்.

அம்மாவின் விருப்பப்படி சீக்கிரமே வசந்தாவைக் கூட்டிக்கொண்டு கிராமத்துக்குப் போகும் காட்சி கண்முன் வண்ணத்தில் விரிந்தது.

சர்ரென்று வீட்டு வாசலில் நிற்கும் டாக்ஸி.

தள்ளாமை இருந்தாலும் முகமெல்லாம் சிரிப்பாக இறங்கும் வசந்தா...

பக்கத்தில் தலை நிமிர்ந்தபடி இவன்...

வீட்டு வாசலில் செம்மண் பூசப்பட்ட கோலம், மாவிலை...

ஆரத்தி தட்டுடன் காத்திருக்கும் அம்மா...

கூடத்திலிருந்து எட்டிப் பார்க்கும் அப்பா...

கோபதாபத்தை விட்டுவிட்டு மருமகளை வரவேற்கத் தயாராகிவிட்டார்கள், பார்த்தாயா? என்கிற பாவனையுடன் தம்தம் வீட்டு வாசலில் வந்து நின்று வேடிக்கை பார்க்கும் அண்டை அசலார்...

மணமகளே மருமகளே வா... வா...

உன் வலது காலை எடுத்து வைத்து வா... வா...



குணமிருக்கும் குலமகளே வா... வா...

என்றோ பார்த்த சினிமாப் படக்காட்சியாய் கற்பனை மலர்ந்தது.

"என்ன ஸார்... கண்ணு தெரிலியா? மேல வந்து ஏறும மாட்டுக்கணக்கா விழுவறீரே?"

கட்டைக்குரல் ஒன்று அதட்ட, மாதவன் திடுக்கிட்டான்.

எதிரில் நின்று முறைத்த வியாபாரியிடம் மன்னிப்பு கேட்கும் சிரிப்பு ஒன்றை சிரித்து, ஸாரி என்று முனகி, கால்களை எட்டி வைத்து ஒருவித அவசரத்துடன் அவன் வீட்டுக்கு வந்து சேரும்போது மணி ஏழரை என்றது கடிகாரம்.

மரியாதையுடன் ஒரு பக்கமாய் நின்று அவன் தாய் உடல்நிலை குறித்து விசாரித்த பிறகு இரவுச் சமையலை கவனிக்கவென பரிமளம் உள்ளே போக, மாதவன் மனைவியின் கையைப் பற்றிக் கன்னத்தில் வைத்துக் கொண்டான்.

"எப்படி இருக்கே வசு? உன்னை ரெண்டு வாரமா பிரிஞ்சதுல ரொம்பத்தான் கஷ்டப்பட்டுட்டேன்" என, அவள் மயக்கத்தோடு சிரித்தாள்.

"ஆமாமா... ரொம்ப கஷ்டம்தான் போங்க... அம்மாகிட்ட கொஞ்சற ஜோர்ல என் ஞாபகமே இருந்திருக்காதுனு எனக்குத் தெரியாதா என்ன? சும்மா காது குத்தாதீங்க சாமி..."

மாதவன் அவள் கையை உதடுகளில் வைத்து முத்தமிட்டான்.

நம்பினா நம்பு, இல்லாட்டி விடு... நா பட்ட அவஸ்தை எனக்குத்தான் தெரியும்... அம்மாகூட ஒருதரம் கேட்டுட்டாங்க தெரியுமா? என் தம்பி இப்படி குட்டி போட்ட பூனையாட்டம் தவிக்கறே!! வேணா ஒரு நடை போய்ப் பாத்திட்டு வாறதுதானே-னு?''

வசந்தா திரும்பி அவன் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டாள்.

''அப்புறம்? அம்மா இன்னும் வேற என்னென்ன சொன்னாங்க?''

''உன்னைப் பாத்ததுல அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம் வசு.... அழகா இருக்குறா... அதான் நீ கண்மண் தெரியாம போய் விழுந்திட்ட-னு கேலி காட்டினாங்க...''

வசந்தா யோசனையுடன் அடி உதட்டைக் கடித்தாள். மெள்ளப் பேசினாள்.

''எனக்கொரு சந்தேகம், மாது...''

''என்ன...?''

''இத்தன ஆசையா இருக்கறவங்களால எப்படி இத்தன மாசமா நம்பள திரும்பிக்கூடப் பாக்காம இருக்க முடிஞ்சது? நீ எப்படி இருக்கே'னு ஒரு வார்த்தைகூடக் கேக்காம வீம்பா எப்படி முகத்தத் திருப்பிக்கிட முடிஞ்சது?''

மாதவன் உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கினான்.

''காஞ்சிபுரம் போயிட்டு வந்த ஒருவாரமா எனக்குள்ள இதே கேள்விதான்... பதில்தான் கிடைக்கல...''

மாதவன் குனிந்து அவள் முடியைக் காதோரமாய் ஒதுக்கிவிட்டான்.



''அது எப்படி இருந்தா என்ன வசு? இன்னிக்கு அவங்க எல்லாத்தையும் மறந்திட்டு சுமுகமாக இருக்காங்க, அதானே முக்கியம்? பழசக் கிளர்றதால யாருக்கு என்ன ஆதாயம்? நீ? அந்தப் பேச்ச விடு... இதக்கேளு... அம்மா உனக்கு வளைகாப்பு செய்யப் போறாங்களாம்... தெரியுமா?''

வசந்தா எழுந்து உட்கார்ந்தாள்.

''வளைகாப்பா? எதுக்கு?''

''பிள்ளைத்தாச்சிப் பொண்ணுக்குச் செய்யவேண்டிய சடங்கெல்லாம் செஞ்சிங்களா-னு கேட்டாங்க... அதெல்லாம் அவங்க மதத்துல செய்யற வழக்கம் இல்லையாம்மா-னு சொன்னேன்... 'அவங்க செய்யாட்டி என்ன? நாளைக்கு எம்பேரன் குறையில்லாம பொறக்க வேணாமா? நா வீட்டுக்குப் போனதும் நல்ல நாள் பாத்து சொல்றேன் - அழைச்சிட்டு வா... நம்ம வீட்டுலேயே புதுப் புடவை வாங்கி வளை அடுக்கிட்டா போவுது'னு சொன்னாங்க; எப்படி?''

மணையில் புதுப்புடவையில் மனைவி உட்கார்ந்திருக்க, கிராமத்து சுமங்கலிப் பெண்களுடன் மங்களம் பாடியவாறே அம்மா அவளுக்கு வளை அடுக்கும் கற்பனை தந்த குதூகலத்தோடு வசந்தாவை ஏறிட்ட மாதவன் லேசாகத் திடுக்கிட்டான்.

''என்ன வசு?''

''ஒண்ணுமில்ல...''

''அட, சொல்லுன்னா...''

''இல்ல... உங்க வீட்டுக்கு சும்மா போயிட்டு வந்தா போதாதா... இந்த வளைகாப்பு, அது, இதெல்லாம் எதுக்கு மாது?''

''எதுக்கா?'' குழந்தை குறையில்லாம பிறக்க இதெல்லாம் செய்யறது சம்பிரதாயம் - னு அம்மா சொன்னதா சொன்னேனே; காதுல விழலியா?''

வசந்தா நமுட்டாய் சிரித்தாள்.

''அப்படின்னா இந்த சடங்கெல்லாம் செய்யாதக் கொண்டு எங்கக் குழந்தைகள்ளாம் கொறையோட பொறக்குதுனு சொல்றீங்க, அதானே?''

இடக்கா பேசாத வசு... என்னமோ ஆசைப்பட றாங்கனு சொல்ல வந்தா... அதப் புரிஞ்சிக்காம மேலமேல பேசறியே! நாம அவங்களை மதிக்காம கட்டிகிட்டத மனசுல வச்சிக்காம பெருந்தன்மையோட அவங்க நடந்துக்க முன் வந்திருக்கறத நெனைச்சுப் பாக்காம...''

வாக்கியத்தை முடிக்கு முன் ''சாப்பிட வறீங்களா?'' என்று வாசல்படியில் நின்று பரிமளம் குரல் கொடுக்க, பேச்சை அதோடு நிறுத்திக்கொண்டு எழுந்தார்கள்.

சமையல்கட்டில் தட்டுக்கு முன் அமர்ந்து சோற்றையும், குழம்பையும் சேர்த்துப் பிசைந்தவன், அதை உருட்டி வாயில்போடத் தலை நிமிர்ந்தபோது பார்வை எதிர் சுவரைத் தட்ட, அதிர்ந்தான்.

ஏசுநாதர் படம்...

'உங்களின் நன்மைக்காக நான் ரத்தம் சிந்துகிறேன்'' என்கிற அர்த்தத்தில் ரத்தம் வடியும் இருதயத்தோடு காணப்படும் ஏசுவின் படம்...

அருகிலேயே சின்னதாய் மரஸ்டாண்டு ஒன்றில் மெழுகுவர்த்தியைப் பொருத்த உபயோகிக்கும் ஸ்டாண்ட், ஜபமாலை...



என்ன இதெல்லாம்?

சுருசுருவென்று கண்களைக் கோபம் சிவக்கச் செய்ய, மாதவன் ''வாட் இஸ் திஸ்?'' என்றான் அடிக்குரலில்...

''எது? ஓ! படத்தக் கேக்கறீங்களா? அத்தம்மாவுக்கு ரெண்டு வேளையும் ஜபம் செய்யாட்டி தூக்கம் வராது... வழிபாட்டுப் படத்த எங்க வக்கலாம்னு கேட்டாங்க... நாதான் சமயல்கட்டுல வச்சிக்கங்க... மாதுவுக்குத் தொந்தரவா இருக்காதுனு சொன்னேன்...''

ரொம்ப சர்வசாதாரணமாய் அந்தச் செய்தியைச் சொல்ல, அவள் குரலில் காணப்பட்ட அலட்சியம் மாதவனின் கோபத்தை அதிகமாக்கியது.

''இது ஏன் என்கிட்ட நீ சொல்லல?''

''எங்க நேரம் மாது? அன்னிக்குப் போனவங்க இன்னிக்குத்தானே வந்திருக்கீங்க?''

அதற்காக - உன் இஷ்டப்படி எதுவேணுமானாலும் செய்வதா - என்று அதட்ட நினைத்தவன், பரிமளம் எதிரில் நின்ற காரணத்தால் தன் நினைப்பை மாற்றிக்கொண்டு, இரண்டு வாயாக குழம்பு கலந்த சோற்றை அள்ளிப்போட்டுக் கொண்டு, 'போதும் - எனக்கு பசியில்ல' என்றவாறு எழுந்தான்.

கை கழுவிக்கொண்டு அறைக்குச் சென்றவன், சில நிமிஷங்களில் சாப்பாடு முடித்து உள்ளே வந்தவளை அழுத்தமாக ஏறிட்டு, கோபம் தணியாத குரலில் வினவினான்.

''எதக் கேக்காம செஞ்சேன்?''

''ஏசு படத்த மாட்டினதைத்தான் சொல்றேன்.''

வசந்தா 'ப்ச்' என்று சூள் கொட்டினாள்.

"நீங்க இன்னுமா அத நினைச்சிட்டிருக்கீங்க? அத்தம்மாவுக்குச் சின்னதா சந்தோஷம் தர்ற காரியத்த செய்யறதுக்குக்கூடவா உங்க பர்மிஷன் வேணும்?"

"சின்னதோ, பெரிசோ... மதம் சம்பந்தமா எதையும் செய்யறதில்லேனு முடிவு செஞ்சுருக்கோம், இல்ல?"

"ஒத்துக்கறேன்... ஆனா, அந்தக் கட்டுப்பாடு நம்ம ரெண்டு பேர் விஷத்துலதானே ஒழிய, அத்தம்மாவுக்கு இல்ல..."

"அப்ப, அவங்க விருப்பப்படி இந்த வீட்டுல எதுவும் நடக்கும்னு சொல்றே?"

"அத்தம்மா, சம்பளம் கொடுக்காத வேலைக்காரியா சமைக்கணும், வீட்டு வேலை செய்யணும், நல்ல துணையா இருக்கணும்னு எதிர்பார்த்தா, இந்த மாதிரி சின்ன விஷயங்கள்ல விட்டுக்கொடுத்துதான் ஆகணும்... பெரியவங்க திருப்திக்காக இதக்கூட செய்யாட்டி எப்படி?"

கறாராய்ப் பேசிவிட்டு, தான் சொல்வதை சொல்லி விட்டேன். பிறகு உங்கள் இஷ்டம் என்பது போல 'ஸ்லப்பாடா' என்கிற பெருமூச்சுடன் வசந்தா படுத்து கண்களை மூடிக்கொள்ள, மாதவன் அடங்கிப்போனான்.

ஆனால், அந்த ஞாயிறு காஞ்சிபுரம் சென்று பெற்றவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பியபோது ஒரு பழனி பஞ்சாமிருத டின், சின்ன விபூதிப் பொட்டலத்தை டேபிள் மேல் வைத்தவன் "அம்மா பொழைக்க எழுந்தா பழனி முருகனுக்கு பால் அபிஷேகம் செய்யறதா அப்பா நேர்ந்து கிட்டிருந்தாராம்... ஆள்மூலம் பணம் அனுப்பி செஞ்சி, பிரசாதம் கொடுத்திருக்காரு" என்றதோடு நிற்காமல் "எங்க குலதெய்வம்; சக்தி விநாயகர் படம்... மாட்டி வை தம்பி,



நல்லது நடக்கும்'னு அம்மா சொல்லாங்க... பெரியவங்க திருப்திக்காக இதக்கூட செய்யாட்டி எப்படி?'" என்று அவன் பக்கம் திரும்பாமல் முணுமுணுத்து, படுக்கையறை காலண்டரைக் சுட்டிவிட்டு கையிலிருந்த படத்தை மாட்டின நிமிஷத்தில் அவன் வீம்புக்காகச் செயல்படுவதைத் துல்லியமாக வசந்தாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

## 15

சொல்லவும் முடியவில்லை, சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை.

பிடித்ததோ, பிடிக்கவில்லையோ - இடத்தைக் கொடுத்தாகி விட்டது.

இனிமேல் எந்த இடத்தில் எந்த நுனியைப் பிடித்து இழுப்பது?

எதைப் பிடித்தாலும் ஏதாவது ஒரு இடத்தில் இழைவிட்டுப்போய் விடுமோ என்று பயமாக அல்லவா இருக்கிறது!

சரி, விட்டுக்கொடுத்ததுதான் கொடுத்தோம், பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு சும்மா இருந்து விடுவோம் என்றால், அதுவும் நடக்கிற காரியமாய்த் தோன்ற வில்லையே!

கண்ணை மட்டும் மூடிக்கொண்டால் ஆயிற்றா? மனசையும், ஐம்புலன்களையும், சர்வாங்கத்தையும் ஒடுக்கிக் கொண்டு விட்டால்கூட நல்லதுதான்.

முக்கியமாய் இந்த மூக்கை!

இராப்பகலாய் பயிற்சி கொடுத்து யாரோ வேலை மெனக்கெட்டுப்போய் உருவேற்றின இனுசில் எங்கிருந்து வந்தது இந்த மோப்ப சக்தி?

சதாசர்வகாலமும் ஒரு துப்பறியும் நாய் மாதிரி தூக்கிக்கொண்டு வாசம் பிடித்துத் தொலைக்கிறது! கண்களுக்கு இமைகள் இருக்கிற மாதிரி, மூக்குக்கும் ஏதாவது ஒன்றைப் படைத்திருக்கலாம் இந்த ஆண்டவன்.

படைத்திருந்தால், இப்படி கர்சீப்பால் முக்கால் முகத்தை மூடிக்கொண்டு வீட்டுக்கு வெளியே காம்பவுண்ட் சுவரில் சாய்ந்து நின்று தெருவை வேடிக்கை பார்ப்பதையோ, சிகரெட் ஒன்றைப் பற்றவைத்து அந்த மணத்தை சுற்றிலும் பரப்பியபடி உட்கார்ந்திருப்பதையோ செய்யாமல், மூக்கு மடலை இழுத்து விட்டுக்கொண்டு வீட்டினுள்ளேயே இருந்திருக்கலாம்.

மாதவனுக்குள் திடுமென சின்ன வயசில் தூங்கப் போவதற்கு முன் ஆயாவின் இடுப்பில் ஒரு காலை போட்டு படுத்திருந்த நாழிகையில் செம்மின குரலில் அவர் சொன்ன கதை ஒன்று நினைவுக்கு வந்தது.

'சம்சாரி ஒருத்தனுக்கு பொசுக்குனு ஒரு நாளு வாழ்க்கை வெறுத்துப் போச்சாம். 'நா சாமியாராப் போய்ப்போறேன்'னு கௌம்பினவன அக்கம் பக்கத்து பெரியவங்க தடுத்து, 'அடேய் அதுக்கெல்லாம் மனசு பக்குவம் வேணும்டா'னு சொல்லியும், 'அதெல்லாம் முடியாது. நா சாமியாராயிட்டேன்; தவம் பண்ணப்போறேன்'னு இவன் வீம்பா கிளம்பி, ஆத்தங்கரை பக்கமாப் போயி உட்கார்ந்துகிட்டு தியானம் பண்ண வேண்டி 'சிவ, சிவ'ன்னு முணுமுணுக்க ஆரம்பிச்



சானாம். பத்து நிமிஷத்துக்கெல்லாம் நாலைஞ்சு சிறு வயசு பொண்ணுங்க தண்ணி மொள்ள வந்துச்சாம். இவன் புத்தி தியானத்த விட்டு அவங்ககிட்ட ஓடுச்சாம். சரி, 'கண்ண தொறந்துகிட்டு இருந்தாத்தானே வம்பு, மூடிக்கிட்டா?'ன்னு நெனைச்சு இறுக்க மூடிக்கிட்டானாம். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கம்முனு பூ வாசனையும், ஆத்தங்கரைல உட்கார்ந்துகிட்டு கட்டுசோறு திங்கறவங்களோட சோத்து மூட்டை மணமும் சேர்ந்து மூக்குல ஏற, மறுபடியும் தியானம் பண்றது விட்டுப் போச்சாம். அப்பால, மூக்கையும் பொத்திகிட்டு வாயால மூச்சுவிட்டுகிட்டே 'சிவ, சிவ'ன்னு சொல்லிப் பார்த்தானாம். இப்போ நடந்து போற பொம்பளைங்க கால் கொலுசு சத்தம் காது வழியா பூந்து, தியானத்தைக் கலைச்சுதாம். என்னடா இது சோதனைன்னு நெனைச்சு காதுல பஞ்சு அடைச்சிகிட்டு மறுபடி உக்காந்தானாம். அரை நிமிஷம் ஆகலியாம் அதுக்குள்ள, வீட்டுல மாடு கன்னு போட்ட நாளாச்சே, மூணாவது வீட்டு வால் பையன் நாம இல்லாட்டி மாங்காய்ப் பறிச்சிடுவானே, வாங்கின கடன் இருபது ரூபாய் தண்டபாணி திருப்பித் தர வரேன்னு சொன்னானேன்னு வரி... சை... சையா மனசு அலைபாய, 'போதும்டா சாமி, சாமியாரா வாழுறதுக்கும் தவம் பண்றதுக்கும் நம்மால மனசக் கட்டுப்படுத்த முடியாது'ன்னு மணலைத் தட்டிகிட்டு கௌம்பிட்டானாம்...'

கதையைச் சொல்லிவிட்டு ஆயா குலுங்கிச் சிரித்தது நினைவுக்கு வர, மாதவனுக்குத்தான் இப்போது கிட்டத்தட்ட அந்த சம்சாரியின் நிலையில் இருக்கிற மாதிரியே தோன்றியது.

ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமாய், நிதானமாய் தூங்கி எழுந்து, வேலைகளை கவனித்து, திருப்தியாய் சாப்பிட்டு, மறுபடி ஒரு தூக்கம் போட்டு...

எங்கே...!

கிடக்கிற கிடப்பில், சாப்பாடாவது மண்ணாவது!

வெறுப்போடு முகத்தைச் சுளித்துக்கொண்டு வீட்டினுள் பார்த்தபோது, வசந்தா சமையலறை வாசலில் நின்றவாறு அத்தம்மாவுடன் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

காலை எழுந்தது முதல் இரண்டு பேருமே அங்கேயே இருக்கிறார்கள், என்னதான் சமைப்பார்களோ!

வாசனை மட்டும் ஆளை இருக்க விடாமல், இப்படி தெருவுக்குத் தூக்கியிருக்கிறது!

இன்னின்னதுதான் செய்வார்கள் என்று விபரமாக முன்பே தெரிந்திருந்தால், 'இதை மட்டும் செய், மற்றதைச் செய்யாதே' என்று பட்டியல் போட்டுக் கொடுத்திருக்கலாமோ என்னவோ!

எதையும் கேட்டு வைத்துக் கொள்ளாமல், 'ஆஹா! உங்கள் இஷ்டம்' என்று அதிகப்பிரசங்கித்தனமாய் தலையாட்டித் தொலைத்ததற்கு இப்போது நல்ல பலன்!

'இத்தன நாளுதான் புள்ளத்தாய்ச்சி பொண்ணு தானே பொங்கித் தின்னு கஷ்டப்பட்டுது. இப்போதான் நாம வந்திட்டமேனு கொஞ்சம் திருப்திப்பட்டுகிட்டேன். ஆனா, என்னாத்த செஞ்சிப் போட்டாலும் சரியாவே சாப்பிட மாட்டேன்றாளே! நல்லா விரும்பி சாப்டால்ல உடம்புல ஒட்டும்!' என்று அத்தையம்மா அன்று புலம்பினபோது,

"ஆ...மா, விரும்பி சாப்புடறாங்க! இங்க ஒரு முட்டைக்கே வழியக்காணும்! நாம பெரிசா கோழியும் மீனுமாவா சாப்ட்டுறப் போறோம், உடம்புல ஒட்டுறதுக்கு!" என்று வசந்தா என்னவோ ஜாடையாகப் பேச,



மாதவனுக்கு சர்ரென்று எங்கிருந்தோ ஒரு ரோஷம் வந்தது.

'முட்டை கூட சாப்பிடக்கூடாதுனு நா சொல்லலேவே! வேணுன்னா தனி பாத்திரத்துல வெச்சிக்கங்கனு அன்னிக்கே சொல்லிட்டத மறந்து பேசினா...?'

இவன் இப்படிச் சொல்வதற்கென்றே காத்திருந்த மாதிரி, 'தனி பாத்திரத்துல வெச்சிக்கலாம்னா, முட்டையோட கூட மத்தது எல்லாமேதான் ஆக்கலாம். வசுவுக்கு உடம்பாவது தேறும்' என்ற அத்தையம்மாவின் வார்த்தைகளுக்குத் தலையாட்டுவதைத் தவிர மாதவனுக்கு வேறு வழியே இல்லாமல் போக,

உடனடியாய் புது சமையலுக்குத் தோதாய் டம்ளர், தட்டு, சட்டி என்று பாத்திரங்கள் வாங்கப்பட்டன...

ஒன்பது மாசம் ஆகிவிட்ட நிலையில், வசந்தா வேலைக்கு விடுப்பு எடுத்துக்கொண்டு வீட்டில்தான் இருக்கிறாள். அதனால், தான் ஆபீஸ் போனபின் வீட்டில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வழியில்லை. வீட்டில் இருந்தால் மட்டும் உள்ளே நடப்பது தெரியவா செய்கிறது! அந்தப் பாத்திரங்களை அந்தச் சமையலுக்கு மட்டும் உபயோகிக்கிறார்களா, இல்லை...?

நேற்றுகூட வெண்டைக்காய் பொரியலை இந்த புது சட்டியிலிருந்துதான் பரிமாறியதாக மாதவனுக்குத் தோன்றியது.

எல்லாமே ஒன்றாகவே ஆகிவிட்டதோ என்கிற சந்தேகம் நமநமவென்று பிராண்டத் தொடங்கியபிறகு, தான் சாப்பிடுவதுகூட அசைவம்தானோ என்றே தோன்ற ஆரம்பித்து விட்டது.

வசந்தாவிடம் சொல்லவும் முடியவில்லை, சொல்லாமல்...

மறுபடி மறுபடி இதே நினைவுகளே எழும்பி எரிச்சலை அதிகமாக்க, மாதவன் தன்னை உலுக்கிக்கொண்டான்.

மீசையை நீவிவிட்டு முகவாயை வழித்துவிட்டுக் கொண்டு, சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

நீளமாய் தம் பிடித்து புகையை நெஞ்சுக்குள் நிரப்பிக் கொண்டபோது, மற்ற வாசனைகள் குறைந்து சற்றே தெளிந்தாற்போல் இருந்தது.

இப்படியே சற்று தூரம் நடந்துவிட்டு வந்தால் என்ன?

ப்ச்... காலையிலிருந்து எத்தனை முறை வெளியே போய்விட்டு வந்தாயிற்று! சிகரெட் வாங்க, வாரம் முழுவதும் உபயோகித்த துணிமணிகளை சலவைக்குப் போட, முடி வெட்டிக் கொள்ள...

சலிப்பு சற்றும் மறையாமல் சிகரெட்டைக் கீழே போட்டு நசுக்கிவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தான் மாதவன்.

''ரொம்ப நேரமா வாசல்லியே நின்னுட்டு இருந்தீங்களே, போரடிக்குதா என்ன?''

வசந்தாவின் கேள்விக்கு பதிலேதும் சொல்லாமல், படுக்கையறைக்குள் நுழைந்து கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

''அட, ஏன் படுத்திட்டீங்க? மறுபடி தூங்கப் போ...''

அவள் முடிப்பதற்குள் மாதவன் கோபமாகக் கத்தினான்.

''என்ன, பெரிய டீச்சர் மாதிரி கேள்வியா கேட்டுகிட்டு இருக்கே! போ, போய் வேலையைப் பாரு...''



வசந்தா ஆச்சர்யமாகப் பார்த்தாள். பின், தோளைக் குலுக்கிக்கொண்டு, ''உங்களுக்கு என்னாயிருக்குன்னே புரியலை மாது... எதப் பேசினாலும் முகத்த சுளிக்கறீங்க!'' என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனாள்.

பின்னே, தன் வீட்டிலேயே சுதந்திரமாக நடமாட முடியாமல் சங்கடமாக இருந்தால், ஒரு மனிதன் எப்படி சிரித்த முகத்தோடு இருக்க முடியும்? நான் மட்டும் மந்திரியாக இருந்தால், நாட்டின் யாருமே உயிர்களைக் கொல்லக்கூடாது, அசைவம் சமைக்கக்கூடாது என்று முதல் காரியமாய் உத்தரவு போட...

மாதவனின் சிந்தனை ஒரு விநாடி நின்றது.

இந்த மாதிரி 'மந்திரி' கற்பனை செய்து எத்தனை நாளாயிற்று!

கடைசியாக எந்த விஷயத்தைப் பற்றி இந்த ரீதியில் சிந்தித்தோம் என்பதே மறந்துகூடப் போய்விட்டது. முன்பெல்லாம் அடிக்கொரு தரம், உப்பு புளி விவகாரத்திலிருந்து திடுமான அரசியல் வரை 'நான் மட்டும் மந்திரியாக...' என்று ஆரம்பித்துவிட்டு வசந்தாவிடம் வாங்கிக் கட்டிக்கொள்வது வழக்கம்.

'மறுபடியும் ஆரம்பிச்சிட்டீங்களா' என்று ஒவ்வொரு தரமும் சிரித்தவாறே சலித்துக் கொள்வாள்.

அவள் சலித்துக்கொண்ட பிறகும் விடாமல் மறுபடி மறுபடி சொல்லி, 'இதுக்கு மேல சொன்னீங்கன்னா நம்மால தாங்க முடியாது சாமி, நா போறேம்பா...' என்று அவள் ஓடுகிற பாவனையில் வேகமாய் நடக்க ஆரம்பிக்கும்போது, 'சரி, போனால் போகிறது. இன்றைக்கு இத்தோடு தர்பார் முடிவடைகிறது ராணி...' என்று நடித்து...

அத்தனை விளையாட்டும் எங்கே போயிற்று இப்போது!

வசந்தாவோடு சாதாரணமான சுமுகமான பேச்சுக் கூடக் குறைந்துவிட்ட மாதிரி அல்லவா தோன்றுகிறது!

முன்பு இருவருமே வேலைக்குப் போனாலும்கூட, காலையும் மாலையும் பேசுவதற்கு நிறைய பொழுது இருந்தது. அவள் என்ன வேலை செய்தாலும் கூடவே நின்று, 'உதவி' என்ற பெயரில் எதையாவது கொட்டி, மெழுகி...

எல்லாம் மறைந்து போய் விட்டது.

எப்போது எங்கே எதைப் பேச ஆரம்பித்தாலும், 'உள்ளாற அத்தம்மா மட்டும் வேலை செஞ்சுகிட்டு இருக்காங்க, நா எட்டிக்கூடப் பார்க்கலைன்னா எப்படி மாது?' என்று போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போய் விடுகிறாள்.

'எட்டிப் பார்த்த' பிறகு ஒருபோதும் திரும்புவதில்லை. அங்கேயே ஐக்கியம் ஆகிவிடுகிறாள்!

பொறுப்புகளை ஏற்க வீட்டுக்குப் பெரியவராய் ஒருவர் வந்துவிட்டார் என்பது, முதல் கொஞ்ச நாட்களுக்கு நிம்மதியைத் தந்தாலும் போகப் போக, வீட்டில் பெண்களின் ஆக்ரமிப்பு அளவுக்கு அதிகமாய் ஆகிவிட்டதோ என்றே தோன்றியது!

வசந்தாவோடு பேச, சேர்ந்தாற்போல் இரண்டு நிமிஷத் தனிமையாவது கிடைக்கும் என்றால், அது இரவு படுக்கை யறையில்தான்.

அங்கும், வயிற்றை சாய்த்துப் படுத்த உடன் வசந்தா தூங்கிப் போய் விடுவதில் பேச்சாவது, கிண்டலாவது!



இன்றுபோல், ஞாயிற்றுக்கிழமைகளில் நாள் முழுவதும் வீட்டில் இருக்கும்போது ஏதாவது ஒருவிதத்தில் கோபமும் தாபமுமாய் வந்து பேச்சையே கட்டிப் போட்டு விடுகிறது.

கையாலாகாத்தனம் மீண்டும் எரிச்சலைக் கிளப்பி விட, படுக்கையில் இருப்புக்கொள்ளாமல் மாதவன் எழுந்தான்.

ஜன்னலை ஒட்டி நின்று, வெளியே வேடிக்கை பார்த்த போது, பக்கத்து போர்ஷன் குழந்தைகள் மூன்றும் விளையாடுவது தெரிந்தது.

பையன்கள் இருவரும் பந்தையும் 'பேட்'டையும் வைத்து கிரிக்கெட் விளையாடுகையில், அந்தச் சின்னப் பெண், ''டேய், டேய்... என்னையும் சேர்த்துக்கங்கடா; நா எப்பவும் பந்து பொறுக்கிகிட்டு மட்டும்தான் வரணுமா? ப்ளீஸ்டா...'' என்று கெஞ்சிக்கொண்டிருந்தாள். அதை லட்சியமே பண்ணாமல் ஒருவன் பந்தை வீச, மற்றவன் டாரென்று தடுத்து அடித்தான்.

நாளைக்கு என் குழந்தையும் பெரிசானதும், இவர்கள் தங்களோடு ஆட்டத்தில் சேர்த்துக் கொள்வார்களோ?

குழந்தை! ஆணா? பெண்ணா?

எதுவாக இருந்தால் என்ன, நல்லபடியாக வளர்த்து நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தால் போதாதா?

குழந்தை என்றதும் மாதவனின் நினைவில் அம்மா எட்டிப்பார்த்தாள்.

'நீ பொறந்தப்புறம் நம்ம குடும்பத்துல குழந்தைகளே பொறக்கல... இப்போ அந்த ஏக்கம் தீரப் பேரப்புள்ளைய நா தொட்டுத் தூக்கத்தான் என் உசிரக் காப்பாத்தியிருக்கானோ என்னமோ, அந்த முருகன்!' என்று நெகிழ்ந்தாள்.

குழந்தைகளைப் பற்றியும், இவன் குழந்தையாய் இருந்தபோது நடந்தவற்றைப் பற்றியும் என்னென்னவோ பேசினாள்.

சென்ற முறை போனபோதுகூட, வேலைக்காரப் பெண்ணைக் கிட்டத்தில் வைத்துக்கொண்டு, எதை யெதையோ சட்டியில் போட்டு வறுத்து, பொடித்து டப்பாவில் போட்டுக் கொடுத்தாள்.

'இதுல ஒரு கரண்டி போட்டு கஞ்சி காய்ச்சிக் குடிச்சா, தாய்ப்பாலுக்கு எப்பவும் குறைவில்லே... தாயும் புள்ளையுமா வீட்டுக்கு வந்த உடனே, தவறாம தினம் சாப்புடச் சொல்லிடு மாது...' என்றாள்.

உடம்பு ஓரளவுக்குக் குணமாகி, வீட்டுக்குள் நடமாடுவது சாத்தியமானதிலிருந்து, ஒவ்வொரு தரம் மாதவன் வரும்போதும் இப்படி எதையாவது டப்பாவிலும் தூக்கிலுமாக நிரப்பி அனுப்பிக் கொண்டேதான் இருக்கிறாள்.

என்ன இருந்தாலும், அம்மாவின் சிரத்தையும் கை மணமும் அலாதியானதுதான்!

அம்மாவின் கைமணத்திலிருந்து மனசு அம்மா வைக்கும் காரக்குழம்புக்குத் தாவியது.

ஒன்றோடொன்று ஒட்டாத வெள்ளை சுடுசோற்றில், துளி நெய் விட்டு, இரண்டு கரண்டி குழம்பு ஊற்றி அதிராமல் உருட்டி சாப்பிட்டால் எப்படி இருக்கும்!

இப்போதே காஞ்சிபுரம் போனால் என்ன?

உடனே கிளம்பினால்கூட ஒன்றரை மணிக்குள் போய் விடலாம்.



இங்கே அத்தையும் மருமகளுமாய் எதையோ சமைத்து சாப்பிட்டுக் கொள்ளட்டும், நாம் இப்படி அருவருப்பு பட்டுக்கொண்டு ஒதுங்கி உட்கார்ந்திராமல் போய்விட்டால் என்ன?

எண்ணம் தோன்றிய ஒரே நிமிஷத்தில் மேஜை அருகே வந்து பர்ஸை எடுத்தான். வாட்சைக் கையில் கட்டிக்கொண்ட நாழியில், திடுக்கிட்ட மாதிரி நின்றான்.

என்ன இது மடத்தனம்!

நேற்று மாலை வசந்தாவை டாக்டரிடம் செக் அப்புக்காக கூட்டிப் போனபோதுகூட, 'எப்போது வேண்டு மானாலும் பிரசவம் ஆகிவிடும்' என்று டாக்டர் சொன்னாரே! அடுத்த தெருவில்தான் நர்சிங் ஹோம் இருக்கிறது என்றாலும், வீட்டு ஆம்பிளை இல்லாத நேரத்தில் வலி எடுத்துவிட்டால் அத்தம்மா மட்டும் தனியாக என்ன செய்வார்!

எடுத்தவைகளை மீண்டும் மேஜையிலேயே வைத்தான்.

'எப்போது வேண்டுமானாலும் பிரசவம் ஆகிவிடும்' என்றால், இன்றேவா? நாளையா?

மறுபடி குழந்தை நினைப்பு எழ, தன் குழந்தையைச் சுமக்கும் சிரமத்தை ஏற்றிருக்கிற வசந்தாவிடம் திடீரென்று பரிவு உண்டாயிற்று.

வெட்டியாய் உட்கார்ந்திருக்கிற என்னையே அம்மாவின் காரக்குழம்பு சபலம் ஒரு நிமிஷம் ஆட்டி வைத்து விட்டது என்றால், என் பிள்ளையைச்சுமந்து கொண்டு 'வாயும் வயிறுமாய்' இருப்பவளை மட்டும் சும்மா இரு என்றால் எப்படி?

இத்தனை நேரம் அலைக்கழித்துக் கொண்டிருந்த நினைப்புகளை ஒதுக்கிவிட்டு, லேசான குற்றஉணர்வோடும்,

பரிவோடும் ''வசு...'' என்று கூப்பிட்டுக்கொண்டே சமையலறை அருகே போனபோது, அங்கேயிருந்து எழுந்த எந்த அசைவ மணமும் மாதவனை அதிகமாக துன்புறுத்த வில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

# 16

குழந்தையை மார்போடு அணைத்து, இடது கையால் முட்டுக் கொடுத்து, வலக்கையால் புடவையை இழுத்து விட்டுக் கொண்டாள் வசந்தா.

முட்டி மோதிக்கொண்டு குழந்தை பால் குடிக்க, மெல்ல அதன் கை, கால்களைத் தடவிக்கொடுத்தாள்.

மிருதுவாக, பட்டுத்துணியின் வழுவழுப்போடு வெளிர் சிவப்பாக இருந்தது குழந்தை.

'பொறக்கறப்ப சிவப்பா இருக்கற குழந்தை, பெரிசானதும் கறுத்திடுமாம்... வெள்ளையாவோ, ரோஜாவோ இருந்தாதான் நிஜமாவே சிவப்பா வளருமாம்... ஏதோ புஸ்தகத்துல படிச்சேன் வசு...' என்று மாதவன் சொன்னது நினைவுக்கு வந்தது.

கூடவே, யாரோ பாங்கில் சொன்னார்கள் என்று யானை விலை கொடுத்து, நாலு சிட்டிகை அளவு குங்குமப்பூ கொண்ட பாட்டிலை வாங்கி வந்து, ''தெனைக்கும் பால்ல கலந்து குடிச்சா, கொழந்தை ரோஜாப்பூ நிறத்துல பொறக்குமாம், வசு... செஞ்சுதான் பாப்பமே'' என்று கூறியதோடு நிற்காமல், ராத்திரி ஒரு நாளைப்போலத் தவறாமல் 'குங்குமப்பூ பால் குடிச்சியா?' என்று



கேட்டதையும் நினைத்துப் பார்த்தபோது அந்த கரிசனமும், அன்பும் ஒருவிதப் பெருமிதம் கலந்த புன்னகையை உதட்டில் தவழச் செய்தது...

குனிந்து குழந்தையை ஒரு தாய் உன்னித்துப் பார்த்தாள்.

எப்படி இருந்தாலும் 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்கிற பழமொழியை நிஜமாக்குவதாய் இவர்களுக்கு உசத்தியாய்தான் இருக்கப் போகிறது.

பால் சுரக்கும் வேகத்திலேயே நெஞ்சுக்குள் தாய்ப் பாசமும் பொங்கிட வாஞ்சையுடன் பிள்ளையை உயர்த்தி பிஞ்சுப் பாதங்களில் மென்மையாய் முத்தமிட்டாள்.

இது சிவப்பாகுமா, கறுப்பாகுமா என்று கணிக்க முடியவில்லை.

ஆண்குழந்தை ரொம்ப சிவப்பாக இருக்க வேண்டிய தில்லை. ஆண், மாநிறமாக இருந்தால்தான், அந்த ஆண்மையின் கம்பீரம் பளீரென்று வெளிப்படுகிறது, மாது மாதிரி...

''என்ன வசு, குழந்தையைப் பாத்து நீயே சிரிச்சுக்கறே? அதுக்குள்ளே அது ஜோக்கடிக்க ஆரம்பிச்சிடுச்சா என்ன?''

வசந்தா புன்னகை மாறாமல் நிமிர்ந்தாள்.

''இல்லே மாது, இப்பத ளுமாம்' குழந்தைய நல்லா பாக்கறேன்... ரெண்டு நாளா அத்தம்மா கூடவே இருந்தாங்களா, கொஞ்சம் அழுத்தமா பாத்தாக்கூட 'கண்ணு பட்டுடும்'னிட்டு வாங்கி தொட்டில்ல விட்டுடுவாங்க... இப்பக்கூட என்னமோ மனசாகாமத்தான் வீட்டுக்குப் போயிருக்காங்க...''

மாதவன் அவள் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்தான்.

"அவங்க பேசாம இன்னிக்கும் இங்கேயே இருந்திருக்கலாம். நா போய் சாப்பாடு எடுத்திட்டு வந்திருப்பேன் இல்லே..."

"உங்களுக்கு என்ன பாது சமைக்கத் தெரியும்? ஏதோ, பக்கத்துப் போர்ஷன்காரங்க ரெண்டு நாளும் பத்தியமா சாப்பாடு செய்து கொடுத்துக்கொண்டு சமாளிச்சிட்டோம்... பிள்ளை பிறந்து மூணு நாளாவுது. இன்னையிலிருந்து கருவாட்டுக் குழம்பு கொடுக்கறது வழக்கமாம்; அப்பத்தான் பால் நல்லா சுரக்கும்னிட்டு அத்தம்மாவே சமைக்கப் போயிருக்காங்க... அத விடுங்க... டாக்டரப் பாத்தீங்களா? என்ன சொன்னாங்க?"

"ம், பாத்தேன்... 'சுகப்பிரசவம்தானே, அஞ்சாம் நாள் தாராளமா டிஸ்சார்ஜ் பண்ணி வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடலாம்'னு சொன்னாங்க... நாளைக்கே பணத்தைக் கட்டி பில் செட்டில் பண்ணிட்டம்னா, மறுநாளு காலையிலே டாக்ஸி வெச்சி வீட்டுக்குப் போயிடலாம்..."

பேசிக்கொண்டே போனவன், சாப்பாட்டுக் கூடை[illegible]ன் பரிமளம் வருவதைப் பார்த்து சடக்கென்று எழுந்[illegible] தள்ளியிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

காரியரையும், ஃப்ளாஸ்கையும் மேஜை மேல் வைத்த பரிமளம், கூடையிலிருந்து இன்லாண்ட் கடிதம் ஒன்றை எடுத்து மாதவனிடம் நீட்டினார்.

"காலைல முத தபால்ல வந்துச்சு... நீங்க இங்கிருந்து நேரா ஆபீஸ் போயிடுவீங்களேனுதான் இங்கேயே கொணாந்திட்டேன்..."



கடிதம் காஞ்சிபுரத்திலிருந்து வந்திருந்தது.

"அட, அப்பாகிட்டயிருந்து! குழந்தை பிறந்திருக்கறதக் குறிப்பிட்டு நாம குடுத்த தந்தி கிடைச்சு, உடனே மறுதபால்ல லெட்டர் எழுதியிருக்காங்க போல!" என்று ஆரம்பித்தவனின் மகிழ்ச்சி, கடிதத்தைப் படித்து முடித்தபோது இன்னும் கூடியிருந்தது.

"பாத்தியா வசு, நா சொன்னேனில்லே! உடனே பேரனைப் பாக்கணும்னு ரொம்ப சந்தோஷத்தோட எழுதியிருக்காங்க!"

அவன் சந்தோஷம் தன்னையும் தொத்திக்கொண்ட மாதிரி வசந்தா கண்ணகல சிரித்து, "பின்னே? அருமை பெருமையா பொறந்திருக்கற பேரன் இல்லியா. வராம? எப்ப வராங்களாம்? அத எழுதியிருக்காங்களா?" என, மாதவன் உதட்டைப் பிதுக்கினான்.

"இல்ல... ஊர்ல திருவிழா நடக்குதாம்... அப்பா முன்னால நின்னு நடத்தி வைக்க பொறுப்பு எடுத்துகிட்டு இருக்கறதால, ஊரவிட்டு நகர முடியாதபடி வேலை நிறைய இருக்குதாம். அதான், 'நா வராட்டி என்ன, நீ ஒரு நடை வந்து அம்மாவ அழைச்சிட்டுப் போயேன், நா அடுத்[illegible] வாரம் தொட்டிலுக்கு வந்துக்கறேன்'னு எழு[illegible]ரு... அம்மாவுக்குப் பேரனப் பாத்தே ஆகணுமாம்!" பெருமையோடு அவன் பேசியதைக் காதில் வாங்காமல் வசந்தா அத்தையை எதிட்டு விழித்தாள். அரை நிமிஷ மௌனத்துக்குப் பின் தயக்கமாய், "நீங்க போகப் போறீங்களா?" என்றாள்.

"பின்னே? அதுவும், அம்மா இவ்வளவு ஆசையா பாக்கணும்னு சொல்றப்ப, போகாம இருக்க முடியுமா? நாளை

மத்தா நாளு டிஸ்சார்ஜ் பண்ணி உன்னையும் குழந்தையும் வீட்டுல கொண்டு சேத்திட்டேன்னா, அப்புறம் போய் அம்மாவக் கூட்டிக்கிட்டு வந்திடலாம்... என்னசரிதானே?''

மாதவன் பரவசத்தோடு அந்தக் கடிதத்தை பார்த்துக் கொண்டிருக்க, வசந்தா ஏதோ சொல்ல நினைத்தது போல வாயைத் திறந்துவிட்டு, அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு கொஞ்ச நேரம் சும்மா இருந்தாள். மறுபடியும் அவள் பேசியபோது குரல் மென்ள வெளியானது.

''மாது...''

''என்ன?''

''உங்கம்மா இப்ப இங்க வந்துதான் ஆகணுமா?''

என்ன கேள்வி இது என்கிற தினுசில் மாதவன் ஆச்சர்யமாய் பார்க்க, வசந்தா அவசரமாய்த் தொடர்ந்தாள்.

''இல்லே... வந்து... ரெண்டு மாசம் பொறுத்து இட்டாங்கன்னா, நாமளே குழந்தையத் தூக்கிட்டுப்போய் காட்டிட்டு வரலாமேனுதான் கேக்கறேன்!''

மாதவன் அதிர்ந்து போனது வெளிப்படையாய்த் தெரிந்தது.

''எ... என்னது! ரெண்டு மாசம் பொறுத்து நாம போய் வரலாமா? ஏன்? இப்ப வந்தா என்ன?''

''எதுக்காக இப்ப பதறீங்க... கொஞ்சம் நிதானமா நா சொல்றதுதான் கேளுங்களேன்... நாம இருக்கற வீடு ரொம்பச் சின்னது மாது... பெட்ரூம்ல குழந்தையோட நா இருந்திட்டா, அத்தம்மாதான் எனக்கு உதவியா பெட்ரூமுக்கும் சமையலறைக்குமா போயிட்டு வந்திட்டு இருப்பாங்க... உங்கம்மா வந்தாங்கன்னா எங்க தங்க வெக்கிறதுனுதான் யோசனையா இருக்கு... உடம்புக்கு முடியாதவங்க... இப்பதான் கெடந்து பொழச்சிருக்காங்க; அவங்க ஆசைப்படறாங்கன்றதுக்காக நாம கொடுக்க வேண்டிய மரியாதையக் கொடுக்காட்டி எப்படி...''



அவள் முடிப்பதற்குள் பரிமளம் குறுக்கிட்டு, ''அது மட்டுமில்லே... பழக்க வழக்கம்னு ஒண்ணு...'' என்று முனக, மாது கோபமாகப் பேசினான்.

''பழக்க வழக்கமெல்லாம்தான் நமக்கு ஒண்ணும் கெடையாதுனு தெரியுமில்லே! அப்படி சாஸ்திர சம்பிரதாயம் பார்க்கிறதானா, மருமகளையும் பேரனையும் நல்ல நாளு பார்த்து சம்பந்திங்க கொண்டு விட்ட பிறகில்ல எங்கம்மா பார்க்கணும்! இப்ப எந்த மரியாதையும் எதிர்பார்க்காம, தானே வர்றதாத்தானே சொல்றாங்க?''

''அதுக்கில்ல மாது...''

''ப்ச்... சும்மா பேசிக்கிட்டே போகாத வசு... என்னதான் இப்ப சொன்ற, எங்கம்மாவக் கூட்டிக்கிட்டு வர நா போக வேணாம்னா?''

''ஐயோ சாமி, என்ன சொல்லிட்டம்னு இப்படி மூக்கு மேல கோபம் வர பேசறீங்க... வசதியானவங்கள, நல்லபடியா கவனிக்கணுமேன்ற ஆர்வத்துல பேசறதப் புரிஞ்சிக்காம...''

பேசியது போதும் என்கிற மாதிரி மாதவன் பதில் கூறாது எழுந்து நின்றான்.

கோப, தாப, மனஸ்தாபங்களை மறந்துவிட்டு அம்மா தானாக வருகிறேன் என்னும்போது, மனம் நிறைந்த சந்தோஷத்தோடு வரவேற்காமல், மனைவியும் அத்தையும் முட்டுக்கட்டை போடுகிற மாதிரி தோன்ற, ஜன்னலருகில்

சென்று 'க்கீச்... க்கீச்' என்று வாலைத்தூக்கியபடி தோட்டத்தில் விளையாடும் அணில்களை வெறித்தான்.

வீடு சின்னதாக இருக்கலாம், வசதி இல்லாமல் போகலாம்...

ஆனாலும்?

அம்மா வீட்டுக்காக வருகிறாளா, அல்லது மனுஷாளுக்காக வருகிறாளா?

இதை வசுவால்தான் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், வயசில் பெரியவரான அத்தையாலும் கூடவா?

இரண்டு நிமிஷம் போல யோசனையுடன் நின்றவன் திரும்பி, அவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கியபோது, கோபம் குறையாமலேயே இருந்தது.

"நீ நல்லதுக்கே சொன்னாலும், அது நியாயமா எனக்குப் படல... வரேன்னு ஆசைப்படறவங்களை, அதை இதச் சொல்லித்தடுக்கறது வேண்டாத சாக்கு சொல்ற மாதிரி படும்... வேணாம், நா உன்னை வீட்டுல விட்டப்புறம் புறப்பட்டுப் போய் அவங்களக் கூட்டிக்கிட்டுதான் வரப் போறேன். அரை நாளோ ஒரு நாளோ தங்கிட்டுப் போகட்டும்... அப்புறம் வேணா, இன்னும் வசதியான வீடா பாத்து மாத்திக்கிட்டுப் போனப்பறம் நான் கணக்குல வந்து தங்கச் சொல்லலாம்..."

பேசியவன், இதுதான் என் முடிவு, இதை மாற்றப் போவதில்லை என்பதுபோல "அப்ப நா வரேன், நாழியாச்சு..." என்று முணுமுணுத்தவாறு வெளியேறினான்.

திட்டமிட்டபடி ஆஸ்பத்திரியிலிருந்து வசந்தாவையும் குழந்தையையும் வீட்டில் கொண்டுவிட்ட அதே தினமே காஞ்சிபுரம் புறப்பட்டுப்போன மாதவன், மறுநாள் காலை திரும்பி வரும்போது தனியாகவே வந்தான்.



ஆஸ்பத்திரியில் அத்தனை தீர்மானமாகப் பேசிய பிறகு இரண்டு நாளும் அதிகம் பேசாமல் இருந்தவன், தொடர்ந்து இப்போதும் மௌன சாமியாராக நிற்க, ரோஷத்தை விட்டுவிட்டு "என்ன மாது, அம்மா வாலியா?" என்றாள் வசந்தா.

மாதவன் சள்ளென்று விழுந்தான்.

"அதான் அன்னிக்கே எதுக்கு வரணும்னு வெடுக்குனு பேசிட்டியே... அப்பறம் இது என்ன கேள்வி?"

"......"

மாதவன் நிலைப்படிக்கருகிலேயே நின்று பேசினான்.

"ரெண்டு நாளா அம்மாக்குக் காய்ச்சலா இருக்காம்... முக்கி முனகிக்கிட்டு படுத்திருக்காங்க... 'பேரான்டியப் பாக்கணும்ன்ற ஆசை கூட நடக்க மாட்டேங்குதே தம்பி'னு அழுதாங்க... இப்பப் பாக்காட்டி என்னம்மா? பத்து நாள் கழிச்சு பாத்துக்கலாம்னு சமாதானம் சொல்லிட்டு வந்தேன். அம்மா வாமுடியாமப் படுத்திட்டதுல உனக்குத் திருப்திதானே?"

காட்டமாக அவன் பேசுவது தளுக்கென்று கண்களில் நீர் முத்துக்களை உற்பத்தி பண்ண, "நா ஏன் சொன்னேன், எதுக்காக சொன்னேன்றதப் புரிஞ்சிக்காம மேலமேல பேசுவேன்னு அடமா இருந்தீங்கன்னா, நா இனிமே வாயே திறக்கலை மாது..." என்றாள் வசந்தா.

அவள் நிஜமான வருத்தத்துடன் பேச, பச்சை உடம்புக்காரியை அழப் பண்ணி விட்டோமே என்கிற குற்ற உணர்வில் மாதவன் குழைந்தான்.

"சட்... இப்ப நா என்ன சொல்லிட்டேன்னு நீ கண் கலங்குறே? ஸாரி... உன்னைப் புண்படுத்தணும்னு நா

பேசல... என் மொத்தம் எனக்கு... தட்ன்ஆல்... சரி, விடு... கண்ணைத் தொடைச்சிக்க ப்ளீஸ்..."

கட்டத்தில் வந்து அமர்ந்து அவள் தோளைத் தட்டிக் கொடுத்தவன், கொஞ்ச நேரம் அப்படியே அமர்ந்து, குழந்தையின் தலை, கை, கால், விரல் என்று ஒவ்வொன்றாகத் தடவிக்கொடுத்தான். பிறகு மெள்ள வசந்தாவிடம், "இவன் உன்னை மாதிரிதான் இருக்கான், இல்லே வசு?" என்றான்.

வசந்தா கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து புன்னகைத்தாள்.

"முளைச்சு மூணு இலை விடலைனு பழமொழி சொல்வாங்க தெரியுமா? அந்த மாதிரி, இவன் பிறந்து இன்னும் ஆறு நாள் கூட முழுசா முடியலை, அதுக்குள்ள யார் மாதிரி இருக்கான்னு உங்களுக்குத் தெரிஞ்சு போச்சா?"

"தெரியாம! உன் மூக்குதான் இப்படியே அச்சுமாதிரி காட்டிக் குடுக்குதே! பிடிக்கத் திருக வாட்டமா...! அம்மாகூட சொன்னாங்க, ஆம்புள்ளப்புள்ள அம்மாவைக் கொண்டு பொறந்தா அதிர்ஷ்டம்னிட்டு! ஹூம்... அவங்களால உடனே வர முடியலை!"

அம்மா நினைத்த நிமிஷத்தில் தன் பிள்ளையைப் பார்க்க வரமுடியாது போன வருத்தத்தைப் புரிந்துகொள்ள முடிய, வசந்தா பரிவோடு அவன் கையை எட்டிப்பிடித்துக் கொண்டாள்.

"கொஞ்ச நாள்தானே மாது... அப்புறம், அவங்களுக்கு எப்பப் பேரனைப் பார்க்கணுமோ அப்பல்லாம் நாமளே காஞ்சிபுரம் போய்ட்டா போவுது!"

மாதவன் குழப்பத்தோடு கண்களை இடுக்கிக் கொண்டான்.



"நாமளே போறதா? அப்பமன்னா, அது வரைக்கும் குழந்தைய எங்கம்மா பார்க்கவே வேணாமா? இல்லே, பார்க்காமதான் இருக்க முடியுமா? எப்படியும் தொட்டில் போடறப்ப அவங்க வந்துதானே ஆகணும்!"

இப்போதைக்குப் பேசவேண்டாம் என்று இரண்டு நாட்கள் முன்பு செய்துகொண்ட வைராக்கியம் காற்றில் பறக்க, வசந்தா "தொட்டிலா?" என்றாள் அழுத்தமாய்.

"ம். பேரனைத் தொட்டில்ல போடறப்போ பாட்டி இல்லாட்டி எப்படி?"

"இப்ப யாரு தொட்டில் போடப் போறாங்க மாது? அன்னிக்கே ஒருதரம் சொன்னீங்க... சரி... இப்ப கேக்க வேணாம்னு இருந்திட்டேன். என்ன பேசறீங்க, எனக்குப் புரியலையே!"

மாதவன் எரிச்சலாய் சூள் கொட்டினான்.

"என்ன வசு, எதைப்பத்திப் பேசினாலும் புரியாத மாதிரி புதுசா கேக்கறே! 'பரம்பரை வளர முதல் வாரிசு வந்திருக்கு. அழகா தொட்டில்ல போட்டு பேர் வெக்கணும்டா'னு அம்மா சொன்னதையும், நானும் சரினு சொல்லிட்டதையும் வார்த்தை வார்த்தையா வெளக்கணுமா?"

"தொட்டில் போடாம பேர் வெக்க முடியாதா?" என்று கேட்டவளை மாதவன் விழித்துப் பார்த்தான்.

"குதர்க்கமா பேசாத வசு! குழந்தையத் தொட்டில்ல விட்டு, அதுக்குக்கீழ நெல்லு பரப்பி, அதுல பேர் எழுதறதுதான் சம்பிரதாயம். அன்னைக்குத்தான் ஊர் முழுக்க அழைச்சு குழந்தையக் காட்டுவாங்க... தெரியும்தானே! என்னமோ சந்திர மண்டலத்துல வசிக்கிறவங்க செய்யற ஒரு காரியத்தைப் பத்தி பேசற மாதிரி நூறு கேள்வி கேக்கறியே!"

"......"

மாதவன் சற்றே குரலைத் தழைத்துக்கொண்டான்.

"பெரியவங்க சொன்ன எதையுமே கேட்டுக்காம இது வரைக்கும் இருந்திட்டோம் வசு... ஏதோ, பேரன் பிறந்ததுலயாவது அவங்க மனசு சந்தோஷப்படட்டுமே! எவ்வளவு ஆசை ஆசையா குழந்தைக்குச் சின்னச் சின்னதா வளையல், செயின் எல்லாம் வாங்கி வெச்சிருக்காங்க தெரியுமா! ஒவ்வொருத்தங்க வீட்டுல, மருமக என்னென்ன சீர் கொண்டு வரணும்னிட்டு லிஸ்டு போடுவாங்க. இங்க இவங்களே எல்லாம் செஞ்சு வெக்கிருக்காங்க! அவங்க ஆசையக் கெடுக்கலாமா வசு?"

வசந்தா நீளமாய்ப் பெருமூச்சை வெளியிட்டாள்.

"ஆசைப்பட்ட நகைங்கள எப்ப வேணுன்னாலும் பேரனுக்குக் கொண்டு போட்டுக்கட்டுமே மாது... அதுக்காகத் தொட்டில், அது இதுனு சொன்னா? அவங்களுக்குத்தான் உடம்பு சரியில்லே, அலைய வேணாம்னு சொன்னீங்க இல்லே! பின்னே, தொட்டிலுக்கு மட்டும் எப்பிடி வருவாங்க?"

"அ? அதெல்லாம் அவங்க ஏற்கனவே ப்ளான் பண்ணிட்டாங்க... பஸ்ஸு, ரெயில்ல அலையாம, தனி கார் வெச்சிட்டு வரப் போறாங்களாம். அதே கார்ல ராத்திரியே திரும்பிடுவாங்க... இங்க தங்கிட மாட்டாங்க. 'குடும்பத்துப் பேரக் குழந்தை காதுல சொல்லிட்டுதான் வருவேன், என்னத் தடுக்காதே'ன்னு சொல்லிட்டாங்க, தெரியுமா?"

வசந்தா பரபரப்பாகக் கேட்டாள்.

"எப்ப வரப் போறாங்க?"



"குழந்தை பிறந்து பதினாறாவது நாள்தான் தொட்டில் போடுவாங்க. அன்னிக்குத்தான் வருவாங்க..."

"பதினாறாவது நாளா? அத்தம்மா நேத்துதான் சொல்லிகிட்டிருந்தாங்க, 'பதினாறாவது நாள் சர்ச்சுக்கு எடுத்திட்டுப் போய் ஞானஸ்நானம் செய்யணும்'னிட்டு!"

இந்த முறை மாதவன் உடல் குலுங்க அதிர்ந்தான்.

"ஞானஸ்நானமா? சர்ச்சிலேயா?"

வசந்தா இறுக்கமாக முகத்தை வைத்துக்கொண்டாள்.

"அதெல்லாம் வேணாம்னுதான் நா அத்தம்மாகிட்ட சொன்னேன். ஆனா, இப்ப நீங்க தொட்டில், கிட்டில்னு சொல்றப்போ, இத மட்டும் விடுவானேன்னு தோணுது!"

"ப்ச்... உளறாதே வசு... ஒரே நாள்ல தொட்டிலும் போட்டு, ஞானஸ்நானமும் செய்யறதா? என்ன பேத்தல் இது!"

"சரி, சர்ச்சுக்குப் போறத வேணா ரெண்டு நாள் தள்ளிப் போடுவோம்..."

"தள்ளிப் போட்டாவது அத செஞ்சுதான் ஆகணுமா? உனக்குத் தயக்கமா இருந்திச்சுன்னா அத்தம்மாகிட்ட நா சொல்லிடறேன், இந்தக் கூத்தெல்லாம் வேணாம்னு..."

"எது கூத்து? ஞானஸ்நானம் செய்யறதா? அப்ப, தொட்டில்ல போடறது மட்டும் கூத்தில்லையா? அத்தம்மா ஒத்துக்கிட்டாலும் நா ஒத்துக்கறதா இல்லே... நீங்க வேணா உங்கம்மாகிட்ட சொல்லி உங்க சம்பிரதாயத்த ஒதுக்கிடுங்க! செய்தா ரெண்டும் செய்யணும், இல்லாட்டி எதுவுமே வேணாம்..."

'பெரியவங்க...'' என்று ஏதோ ஆரம்பித்த மாதவனைப் பேச விடாமல், ''எல்லாரும் பெரியவங்கதான்! எந்த முடிவு சொன்னாலும் ரெண்டு பேருக்கும் பொதுவா இருக்கிற மாதிரி சொல்லுங்க...'' என்று அதட்டலாய்க் கூறியவள், பிள்ளையை அழ அழ படுக்கையில் கிடத்திவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொள்ள, மாதவன் கோபமாக எழுந்து கதவை உதைத்துக் கொண்டு வாசலுக்குப் போக, அதுவும் இதுவுமாய் ஆயிரம் பேசி ஜோடித்து, எவரும் எதற்கும் ஒப்புக்கொள்ளாமல் போனதில், எந்தக் கோவிலுக்கும் போகாமல் எந்த சர்ச்சுக்கும் போகாமல் குழந்தைக்கு எந்தப் பெயருமே கூட இடப்படாமல் போனதுதான் கடைசியில் நடந்தது.

## 17

நினைக்கவில்லை.

சத்தியமாய் நினைக்கவேயில்லை.

இப்படி பொசுக்கென்று அம்மா போய்விடுவார் என்று சற்றும் எதிர்பார்க்கவேயில்லை.

சாவு எல்லோருக்குமே சர்வநிச்சயமான ஒன்றுதான் - தெரியும் - நன்றாகத் தெரியும்.

ஆனாலும் எப்போது, எங்கே, எவ்வாறு என்பதெல்லாம் யாராலும் ஊகிக்க முடிவதில்லை என்பது நிஜம்தானே?

இப்போதோ, அப்போதோ என்று பயந்துபயந்து இருந்தபோது, 'போ - எனக்கு நீ வேண்டாம்' என்று ஒதுங்கி வேடிக்கை காட்டிவிட்டு, கொஞ்சம்கூட எதிர்பாராது விஸ்ராந்தியாய் உட்கார்ந்திருக்கையில் தடக்கென்று வாரிக்



கொண்டு போய்விடும்போது நடப்பதை லவலேசம்கூட நம்ப முடியாமல்தான் போகிறது.

சும்மா சொல்லக்கூடாது - நினைவு தெரிந்த நாளிலிருந்து அம்மாவுக்குக் கெட்டி உடம்புதான்.

சாதாரணமாய் ஆடிக்கொருதரம், அம்மாவாசைக்கொருதரம் என்று தலைவலி, ஜலதோஷம் என்று எல்லோரையும் படுத்துவதுகூட அம்மாவுக்கு வந்ததில்லையாதலால், போன ஐந்தாம் மாசம் 'ஹார்ட் அட்டாக்' வந்து ஆஸ்பத்திரியில் படுத்திருந்தபோதுகூட, எசகுபிசகாய் ஏதாவது ஆகிவிடுமோ என்று தோன்றவேயில்லை.

எவ்வளவோ சொல்லத் தெரியாமல் பயமாக இருந்ததே தவிர, இந்த இறப்பு பயம் நிழலாகக்கூட மனதில் பதியவில்லையே!

கிட்டத்தட்ட மூன்று வாரங்கள்போல ஆஸ்பத்திரியில் தங்கவேண்டி வந்தாலும் வீடு திரும்பிய பிறகு நல்ல தேக ஆரோக்கியத்தின் காரணமாய் உடம்பு சடசடவென்று தேறிவிட்டதில், இருதயத்தைப் பற்றிய பிரக்ஞையேகூட அற்றுப்போய்விட்டதில், உறக்கத்திலேயே அம்மா போய் விட்டார் என்கிற செய்தி தலையில் இடியாக வந்திறங்கினதில் அதிசயம் என்ன? இப்படி நடக்கப் போகிறது என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லைதான்!

எதிர்பார்த்திருந்தால், 'என் பேரன எப்படா கண்ணுல காட்டப்போறே தம்பி...?' என்று அம்மா புலம்பின புலம்பலுக்கெல்லாம் மதிப்புக் கொடுத்து, எப்பாடுபட்டாவது குழந்தையை அம்மாவின் கையில் தவழவிட்டு, 'ஆசைதீரக் கொஞ்சம்மா!' என்று சொல்லியிருக்கலாமே!

குழந்தையைத் தொட்டிலில் இட்டு, ஊர் முழுவதும் அழைத்து அமர்க்களப்படுத்த வேண்டும் என்று அம்மா ஆசைப்பட்டதைத் தடபுடலாய் நிறைவேற்றியிருக்கலாமே!

அம்மாதான் என்னென்ன ஆசைப்பட்டாள்!

மருமகளுக்கு வளை அடுக்கவேண்டும்; பேரனுக்குக் குலதெய்வத்தின் பேர் வைக்கவேண்டும்; ஊர், மூக்கில் விரலை வைக்கிற தினுசில் தொட்டில் போடவேண்டும்; பதினோராம் மாசம் ஸ்வாமிமலைக்கு அழைத்துப்போய் குழந்தைக்கு மொட்டை போடவேண்டும்.

அப்புறம், அப்புறம்...

கடைசியில் ஒன்றுகூட நடக்காமல்...

ஹூம்...

தொட்டில் போட்டால், ஞானஸ்னானமும் செய்ய வேண்டும் என்ற பேரத்தில், ஒன்றையுமே செய்யாமல் விட்டாயிற்று.

'குழந்தைக்கு ஒரே காய்ச்சலா இருக்கும்மா, இப்ப தலைக்குத் தண்ணி ஊத்தி தொட்டில் கிட்டில்னு போட வேணாம். 'உடம்பு நல்லா தேர்ற வரைக்கும் குழந்தையக் கசக்காம ஜாக்கிரதையா கவனிக்கணுங்க'னு டாக்டர் அடிச்சு சொல்லி இருக்காரு...' என்று சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நீளமாய்ப் பொய் சொல்லி சமாளித்தபோதுகூட,

'அதனால என்ன தம்பி! இப்ப இல்லாட்டி, மூணாம் மாசம் தொட்டில் போட்டுக்கிட்டா போச்சு! குழந்தை நல்லா தெம்பா இருக்கறதுல்ல முக்கியம்!' என்றல்லவா பெருந்தன்மையோடு சொன்னார்!



மூன்றாம் மாசம் வருகிறதே, அடுத்ததாக என்ன சாக்குப்போக்கு சொல்லலாம் என்று இன்னும் யோசித்துக் கூட முடியவில்லை. அதற்குள், 'எனக்காக நீ மேலே மேலே பொய் சொல்லி அவஸ்தைப்படாதே' என்கிற மாதிரி போய்ச் சேர்ந்துவிட்டாள்!

உயிரோடு இருந்தபோது, 'காட்டு— காட்டு' என்று சொன்ன பேரனை, அம்மா இறந்தபோது அல்லவா தூக்கிக் கொண்டு ஓடும்படி ஆயிற்று!

அந்த புதன்கிழமை காலை பாங்கினுள் நுழைந்ததும் நுழையாததுமாய், காஞ்சிபுரத்திலிருந்து வந்த போன், 'தூக்கத்திலேயே இரண்டாவது ஹார்ட் அட்டாக் வந்து அம்மா போய்விட்டார்' என்ற செய்தியைத் தெரிவித்ததும் அலறி அடித்துக்கொண்டு ஓடியபோது வசந்தாவும் குழந்தையுடன் உடன்வந்தாள்.

கைக்குழந்தையையும் தூக்கிக்கொண்டு அவள் வரத்தான் வேண்டுமா என்று ஒரு விநாடி யோசித்தபோது, சற்றும் தயங்காமல், 'இப்ப அதைப்பத்தியும் யோசிக்க வேணாம் மாது... நா அங்க வரத்தான் செய்வேன்' என்று பிடிவாதமாய்க் கிளம்பி வந்தாள்.

திருமணமானதிலிருந்து ஒரே ஒரு முறைதான் பார்த்திருக்கிறாள் என்றாலும், ஏதோ ரொம்பக் காலம் பழகியவள் போல துக்கம் தாளாமல் கண்கலங்கியபடி உறவினர் மத்தியில் கிராமத்தில் நின்றாள்.

பச்சை உடம்பு என்பதையும் பாராட்டாமல், பசி தூக்கத்தை மறந்து, காரியங்களை இழுத்துப்போட்டுக் கொண்டு செய்து, என் மாமியார் வீட்டுக் காரியங்களை நான் செய்கிறேன் என்று உரிமையோடு வளைய வந்தாள்.

ஆனால், ஊரும் உறவும்தான் அவனைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் நோகப் பண்ணிவிட்டது.

புத்திகெட்ட மனி...

யாரோ தோளில் தட்டுவதை உணர்ந்து மாதவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''என்ன மாதவன், ரொம்ப நேரமா இப்படியே உக்காந்திருக்கீங்க? சாப்பிட வரலை? லஞ்ச் டைம் துவங்கி பத்து நிமிஷத்துக்கு மேலாவுது...''

உடன் வேலை பார்க்கும் மோகனின் கேள்விக்கு பதில் சொல்லாமல் தலை குனிந்தவன், சில கணங்களுக்குப் பின் மெதுவாக நிமிர்ந்தான்.

''எனக்குப் பசிக்கல மோகன்... நீங்க போய் சாப்பிடுங்க...''

மோகன் மெதுவாய்த் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

''மனசு சரியில்லியா மாதவன்? என்ன பண்றது... அம்மா போய் இன்னும் இருவது நாளுகூட ஆகலை இல்லே, அதான் நினைப்பு சுத்திச்சுத்தி வருது... தைரியமா இருங்க... ஹூம், போறவங்க போயிடறாங்க, இருக்கறவங்களுக்குத்தான வேதனை! என்ன செய்றது, மனசத் தேத்திக்கிட்டு சாப்பிட வாங்க!''

மேற்கொண்டு இரண்டு நிமிஷங்கள்போல் அங்கேயே நின்றவன், மாதவன் அசையாமலே இருப்பதைப் பார்த்து, ''சாப்பிடப் பிடிக்கலைன்னா வேணாம்... ஆனா பழசையே நினைச்சுக்கிட்டு இருக்காதீங்க... நா சாப்பிட்டு வர்றப்ப உங்களுக்குக் காபி வாங்கிட்டு வர்றேன்...'' என்று சொல்லி விட்டுப் போனான்.



போகிறவர்கள் போய்விடுகிறார்கள், இருப்பவர்களுக்குத்தான் வேதனை.. எத்தனை வாஸ்தவமான வார்த்தைகள்!

மனிதர்களின் மனதைக் காயப்படுத்துபவர்களுக்கு இதெல்லாம் புரிகிறதா என்ன!

புரிந்திருந்தால் வசந்தாவின் மனதை அப்படி நோகச் செய்திருப்பார்களா!

முதல் இரண்டு நாளுக்கு எந்த விஷயமுமே காதில் விழவோ, புத்திக்கு எட்டவோ இல்லைதான்...

அம்மாவுக்காக அழுது, பின், சுடுகாட்டில் கொண்டுபோய் அவளைத் தகனம் பண்ணிவிட்டு வந்து மறுபடி அழுது... மூளையில் துக்கம் மட்டுமே தங்கியிருக்க, வேறு எதுவுமே உறைக்காமல்தான் போனது.

அதனால்தான், முதலிரண்டு நாளும் கூடவே இருந்தவள், மூன்றாம் நாள் 'பால்' விடப் புறப்படும் வரை கண்ணிலேயே படாததோ, பிறகு சடங்கு முடிந்து திரும்பி வந்தும்கூடப் பார்க்க முடியாமல் போனதோ தவறாகவே தோன்றவில்லை.

நான்காம் நாள், துக்கத்தின் சாயல் சிறிது குறைந்து வீட்டுக்குள் நிதானமாய் நடந்தபோது, வசந்தா கொல்லைத் தாழ்வாரத்தில் அமர்ந்து குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

'என்ன வசு, இங்க உக்காந்திருக்கே?' என்று கேட்டதற்கு, ஏதோ சொல்லி மழுப்பினாள்.

அரை நிமிஷம் மௌனித்து, இப்படியும் அப்படியும் பார்த்து, அருகில் யாரும் இல்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக்

கொண்டவன், தழைந்த குரலில், தலையை நிமிர்த்தாமலேயே பேசினான்.

'நா மெட்ராஸ் போயிரட்டுமா? நீங்க தங்கி, காரியங்களை முடிச்சிட்டு வர்றீங்களா?' - கண்கள் நீரின் துளிர்ப்பில் பளபளக்கப் பேசியபோது, முதலில் புரியத்தான் இல்லை.

'குழந்தைய வெச்சுக்கிட்டு இங்க இருக்கற சிரமம்கூட பெரிசா தெரியல, ஆனா, கைபட்டா குத்தம், கால்பட்டா பாவம்னு சொல்றவங்க நடுவுல வேண்டாத விருந்தாளியா வளைய வர்றது துன்பமா இருக்கு... தயவு செஞ்சு என்னையும் என் புள்ளையையும் மெட்ராஸ்ல கொண்டு போய் விட்டுருங்க... ப்ளீஸ்' என்று மீண்டும் கொஞ்சம் உறுதியான த்வனியில் பேசிய பிறகே, 'ஓஹோ, என்னமோ விஷயம் நடந்திருக்கிறது! இவள் எதனாலோ மனம் நொந்திருக்கிறாள்' என்று சன்னமாய் உள்ளுக்குள் பின்னியது.

முரண்டிக்கொண்டு நிற்காமல், அவளையும் குழந்தையையும் சென்னையில் கொண்டு விட்டுவிட்டு, அன்று இரவே மறுபடி காஞ்சிபுரம் திரும்புவதற்குள் முழுவதுமாக விஷயம் புரிந்து போயிற்று...

அம்மாவின் இறப்பைக் காரணம் காட்டி வந்திருந்த பெரியம்மாவுக்கும் மற்ற உறவினர்களுக்கும், இந்த துக்க சந்தர்ப்பத்திலும்கூட வசந்தாவின் குலம் கோத்திரம்தான் நினைவுக்கு வந்திருக்கின்றன.

தகனத்துக்காக ஆண்கள் சுடுகாட்டுக்குக் கிளம்பிப் போனவுடனேயே, வீட்டுப் பெண்களின் பார்வை வசந்தாமீது விழுந்து விட்டிருக்கிறது...

'ஒரே புள்ளைனு அருமையா வளர்த்தா... அவனுக்கு இவ அருமை புரியலியே!' என்றார்களாம்.



'நம்ப சாதி சனத்துல பொண்ணா இல்லே? இப்பிடி வேத்து சாதில போய் பொண் கட்டிக்கிட்டு வந்திட்டானேன்னு அவளுக்கு ஒரே குறை.. அந்தக் குறைதான் அவளை சாகடிச்சிடுச்சு' என்றார்களாம்.

'கொள்ளி போட புள்ள வேணும்னு கடுமையான தவம் செய்தா... இருந்தவரைக்கும் அவளைத் துடிக்க வச்சிட்டு அப்பால கொள்ளி என்ன கொள்ளி! புள்ள என்ன பெரிய்ய புள்ள! இவன் கொள்ளி போட்டா அவ நெஞ்சு வேகுமா?' என்றார்களாம்.

'தீவிர சைவமா இருந்து, ஆசாரமா வாழ்ந்த குடும்பம்... இப்ப சமையக்கட்டுக்குள்ள எவ எவளோ நுழையறாளே - இது தெய்வத்துக்கு அடுக்குமா! பேசாம நாம வெளில போயிட வேண்டியதுதான்...' என்றார்களாம்.

இன்னும் என்னென்னவோ சொன்னார்கள் என்று தெரிந்தபோது கோபமும் ஆத்திரமும் குமுறிக்கொண்டு வெளிப்பட்டன.

'அவங்க என்ன இப்பிடிப் பேசறது? அது எங்க வீடு, நா எம்பொண்டாட்டியைக் கூட்டிக்கிட்டு வருவேன், போவேன்... இவங்களுக்கென்னா? நீ வா என் கூட, அவங்கள ஒரு கை பாக்கறேன்...' என்று ஒரு வேகத்தில் சொன்னபோது, வசந்தா தடுத்து விட்டாள்.

'வேணாம், விட்டுருங்க... இத்தன வருஷமா உங்கக் குடும்பத்தோட தொடர்பு வெச்சிக்கிட்டு, நல்ல உறவோட பழகிட்டு இருக்கறவங்க... இப்பக்கூட உங்கம்மா காரியங்கள அவங்கதான் சம்பிரதாயம் தவறாம கவனிக்கறாங்க... ஊர்ப் பெரியவங்களப் பகைச்சிக்கிட்டு உங்கம்மா காரியங்களத் தடுத்த பாவம் எனக்கு வேணாம்... விடுங்க, போறாத காலம்...

அனுபவிக்கிறோம். அனாவசியமா இப்ப அவங்ககிட்ட சண்டை போட்டுக்காதீங்க...'

அந்த சந்தர்ப்பத்தில், அம்மாவின் இழப்பு மட்டுமே பூதாகாரமாய் பாதித்த அந்த நேரத்தில், வேறு எதைப் பற்றியும் நினைக்கத் தோன்றவில்லைதான் - வேறு எதுவும் முக்கியமாய்ப் படவில்லைதான்.

அதனாலேயே, வசந்தாவின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாமல், அவளையும் குழந்தையையும் சென்னையில் விட்டுவிட்டு ஊருக்குப் போய் அம்மாவின் பதினாறாம் நாள் காரியங்களை கவனிப்பது சாத்தியமாயிற்று.

எல்லாம் முடிந்து, எண்ணெய் தேய்த்து ஒருவழியாய்த் தலை முழுகியாயிற்று.

சுமந்து, பெற்று, வளர்த்தவளுக்காக அழக்கூட இவ்வளவுதான் நேரம் என்கிற மாதிரி ஆபீஸ் லீவு கட்டுப்படுத்த, உடனடியாய் திரும்பி வந்து பழையபடி வேலைகளை ஆரம்பித்தாயிற்று.

இனி அம்மாவை நினைக்கக்கூட...

''மாதவன், இன்னுமா அப்பிடியே உக்காந்திருக்கீங்க? இந்தக் காபியக் குடிச்சிட்டுப்போய் முகத்தைக் கழுவிக்கிட்டு வாங்க... ஏற்கனவே மேனேஜர் ரெண்டு தரம் உங்களக் கவனிச்சுக்கிட்டே இந்த வழியா போனாரு... கமான், எழுந்திருங்க...''

மோகன் கொண்டு வந்த காபியை வேண்டா வெறுப்பாகக் குடிக்கையில், வெறும் கழுநீராகக் கசந்த அதன் சுவை முகத்தை மேலும் சுளிக்க வைத்தது.

ஒன்றிரண்டு வேளைகள்கூட இப்படி ஓட்டல் காபியைக் குடிக்க முடியாதபடி வீட்டுக் காபிக்காக நாக்கு ஏங்க



ஆரம்பித்து விட்டதே. அம்மா கையாலேயே சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பழக்கமான அப்பா இனிமேல் என்ன செய்யப் போகிறார்?

எங்கிருந்தோ, இழவுக்காக வந்திருக்கும் பெரியம்மாவும், அத்தையும், சித்தியும் இன்றோ நாளையோ கிளம்பி விடுவார்கள்.

தினம் ஒருவராய் வந்து துக்கம் விசாரிப்பவர்களின் வருகை நாளாவட்டத்தில் குறைந்துவிடும்.

அப்புறம்?

மனிதர்களின் பேச்சும், நடமாட்டமும் குறைந்த பின், அந்தப் பெரிய வீட்டில் தன்னந்தனியாக அப்பா எப்படி இருக்கப் போகிறார்?

எந்நேரமும் நாலு பேருக்காவது இலை போடப்பட்டு, சமையலும் சாப்பாடுமாய் பந்தி நடந்து, மாடும் கன்றும், தோட்டமும் துரவுமாய் சுபிட்சமாய் இருந்த வீடு -

இப்போது எப்படி இருக்கும்?

என்னமோ, அம்மாவின் கையில்தான் இத்தனைக்கும் காரணமான நூல்கள் கட்டப்பட்டு அவர் மட்டுமே இத்தனை பேரையும் இத்தனை விஷயங்களையும் பொம்மலாட்டமாய் ஆட்டி வைத்த மாதிரி - இப்போது நூல் மொத்தமும் அறுந்து திசைக்கொன்றாய் தொங்குகிற மாதிரி-

'ஹோ'வென்ற அந்த வீட்டில் அப்பா மட்டும் எப்படி இருக்கப்...

மதிய சாப்பாட்டுக்குப் பிறகு வேலைகள் தொடர்ந்து சுறுசுறுப்பாய் இயங்குவதில் எழுந்த டைப்ரைட்டர் சப்தம்

சிந்தனையைக் கலைக்க, வலுக்கட்டாயமாய்த் தன்னை உலுக்கிக்கொண்ட மாதவன் எழுந்து, முகம் கழுவிக்கொண்டு, மிகுந்த பிரயாசையுடன் மேஜையில் இருந்த பைல்களில் ஒன்றைக் கையில் பிரித்து வைத்துக்கொண்டான்.

# 18

பீரோவைத் திறந்து புடவையை வெளியே எடுத்துக்கொண்டிருந்த வசந்தா சரக்கென்று திரும்பினாள்.

கீழே உட்கார்ந்து, குழந்தை தன் பிஞ்சுக் கைகளால் அவள் கால் கட்டைவிரலைப் பிடித்து இழுத்துக்கொண்டிருக்க, அந்த மென்மையான விரல்களின் குறுகுறுப்பு தாங்காமல் காலை உதறிக்கொண்டவள், குனிந்து குழந்தையைத் தூக்கினாள்.

"அட, போக்கிரிக் கழுதை! அப்பாவைப் பாத்துக்கச் சொல்லிட்டு உன்னை ஹால்ல இல்லே விட்டுட்டு வந்தேன்! அம்மாவைத் தேடிக்கிட்டு அங்கிருந்து தவழ்ந்துகிட்டே வந்திட்டியா? என் ராஜா... என் தங்கம்..."

மூச்சு முட்ட முட்ட குழந்தையைக் கட்டிப் பிடித்து வரிசையாய் முத்தமிட்டாள். தன்னை தேடிக்கொண்டு குழந்தை வந்துவிட்ட பெருமையை கணவனோடு பகிர்ந்துகொள்ளும் உத்தேசத்தோடு 'மாது' என்று அழைத்தாள்.

அவனிடமிருந்து பதில் எதும் வராது போக, "என்ன பண்றீங்க, குழந்தையை கவனிக்காம, நா கூப்பிடறது காதுல விழாம?" என்று கேட்டவாறு பிள்ளையுடன் கூடத்துக்குப் போனாள்.



கூடை நாற்காலியில் மாதவன் பேப்பரும் கையுமாக அமர்ந்திருந்தான்.

பார்வை, விரித்திருந்த பேப்பரில் இல்லை.

ஜன்னலுக்கு வெளியே சாம்பல் பூத்துக்கொண்டிருந்த ஆகாயத்தில் படர்ந்திருந்தது.

"பேப்பர்ல அத்தனை ஸ்வாரஸ்யமா நியூஸ் போட்டிருக்கானா என்ன! புள்ளை தவழ்ந்துகிட்டே பெட்ரூமுக்குப் போறதக்கூட கவனிக்காம இருக்கற அளவுக்கு நல்ல வேளையா என்னைத் தேடிக்கிட்டு வந்தான்... வாசப்பக்கம் போயிருந்தான்னா படிக்கட்டுல எறங்கத் தெரியாம விழுந்து..."

இப்போதும் அவன் எதுவும் பேசாமல் வெறித்த பார்வை வெறித்தபடி இருக்க, குழந்தையை இடுப்பில் இடுக்கிக்கொண்டு வசந்தா குனிந்தாள்.

"என்ன மாது, நா பேசறது காதுல விழலியா?"

"ம்?"

"ப்ச்... குழந்தை தானா என்னைத் தேடிக்கிட்டு வந்திட்டான் மாது. பெட்ரூமுக்கு வர்றதுக்கு பதிலா வாசப் பக்கம் போயிருந்தான்னா என்ன ஆயிருக்கும்னு பதறிட்டு சொல்றேன், என்ன எதுவுகூடக் கேக்காம இருக்கீங்களே!"

"......"

"மாது..." என்று அவள் மறுபடி ஆரம்பிப்பதற்குள், "சரி... சரி... காதுல விழுந்திச்சு... ஒரே விஷயத்தத் திருப்பித் திருப்பி சொல்லாத..." என்ற மாதவன் பேப்பரை அலட்சியமாய்த் தரையில் எறிந்துவிட்டு எழுந்து நின்றான்.

அவன் குரலில் இருந்த அலுப்பைப் புரிந்துகொள்ள முடியாமல் போனதில், காரணமேயில்லாமல் எதற்காக இப்படி எரிந்து விழுகிறான் என்கிற குழப்பத்துடன் திரும்பிய வசந்தாவின் கண்களில் கணவனின் முழு உருவம் விழ, சிரித்தாள்.

''ஐயோ, என்னாச்சு உங்களுக்கு? ஷர்ட் பட்டனை யெல்லாம் ஏன் இப்படி மாத்தி மாத்திப் போட்டிருக்கீங்க?''

குனிந்து தன்னையே ஒருதரம் பார்த்துக்கொண்ட மாதவன், ஷர்ட் பட்டன்களை அவிழ்த்து சரியாகப் போடத் துவங்கினான்.

'பட்டனை சரியாப் போடலைன்னு மட்டும் சொன்னாப் பத்தாதா? பெரிசா சிரிப்பென்ன வேண்டிக்கிடக்கு?''

மொணமொணவென்ற குரலில் அவன் சொன்ன விதம் சிரிப்பை அதிகமாக்க, வசந்தா கிட்டத்தில் வந்தாள்.

''கோணாமாணான்னு டிரெஸ் பண்ணிக்கிட்டா, சிரிக்காம அழவா செய்வாங்க? இப்பவாவது நா மட்டும் சிரிச்சேன். இப்படியே தெருவுல இறங்கிப் போயிருந்தீங்கன்னா, பார்க்கறவங்க அத்தனை பேரும் இல்ல சிரிச்சிருப்பாங்க!''

சிரிப்பு மாறாமல் சொல்லிவிட்டு அவள் நகர, மாதவன் மறுபடி முணுமுணுத்தான்.

''ஆமா! எல்லாரும் உன்னை மாதிரி பைத்தியம் பாரு எடுத்ததுக்கெல்லாம் சிரிக்கிறதுக்கு!''

அந்த முணுமுணுப்பு காதில் விழுந்தும்கூட சிரிப்பை நிறுத்தாமல் குழந்தையைக் கொஞ்சிக்கொண்டே வசந்தா அறையைவிட்டு வெளியேறினாள்.



சமையலறைக்குள் நுழைந்து அலமாரியிலிருந்த டப்பா ஒன்றை எடுத்து, அதிலிருந்து நாலு ஸ்பூன் மாவை ஒரு கிண்ணத்தில் போட்டு, ஒரு ஸ்பூன் சர்க்கரையை அதன் மீது தூவினாள். பழுத்த வாழைப்பழம் ஒன்றையும், அரைக்கரண்டி பாலையும் விட்டு, ஒன்றாக மசித்தாள்.

கிண்ணத்துடன் கூடத்தில் வந்து நாற்காலியில் உட்கார்ந்து, குழந்தையை மடியில் இருத்திக்கொண்டு, கிண்ணத்தில் இருந்த கூழை ஒவ்வொரு ஸ்பூனாகக் குழந்தைக்கு ஊட்டத் துவங்கினாள்.

''ஆ...ஆ...அம்... எங்க வாயத்திற... என் ராஜா இல்ல... என் தங்கம் இல்ல... ஆ...ஆ...அம்...''

ஸ்பூனின் நுனியை உதடுகளின் இடையில் பொருத்தி, குழந்தையின் குருவி வாயைத் திறக்கச் செய்து, துளித்துளியாய் பழக்கலவையை ஊட்டிய நாழிகையில் படுக்கை அறையில் இருப்புக்கொள்ளாமல் அப்படியும் இப்படியுமாய் மாதவன் அல்லாடுவதைப் பார்க்க முடிந்தது.

என்ன ஆயிற்று?

ஆபீஸில் ஏதாவது பிரச்னையா?

இரண்டு நாட்கள் முன்பு காஞ்சிபுரம் போய்வந்த போது அங்கு ஏதாவது மனக்கஷ்டம் தரும் விதத்தில் நடந்ததா?

புருவங்கள் முடிச்சுப்போட அரை நிமிஷம் யோசித்தவள் அவனைக் கூப்பிட்டு என்னவென்று விசாரிக்கலாமா என்று எண்ணுவதற்குள் பிள்ளை தன் பிஞ்சுக் கையால் அவள் கன்னத்தில் தட்டி 'ம்மா... பா...' என்று பேசும் விதமாய் உளற, அவள் கவனம் குழந்தையிடம் திரும்பியது.

ஒரு வழியாய் கூழை ஊட்டி, கொஞ்சம் தண்ணீரைக் குடிக்க வைத்து, வாயைத் துடைத்து, ''தங்கத்துக்குத் தொப்பை

ரொம்பிடுச்சா?" என்று கொஞ்சிக் கொண்டிருந்தவளின் அருகில் மாதவன் வந்து நின்றான்.

"வசு"

"ம்?"

"வந்து..." என்று ஆரம்பித்தவன், தலையை வேகமாய் ஆட்டி, "ஒண்ணுமில்லே..." என்று தயங்கிவிட்டு மீண்டும் படுக்கை அறைக்கே போக, வசந்தா விழித்தாள்.

ஏதோ சொல்ல வந்துவிட்டு, சொல்லாமலே போகிறாரே!

மாதவன் தயக்கத்தோடு மறுபடியும் அறையின் வாசல் படியில் வந்து நின்று எட்டிப் பார்த்தான்.

"என்ன மாது?"

"அ? ஒண்ணுமில்ல... அத்தம்மா இல்லியா? குழந்தைய அவங்ககிட்ட விட்டுட்டு வாயேன்... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்..."

"அத்தம்மா வெளியே போயிருக்காங்க... தெரிஞ்சவங்க உடம்புக்கு முடியாம ஆஸ்பத்திரில படுத்திருக்காங்க, போய்ப் பார்த்திட்டு ஏழு மணிக்குள்ள வந்திடறேன்னு உங்களுக்கு எதிர்லதானே சொல்லிட்டுப் போனாங்க!"

"எப்போ?"

"சரியாப்போச்சு... என்னாச்சு உங்களுக்கு? ஏன் ரெண்டு மூணு நாளா எப்படியோ இருக்கீங்க? எதை மனசுல வச்சிகிட்டு இப்படி அவஸ்தைப்படறீங்க? என்கிட்ட சொல்லக்கூடாதா? மாது... ப்ளீஸ்... இங்க வாங்க... சொல்லுங்க... வாட் இஸ் ராங்? ஆபீஸ்ல பிராப்ளமா? இல்ல,



ஊர்ல அப்பா ஏதாச்சும் சொன்னாரா? ம்? குழந்தையக் கொஞ்ச மாட்டேன்றீங்க... அவனைப்பத்தி நா ஏதாச்சும் சொன்னாலும் காதுல வாங்க மாட்டேன்றீங்க... ... எதையோ சொல்ல வர்ற மாதிரி படுது... ஆனா அதையும் சொல்லமாட்டேன்றீங்க... நானா பேச்சுக் கொடுத்தாலும் பேசப் புடிக்காத மாதிரி சள்ளுனு விழுறீங்க... என்ன ஆச்சு உங்களுக்கு?"

லேசான கோபத்துடன் துவங்கியவளின் குரல் பேசி முடிப்பதற்குள் வருத்தத்தில் தழுதழுக்க முற்பட, மாதவன் அவசரமாய் மனைவியின் அருகில் வந்து "ஏய்... வசு... என்னம்மா இது..." என்று தோளைத் தட்டி சமாதானப்படுத்த முயன்றான்.

குழந்தையைத் தான் வாங்கிக்கொண்டு, மறு கையால் அவளை இறுகத் தழுவிக்கொண்டான்.

தோளில் சாய்ந்துகொண்ட வசந்தா, கண்களை மலர்த்தி அவனை ஏறிட்டாள். ஒரு கையால் அவன் கன்னத்தைத் தடவி, "என்ன விஷயம் மாது?" என்றாள் கிசுகிசுப்பாய்...

குனிந்து அவளை அழுந்தப் பார்த்தவன் நீளமாய் பெருமூச்சு விட்டான். 'ப்ச்' என்று சூள் கொட்டினான். பின், "என்னனு சொல்றது வசு... எத நினைச்சாலும் ஒரே வெறுப்பா இருக்கு..." என்றான்.

வசந்தா குழந்தையை அவனிடமிருந்து வாங்கி தரையில் துணியைப் பரத்தி கிடத்தினாள். அருகில் உட்கார்ந்து தடவிக் கொடுத்தபடி சின்னக் குரலில் வினவினாள்.

"அம்மாவ நினைச்சு வருத்தப்படறீங்களா? உங்க வேதனை எனக்குப் புரியுது... அந்த வலிய நா உணர்ந்தவ தானே... போகப்போகத்தான் வருத்தம் குறையும் மாது... அதுவரைக்கும் கஷ்டம்தான்... அவஸ்தைதான்..."

மாதவன் ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்து கொண்டான். மீசையை வழித்தான், முடியின் நுனியை திருகினான். புத்தி எங்கோ இருக்க, பேசினான்.

''அம்மா போனத நினைச்சுக்கூட நா அத்தனை வருத்தப்படல வசு... ஆனா, அப்பா ஒண்டியா கஷ்டப்படறத நினைக்கக்கிட்டாதான் தாங்கமாட்டாம ஆயிடுது...''

''கஷ்டம்தான்... முப்பத்தஞ்சு வருஷம் கூடவே வாழ்ந்த மனைவியை திடீர்னு பறிகொடுத்திட்டு நிக்கறது பரிதாபம் தான்... ஆனா, இது வேணுன்றதும் வேணான்றதும் நம்ம கையில இல்லியே! அப்பா தனியா இருக்காரேனு நீங்களும் தான் வாராவாரம் போய் ரெண்டு நாளு இருந்திட்டு வரீங்க... இதுக்கு மேல...''

மாதவன் எழுந்து வேகமாய் அவளருகில் வந்தான்.

''நாம என்ன செய்ய முடியும்னு கேக்கற, அதானே. இதெல்லாம் நமக்குள்ள பேசிப் பேசி சமாதானமாயிடறது சுலபம் வசு... ஆனா மத்தவங்களுக்குப் புரியுமா?''

''மத்தவங்களா? அப்பா ஏதாச்சும் சொன்னாரா?''

''அவரு ஒண்ணும் சொல்றதில்லே... 'இப்படி சனி, ஞாயிறு தவறாம நீ இங்க வந்து அலையுறது கஷ்டமா இருக்கு தம்பி'னுதான் சொல்றாரு... ஆனா, ஊர்க்காரங்க பேசற பேச்சுத்தான் காதுல வாங்கற மாதிரியில்லே...''

வசந்தா குழப்பமாகப் பார்த்தாள்.

''ஊர்க்காரங்களா? அவங்களுக்கு என்ன?''

''என்ன, சும்மா ஒரு வம்புதான்... பஸ் ஸ்டாண்ட்ல எறங்கி, தெருவுல நடந்து வீட்டுக்குள்ள நுழையறவரைக்கும், எப்பிடியும் நாலைஞ்சு பேரையாவது பார்க்க வேண்டி



வந்திடுது... எவன் எதிர்ல வந்தாலும் சொல்லி வச்ச மாதிரி, 'என்ன இப்பிடி உங்கப்பாவ தனியா விட்டுட்ட தம்பி'னு என்னமோ தான்தான் கேக்க பாத்யதை உள்ளவன் மாதிரி பளிச்'னு கேக்கறான்.''

''.....''

''அதோட விட்டா தேவலியே! 'உங்கப்பா மனசு ஒடைஞ்சு போயிட்டாரு, நோக்காடும் இல்லாம ஏக்கமே கதின்னு கெடக்கறாரு... வீட்டை கவனிக்கிறதே இல்லே; முன்னப்போல ஊர்க்காரியங்கள்லகூட அக்கறையில்லாம இருக்காரு'னு தினந்தினமா அவனவனும் என்னென்னமோ சொல்றப்போ பத்திகிட்டுதான் வருது வசு...''

''சொல்லிட்டுப் போகட்டுமே மாது... கொஞ்ச நாள்ல அப்பா மனசு தேறி, பழையபடி ஆயிட்டாங்கன்னா, அவங்க வாய மூடிக்க மாட்டாங்களா? ம்? இதெப்போய் பெரிசா எடுத்துப்பாங்களா?''

மாதவன் இல்லை என்று மறுத்து தலை அசைத்தான்.

''எவனோ, ஏதுவோ பேசினா நமக்கென்னனுதான் நானும் காதுல வாங்காம இருந்தேன்... ஆனா, இந்த முறை நாட்டாண்மைக்காரரு என்னைத் தனியா கூப்பிட்டுப் பேசினாரு... அவருக்கு அப்பாகிட்ட அலாதி சிநேகிதம். அந்த ஊர்லேயே நம்ம குடும்பத்தோட ரொம்ப அக்கறையோட பழகறவரு... அவரு வார்த்தைக்குக்கூட மதிப்புத்தரலேன்னா எப்பிடி?''

''அப்பிடி என்ன சொன்னாரு?''

''சொல்றேன்... போன முறை போனப்ப, அப்பா கையில ஏதோ நெருப்புக் காயம் மாதிரி இருந்திச்சு, நான்கூட கவனிச்சேன். கேட்டதுக்கு, அரிக்கேன் லைட்ல சுட்டு

கிட்டேன்னு மழுப்பிட்டாரு. ஆனா, தானே சமைக்கிறேன் பேர்வழின்னு அப்பா கத்தடிச்சதுல உண்டான காயம் அருணு நாட்டாண்மைக்காரரு சொன்னப்புறம்தான் எனக்கே சேதி தெரிஞ்சது!''

''சமையலா? அப்பாவா? சமைக்கறதுக்கும் மத்த வேலைங்களைக் கவனிக்கிறதுக்கும்தான் அந்தக் கடியன் பெருமாளு இருந்தானே? அவனுக்கு என்ன ஆச்சு?''

''அது ஒரு கதை வசு! அஞ்சாறு வருஷமா வீட்டோட இருந்து, அம்மாகிட்ட எல்லா வேலையும் நல்லாக் கத்துக்கிட்ட பெருமாளைக் கண்டா அப்பாவுக்கு இப்ப ஆகலை... 'நீ சமைக்கிறது நல்லாவே இல்லை, இதுல காரம் இல்ல அதுல உப்பு இல்ல'ன்னு சதா அவனைத் திட்டிக்கிட்டே இருந்தாராம். நா போறப்பல்லாம் கூடப் பார்த்தேன். 'பொரியல்ல எண்ணெ மொதக்குது', 'சோறு ஒரே குழைசலா கஞ்சி மாதிரி ஆயிடுச்சு'ன்னு எதாச்சும் சொல்லிக்கிட்டே...''

அவனை முடிக்க விடாமல் வசு குறுக்கிட்டாள்.

''இதெல்லாம் பெரிய குத்தமா? உங்கம்மா கையால சாப்பிட்டுப் பழகினவங்க... இப்ப மனசும் சரியில்ல... அப்படித்தான் சொல்வாங்க... பொறுத்துக்கிட்டுத்தான் போகணும்...''

''அ? நாம வேணா பொறுத்துக்கலாம், வேலைக்கு இருக்கறவங்களும் பேச்சு வாங்கணும்னா ஒத்துப்பாங்களா? 'என்னால இனிமே இங்க வேலை செய்ய முடியாது'ன்னு கறாரா சொல்லிட்டு போனவனாம் பெருமாளு நின்னு போயிட்டான். இவரு அதுக்கு மேல ரோஷத்தோட, என் காரியங்களை நானே செஞ்சிக்கிறேனு வீம்பா சமைக்கப் போயி... சோத்த வடிக்கத் தெரியாம கையில கொட்டிகிட்டு... மொத்தத்துல ரொம்ப



அவஸ்தை... இதெல்லாம் கேள்விப்பட்டப்போ, பேசாம நாமளும் ஊரோட போய் அவர் கூடவே இருந்து பாத்துக்கிடலாமான்னு தோணுது வசு...''

பேச்சோடு பேச்சாக சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்ட மாதவன், அருகில் வந்து அமர்ந்தான். அவள் கை வளையல்களை பின்னால் தள்ளியபடி தழைந்த குரலில் மீண்டும் ''நாமளும் கிராமத்துக்கே போயிடலாமா வசு?'' என, அவன் விளையாடுகிறானா, அல்லது நிஜமாகவே பேசுகிறானா என்பது புரியாமல் வசு விழித்தாள்.

''சொல்லு வசு...''

''என்ன சொல்லணும்?''

''கிராமத்துக்குப் போயிட்டா என்ன?''

''விளையாடாதீங்க மாது...''

''சத்தியமா விளையாடல... அப்பாவ நினைச்சா...''

வசந்தா கோபத்துடன் குறுக்கே வெட்டினாள்.

''அப்பாவ நினைக்கறது இருக்கட்டும். முதல்ல நீங்க பேசறது பிராக்டிகலா இருக்கான்னு யோசனை பண்ணிட்டுப் பேசுங்க... உங்க பாங்க் வேலைய என்ன பண்றதா உத்தேசம்? அங்க மாத்தல் கிடைக்காது... அப்புறம்? வேலைய ராஜினாமா பண்ண ரெடியா? பண்ணிட்டு? நிலத்தப் பாத்துப்பீங்களா? சரி, என் வேலை? விட்டுட்டு? வீட்டோட கிராமத்துல உட்கார்ந்துகிட்டு வம்படிக்கச் சொல்றீங்களா?''

மாதவன் சரக்கென்று எழுந்து நின்றான்.

''பெரியவங்க நிம்மதி முக்கியம்னா செய்யத்தான் வேணும்... அப்பாகிட்ட பணம் காசுக்குப் பஞ்சமில்ல... நாம

ரெண்டு பேரும் வேலையை விட்டாக்கூட, உக்கார வெச்சு சோறு போடற தகுதி அவருக்கு இருக்கு...''

கையை உதறிக்கொண்டு, கத்தலாகப் பேசியவனை வசந்தா அழுத்தமாக மறித்தாள்.

''மாது, கோபத்துல எதையாவது அவசரப்பட்டு பேசிடாதீங்க... நாம சொல்றது நடைமுறைக்கு ஒத்து வருமான்னு கொஞ்சம் நிதானிச்சுப் பாருங்க. உங்க இஷ்டம் போலவே ரெண்டு பேரும் வேலையை விட்டுட்டு போயிடறதாவே வச்சுப்போம்... அங்க அந்த ஊர்ஜனங்க பத்திலே நாம நிம்மதியா இருக்க முடியும்னு நம்பறீங்களா? உங்கப்பா போனப்ப ரெண்டு மூணு நாளு அங்க இருக்கறதுக்குள்ள நா என்ன பாடுபட்டுட்டேன்றது மறந்து போயிடுச்சா?''

''... ...''

''சரி, உங்கப்பாவோட சந்தோஷத்துக்காக நீங்களும் நானும் குழந்தையும் என்ன கஷ்டப்பட்டாலும் பரவாயில்லேனு அங்க போய் இருக்கலாம்... ஆனா, அத்தம்மா? அவங்கள என்ன செய்யறது? இனிமே நீங்க எங்களுக்குத் தேவையில்லேனு அவங்கள இங்கயே உதறிட்டு வந்திட முடியுமா? இத்தனையும் சமாளிச்சுக்கிட்டு அங்க போய் இருக்கறோம்னே வச்சிட்டாக்கூட, கிராம வாழ்க்கைல நாம எத்தன தூரம் பொருந்த முடியும்னு நினைச்சுப் பார்த்தீங்களா? என்ன மாது... குழந்தை மாதிரி பிடிவாதம் பண்றீங்க...''

மூச்சிரைக்க வசந்தா பேசி நிறுத்த, அவள் பேச்சில் இருந்த நியாயத்தை உணர்ந்து மாதவன் தலையைக் குனிந்து கொண்டான். இதற்கு மேல் யோசிக்க எதுவுமே இல்லை என்கிற மாதிரி கைகளை விரித்து விரித்து மூடினான்.



தூங்கிவிட்ட குழந்தையின் மேல் மெல்லிசாக ஒரு துணியைப் போர்த்திவிட்ட வசந்தா எழுந்து மாதவனுக்குக் கிட்டத்தில் வந்து நின்றாள்.

வேதனையோடு, செய்வதறியாமல் அடிபட்டு நிற்பவனின் தோளில் கையை வைத்து தன் பக்கமாய் திருப்பினாள்.

''அப்பாவத் தனிச்சு விடறது உங்களுக்குத் துன்பமா இருக்கு, விஷயம் அதானே மாது? அவர் ஏன் தனியா இருக்கணும்? பேசாம வீட்டை ஒழிச்சு இங்க நம்ம கூட தங்க அவரக் கூட்டிட்டு வந்திட்டா, எந்தப் பிரச்னையும் இருக்காது இல்லையா?'' என்று மெதுவாக அவள் கேட்டபோது, உங்கள் வருத்தத்தில் எனக்கு மட்டும் பங்கு இல்லையா என்கிற கரிசனம் நிறையவே அந்தக் குரலில் விரவி இருந்தது.

# 19

**ஷ**வரிலிருந்து தண்ணீர் பூத்தூறலாக விழுந்து கொண்டிருக்க, மிருதுவாக ரோஜா இதழ்களை யாரோ மேலே இருந்து மெனக்கெட்டு தூவுகிற மாதிரி சிலிர்த்தது மாதவனுக்கு.

தலையை அப்படி இப்படி திருப்பியும், குனிந்தும், நிமிர்ந்தும் அந்தக் குளியலை அனுபவித்தபோது மனசு சந்தோஷமாக இருப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

கடந்த பத்துப் பதினைந்து நாளாய் தினம் இரண்டு வேளையும் இதே மாதிரி குளியலை அனுபவித்துக் கொண்டிருந்தாலும்கூட, என்னவோ காணாததைக்

கண்டுவிட்ட தினுசில் முதல் நாள் ஏற்பட்ட பரபரப்பு இன்னமும் தீர்ந்தபாடில்லை.

குளிப்பதென்றால், எந்த இடத்துக்கும் பொதுவாக தண்ணீரும் சோப்பும் டவலும் இருந்தால் போதுமானதுதான் - ஆனால், எத்தனை தேய்த்தாலும் போகாத பாசித் தரையில் வழுக்கி விழுந்து, சரியாகப் பூசப்படாத சுவர்களின் இடுக்குகளிலிருந்து கரப்பானும் பூரானும் எட்டிப் பார்க்கின்றனவா என்று பயந்துபயந்து, கை கால்களை அங்குலத்துக்கு மேல் அசைக்காமல், நின்ற இடத்திலேயே தொட்டியில் பிடித்து வைத்து நாற்றம் ஏறிப்போன தண்ணீரை தலையில் விட்டு 'குளித்தேன்' என்று இத்தனை நாள் பேர் பண்ணியதற்கும்,

தரையில் மொசைக் கல்லும், சுவர்களில் டைல்சும் பதிக்கப்பட்டு பளபளத்த பாத்ரூமில், இப்படி ஆனந்தமாய் குளித்து, வாஷ்பேசினுக்கு மேல் இருந்த கண்ணாடியில் முகத்தை ரசித்து, இங்கேயே தலைவாரி, பவுடர் அடித்துக் கொண்டு மணக்கமணக்க வெளியில் வருவதற்கும் வித்தியாசம் இல்லையா!

இந்த வித்தியாசம் குளியலறையில் மட்டுமல்ல, வீடு மொத்தத்திலும்தான் இருக்கிறது.

மாயாஜாலக் கதைகளில் வருகிற மாதிரி, அந்த பழைய சின்ன போர்ஷன் மறைந்து, சின்ன தோட்டமும் காம்பவுண்ட் சுவரும் கொண்ட லட்சணமான பெரிய தனி வீடாகவே ஆகிவிட்டது.

மூன்றடி உயரத்துக்கு கம்பி 'கிரில்' போட்ட வராந்தா என்ன, நாள் கிழமை என்றால் விருந்தினர்கள் தாராளமாய் உட்கார்ந்து சாப்பிடுகிறத மாதிரி கூடம் என்ன, அகலமும்



நீளமுமாய் மூன்று படுக்கை அறைகள் என்ன, ஒவ்வொன்றுடனும் இதுபோன்று ஒட்டிக்கொண்ட குளியலறைகள் என்ன, கடப்பைக்கல்லால் ஆன மேடை கொண்ட சமையலறை என்ன...

கே.பி. சுந்தராம்பாள் ஸ்டைலில் தனக்குத்தானே ''என்ன... என்ன'' என்று கேட்டுக்கொள்வது உதட்டின் உட்புறத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு முறுவலை எழுப்ப, சிரிப்பு மாறாமலேயே ஷவரை திறந்துவிட்டு, எட்டி சோப்பை கையில் எடுத்தான்.

சோப்பைக் குழைத்து உடம்பில் தேய்க்கையில் மறுபடி மனசு ஹு... ஹு... என்கிற பூரிப்போடு இத்தனைக்கும் காரணமான அப்பாவை எண்ணி குதிக்க முற்பட்டது.

இத்தனை நாளாய் இல்லாத வசதிகள் இப்போது கிடைத்தது அப்பாவால்தானே எக்கச்சக்கத்துக்கு பணத்தை வாரி இறைத்து இத்தனையையும் செய்து கொடுத்திருப்பது அவரின் பெருந்தன்மைதானே!

அன்று, 'அப்பாவை இங்கே வந்து நம்மோடு தங்கிவிடச் சொன்னால் என்ன?' என்று வசந்தா கேட்டபோது, இது நடக்கிற காரியம்தானா என்ற சந்தேகம் எழுந்தாலும், மறுபடிமறுபடி பேசி, விவாதித்து, அலசியபோது, இந்த முடிவைத் தவிர வேறு எதுவுமே சாத்தியமில்லை என்றே தோன்றியது.

அந்த வாரக் கடைசியில் காஞ்சீபுரம் சென்று அப்பாவைப் பார்த்தபோது, சொல்லி வைத்த மாதிரி அவரே முந்திக்கொண்டு, 'சும்மா இந்த நெலத்தையும் வீட்டையும் பார்த்துப் பார்த்து அலுத்துப் போச்சு... எல்லாத்தையும் வித்துத் தொலைச்சிட்டு காசி ராமேஸ்வரம் போயிடலாமானு

தோணுது தம்பி...' என்று ஏதோ ஒரு வேதனையில் அங்கலாய்த்தது ரொம்பத் தோதாய் அமைந்தது.

ஒருமாறுதலைத் தேடி அவர் ஏங்கும் இந்தத் தருணத்தை உபயோகித்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்று தோன்றினாலும் பேசுகிற விதத்தில் பேசி அவரை இங்கே சென்னைக்கு வரவழைப்பதற்குள் போதும்போதும் என்றுதான் ஆனது...

'அ! பட்டணத்துக்கா? நானா? உங்க கூடவா? அதெல்லாம் சரிப்படாது தம்பி' என்றார்.

'நிலம் நீச்சை எல்லாம் விட்டுட்டு வர்றது நடக்கற காரியமில்லப்பா... வேற எதுனாச்சும் பேசு...' என்றார்.

'நா கிராமத்துக்காரன்... உங்க பட்டணத்துக்கு வாழ்க்கை தோதுப்படாது தம்பி' என்றார்.

'நா இருக்கப் போறது இன்னும் கொஞ்ச நாளு... இருக்கற வரைக்கும் உங்கம்மா வாழ்ந்த இடத்துலேயே இருந்திடறேன். என்ன விட்டுடு...' என்றார்.

இன்னும் என்னென்னமோ சொன்னார்.

மாதவன்தான் எதையும் காதில் வாங்கவில்லை...

விடாக்கொண்டனாக பிடிவாதம் பிடித்து, 'ஆடற மாட்டை ஆடிக் கற, பாடற மாட்டை பாடிக் கற' என்று பேசுகிற விதத்தில் பேசி, முடியாதபோது கெஞ்சி, தழைந்து, அதட்டி... கடைசியில் சம்மதத்தை வாங்கி...

ஊரை ஒழித்துக்கொண்டு பட்டணத்தோடு போவது என்று தீர்மானமான பிறகு தணிகாசலம் அவராகவே சொன்னார்:

''சரி, வர்றதுனு ஆயிடுச்சு... இனிமே அதுக்குண்டான காரியங்கள நல்லவிதமா செஞ்சு முடிக்கறதுதான் புத்திசாலித்



தனம்... முக்கோட்டை மாதிரி இத்தனூண்டு வீட்டுல நீ இருக்கறதப்பத்தி உங்கம்மா எப்பவும் வருத்தப்பட்டுக்கிட்டே இருப்பா... அதனால, உடனடியா அது விஷயமா கவனிக்கணும். இனிமே ஆயுசு பூராவும் நானும் அங்கதான் வந்து இருக்கணுமின்னா, முதல் காரியமா நல்ல வீடா பாத்து வாங்கிடு... நமக்கு இருக்கற சொத்துக்கு, நீ வாடகை வீட்டுல இருக்க வேண்டியதே இல்லே... நாளைக்கே புரோக்கர் கண்ணாயிரத்துகிட்ட சொல்லி பாதி நிலத்த விக்க ஏற்பாடு பண்ணிடறேன். நல்லவசதியான இடமாப் பாத்து வெச்சின்னா, நா உடனே வர்றேன்... முடிச்சிடலாம்.''

அப்பா இப்படிப் பேசியதும், அதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளக்கூடாதா, தலைபோகிறபடி என்ன அவசரம் என்கிற கேள்வியோடு, கூடவே இந்த வசதிக்குறைச்சலைக் காரணம் காட்டித்தானே முன்பு அம்மாவின் வருகை தள்ளிப்போடப்பட்டது என்பதும் நினைவுக்கு வந்தது.

ஒருமுறைகூடப் பேரனைப் பார்க்காமல் அம்மா போயே போய் விட்ட நிஜத்தில் அப்பாவின் ஆசையும் நிராசையாகப் போய்விடாமல், இனி அப்பாவையாவது சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற வைராக்கியம் எழ, அவரது நிபந்தனையை ஏற்றுக் கொண்டதில், ஸ்விட்ச் போட்ட மாதிரி காரியங்கள் நடந்தேறின.

காஞ்சீபுரத்து வீட்டை விற்று அந்தப் பணத்தையும், ஏற்கனவே பாங்கில் இருந்த பணத்தையும் உடனடியாக மாதவன் பெயரில் தணிகாசலம் மாற்றினார். சாப்பாட்டுக்கு மட்டும் நெல் வருகிற மாதிரி கொஞ்சமாய் நிலத்தை குத்தகைக்கு விட்டு, பாக்கி இருந்த வயல் காட்டையும்

தோப்பையும் துரவையும் விற்றுக் காசாக்கி அதையும் பிள்ளையை வாங்கிக்கக் கொண்டு வந்ததில்,

மாட்டுப்பெண் காலில் விழுந்து ஜெஜென்று பெயரைக் கழுவிக்கொண்டிருந்தபோல், வடபழனி அருகில் சாலிகிராமத்தில் மெயின் ரோட்டை விட்டு விலகி உள்ளடங்கி இருந்த இந்தத் தனி வீட்டை வாங்குவது சாத்தியமாயிற்று.

இத்தனை தூரத்திலிருந்து ஆபீஸுக்கு தினம் பஸ்ஸில் போய் வருவது சிரமம் என்று புதுசாய் ஸ்கூட்டர் ஒன்றை வாங்கியாயிற்று... இன்னும்... இன்னும்...

சோப் நுரையை விட்டு கழுவிக் கீழே விழ, மாதவன் குனிந்து அதை எடுத்து வைத்துவிட்டு குளியலைத் தொடர்ந்தான்.

வசதிகள் கிடைக்கட்டும்.

அமைச்சலும், வேதனையும், உறக்கமும் இல்லாமல் மனசு நிறைந்து இருப்பதற்கு இவை மட்டும்தானா காரணம்.

இல்லை!

வீட்டுக்குப் பெரியவராய் அப்பா கூடவே இருப்பதும், அம்மா போனபிறகு எப்போதும் சோர்வுடன் கும்பிக் காட்சியளித்தவரின் முகத்தில் இப்போது சந்தோஷத்தின் சாயல் படிய ஆரம்பித்திருக்கிறதும், பேரனோடு கொஞ்சி விளையாடுவதில்...

கதவு தட்டப்பட்டு, "மாது... குளிச்சு முடிச்சிட்டீங்களா இல்லியா" என்ற வசந்தாவின் குரல் கேட்டது.

குழைத்துக்குழைத்துத் தேய்த்த சோப்பு நுரை கை முழுவதும் புஸு புஸு வென்று இருக்க, மாதவன் திடுக்கிட்டு "அ... ஆச்சு வசு... இதோ வந்திட்டேன்..." என்று சமாளித்தான்.



மறுபடி ஷவரடியில் தலையை நீட்டிய நிமிஷத்தில் மனசு வசந்தாவைச் சுற்றி வந்தது.

அதிகமாகக் காட்டிக் கொள்ளவில்லையே தவிரவும், அம்மா விரும்பிய தினுசில் பேரனைக் கொஞ்சாமல், தொட்டில் போட்டு சீராட்ட விடாமல் வசந்தா செய்து விட்டாள் என்பதில் அடிமனசில் அவள்மேல் கோபம்தான். ஆனால், அந்த எரிச்சல் 'அப்பாவை நம்மோடு கூட்டி வந்து விடலாம்' என்கிற யோசனையைச் சொன்னதும் அல்லாமல், அதை செய்து முடிப்பதில் தீவிரமாய் அவன் இவனோடு ஒத்துழைத்ததும் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து போனதும் நிஜம்தான்.

'மாமா காத்தாட வாழ்ந்து, காலார நடந்து, கோவில் குளம்னு போயும் பழக்கப்பட்டவங்க... அதனால அவங்களுக்கு எங்க வீடு வாங்கினா வசதியா இருக்குமோ அதைத்தான் செய்யணும் மாது' என்று கூறி, ஓடியாடி சாலிகிராம வீட்டைத் தேர்ந்தெடுத்து முன்பக்கத்து அறையை அவரின் புழக்கத்துக்கு ஏதுவாய் ஒதுக்கி...

அவள் மட்டுமல்லாமல் அத்தம்மாவும்கூட அன்பாகவும் மரியாதையாகவும் இருந்து, 'பெரியவர்' என்ற ஸ்தானத்தை அப்பாவுக்கு அளித்து...

மறுபடி கதவு தட்டப்பட, விறுவிறுவென்று வெளியே வந்தவன் வசந்தாவைப் பார்த்து அசட்டுச்சிரிப்புடன், "ஸாரி... ரொம்ப நேரமாடுச்சு, இல்லே..." என்று சொல்லிவிட்டு, இடுப்பில் லுங்கியை அணிந்து, கட்டியிருந்த துண்டை அவிழ்த்து எறிந்தான்.

இரண்டு டிபன் டப்பாக்களிலும் நாலு நாலாகப் பூரிகளை அடுக்கி, அதன்மீது குட்டித் தட்டுகளில் கிழங்கை வைத்து மூடி, தனித்தனி பிளாஸ்டிக் பைகளில் போட்டு, ஒன்றைத் தன் கைப்பையிலும், மற்றதை ஸ்கூட்டரில் இருந்த பாக்ஸிலும் வைத்துவிட்டுத் திரும்பிய பின்னும்கூட, சற்று முன் தோன்றிய புன்சிரிப்பு இன்னமும் தேயாமல் வசந்தாவின் இதழிலேயே ஒட்டிக் கொண்டிருந்தது.

காலை எழுந்து பல் தேய்ப்பதில் ஆரம்பித்து, குளித்து சாப்பிட்டு என்று தொடர்ந்து, மாலை ஆபீஸ் விட்டு வந்தபின் வராந்தாவில் நின்று தோட்டத்தைப் பார்ப்பதுவரை ஒவ்வொன்றிலும் ஆழ்ந்து ஈடுபட்டு மாதவன் ரசிப்பது வெளிப்படையாகவே தெரிகிறது...

இப்போதும்கூட இரண்டு முறை கதவைத் தட்டி கூப்பிட்ட பிறகே குளியலறையிலிருந்து வெளியே வந்திருக்கிறார்!

சுவரோடு பதிக்கப்பட்டிருந்த பீரோவைத் திறந்து உள்ளே தொங்கிக் கொண்டிருந்த புடவைகளில் ஒன்றை எடுத்து அணிய முற்பட்ட நிமிஷத்தில் 'மாதுவை மட்டும்தானா இந்த சந்தோஷம் ஆட்டி வைக்கிறது. வீட்டில் ஒவ்வொருவரையும்தானே, - என்கிற கேள்வி தலைதூக்கியது.

மாமனாரை நம்மோடு வந்து இருக்கும்படி அழைத்து விட்டோமே, நம் பழக்க வழக்கங்களுக்கும் அவருக்கும் ஒத்துக்கொள்ளுமா, ஒன்று கிடக்க ஒன்று ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது, பேசாமல் மாது கோபித்துக் கொண்டாலும் பரவாயில்லை என்று 'அவரவர் வீட்டில் இருந்து கொண்டே தேவைகளை கவனித்து இதமாக இருக்க முயற்சிப்பதுதான் சிறந்த வழி' என்று சொல்லியிருக்க



வேண்டுமோ என்றெல்லாம் குருட்டு யோசனை பண்ணி தனக்குத்தானே மாய்ந்து பொய்த்துப் போக...

அவரவரும் மற்றவரது பாதையில் குறுக்கிடாமல் தனித்தனியே விருப்பு வெறுப்புகளுடன் வாழமுடியும் என்று தைரியம் பிறந்திருப்பது உண்மைதானே

வாய்க்கு வாய் 'முருகா' என்றும் 'அப்பனே ஷண்முகா' என்றும் வார்த்தைகளை உதிர்க்கும் மாமாவுக்கு, இந்தக் குடும்பத்துடன் ஒட்டுதல் ஏற்படுமோ படாதோ என்ற சந்தேகம் முளையிலேயே பட்டுப்போகும்படி, அவருக்கும் தனி அறை அமைந்துவிட்டது- அதுவும் வாசல் பக்கமாய் இருந்துவிட்டதில், வீட்டுக்குள் அதிகமாக அவர் புழங்குவது கூட சாத்தியமில்லை.

மாமா வாசப்பக்கத்தோடு, தான் - தன் அறை - தன் சாமி - பூஜை - திருவாசகம் - திருப்புகழ் என்று இருக்கிறார் என்றால், பழைய சின்ன வீட்டில், சமயலறையிலேயே ஏகநாதர் படத்தை மாட்டி, பீடத்தில் விளக்கேற்றி அத்தம்மா தோத்திரம் சொல்ல நேர்ந்ததைப் பார்த்து முகம் சுளித்த மாதவன், இப்போது அதைப்பற்றி எதும் பேச வழியில்லாதபடி அத்தம்மாவுக்கும் தனி அறை ஒதுக்கி விட்டதில் அந்தப் பிரச்னையையும் சமாளித்தா...

சென்று முடிந்தவைகளைப் பற்றின சிந்தனையுடன் வந்துகொண்டிருந்த வசந்தா தடக்கென்று மாதவன் மேல் மோதிக்கொண்டாள்.

"எ... என்ன வசு, பாத்து வரக்கூடாது?"

"ஸாரி... என்னமோ யோசிச்சிக்கிட்டே வந்திட்டேன், டயமாயிடுச்ச, சாப்பிட வர்றீங்களா?"

சரி என்று தலையாட்ட, சமையலறைக்குள் சென்று பதார்த்தங்கள் நிறைந்த பாத்திரங்களை எடுத்து வந்து டைனிங் டேபிளில் வசந்தா வைத்தாள்.

தண்ணீரை டம்ளரில் விட்டு, பரிமாறி, ஒரு வாய் சோற்றை உருட்டி வாய்க்குள் போட்டுக்கொண்டவன், அப்போதுதான் உறைத்த மாதிரி திடீரென்று கேட்டான்:

''மாமா சாப்பிட வரலையா மாது?''

''கூப்பிட்டேன். ஆனா அவரு அப்புறமா சாப்பிட்டுக்கறேன்னிட்டாரு... இன்னிக்கு சஷ்டி... காலையிலே வடபழனி கோவிலுக்குப் போயிட்டதால, கந்தசஷ்டிக் கவசத்தை இன்னும் சொல்லி முடிக்கலையாம். நீங்க சாப்பிடுங்க, நா கவசம் சொல்லிவிட்டு, பொறுமையா சாப்டுக்கறேன்னிட்டாரு...''

கையில் எடுத்ததை அப்படியே தட்டில் வைத்துவிட்டு வசந்தா நிமிர்ந்தாள்.

''அப்புறமாவா? நாம ரெண்டு பேரும் ஆபீஸ் போயிட்டா, அவரு எப்படி...?''

அவள் சங்கடம் புரிந்த மாதிரி மாதவன் குரலைத் தாழ்த்தி பதில் கூறினான்.

''அத்தம்மா கூச்சப்பட்டாங்கனா, அவங்க பரிமாற வேணாம். டேபிள்ல எடுத்து வெச்சிட்டு 'நீங்களே பரிமாறிக்கங்க'னு சொன்னா, தப்பா எடுத்துக்க மாட்டாரு...''

அது மரியாதையான செயலாக இருக்குமா என்று கேட்க நினைத்து, பின் மாதவனுக்கே சரி என்று பட்டால் வேறு எதைப்பற்றியும் யோசிக்கத் தேவையில்லை என்ற தீர்மானத்தில் அதோடு அந்தப் பேச்சை வசந்தா முடித்துக் கொண்டாள்.



13373857

சாப்பிட்டு முடித்து, குழந்தைக்குத் தேவையானதை எடுத்து வைத்து, கடைசி நேர ஒப்பனைக்காகக் கண்ணாடி முன் நின்றவளின் அருகில் மாதவன் வந்து நின்றான்.

''கிளம்பிட்டியா வசு?''

''ம்... நீங்க ரெடியா?''

''கிளம்ப வேண்டியதுதான்... அப்பா சஷ்டிக் கவசத்த மத்தியானமா படிச்சிக்கிறாராம்... 'இப்பவே சாப்பிட்டுர்றேன், ஒரு வேலை ஆயிடும்'னு சொல்றாரு...''

தோள்பட்டையில் மேலாக்கை மடிப்பாகக் கொசுவி, 'பின்' ஒன்றைக் குத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வசந்தா, திரும்பாமலேயே கேட்டாள்:

''அந்த நிமிஷம் முன்னால அப்புறமா சாப்பிட்டுக்கறேன்னாரே.''

அவள் குரலில் இழையோடியிருந்த கிண்டல் எரிச்சலைக் கிளப்ப, மாதவன் அவசரமாகப் பதில் கேள்வி கேட்டான்.

''சொல்லிட்டா என்ன, மாத்தக் கூடாதுனிட்டு சட்டமா என்ன?''

கைப்பையை எடுத்து தோளில் மாட்டிக்கொண்டே, ''சட்டமும் இல்ல, கிட்டமும் இல்ல... நமக்கு நாழியாகுதேனு கேட்டேன். நீங்க சொன்னீங்களேனு டேபிள்ல எடுத்து வெச்சிருக்கேன், போட்டுகிட்டு சாப்பிடறது கஷ்டமா?'' என்றவள் செருப்பை அணியத் துவங்க, மாதவனின் எரிச்சல் அதிகமானது.

''நில்லு. நா பாட்டுக்கு பேசிக்கிட்டே இருக்கேன்; எதையும் காதுல வாங்காம உன் போக்குக்கு நீயும் கிளம்பிகிட்டே இருந்தா என்ன அர்த்தம்?''

அவன் குரல் ஓங்கி ஒலிக்க, வசந்தா சரக்கென்று திரும்பினாள்.

"ஒரு அர்த்தமுமா இல்லை... நீங்கதான் வாய்க்கு வந்த தினுசில என்னென்னவோ பேசறீங்க... எடுத்து வைன்னு சொன்னீங்க, வெச்சேன். இப்ப பரிமாறுன்னு சொல்றீங்க... இப்படி மாத்திமாத்திப் பேசினா என்ன அர்த்தம்? எனக்குத்தான் உங்க போக்கு புரியலை... விரட்டறதுக்கும் ஒரு அளவு வேணும்..."

பேசிக்கொண்டே கைப்பையை எடுத்து மேஜை மேல் வீசி, செருப்புகளை உதறிவிட்டு வேகமாய் அவள் உள்ளே போக, இவளுடைய கத்தல் அப்பா காதில் விழுந்துவிடப் போகிறதே என்கிற பயத்தோடு 'வசதியாய் வாழ அவர் பணம் வேண்டும்; ஆனால் அவருக்காக ஒரு ஐந்து நிமிஷம் விட்டுக் கொடுப்பது என்பது மட்டும் முடியாத காரியமா' என்கிற ஆத்திரத்தனமான கேள்வியும் சேர்ந்துகொள்ள, "ஏய்... ஏய்... நில்லு... உன் மனசுல என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கே...?" என்று அடிக்குரலில் உறுமியவாறு கால்களை அகல அகலமாய் வைத்து மாதவனும் பின்னோடு சென்றான்.

# 20

**தூ**க்கத்தில் குழந்தை காலைத் தூக்கி வயிற்றின்மீது போட, பரிமளம் தடக்கென்று விழித்துக்கொண்டார்.

படுத்தபடியே தலையைப் பின்னுக்குச் சாய்த்து சுவரில் இருந்த கடிகாரத்தைப் பார்க்க, அது மணி இரண்டரை என்றது.

ஏகவே, நேரம் போனது தெரியாமல் அது என்ன உறக்கம்!



லொங்கு லொங்கென்று நாள் பூராவும் நிமிஷம் உட்காராமல் உழைப்பதாலோ என்னவோ, தலையைச் சாய்த்தால் கண்களை உறக்கம் கட்டிப் போட்டு விடுகிறது.

காலையில் வசந்தாவும் மாதவனும் அலுவலகத்துக்குப் போன பிறகு, வீட்டைத் தட்டி சுத்தம் செய்து, குழந்தை ராஜாவுடன் மல்லுக்கு நின்று இண்டு வாய் சோற்றை வலுக்கட்டாயமாய் ஊட்டி, கிடைக்கும் இரண்டு இடுக்கு அவகாசத்தில் சமையல், தோட்ட வேலைகளைக் கவனித்து, ஊரில் உள்ள கதைகள் அனைத்தையும் சொல்லி, தெரிந்த பிரார்த்தனைப் பாடல்களைப் பாடி ராஜாவைத் தூங்க வைப்பதற்குள் தாவு தீர்ந்து விடுவதில், குழந்தையை அணைத்துப் படுத்ததும் தன்னறியாமல் கண்கள் செருகிக் கொள்வது வழக்கமாகவே போய்விட்டது.

இப்போதும்கூட, இன்னும் சற்று நேரம் தூங்கினால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் எங்கே நீளு வரிசையாய் காத்திருக்கும் வேலைகளைச் செய்து முடிக்க உதவ யார் இருக்கிறார்கள், இல்லை மனசுதான் இருக்கிறது?

காபி, டிபன், இரவுச் சாப்பாடு - போதாததற்கு மறுநாள் டிபனுக்கென ஊறப்போட்டுவிட்டு அரவைக்குக் காத்திருக்கும் அரிசி, உளுந்து - இத்தனைக்கும் மேல், குடுகுடுவென்று அங்கும் இங்கும் ஓடி, எதற்கெடுத்தாலும் 'நானு... நானு' என்று முழுவார்த்தையில் முக்கால் மட்டும் பேசி கூடக்கூட வரும் ஒன்றரை வயதுக் குழந்தை ராஜா...

நினைப்பே பிரமிப்பை ஏற்படுத்த, பரிமளம் கண்ணை அழுந்தத் தேய்த்து தூக்கத்தை விரட்டி, ராஜாவின் கை, கால்களை விலக்கி, சற்றே புரட்டிப் படுக்க வைத்துவிட்டு, கட்டில் சப்தமிடாதவாறு மெல்ல எழுந்தார்.

கொல்லை வராந்தாவுக்குச் சென்று முகம் கழுவி, கூடத்துக்கு வந்தவரின் பார்வையில், சாப்பாட்டுக்குப்பின் தணிகாசலம் அப்படியே விட்டுப்போயிருந்த காய்ந்த தட்டும், சரியாக மூடப்படாத பதார்த்தப் பாத்திரங்களும் விழுந்தன.

பன்னிரண்டு மணிக்கு குழந்தையைத் தூங்க வைக்கச் செல்லும் வரை, தணிகாசலம் அவர் அறையை விட்டு வெளியே வரவில்லை. பிறகு எப்போது வந்து சாப்பிட்டாரோ?

தன்னிஷ்டத்துக்கு வந்து சாப்பிட வேண்டியது, பாத்திர பண்டங்களைத் தாறுமாறாக இறைத்து வைக்க வேண்டியது, நினைத்தபோது தூங்க வேண்டியது, வெளியே போக வேண்டியது...

*சரியான தான்தோன்றி மனுஷர்!*

முகத்தைச் சுளித்துக்கொண்டே நாலடி நடந்து தணிகாசலத்தின் அறை வாசலில் நின்று உள்ளே பார்வையைச் செலுத்தியபோது, மார்பின் மேல் ஏதோ புத்தகம் கவிழ்ந்து கிடக்க குறட்டையொலியோடு அவர் தூங்குவது தெரிய, முகச்சுளிப்பு மாறாமல் மீண்டும் சமையலறைக்கு வந்தாள் பரிமளம்.

இப்படிக்கூடவா பட்டுக் கொள்ளாமல் ஒரு மனுஷரால் இருக்க முடியும்?

ஏதடா, இந்த வீட்டில் நாயாக உழைக்கிறாளே, மதித்து ஒரு வார்த்தை பேசுவோம், முடிந்த வரையில் சாப்பிட்ட தட்டைக் கழுவி வைப்போம். மாலை நேரங்களில் இரண்டு வாளித் தண்ணீர் தூக்கி வந்து செடிகளுக்கு ஊற்றுவோம் என்று சின்னச் சின்ன உதவிகளைக் கூடச் செய்ய முன்வராமல்...

தீ...



*சரியான சுகவாசி.*

ஏதாவது வெத்தா சொல்லப் போனாலும், எனக்குத்தான் கோபப்படத் தெரியும் என்பது போல மாதவன் அப்பாவுக்காக வரிந்து கட்டிக்கொண்டு வந்து விடுகிறானே...

நல்ல அப்பா... ஆகாசத்திலிருந்து குதித்த மாதிரி...

மொணமொணவென்று தனக்குத்தானே முனகியபடி காபி கலந்து ஒரு டம்ளரை பிளாஸ்கில் ஊற்றி டேபிள் மேல் கொண்டு வைத்துவிட்டு, சமையல் கட்டிலேயே ஒரு பக்கமாய் உட்கார்ந்து தனக்குக் கலந்து கொண்டதை பரிமளம் ஆற்றிக் குடித்தாள்...

எல்லோரும் ஒன்றாய் வசிக்கத் துவங்கிய புதிதில், மதியம் தணிகாசலம் எழுந்து விட்டாரா என்று அவர் அறைக்குள் எட்டிஎட்டிப் பார்த்து, எழுந்து விட்டார் என்று தெரிந்தவுடன் காபியைக் கலந்து டேபிளில் வைப்பது நடந்தது உண்மைதான் என்றாலும், போகப்போக ஒரு ஒட்டுதல் இல்லாமல் இரண்டு அன்னியர்களாக அவர்கள் இருவரும் அந்த வீட்டில் வளைய வருவது தீவிரமானபின், தான் உண்டு, தன் அறை, பூஜை என்று தணிகாசலம் இன்னும் இன்னும் ஒதுங்க ஆரம்பித்தபின், மெதுமெதுவாய் தினசரி சாப்பாட்டைப் போல, காபியைக் கலந்து பிளாஸ்கில் ஊற்றி பரிமளம் மேஜைமேல் வைத்து விடுவதும், தேவைப்பட்ட போது தணிகாசலம் எடுத்துக் குடிப்பதும் ஒருசில மாதங்களாகவே நடக்கும் சமாசாரம்தான்...

காபி டம்ளரைத் தொட்டித்தண்ணீரில் கழுவி கவிழ்த்து, டேபிள் மேல் வரவாத்துப் போயிருந்த தட்டைத் தண்ணீரில் ஊறப்போட்டுவிட்டு, துணியுடன் மேஜையைத் துடைக்க முனைந்த நிமிஷத்தில் ராஜா அழுதுகொண்டே ஓடி வந்தது.

"எம்மா கண்ணு அழுறே? இடும்னு முழிச்சிகிட்டு படுத்திட்டியா? என் ராஜாகுட்டி..."

கொஞ்சிக்கொண்டே தூக்க முனைந்தவரின் கையில் ஈரம் பட, போலிக் கோபத்துடன் அதட்டினார்.

"ப்ச்... இன்னைக்கும் பெய்ஞ்சிட்டியா! அட சின்னப்பையா, எப்படா நீ பெரிசா வளர்ந்து என் வேலையைக் குறைக்கப்போறே?"

பேசிக்கொண்டே அவன் துணிகளை அவிழ்த்து, ஈரத்துண்டால் துடைத்து, பவுடர் ஒற்றி, பளிச்சென்ற நல்ல டிரௌசரைப் போட்டு, மிதமான சூட்டில் பால் எடுத்துப் பீடிங் பாட்டிலில் ஊற்றிப் புகட்டினார்.

பின் சமையலறையிலேயே ஒரு ஓரமாக நாலைந்து விளையாட்டுச் சாமான்களைப் போட்டு, "இங்கயே விளையாடிக்கிட்டு இருக்கியா ராஜா... நா இட்லிக்கு மாவு அரைச்சிட்டு வாரேன்..." என்று சொல்லி, உளுந்தைக் களைந்து கிரைண்டரில் போட்டார்.

திட்டமாய் தண்ணியைத் தெளித்தவாறு கிட்டத்தில் நின்றவர், உளுந்து பந்து போல திரண்டு வர ஆரம்பித்ததும், காய்கறிக் கூடையை எடுத்து, இரவு சமையலுக்கு என்ன காய் ஆக்கலாம் என்று பார்த்தார்.

உருளை, வெங்காயம் போட்டு குருமா செய்து, சோறு வடித்து... மேலே யோசனை பண்ணவிடாமல், விளையாடி அலுத்துவிட்ட ராஜா எழுந்து வந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு 'தாத்தி... டா... டா...' என்று நச்சரிக்க ஆரம்பித்தது.

பேரனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டவர், ஒரு கையினால் கிரைண்டரில் உளுந்தைத் தள்ளிவிட்டபடியே அவனை சமாளிக்க முயன்றார்.



'டாட்டாதானே? போலாம்... என் கண்ணு இல்லை.. பாட்டி காரியம் முடிச்சதும் போலாம் ராஜா... இப்ப பிஸ்கட் வேணுமா... முறுக்கு சாப்பிடறியா? என் செல்ல ராஜா இல்ல..."

எதற்கும் கட்டுப்படாமல் கொடுத்த பிஸ்கட், முறுக்கை வீசி எறிந்துவிட்டு ராஜா குரலை உயர்த்தி 'டாடா... டாட்டா' என்று கத்தத்துவங்க, "அட என்னடா உயிரவாங்கறே?" என்று அதட்டியவாறு பேரனுடன் கூடத்துக்கு வந்தபோது வெளியே போகத் தயாராய் வெள்ளை சட்டையும், செருப்புமாய் நின்றபடி தணிகாசலம் பிளாஸ்க் காபியைக் குடித்துக் கொண்டிருந்தார்.

"வெளிய போப் போறீங்களா?"

"ம்"

"இவனைக் கொஞ்சம் அழைச்சிட்டுப் போக முடியுமா?... கைக்காரியத்த கவனிக்க விடாம நை... நைனு புடுங்கிகிட்டே இருக்கான்..."

தணிகாசலம் டம்ளரை மேஜை மேல் வைத்தார்.

"காய், மளிகை எல்லாம் வாங்கிட்டு வரணும்... இவனைத் தூக்கிட்டுப்போனா எல்லாத்தையும் சொமக்கறது கஷ்டம்..."

நிமிர்ந்து பார்க்காமல் பேசியவர் தன் பதில் பரிமளத்தின் எரிச்சலை அதிகமாக்கும் என்பதை லட்சியம் பண்ணாத தோடு, எந்த பதிலுக்கும் காத்திராமல் ஆணியில் மாட்டியிருந்த பைகளை எடுத்துக்கொண்டு, திரும்பி நடந்தார்.

தெருமுனைக்கு வந்து பிள்ளையார் கோவில் வாசலில் நின்று செருப்பை அவிழ்த்து ஒரு ஓரமாய் போட்டுவிட்டு, இரண்டு கைகளாலும் கன்னத்தில் பட்பட்டென்று போட்டுக்

கொண்டே, "பிள்ளையாரப்பா... என்னிக்கு இந்தப் பிரச்சனைக்கெல்லாம் முடிவு கட்டப் போறியோ, தெரியலியே..." என்றவாறு கண்களை மூடி வணங்கினார்.

திரும்பவும் செருப்பை மாட்டிக்கொண்டு நடக்கத் துவங்குகையில், சோர்வால் துவண்ட மனசைப்போலவே நடையும் தளர்ந்து போயிற்று...

நல்லதாய், கொதிக்கக்கொதிக்க, மணக்கமணக்க ஒரு வாய் காபிக்குக்கூட வழியில்லாமல் என்ன வாழ்க்கை இது என்கிற அலுப்பு நெஞ்சை நிறைத்தது.

என்னதான் வீட்டுக் காபி என்றாலும்கூட, சரியாகக் கழுவப்படாததாலோ என்னவோ, பிளாஸ்கைத் திறந்த உடனேயே குப்பென்று ஒரு வாடை முகத்தைத் தாக்கத்தான் செய்கிறது. அது பிளாஸ்கின் அழுக்கு வாடைதானோ, அல்லது வேறு எதன் வாடையோ... யார் கண்டது?

எதுவானால் என்ன, இப்போது - இனி எப்போதும், இதுதான் நிரந்தரம் என்று ஆகிவிட்டது. ஞாயிற்றுக் கிழமைகளில் மற்ற விடுமுறை நாட்களிலும் மட்டுமே ஓரளவுக்கு ருசியான சாப்பாடு, டிபன், காபி! மற்ற நாட்களில் ஆறி விறைத்துப்போன சோறு, புளியும் காரமும் தனித் தனியாய் நின்று தெளிந்த நீராய் ஓடும் சாம்பார், புளித்துப் போன மோர், 'எதன்' வாடையோ படிந்து போன ஒரு பொறியல்.

இப்போதும்கூட, காலையில் பிள்ளையும் மருமகளும் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிடுகையில் அவர்களோடு அமர்ந்து ஒரு வழியாய் வயிற்றுப்பாட்டைக் கவனித்துக்கொண்டு விடலாம்தான். அப்படித்தானே முதல் சில நாட்கள் நடக்கவும் செய்தது!



ஆனால், தான் உடன் இருக்கும் நிர்பந்தத்தால் அசைவம் சாப்பிட முடியாமல் மருமகள் தவிப்பதையும் தொடர்ந்து சைவ உணவை உண்ண முடியாமல் வெறும் வயிற்றோடு பாதி நாட்கள் ஆபீஸுக்குச் செல்வதையும் புரிந்துகொள்ள முடிய, சரி, நம்மால் எதற்கு அவள் பட்டினி கிடக்க வேண்டும் என்கிற வேதனையில், அவர்களோடு சாப்பிட உட்காருவதைத் தவிர்க்க ஆரம்பித்து, ஏற்கனவே இருந்த பூஜை புனஸ் காரங்களை இன்னும் சற்று விரிவுபடுத்திக்கொண்டு மெதுவாய் சாப்பிடும் வழக்கத்துக்குக் காரணம் காட்டியாயிற்று.

அசைவமோ, சைவமோ - சமைப்பது ஒரே ஆள்தான் என்றாலும், கண்ணுக்கு நேரே பார்க்காதவரை எப்படியோ சமாளித்து விடலாம். ஆனால், சென்னைக்கு வந்து ஒரு வருஷத்துக்கு மேல் ஆகியும், இன்னமும் அந்த வீட்டின் சமையலறையை எட்டிப் பார்த்ததில்லை; சமையல் செய்யும் பரிமளத்திடமும் நேருக்கு நேர் நின்று உறவுக்காரராய் மதித்து ஒரு வார்த்தை பேச முடியவில்லைதானே!

உறவுக்காரராகவா? யாரை, பரிமளத்தையா?

அது எப்படி சாத்தியம்?

சதாசர்வகாலம் ஏசுவே ஏசுவே என்று முணுமுணுத்து மெழுகுவர்த்தி ஏற்றி, மண்டியிட்டு ஜபம் செய்பவரை உறவு முறையாக ஏற்றுக்கொள்ள மனசு முரண்டுகிறதே!

சரி, ஜாதி, மதத்தை விட்டுவிட்டு, மனுஷியாக மட்டும் பார்க்கலாம் என்றாலும், முடியாதபடி வசந்தாவிடம் எதற்கும் கோள் சொல்லிக் கொடுத்து, ஒன்றைப் பத்தாக்கும் அந்த குணம் குறுக்கே நிற்கிறதே!

என்னமோ தான் ஒருத்திதான் ஊர் உலகத்தில் இல்லாத தினுசில் வேலை பண்ணுகிற மாதிரியும், மற்றவர்களெல்லாம்

கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து வெட்டியாய்ப் பொழுதைக் கழிக்கிற மாதிரியும்...! சமயம் கிடைத்தபோதெல்லாம் அக்கம்பக்கம் புலம்புவது தெரியாதா என்ன!

இப்படி எந்த வகையிலும் ஒட்டமுடியாமல் தவிப்பதால்தான் ஒரு சுவாதீனத்துடன் 'பிளாஸ்கை நன்றாகக் கழுவுங்கள்' என்றோ, 'காபிக்கு இன்னும் கொஞ்சம் சூடு வேண்டும்' என்றோ அபிப்பிராயம்கூடத் தெரிவிக்க முடியவில்லை.

ஊஹூம்...

சுயபச்சாதாபத்தின் காரணமாய் நீளநீளமாய் பெருமூச்சுக்கள் வெளிப்பட, மெயின் ரோடில் இருந்த சுமாரான ஹோட்டல் ஒன்றினுள் நுழைந்து, நுரையும் ஆவியுமாய் ஒப்பனை செய்யப்பட்டிருந்த சாதாரண காபியைக் குடித்து வெளியே வந்தவர், பிளாட்பாரத்தில் கடை பரப்பியிருந்த கறிகாய்க் கடைகளுக்கு அருகில் சென்றார்.

தோள் பையில் மடித்து வைத்திருந்த பிளாஸ்டிக் பையை எடுத்து, காய்கறிகளைப் போட்டு விரலிடுக்கில் மாட்டிக்கொண்டு, சற்று தள்ளியிருந்த மளிகைக்கடை வாசலில் போய் நின்றார்.

காலை அலுவலகம் போகும்முன் மருமகள் எழுதி கூடத்து அலமாரியில் வைத்துவிட்டுப் போயிருந்த மளிகைச் சாமான் லிஸ்டைக் கொடுத்து, பொட்டலங்களை வாங்கி தோள்பையில் அடுக்கினார்.

தோள்பையும், கையில் இருந்த பிளாஸ்டிக் பையும் கனக்க நடந்து வீடு வந்து சேர்ந்தபோது, பரிமளம் வாசலிலேயே ராஜாவுடன் நின்றிருந்தார்.



''வெளிய போறவங்க மாத்து சாவி எடுத்திட்டுப் போகக் கூடாதா? முழுக்க சுத்திட்டு வர்றவரைக்கும் நா காத்திட்டு இருக்க வேண்டியிருக்கு...'' - கையில், தோளில் தொங்கிய பைகளை வாங்கக்கூட முற்படாமல், பொதுவாகச் சொல்லி விட்டு ஒருவித அலட்சியத்துடன் பரிமளம் கேட்டை நோக்கி நடக்க, அதுவரை இருந்த பொறுமை மறைந்து தணிகாசலம் சடக்கென்று கத்தினார்.

''போறதுன்னா போயிருக்கறதுதானே! மத்தவங்க வர்றவரைக்கும் நாம்பாட்டுக்கு வராந்தாவுல உக்காந்து கிட்டிருக்கேன்... சரி, இப்ப ராஜா வேற கூட எதுக்கு? அவனை எறக்கி விட்டுரலாமே...''

பரிமளம் நிற்காமல் நடந்துகொண்டே பேசினார்.

''அ? ஒருசமய சந்தர்ப்பத்துல பார்த்துக்க மனசில்லாதவருக்கு இப்ப மட்டும் பேச்சு என்ன? நீ வாடா ராஜா, சர்ச்சுல பிரார்த்தனை முடிஞ்சிரப் போவுது!''

போகிற போக்கில், பேரனையும் கூட்டிக்கொண்டு சர்ச்சுக்குப் போகப் போவதாக பரிமளம் கூறிவிட்டுச் சென்றது, உள்ளுக்குள் பொங்கிய ஆத்திரத்தை அதிகமாக்கச் செய்ய, இனியும் பொறுக்கமுடியாது என்ற வேகத்துடன் இரவு சாப்பிட வர மறுத்து மாதவனுக்குத் தன் கோபத்தை உணர்த்தினார்.

''ஏம்பா சாப்பாடு வேணாங்கறீங்க... வயிறு சரியில்லையா?''

சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த தணிகாசலம் 'ப்ச்' என்று சூள் கொட்டி, கண்களை மூடிக்கொண்டார்.

''சொல்லுங்கப்பா...''

"என்னத்த சொல்றது மாது? நடக்கற ஒவ்வொண்ணை யும் நினைச்சிட்டா, தாக்கப் புடுங்கிக்காம இன்னும் உயிரோட ஏண்டா இருக்கம்னு அவமானமா இருக்கு..."

"என்ன நடந்திச்சுப்பா?"

தணிகாசலம் மறுபடி சூள் கொட்டினார். அப்புறம் கலங்கிய கண்களுடன் செம்பிய குரலில், பேரனைப் பரிமளம் சர்ச்சுக்கு அழைத்துப் போவதையும், தான் வேண்டாத பழக்க வழக்கங்கள் என்று நினைப்பதை சொல்லித் தருவதையும், தன் கோணத்திலிருந்து கண், காது, மூக்கு வைத்து கச்சிதமாய் புலம்ப,

பொறியாய் இருந்ததை ஊதிவிட்டு ஜ்வாலையாக ஆக்கின மாதிரி எரிந்தது மாதவனுக்கு.

இரவு படுக்கையறையில் நுழைந்ததும் நுழையாதது மாய் வசந்தாவை நிற்கவைத்துக் கேட்டபோது தன் பக்கத்து நியாயத்துடன் அவளும் தயாராகவே வந்திருப்பது தெரிந்தது.

"என்ன? அத்தம்மா ராஜாவை சர்ச்சுக்குக் கூட்டிட்டுப் போறது எதுக்குனு உங்கப்பா கேட்டாரா? ஏன், தினம் காலைல அவரு பூஜை செய்யறப்போ இவனையும் கூட வெச்சிக்கிட்டு அத்தனையும் கத்துக் குடுக்கறாரே, இது மட்டும் ரொம்ப நியாயமா? ஒரு நாளைப் போல ஏழு தரம் கல்பூரம் காட்டி, பூவாக் கொட்டி ஓட்டி அடிக்கறதையும், பூஜைக்கு மணி அடிக்க சந்தனம் அரைக்க நம்ப ராஜாவைக் கூட வச்சுக்கறதையும் தட்டிக்கேக்க தைரியம் இல்ல... இந்த அழகுல, அத்தம்மாவைக் குத்தம் சொல்ல வர்றாரு..."

"ஏன் வந்தா என்ன? அப்பா பூ போட்டு கல்பூரம் காட்டறது தப்புன்னா, உங்க அத்தம்மா மட்டும் பீடத்துக்கு ரோஜாப் பூ வெச்சி மெழுகுவர்த்தி ஏத்தலாமா?"



"தாராளமா... தோட்டம் முழுக்க அவங்க வெச்ச செடிங்கதான்... அவங்கதான் தலைப்பொறுப்பா பராமரிக்க றாங்க... செய்யறவங்களுக்கு இந்த அளவுகூட உரிமை இல்லியா?"

"செய்யறவங்களா? அப்படின்னா இத்தனை வசதியா இருக்கறோமே, இத்தனையும் தந்தது யாரு? எங்கப்பாதானே? இன்னிக்கும் காய்கறிலேர்ந்து மளிகை வரைக்கும் அவருதான் வாங்கிப் போடறாரு தெரியுமில்லே!"

பேச்சு எங்கோ ஆரம்பித்து எதையோ நோக்கிப் போவதைப் புரிந்துகொள்ள முடிய, வசந்தா கைகளை இடுப்பில் வைத்து கண்களை இடுக்கியவாறு கேட்டாள்.

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க?"

"என்னவா? எதச் சொல்றதுன்னு புரியாம திணறிக் கிட்டில்லே இருக்கேன்... இந்த வீட்டுல நடக்குற எதுவுமே எனக்குப் புடிக்கல... சரி, ஏதோ தொலையுதுனு பார்த்தா, இப்ப ரொம்ப அளவுக்கு மிஞ்சிப் போவுது... அத்தம்மா எதுக்கு ராஜாவ சர்ச்சுக்குக் கூட அழைச்சிட்டுப் போறாங்க?"

வசந்தா கேலியாய் சிரித்தாள்.

"அது கிடக்கட்டும், தாத்தா மாதிரி ஈரத் துணிய இடுப்புல சுத்திக்கிட்டு, தலையில் குட்டிக்கறதோட எம்பிள்ள, இன்னும் முழுசா ஒரு வார்த்தைகூடப் பேச வரல்லே, அதுக்குள்ள உங்கப்பா மாதிரி 'காக்க... காக்க'னு ஏதோ ஸ்லோகத்தச் சொல்றானே, இதுக்கெல்லாம் என்ன சொல்றீங்க? எதுவுமே புடிக்கலைனா, காலை வேளைல உங்கப்பா அறைக்கு ராஜாவை அனுப்பாமத் தடுத்து நிறுத்தறத முதல்ல செஞ்சிட்டு அப்புறமா பேசவாங்க... வசதியாம் வசதி, பெரிய வசதி! பணத்த விசிறி எறிஞ்சா ஆச்சா! மனுஷங்களுக்கு

பண்டு வேணும்? யார் கேட்டா இந்தப் பெரிய்ய வீட்டையும், தோட்டத்தையும்! மனசுல நிம்மதி இல்லாம வசதி என்ன வேண்டிக்கிடக்கு வசதி... குனியக் குனிய குட்டினா எத்தனை நாளைக்கு தாங்கிக்க முடியும்? அத்தனையும் விட்டுட்டு பழைய வீட்டுக்கே போயிட நாங்க ரெடி... ரொம்பத்தான் லொட்டறீங்க...ஆமா சொல்லிட்டேன்..."

இன்னும் நீளநீளமாய் எதையெதையோ கத்தலாய் பேசி, நேரடியாகவே எகிறிக்கொள்ள ஆரம்பிக்க, அதுநாள் வரை காக பணத்தினால் போர்த்தப்பட்டிருந்த மரியாதை என்கிற மெல்லிய திரை சரக்கென்று கிழிய, சுயரூபம் வெளிப்பட்டு வீட்டையே அதிர வைக்கத் துவங்கியது இதற்கப்புறம் தான்...

# 21

குளித்துவிட்டு பாத்ரூமிலிருந்து வெளிப்பட்ட வசந்தா, கண்ணாடி முன் நின்று நைட் டிரெஸ்ஸின் பட்டன்களைப் போட்டுக்கொண்டே, "தூங்கிட்டீங்களா மாது?" என்றாள்.

மாதவனிடமிருந்து பதில் ஏதும் வராததால் மறுபடி "தூங்கிட்டீங்களா..." என்று ஆரம்பிக்க, கட்டிலில் மல்லாக்கப் படுத்து விட்டத்தை வெறித்துக்கொண்டிருந்த மாதவன் எரிச்சலுடன் கத்தினான்.

"இதென்ன கேள்வி? தூங்கியிருந்தா, முழிச்சுகிட்டு 'ஆமா'ன்னு சொல்லணுமா? இல்லே, முழிச்சுகிட்டிருந்தா 'இன்னும் தூங்கலே, பாரு கண்ணு தொறந்துதான் இருக்கு'ன்னு காட்டணுமா?"



வசந்தா வெடுக்கென்று திரும்பினாள்.

"நா என்ன சொல்லிட்டேன்னு இப்படி சண்டைக்கு வர்றீங்க?"

"ஆமா, நா சண்டைக்குத்தான் வரேன்... பொழுது போகலை இல்லே, அதான்..."

"ப்ச்... வரவர சாதாரணமா பேசவே உங்களுக்கு மறந்திடுச்சுன்னு நினைக்கிறேன். எப்பப்பாரு நாய் மாதிரி வள்ளுனு..."

"ஆமா... அப்படித்தான் நாய் மாதிரிதான் விழுவேன்... மிருகங்க மத்தில வாழறப்போ நாமளும் அது மாதிரிதானே இருந்துக்கணும்?"

வசந்தா கோபத்துடன் இடுப்பில் கையை வைத்தபடி நின்றாள்.

"இப்ப யாரை மிருகம்னு சொல்றீங்க?"

மாதவன் கைகளைக் கூப்பிக்கொண்டான்.

"அம்மா தாயி... யாரையும் இல்லே... நீ சண்டை போட ஆரம்பிச்சிடாதே... எனக்குத் தூக்கம் வருது..."

திரும்பிப் படுத்தவனுள் மாலையில் அப்பாவும் அத்தம்மாவும் அவனுக்கு எதிரிலேயே வாக்குவாதம் செய்து கொண்டது எட்டிப்பார்க்க, எரிச்சல் அதிகமானது.

இப்போதெல்லாம் தினமும் வீட்டுப்படி ஏறும்போதே ஏதேனும் புகார் ஒன்றை நின்று கேட்க வேண்டி வருவதும், ஒருத்தருக்கு சமாதானம் சொல்லப்போனால் அடுத்தவருக்குக் கோபம் அதிகமாவதும்... இதன் காரணமாய் வசந்தா இவன் நடுவில் தர்க்கம் மூளுவதும் ரொம்பவும்தான் அதிகமாகிவிட்டது.

உப்புப் பெறாத சமாசாரங்களுக்காக...

மேலே விவாதத்தைத் தொடர விரும்பாதவனாய் மாதவன் மீண்டும் புரண்டு சற்று தள்ளிப் படுத்திருந்த ராஜாவை அணைத்துக்கொண்டான்.

தூங்கும் மகனின் முகத்தையும் தலையையும் தடவிக் கொடுக்கையில், அந்தக் கன்னத்துச் செழுமையும், வழவழ ஸ்பரிசமும் ஏனோ வசந்தாவின் ஜாடையை அப்பட்டமாய் பிரதிபலிக்க, சற்றே எரிச்சல் குறைந்து ஒருவிதமான ஏக்கம் பரவிற்று மாதவனுக்குள்.

வசந்தாவை இப்படித் தொட்டுப் பேசியோ, ஆசை தீர அணைத்து முத்தமிட்டோ எத்தனை காலமாயிற்று!

சதா வாக்குவாதமும் சச்சரவும் வாழ்வை ஆக்ரமிப்பதில் இனிமையான, மென்மையான உணர்வுகள் மொத்தமும் அடியில் அமுங்கி தங்கிப்போய் விட்டனவே!

அபூர்வமாய் எதையாவது பேசத் துவங்குகையில் அடி மனசில் உறைந்து போயிருக்கும் கசப்பு யாரோ கூப்பிட்ட மாதிரி மேலெழுந்து வந்து மறுபடி திரையைத் தொங்கவிட்டு விடுகிறது.

இன்று, இப்பொழுது ஆன மாதிரி...

முன்பெல்லாம் இப்படியா இருந்தது?

இரவு படுக்கும்முன் பளிச்சென்று குளித்து, மணக்க மணக்க அவள் பாத்ரூமிலிருந்து வெளியே வந்ததும் வராதது மாய் கிட்டத்தில் ஓடிப்போய் அவளை மொத்தமாய் நுகர்ந்து...

அந்த சந்தோஷமும் சல்லாபமும் எங்கேதான் போயின?



சரி, தானாகப் போய் குழைய வேண்டாம், இன்று அவளாய்ப் பேச வந்தபோதுகூட... எதற்காக என்ன, ஏது என்று கேளாமல் அப்படி எரிந்து விழுந்தேன்?

கும்பிய உணர்வுகள் லேசாய் விரிந்த மாதிரி தோன்ற, மாதவன் மெள்ளத் திரும்பினான்.

"ஸாரி வசு... என்னமோ கோவத்துல பேசிட்டேன், எதுக்குக் கூப்பிட்டே?" என்றான் கிசுகிசுப்பாய்.

மேஜையில் இருந்த கைப்பையிலிருந்து ஏதோ காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக்கொண்டிருந்த வசந்தா கோபம் மாறாமல் பதில் சொன்னாள்.

"எதுக்கும் கூப்பிடலே..."

"ப்ச், பாத்தியா! கோவிச்சுக்கறியே... நான்தான் ஸாரி சொல்லிட்டேன் இல்லே, அப்பறம் என்ன? சொல்லும்மா ப்ளீஸ்..."

அவனுடைய 'சொல்லும்மா'வில் ஒரு விநாடி நெகிழ்ந்த வசந்தா அருகில் வந்து கட்டில் விளிம்பில் அமர்ந்து கொண்டாள்.

"ராஜாவை ஸ்கூல்ல சேர்க்கணும்றது உங்களுக்கு நினைப்புல இருக்கா?"

"ஏன் இல்லாம? உங்க ஆபீஸ் மானேஜரோட மனைவி ஏதோ நல்ல ஸ்கூல்ல பிரின்ஸிபாலா இருக்காங்க, அவங்க கிட்ட சொல்லியிருக்கேன், சுலபமா ஸீட் கிடைச்சிடும்னு நீ சொல்லியிருந்தியே!"

"இன்னிக்கு அவங்க ஸ்கூலுக்குப் போய் அப்ளிகேஷன் வாங்கிட்டு வந்திருக்கேன்... எல்லா விவரங்களையும் இதுல

எழுதிக் கொடுத்திட்டா, ஸீட் கொடுக்கறேன்னு அந்தம்மா சொன்னாங்க! ஒவ்வொருத்தர் மாதிரி க்யூவுல நிக்காம நமக்கு உடனே கொடுக்கறேன்னு அவங்க சொல்லிட்டது எத்தனை திம்மதியா இருக்கு தெரியுமா?''

மாதவன் சந்தோஷத்தில் கண்களை அகல விரித்தான்.

''வெரிகுட்... ஐயாயிரம், பத்தாயிரம்னு டொனேஷன் கேக்கற இந்தக் காலத்துல நமக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா! இந்த சந்தோஷத்தக் கொண்டாடியே தீரணும், வசு, கிட்ட வாயேன்...''

''அ? அதெல்லாம் அப்பறமா... இப்ப மொதல்ல இந்த அப்ளிகேஷன் ஃபாரத்துல எல்லாத்தையும் எழுதி பூர்த்தி பண்ணியாகணும்!''

''இப்பவேவா? நாளைக்கு செய்துக்கக் கூடாதாம்மா?''

''இல்லே மாது... காலையில எழுந்தா நூறு வேலை குறுக்க வந்திடும். யாராவது ஏதாவது சொன்னா உங்க மூட் கெட்டுடும்... இப்ப சோம்பலா இருந்திட்டம்னா அப்பறம் நமக்குதான் கஷ்டம்... எழுந்திருங்க... ம், ஒவ்வொண்ணா நீங்க சொல்லிகிட்டே வாங்க, நா எழுதறேன்... முதல்ல பேரு...''

திறந்த பேனாவுடன் அவள் தயாராக உட்கார, மாதவன் ஒரு நிமிடம் யோசித்தான்.

''அவனுக்குத்தான் இன்னும் முறைப்படி பேர் வைக்கவே இல்லியே, வசு! ராஜானு சும்மா வீட்டுல கூப்பிடறோம், அதையேவா இதுல எழுதறது?''

''இப்ப வெச்சிட்டாபோச்சு... நல்ல பேரா ஒண்ணு சொல்லுங்க...''



''கார்த்திகேயன்னு வெக்கலாமா? மாடர்னா, 'கார்த்திக்'னுகூடக் கூப்பிட்டுக்கலாம்... அப்பாவுக்கும் திருப்தியா...''

அவனை முடிக்க விடாமல் வசந்தா முறைத்தாள்.

''ஏன், முருகன் பேர்தான் வெக்கணுமா? அத்தைக்குப் புடிச்ச பேரா வெச்சு கூப்பிட்டா, பையன் 'ஏன்'னு கேக்க மாட்டானா? எடுத்தவுடனே தகராறு செய்ய ஆரம்பிச்சிட்டீங்களே!''

'நானா தகராறு செய்கிறேன்' என்று கத்த வாயெடுத்த மாதவன், சற்றுமுன் எழுந்த கேள்விகளும், செய்துகொண்ட தீர்மானமும் நினைவுக்கு வர, பிரயத்தனப்பட்டு வாய் மூடினான்.

ஒரு நிமிஷ மௌனத்துக்குப்பின் வசந்தாவே பேசினாள்.

''நாம் ஏற்கெனவே நிறைய பேசிட்டோம் மாது, இதப்பத்தியெல்லாம்... எந்த பேரு வெச்சாலும் யாருக்காவது குறை இருந்துகிட்டேதான் இருக்கும்... அதனால இப்ப இருக்கறபடி 'ராஜா'ன்னே ஸ்கூல்லியும் கொடுத்துடுவோம்! யாருக்கும் வருத்தம் இருக்காது பாருங்க...''

முதலில் தயங்கி, பின், வேறு வழியில்லை என்பதால் அதை ஏற்று தலையாட்டிய மாதவன், ''சரி, அப்படியே எழுது... அடுத்து என்ன கேக்கறாங்க, அம்மா பேரு, அப்பா பேரு, வீட்டு அட்ரஸ் - இவ்வளவுதானே?'' என்றான்.

வரிசையாய் எழுதிக்கொண்டே வந்த வசந்தா, திடுமென நிமிர்ந்தாள்.

''இங்க பாத்தீங்களா, நீங்க இந்தியரானு கேட்டுட்டு, பின்னாடியே 'உங்க மதம் எது?'னு ஒரு கேள்வி கேட்டிருக்காங்க! இதுக்கு என்ன பதில் எழுதட்டும்?''

மாதவன் புருவங்களைச் சுருக்கிக்கொண்டு அவளைத் தீவிரமாகப் பார்த்தான்.

''மதமா? நாமதான் அதுல நம்பிக்கை வெக்க வேணாம்னு முடிவு பண்ணியிருக்கோம் இல்லே? அதனால அந்தக் கேள்விக்கு பதில் எதுவும் எழுத வேணாம்... சின்னக் கோடு போட்டு விட்டுடு...''

அப்போதைக்கு அந்தக் கேள்வியைத் தவிர்த்து, மற்ற விவரங்களை மட்டும் எழுதி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துவிட்ட திருப்தியோடும் சந்தோஷத்தோடும் தூங்கப் போனாலும், அடுத்து வந்து நாலாம் நாள் இருவரும் அலுவலகத்துக்கு லீவு போட்டுவிட்டு, மகனைப் பள்ளியில் சேர்க்கும் குதூகலத்தோடு பள்ளி முதல்வரைச் சென்று பார்த்தபோது, விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யாமல் விட்ட காலி இடம் ஒரு பெரிய பிரச்னையாக எதிரில் வந்து நின்றது.

''மதம் எதுன்ற கேள்விக்கு எதுவுமே எழுதாம விட்டிருக்கீங்களே கவனிக்கலியா?'' என்று முதல்வர் கேட்க, ஒருவரையொருவர் தயக்கமாகப் பார்த்துக்கொண்டார்கள்.

அப்புறம் வசந்தாதான் மெதுவாய் பதில் கூறினாள்:

''ஸாரி மேடம், எங்களுக்கு அதுல நம்பிக்கை இல்லே...''

கையிலிருந்த பேனாவையும் பேப்பரையும் அப்படியே டேபிளில் போட்டுவிட்டு, நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து



உட்கார்ந்த முதல்வர், லேசான புன்சிரிப்போடு இவர்களை ஏறிட்டார்.

''நம்பிக்கை இருக்கு, இல்லைன்றது வேறம்மா... ஆனா, உங்களுக்குனு ஒரு மதம் இருக்கணுமே, அது என்னதுனுதான் கேக்கறோம்...''

''அப்படி எதுவும் எங்களுக்கு இல்லே...''

முதல்வர் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துச் சுழற்றியபடியே தலையை ஆட்டி, 'நான் அதைக் கேட்கவில்லை' என்பது போல் மறுத்தார். பின், ''உங்களுக்கு இல்லாட்டி பரவாயில்லே, ஆனா உங்களப் பெத்தவங்களாவது ஏதாவது ஒரு மதத்தச் சேர்ந்தவங்களா இருந்திருக்கணும், இல்லே? உங்க பேரு 'மாதவன்'னு சொல்றீங்க. அப்பஎன்னா ஹிந்துதானே?'' என்று வினவினார்.

மாதவன் 'ஆம்' என்று தலையாட்ட, வசந்தா அவசரமாய்க் குறுக்கிட்டாள்.

''அவரு ஹிந்துதான் மேடம், ஆனா, நா ஒரு கிறிஸ்டியன்... கல்யாணத்துக்கு முன்னாடி! இப்ப இது ரெண்டுல எதையுமே நாங்க ஃபாலோ பண்றதில்லே... நாங்க காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்கனு உங்க கணவர் உங்ககிட்டே சொல்லியிருப்பார்னு நினைச்சோம்...''

''இல்லே மிஸஸ் மாதவன்... அவர் ஆபீஸ்ல நீங்க வேலை செய்றீங்கனுதான் தெரியுமே தவிர, இதெல்லாம் தெரியாது! சரி, ஜாதி மதம் எதுவும் பார்க்கிறதில்லேன்னா, உங்களுக்குக் கடவுள் நம்பிக்கையும் இடையாதா?''

''......''

"சொல்லுங்க, நம்பிக்கை இருக்கு, இல்லேன்னு ஒத்துக்கறது கூடவா கஷ்டம்?"

"அதில்லே... குறிப்பிட்ட சாமின்னு கும்பிடறதில்லையே தவிர, மனசுக்குள்ள அப்பப்ப 'கடவுளே'ன்னு பொதுவா நினைக்கறது உண்டுதான்! அது ஒரு மாதிரி பழக்க தோஷம்னு சொல்லலாம்."

"அதே மாதிரிதான் இந்த அப்ளிகேஷனும்! கால காலமா சில விபரங்களை சேகரிக்கற விதத்துல இதையும் அமைச்சிருக்காங்க... அதுல ஒரு விபரம் இல்லேன்னாக்கூட விண்ணப்பத்தை ஏத்துக்க முடியாது, தெரியும் இல்லே?"

இதுவரை பலவிதமாகப் பேசியும் இன்னமும் இதையே வலியுறுத்துகிறீர்களே என்கிற அலுப்பு முகத்தில் அப்பட்டமாய் தெரிய, மாதவன் கேட்டான்;

"தப்பா எடுத்துக்காதீங்க மேடம், எங்க நிலைய நாங்க சொன்னப்புறமும் நீங்க அதையே..."

"மிஸ்டர் மாதவன், நீங்க ஒரு விஷயத்தை மறந்திட்டுப் பேசறீங்க! இந்த ஸ்கூல் எனக்குச் சொந்தமில்லே! நா இங்க வெறும் பிரின்ஸிபால்தான்... அப்படியே சொந்தமா இருந்தாக்கூட, அரசாங்கம் வெச்சிருக்கற சில சட்ட திட்டங்கள நாங்க அனுசரிச்சே ஆகணும்! அப்ளிகேஷன்ல கேட்டிருக்கற எந்த விஷயமும் எங்களுடைய சொந்த லாபத்துக்காக இல்லே..."

"அரசாங்கம்தான் கேக்குதுனு எங்களுக்கும் புரியுது மேடம்... ஆனா, 'கலப்பு மணம்' செய்துக்கங்கனு இதே அரசுதான் சொல்லுது! செஞ்சிகிட்டவங்கள வரவேற்காம அது கேக்கற கேள்வியப் பாருங்க! ஜாதி மதம் பாக்காதீங்கனு ஒரு



பக்கம் சொல்லிட்டு, இப்ப அதுவே இந்த மாதிரி அனாவசிய விபரத்தையெல்லாம் கேட்டா..."

முதல்வர் லேசாக முகம் சுணுங்கப் பார்த்தார்.

"ஐ'ம் ஸாரி... இப்ப நாமதான் தேவையில்லாம சர்ச்சையில் ஈடுபட்டிருக்கோம்னு தோணுது! இதைச் செய்யணும், அதைச் செய்யக்கூடாதுனு தீர்மானிக்க நாம மந்திரிங்க இல்ல... பிடிக்காதத மாத்திட நம்ம கைல எந்த அதிகாரமும் இல்ல... புரிஞ்சிக்குங்க. ஏன், எதுக்குனு கேள்வி கேக்கறத விட்டுட்டு, அவங்க கேக்கற விவரங்களக் குடுத்திடறதுதான் உங்களுக்கு நல்லது! இப்ப இல்லாட்டியும் கூட, உங்க பையன் வளர்ந்து காலேஜ் போனாலோ, இல்லே அதுக்கப்புறம் வேலைக்குப் போனாலோ - எங்கயுமே இந்தக் கேள்வியதான் முதல்ல கேக்கப் போறாங்க! நீங்க பதில் சொல்லலைன்னா நஷ்டம் உங்களுக்குத்தான்! நானேகூட, நீங்க என் கணவருக்குத் தெரிஞ்சவர்ங்கறதாலதான் இவ்வளவு நேரம் பேசிகிட்டு இருக்கேன், இல்லாட்டி அப்ளிகேஷனப் பார்த்த உடனேயே சீட் கிடையாதுனு சொல்லி இருப்பேன்! நா மட்டும் இல்லே, எந்த ஸ்கூலுக்குப் போனாலும் இந்த விவரமில்லாம உங்களுக்கு சீட் கிடைக்காது!"

கறாராய் அவர் பேசி நிறுத்த, மாதவன் தவிப்புடன் வினவினான்.

"இப்ப என்ன செய்யணும்னு சொல்றீங்க மேடம்?"

"இது வெறும் அப்ளிகேஷன் மட்டும்தான்... இதுல ஒரு மதத்துடைய பேரை எழுதறதால, அந்த மதத்தைத் தழுவிடணும்னோ, அவங்க கடவுளை வணங்கியே ஆகணும்னோ கட்டாயம் எதுவும் இல்லே! அதனால ஒரு வார்த்தை இதுல எழுதிடறதுல உங்களுக்கு என்ன கஷ்டம்?"

ஹிந்து அல்லது கிறிஸ்டியன்னு சும்மா ஒரு பேச்சுக்காக எழுதிட்றதால என்ன ஆகிடப்போகுது? பிராக்டிகல்...''

இதுவரை இருந்த கனிவு மறைந்து, ஒரு கண்டிப்பு அவர் குரலில் தென்பட, மாதவனும் வசந்தாவும் மறுபடியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

''என்ன யோசிக்கறீங்க? நம்ம ஊர்ல முக்கால்வாசிப் பேர், புருஷன் வீட்டுக்குப் போய் அவங்க பழக்க வழக்கங்களைத்தான் அனுசரிக்கிறாங்க... அதனால, மிஸ்டர் மாதவனோட ரிலிஜன், அதாவது 'ஹிந்து'னு போட்டுடட்டுமா?''

வசந்தா அவசரமாகக் குறுக்கிட்டாள்.

''அ... அது எப்பிடி? இப்ப வெறும் எல்.கே.ஜி. அட்மிஷனுக்காக இதக் குறிப்பிட்டு எழுதிட்டம்னா, அப்புறம் காலேஜ், வேலைனு எல்லாத்துக்கும் இதையே இல்ல எழுதணும்? வேணாம் வேணாம்னு சொல்லி, கடைசியில் அவன் ஹிந்துவாவே இல்ல ஆயிடுவான்!''

''இல்லே வசு, இது ஒரு பேச்சுக்குத்தானே? சும்மா எழுதறதாலே ஒண்ணும் ஆயிடாதுனு இப்பத்தானே மேடம் சொன்னாங்க?''

''அப்படீன்னா கிறிஸ்தவ மதம்னே எழுதிடலாமே? எத எழுதினா என்ன?'' மற்றவர் முன்னிலையில் இருப்பதை மறந்து இருவரும் வாக்குவாதம் செய்ய ஆரம்பிக்க, முதல்வர் கையைக் குறுக்கே நீட்டித் தடுத்தார்.

''உங்க டிஸ்கஷனை வெளிய வெச்சுக்கங்க... இன்னம் நிறைய பேரு காத்திருக்காங்க; அவங்கள எல்லாம் நா பாக்கணும். நீங்க வீட்டுக்குப்போய் ஒரு முடிவு பண்ணிட்டு வாங்க... வேண்டப்பட்டவங்கன்றதால, இன்னிக்கு சாயங்



காலம்வரை உங்களுக்காக ஒரு சீட் வெச்சிருக்கேன், அதுக்கப்புறம்னா, ஸாரி... என்னால எதுவும் செய்ய முடியாது!''

அறையினுள் நுழைந்தபோது இருந்த குதூகலம் முற்றிலுமாய் கரைந்துபோய், சற்றும் நினைத்துப் பார்க்காத ஒரு விஷயம் பூதாகாரமாய் வளர்ந்து பயமுறுத்த, அன்று மாலைக்குள் மட்டுமல்ல, அதற்குப் பிறகு வந்த நாட்களிலும் உறுதியான முடிவு எதையும் எடுக்க முடியாமல் திண்டாடி, எனக்குத்தான் வாய் இருக்கிறது என்கிற தினுசில் ஆளாளுக்கு தன் கோணத்திலிருந்தே தர்க்கித்து, கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டதோடு, தேடிப்போன மற்ற பள்ளிகளிலும் இதே பிரச்னை குறுக்கே நந்தியாய் நின்றதில் -

நல்ல கல்வியும் ஒழுக்கமும் கிடைக்கும் என்று சொல்லப்பட்ட எந்தப் பெரிய பள்ளியிலும் இடம் கிடைக்காமல், பணம் பண்ணும் வியாபாரத்துக்காக மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட ஒரு சாதாரண சின்னப் பள்ளிக்கூடத்தில் தான் கடைசியில் ராஜாவை சேர்க்கும்படி ஆயிற்று - அதுவும் ஐந்தாயிரம் 'நன்கொடை' கொடுத்த பிறகு!

# 22

தட தட வென்று 'ஷூ' கால்களோடு உள்ளே வந்து மேஜைமேல் இருந்த புத்தகங்களைத் தள்ளி, கலைத்து, கீழே விழுந்தவைகளை மீண்டும் எடுத்து வைக்கக்கூடத் தோன்றாமல் நகத்தைக் கடித்தபடி எதையோ தேடி, அது கிடைக்காத ஏமாற்றத்தோடு வெளியே ராஜா ஓட, அத்தனையும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த

தணிகாசலத்துள் சன்னமாய் கோபம் புருபுருவென்று தலை தூக்கியது...

'ஷூ' காலோடு அறைக்குள் வராதேடா, சாமி படங்கள் இருக்கின்றன, கொஞ்சம் பயபக்தியாய் நடந்து கொள்' - என்று நூறு தரம் காடியாய்க் கத்தியாயிற்று; தொண்டைத் தண்ணி வரண்டதுதான் மிச்சமே ஒழிய, இவர் ஏன் சொல்கிறார், எதற்காகச் சொல்லுகிறார் என்று எதையும் ராஜா புரிந்துகொண்டதாய் காணோம்!

புரிந்துகொள்ள ஆர்வம் காட்டினால் புரியும்... புரிந்து கொள்ள மாட்டேன் என்று அடம் பிடிப்பவனை எப்படி வழிக்குக் கொண்டுவருவது!

ஏதோ சொல்லுவார்களே, உண்மையிலேயே தூங்குகிற வனை வேண்டுமானால் எழுப்பலாமே ஒழிய, தூங்குகிற மாதிரி பாசாங்கு செய்பவர்களை எழுப்பவே முடியாது - என்று, அதே கதைதான் இங்கும்...

வயசு ஆகிறது கடாமாடு மாதிரி ஒன்பது... தின்பதற்கும், தூங்குவதற்கும் நன்றாகத் தெரிகிறது; ஆனால் பெரியவர், பெருந்தலை, மரியாதை, அடக்கம், பவிசு என்றால் மட்டும் வீசை என்ன விலை என்கிற தினுசில் நடத்தை இருக்கிறது...

எங்கே இருந்து வந்தது இவனுக்குள் இத்தனை முரட்டுத்தனமும், அடாவடியும்! இவனைப் பெற்ற மாதவன் இந்த வயசில் என்னமாய் அடக்க ஒடுக்கமாய் இருப்பான்!

வெள்ளன எழுந்து பல்விளக்கி, நெற்றியில் துளி திருநீறு பூசி, வாசத் திண்ணையில் உட்கார்ந்து தேவாரமும், திருவாசகமும் சொன்னான் என்றால், அக்கம் பக்கத்தார் 'என்ன



குரல் இது; என்ன உச்சரிப்பு இது! என்னமாய் பக்தி சிரத்தையுடன் இந்த வயசில் சொல்லுகிறான்!' என்று பக்கத்தில் நின்று வியப்போடு கேட்டுவிட்டுப் போவார்கள்.

ஹூம். அது அந்தக் காலம்.....,

எனக்குத்தான் அதிசயமாய் பிள்ளை பிறந்திருக்கிறது என்கிற அசட்டுத்தனம் எதுவும் இல்லாமல், பையன் நாளைக்கு ஊர் மெச்ச வாழ வேண்டுமே என்கிற ஆதங்கத்தில், பயத்தில், கட்டுப்பாடாய் குழந்தைகளை வளர்த்த காலம்...

இப்போது மாதிரியா?

குழந்தைகள் உசத்திதான், அதற்காக இப்படியா? தலைகால் புரியாமல், பெற்றவர்கள் என்கிற மட்டு மரியாதை இல்லாமல்... தூத்தேறி...

பெற்றுவிட்டால் ஆயிற்றா? சிறப்பாக வளர்க்க வேண்டாமா?

ஐயா, தனக்காகத்தான் தெரியவில்லை; என்றாலும் -

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக்கேட்ட தாய்'

- என்று சொல்லி வைத்து விட்டுப் போயிருப்பதையாவது கேட்டுப் புரிந்து அதன்படி நடக்க முயற்சிக்காவிட்டால் எப்படி? ராஜா சரியாகப் படிக்கமாட்டேன் என்கிறான்; வேளைக் கொரு சட்டையை மாட்டிக் கொள்வதிலும், ஊர்சுற்று வதிலும், இந்த வயசிலேயே புத்தி போனால் நாளைக்குப் படித்து, பாஸ் செய்து, நல்ல வேலையில் சேருவது எப்படி, இல்லை ஒருத்தியை கல்யாணம் பண்ணிக்கொண்டு குடித்தனம் செய்யப் போவதுதான் எப்படி?

இதை எல்லாம் சொல்லப் போனால் மாதவனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்து விடுகிறது...

"சின்னப் பையன்தானேப்பா; தானா சரியாயிடுவான்" என்கிறான்.

"ஒண்ணுமில்லாததப் பெரிசு பண்ணாதீங்கப்பா, ஒரு வருஷம் போனா, விளையாட்டுப் புத்தி மாறி அடங்கிடுவான்" என்கிறான். இல்லையென்றால், "எல்லாம் நீங்க ரெண்டு பேரும் கொடுக்கற இடம்தான்... பெரியவங்களா லட்சணமா கண்டிச்சு வளர்க்கிறத விட்டுட்டு ஆனாலும் ரொம்பத்தான் செல்லம் கொடுத்து அவனை குட்டிச் சொவராக்கிட்டீங்க... நா கண்டிச்சப்பல்லாம் 'போனாப் போவுதுடா'-னு குறுக்கே வந்து தடுத்திட்டு, இப்ப 'உம்பிள்ளை மொரடனா இருக்கான்டா'னு புகார் செஞ்சா நா என்ன பண்ணறது?" என்று இவர் மேலேயே பாய்கிறான்!

இடம் கொடுத்தது தானா, இல்லை அந்தப் பரிமளமா? காலையில் கண்விழித்ததிலிருந்து இரவு படுக்கப் போகும் வரை அவர் பின்னால்தான் ராஜா ஓடிக்கொண்டே இருக்கிறான். 'கதை சொல்லுங்க பாட்டி;' 'சாப்பாடு போடுங்க பாட்டி' என்று சதாசர்வகாலம் அவளோடு தானே இருக்கிறான்! அப்புறம், பேரனுக்கு நல்லது, கெட்டதை அவர்தானே மனசில் பதிகிற மாதிரி எடுத்துச் சொல்ல வேண்டும்.

நல்லது, கெட்டதையா?

யார், அத்தையம்மாவா?

கோபத்தூடே, சிரிக்கவும் தோன்றியது தணிகாசலத்துக்கு...



செருப்பை மாட்டிக்கொண்டு டாக்கு டாக்கென்று வீட்டுக்குள்ளேயே, என்னமோ தான் அமெரிக்காவில் பிறந்து, லண்டனில் வளர்ந்த மாதிரி. ஒருவரும் அத்தம்மாவாவது 'இது மரியாதைக் குறைச்சல்டா தம்பி' என்று பேரனுக்கு புத்தி சொல்வதாவது...

பரிமளமும் சரி, வசந்தாவும் சரி வீட்டுக்குள்ளே செருப்பை மாட்டிக்கொண்டு நடப்பது சுத்தமாய் தணிகாசலத்துக்குப் பிடிக்காத சமாசாரம்...

இவர்களோடு சேர்ந்து வாழ வந்த புதிதில் 'என்னடா இது, ஊர் உலகத்துல இல்லாத பழக்கமா இருக்கு?' என்று அருவருத்து முகம் சுளித்தவருக்கு மதிப்பளித்து இருவரும் சில மாசங்களுக்கு வீட்டுக்குள் செருப்பு அணியாமல் இருந்தது நிஜம்தான். ஆனால், மெள்ளமெள்ள 'அத்தையம்மா காலுல ஆணி வந்திருக்கு, செருப்பு இல்லாம நடக்காதீங்கனு டாக்டர் சொல்லிட்டாரு' என்று ஏதேதோ நொண்டிச் சாக்குகளைக் காரணம் காட்டிவிட்டு இருவரும் பழையபடி ரப்பர் செருப்புகளை வீட்டுக்குள்ளும் அணிய முற்பட, அதே தினுசில் வளர்க்கப்பட்ட ராஜாவும் செருப்பு, ஷூ கால்களோடு இவர் பூஜை செய்யும் அறைக்குள்கூட வந்து போவதை என்ன முயன்றும் தடுக்க முடியவில்லைதான்...

நிலைமை ஒருநாள் மிஞ்சிப்போய் "பூஜை அறைக்குள்ளாறயும், சமயல் அறைக்குள்ளாறயும் செருப்புக்காலோடு வர்றவங்க, பக்தி பத்தியும் சாமி பத்தியும் பேசக்கூட யோக்கியதை இல்லாதவங்க" என்று எதற்காகவோ எழுந்த சண்டையில் இதையும் இழுத்துக் கத்தியபோது நமட்டுச் சிரிப்போடு "படத்துலேயும், ஒரு அறைல மட்டும் ஆண்டவன் இருக்கறதா நினைச்சுக் கும்பிடறவங்களுக்குத்தான்

இது தப்பு, இது சரட்டு எல்லாம்... எங்களுக்கு இல்லை..." என்று பரிமளம் முகத்துக்கெதிரேயே கேலி பண்ணிய பிறகு, இது குறித்துப் பேசுவதை விட்டாயிற்று...

போகட்டும்... எக்கேடுகெட்டு எப்படி வேண்டுமானாலும் அவர்கள் போகட்டும்...

இல்லை இல்லை... அப்படி விட முடியவில்லையே!

ஆயிரம் இருந்தாலும் மாதவன் என் பிள்ளை. ராஜா அவன் வயிற்றுப் பேரன்... பரம்பரை ரத்தம் அவர்கள் உடம்பில் ஓடும்போது, ஒழியட்டும் என்று விட்டேத்தியாக இருக்க முடியவில்லையே?

எந்த விதத்திலும் சமாதானமடையாமல் மனசுக்குள் ஆயிரம் கேள்விகள் குடைய, இருப்புக்கொள்ளாமல் தணிகாசலம் எழுந்து நின்றார். ஸ்டாண்டில் தொங்கிய சட்டையை எடுத்து உதறி அணிந்து, வாசலுக்கு வந்து செருப்பை மாட்டிக் கொண்டு படிகளில் இறங்கினார்.

கேட்டருகில் செடிகளுக்கு ரப்பர் குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்த பரிமளத்தைத் தாண்டும்போது சிமெண்ட் தரையில் தேங்கி நின்ற நீரில் கால் வழுக்க, விழப் பார்த்து, ஒரு நொடியாய் சமாளித்தவர் கண்களில் ஆத்திரம் வெளிச்சம் போட உறுமினார்:

"கால் கையை ஒழுங்கா வச்சுகிட்டு, எங்காரியத்தப் பாத்துகிட்டு 'சிவனே'னு இருக்கிறது கண்ணுல உறுத்துதா? கண்ட எடத்தில் தண்ணியக் கொட்டி வச்சிட்டா, நா சறுக்கி விழுந்து கால ஒடிச்சுக்குவேன்... அப்புறமா, கிழவனால யாருக்கு என்ன பிரயோஜனம்னு இன்னும் அதிகமாக மருமகளோட சேர்ந்துகிட்டு கரிச்சுக் கொட்டலாம், அப்ப திருப்தியாயிடும் இல்ல?"



தேவையில்லாமல் வார்த்தைகள் அடிவயிற்றிலிருந்து காட்டமாய் வந்து விழ, சிலிர்த்துக்கொண்டு, அந்த கோபத்துக்குச் சற்றும் குறையாமல் பரிமளம் பதிலுக்கு சுரக்கென்று கத்தினாள்.

'உக்காந்து தின்னா மனுஷங்களுக்கு கொழுப்பு ஏறிடும்னு கேள்விப்பட்டிருக்கேன். இப்ப அனுபவிக்கிறேன்... வாயத் திறந்தா வம்பு வருதுனு தா பாட்டுக்கு வேலைகளை செஞ்சிட்டிருக்கிறதுகூடப் பொறுக்காம சண்டைக்கு இழுக்கறது உங்களுக்கே நல்லா இருக்கா? அட எதுவானாலும் எவ்வோ திருத்திக்காது... இதுல வசந்தாவை ஏன் இழுக்கறீங்க? ஆமாசாமி... உங்களுக்கு வொட்டுக்குவாதம் வாறதும், என் மருமகளும் நானும் வாவிட்டா செஞ்சு சாப்பிடணும்னு காத்திட்டுதான் இருக்கோம்... புரிஞ்சு பேசக இல்லை... ஆள விடுங்க."

பரிமளம் கத்தத் தொடங்கியவுடனேயே சும்மாக்கிடந்த சங்கை ஊதிக் கெடுத்துவிட்ட அவஸ்தையுடன், அங்கு நிற்காமல் அகல அகலமாய் கால்களை வைத்து தெருவில் தணிகாசலம் நடக்க, அவர் கண்களை விட்டு மறைந்த பின்னரும் மொணமொணவென்று ஆத்திரம் தீர வைது தீர்த்த பரிமளம், தொடர்ந்து தண்ணீர் ஊற்றப் பிடிக்காமல் குழாயை நிறுத்திவிட்டு வராந்தா படிக்கட்டுகளில் வந்து அமர்ந்தாள்.

புடவைத் தலைப்பினால் கழுத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைத்த நிமிஷத்தில் ராஜா உள்ளே இருந்து திடுதிடுவென்று ஓடி வந்தான்.

"பாட்டி... பாட்டி...ஈ."

காதருகில் வந்து உரக்க அழைக்க, பரிமளம் முகத்தைச் சுளித்தாள்.

''ஏண்டா இப்படி அலைஞ்சு, காசு செலவு பண்ணுற மாதிரி?''

''என் புஸ்தகத்துல 'ஸ்டார் நைட்' டிக்கெட் வச்சிருந்தேனே பாத்தீங்களா?''

பதில் கூறப் பிடிக்காமல் பரிமளம் முகத்தைத் திருப்பிக் கொள்ள, முரட்டுத்தனமாய் அவர் முகத்தைத் தன்பக்கம் ராஜா திருப்பினான்.

''கேக்கறேன் இல்ல? போனவாரம் தாத்தா ஐம்பது ரூபா பணம் கொடுத்து வாங்கித் தந்தாரே, அந்த டிக்கெட்...... வந்து தேடி எடுத்துத் தாங்க...... தாழ்வோக்க... அதிர்ஷ்டம், கமல் எல்லாரும் வர்றாங்க... இப்பவே போனாதான் நல்ல எடமா புடிக்க முடியும்... எழுந்திருங்க...''

கையைப் பிடித்து அவன் இழுத்ததில், ஏற்கனவே களைகளைந்த கோபம் அதிகமாக, வள்ளென்று விழுந்தார்...

''உங்க தாத்தாவுக்கு உருப்படியா என்ன செய்யத் தெரியும்? தான் ஒன்றுக்கும் உதவாத தண்டத்துக்கு இருக்குற மாதிரி உன்னையும் தயார் செய்ய இப்பவே துவங்கிட்டாராக்கும்! ஸ்டார் நைட்டாம், ஸ்டார் நைட்... படிக்கிற பையனுக்கு அதெல்லாம் எதுக்குனு எடுத்துச் சொல்லாம டிக்கெட் வாங்கித்தர்றாராமா, டிக்கெட்... ஏவேய... இந்த அநியாயத்த நா எங்க கொண்டு......''

அவள் முடிக்குமுன் வாசலில் ராஜாவின் நண்பன் மகேஷ், அவனைவிட நாலைந்து வயது மூத்தவன், வந்து நின்று ''கிளம்பிட்டியா ராஜா?'' என, ஏதோ நினைவுக்கு வந்தவனாய் ''ஓ! டிக்கெட்ட உன்கிட்ட கொடுத்திட்டு நா வீடு பூரா தேடிட்டு இருக்கேனா?'' என்றபடி வெளியே ஓட...



ஓடிய ராஜாவை ''டே...... இருடா...'' என்று பரிமளம் கத்தினாள்.

''வயசு பட்டு... சீக்கிரம் சொல்லுங்க... தாழ்வோக்க.''

''உன் பாண்டு... வந்து கூப்பிட்டா அப்படியே போயிடுவியா? நான் பெரியவங்கக்கிட்ட... சொல்லிக்க வேணாமா? வாடோ... போறேன், சீக்கிரம்...''

பொறுமை இழந்து ராஜா பேசிக்கொண்டே, நகர்ந்தான்.

''காலையில கோயிலுக்கு நா அப்பாகிட்ட சொல்லிட்டேன்'' அவ்டிக்கொண்டுக் கூறிவிடும் அவசரமாக வெளியில் போக, பரிமளம் திகைப்பு பெருமூச்சோடு வெளியிட்டாள்.

யாரைக் கொண்டு ஆக்கிறது இந்தப் பிள்ளை, இப்படி தான் தோன்றித்தனத்துடன் பேசி, பழக...?

பெரியவங்ககிட்ட ஒரு மரியாதை, படிப்பில் கவனம், கேட்ட கேள்விக்கு நின்று பதில் சொல்லல்... ஒன்றும் பொருந்துகிறது கிடையாது...

எப்பொழுது தூக்கிப்போய் ஒரு பேச்சு, உனக்கென்ன என்று எதிர்கேள்வி, ஒரு பேச்சுக்கு எடுத்தெறிந்து ஒன்பது பதில்கள்...

தாத்தாவின் வளர்ப்பு இவன் என்று வருத்தமாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் வீட்டு வாயிலிலேயே படுத்திருந்து 'தேவ ரகசியங்களும்' தாத்தாவுக்கு அத்துப்படி—

'சந்தோஷ தேவ ரகசியத்தை' கபிரியல் சம்மனசு தேவமாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்னது, தேவமாதா தான் மாசமாக இருந்தபோதும் எலிசபெத் அம்மாளைக் கண்டு ஆறுதலாய் விசாரித்தது, கர்த்தர் பிறந்தது, விருத்த சேதனம்,

காணாமல் போன ஏசுவைக் கண்டுபிடிப்பது...' என்று ஐந்து பிரிவுகள் அடங்கிய சந்தோஷ தேவ ரகசியத்தை விளக்கமாய்ச் சொல்லி "அருள் நிறைந்த மரியே வாழ்க" என்று கணீரென்று எப்படி எடுத்துரைப்பாள்?

அதுமட்டுமா?

ஏசு முள் முடி அணிந்ததை, மற்றவர்களால் அவர் ஏசப்படுவதை, காட்டிக் கொடுக்கப்படுவதை, சிலுவையில் அறையப்படுவதைக் கூறும் துக்க தேவ ரகசியத்தையும், ஏசு மீண்டும் உயிர்ப்பித்தல், ஆவியை அனுப்புதல், சீடர்கள் உலகெங்கும் செல்லச் செய்தல், மாதாவை ராணியாக, பாதுகாவலியாக ஏற்றலையும் விளக்கும் 'மகிமை தேவ ரகசியத்தை'யும் கவனத்தோடு சொல்லும்போது கேட்பவர்களின் கண்கள் கலங்கிவிடுமே!

ஹூம்... அது அந்தக் காலம்...

அப்போது வசந்தாவை வளர்த்த நீதியிலேயே இப்போது ராஜாவையும் வளர்க்கலாம் என்றால் எங்கோ வீட்டில் ஆந்தை மாதிரி வந்து கிழம் உட்கார்ந்திருக்கையில் எதை உருப்படியாய் சாதிக்க முடிகிறது?

பீடத்தில் முன் மண்டி போடவைத்து, 'சொல்லு ராஜா', 'பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே' - என்று ஒரு வரி சொல்லிக் கொடுப்பதற்குள் மூக்கில் வேர்த்த கழுகு மாதிரி வந்து விடுகிறாரே!

ஆண்டவர் விஷயத்தில்தான் இப்படியா - என்றால், இல்லை. எதற்கும், நான், என் பேரன் என்று வந்து விடுகிறாரே!

சாப்பிட உட்கார்ந்தால், 'ராஜா - அத சாப்பிடாத. அது மீன், நாம சாப்பிடக் கூடாது' என்று விஷத்தை ஆக்கி வைத்து விட்ட மாதிரி எச்சரிக்கிறார்...



தான் சாப்பிடா விட்டால் போகட்டும், பேரனையும் கெடுத்தால் எப்படி?

"உங்கப்பாவை எல்லாத்துலேயும் மூக்கை நுழைக்காம இருக்கச் சொல்லி வைங்க" என்று தப்பித் தவறி, தாள மாட்டாமல் வசந்தா சொல்லி விட்டால் போயிற்று. என்னமோ அப்பாவை அசிங்கமாய் ஏசிவிட்ட மாதிரி மாதவன் கரகாட்டம் ஆடிவிடுகிறான்...

மொத்தத்தில் எதுவும் நன்றாக இல்லை. மனசில் நிம்மதியும் இல்லை...

ஹூம்...

தனக்குத் தானே குருட்டு யோசனை பண்ணிக் கொண்டதில் வேண்டாத கசப்புகள் அதிகமாகி 'நான் மட்டும் இந்த வீட்டில் காசு வாங்காத வேலைக்காரியாய் ஏன் உழைக்க வேண்டும்?' என்று அடிக்கடி தோன்றும் வீம்பு அன்றும் எழ, உள்ளே போய் எந்தக் காரியமும் செய்யப் பிடிக்காமல் பரிமளம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

ஆபீஸில் மேலதிகாரியிடம் செய்யாத வேலைக்காக திட்டு வாங்கிய வசந்தாவும் ஸ்கூட்டர் டயர் பஞ்சராகி அதோடு ஒரு மணி நேரம்போல மன்றாடிவிட்டு, வசந்தாவின் பொறுமலால் களைத்துப்போன மாதவனும் வீட்டு வாசப்படி ஏறும்போது மணி ஏழரை ஆகியிருந்தது.

அத்தையம்மா சமைத்து வைத்திருப்பார், சுடச்சுட சாப்பிட்டுவிட்டுப் பொழுதோடு படுக்கலாம் என்கிற எதிர்பார்ப்பில் மண் விழுந்ததோடு 'எங்கயாவது அனாதை மடம் இருந்தா என்னை சேர்த்து விட்டுரு... என்னால் தாங்க முடியல' என்று பரிமளம் விசும்பியதும் சேர்ந்துகொள்ள,

வசந்தா மாதவனிடம் கத்த,

அவன் அப்பாவை முறைக்க,

அவர் பரிமளத்தைக் குற்றம் காட்ட..

இப்படி எல்லாரும் ஒருவர் மேல் ஒருவர் புகார் படிப்பதில் மும்முரமாய் ஈடுபட்டிருந்ததில், அடுத்த வாரம் நடக்கப் போகும் பரீட்சைக்குப் படிக்காமல், தாத்தாவிடம் ஸ்பெஷல் ஃபீஸ் கட்ட பணம் வேண்டும் என்று பொய் சொல்லி ஏமாற்றி வாங்கிய டிக்கெட்டில் தன் வயசுக்கும் மீறின நண்பனோடு ஸ்டார் நைட்டுக்கு ராஜா போனதையோ, மூன்றாம் தர ஹோட்டலில் எதையோ தின்றுவிட்டு லேட்டாக வந்ததையோ கண்டிக்க வேண்டும் என்று கூடத் தோன்றாததில், வழக்கம் போல அந்த சண்டையால் பாதிக்கப் படாமல் தப்பித்ததும் ராஜாதான்; யாருமே உணராத வகையில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் ராஜாதான்...

# 23

**ம**காதேவன் பேனாவைக் கீழே வைத்தார். இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி "ஊ... ஊ... ஓ..." என்கிற சின்ன சத்தத்தோடு சோம்பல் முறித்தார்.

அரை நிமிஷத்துக்கு முன்னால் முத்து "ஆறிடப் போறது சார்... குடிச்சிட்டு எழுதுங்க..." என்று கரிசனத்தோடு கூறி, வைத்துவிட்டுச் சென்றிருந்த காப்பிக் கோப்பையைக் கையில் எடுத்து மெதுவாகக் குடிக்க ஆரம்பித்தார்.

பார்வை ஜன்னலை ஒட்டி, கறுப்பாய் கோடு போட்ட திணுசில் ஒன்றின் பின்னால் ஒன்றாய், சாரியாய் சென்று கொண்டிருந்த எறும்புகள் மேல் விழுந்தது...



பிள்ளையார் எறும்புகள்....

இதற்குப் பிள்ளையார் எறும்புகள் என்று யார் பெயரிட்டார்கள்? எதற்காக?

யோசித்துப் பார்த்த வரையில் எதையும் திருப்திகரமாக ஊகிக்க முடியாது போக, விஷயம் தெரிந்த நண்பர்கள் யாரையாவது அடுத்த முறை சந்திக்கும்போது கேட்க வேண்டும் என்று மனசில் குறித்துக் கொண்டவராய், காலிக் கோப்பையை மேஜைமேல் வைத்துவிட்டு, எறும்புகளை இன்னும் கிட்டத்தில் ஆராயும் ஆர்வத்துடன் முன்னால் சாய்ந்து உட்கார்ந்தார்.

கறுகறுவென்று வேகமாய் ஓடின ஒவ்வொரு எறும்பும் தன் சைஸைவிடப் பெரியதாய் ஏதோ ஒன்றை வாயில் கௌவியபடி போக, என்ன அது என்கிற கேள்வி மகாதேவனுள் ஜனித்தது.

சர்க்கரை?

மாவுத் துகள்?

இது எதுவுமே இல்லாமல் அதனுடைய முட்டை?

ஆமாம் - எறும்பு இனவிருத்தி செய்வது எப்படி? முட்டை மூலமாகவா - அல்லது?......?

நிதானிக்கையில் அன்றாடம் பார்க்கும் எத்தனை சின்னச் சின்ன விஷயங்களுக்குக்கூட விளக்கம் தர முடியாத நிலையில் இருப்பது ஆச்சரியம் கலந்த அவஸ்தையை உண்டு பண்ண, உடனடியாய் 'பிரிடானிகா என்சைக்ளோபீடியா'வை எடுத்து "எறும்புகள்" - தலைப்பின் கீழ் உள்ள விவரங்களைப் படித்து விட்டே எழுத்தைத் தொடருவது என்கிற தீர்மானத்துடன் எழுந்தவர், திடுமென்று ஓங்கி ஒலித்த குரலினால் கவனம் மாறி, நின்றார்..

அடுத்த வீட்டுப் பெரியவர் குரல்தான்...

கார்ப்பரேஷன் விதிப்படி தேவையான ஐந்து அடிகளை விட்டுவிட்டு இரு வீடுகளும் கட்டப்பட்டு, வேசாகத்தினால் "ஹலோ" சொல்லி கை குலுக்கிக் கொள்ளும் இடைவெளி மட்டும் இருந்ததில், கொஞ்சம் உரக்கப் பேசினாலும், பக்கத்தில் நின்று பேசுகிற தினுசில், வேண்டுமோ, வேண்டாமோ அத்தனையும் கேட்க வேண்டிய நிர்பந்தம் வந்து விடுகிறதே!

"கால் கைய ஒழுங்கா வச்சிகிட்டு, எங்காரியத்த பார்த்துகிட்டு 'சிவனே'னு இருக்கறது கண்ணுல உறுத்துதா? கண்ட எடத்திலே தண்ணியக் கொட்டி வச்சிட்டா நா சறுக்கி விழுந்து கால ஒடிச்சக்குவேன்... அப்புறமா 'கிழவனால யாருக்கு என்ன பிரயோஜனம்?'-னு இன்னும் அதிகமா மருமகளோட சேர்ந்துகிட்டு கரிச்சுக் கொட்டலாம், அப்பத் திருப்தியாயிடும், இல்ல?"

இருந்த இடத்தை விட்டு நகராமல் ஜன்னல் வழியாகப் பக்கத்து வீட்டைப் பார்த்தபோது வாசகேட் அருகில் கையில் பிளாஸ்டிக் பைப்பைப் பிடித்துக்கொண்டு அந்த வயசான அம்மாவும், வெளியே போகும் உத்தேசத்தோடு வெள்ளை சட்டை, வேட்டி, செருப்பு சகிதம் பெரியவரும் நிற்பது தெரிந்தது...

அந்த வீட்டுக்குக் குடிவந்து கிட்டத்தட்ட பதினைந்து நாட்களாகிவிட்ட நிலையில் மாதவனும் வசந்தாவும் கணவன் மனைவி; தணிகாசலம் மாதவனின் தந்தை; பரிமளம் வசந்தாவின் அத்தை என்ற விவரங்களோடு அவர்களிடையே நிலவும் மத வேறுபாடு உணர்வு, கசப்பு, அனுசரிப்பின்மை போன்ற பல சமாசாரங்களையும் நன்றாகவே மகாதேவனால் புரிந்துகொள்ள முடிந்திருந்தது...



பின்னே!

பொழுது விடிந்து பொழுது போனால் ஏதாவது அற்ப விஷயத்தில் பெரியவர்களிடையே தொடங்கும் சண்டை, இரவு வரையிலும் நீண்டு, முக்கால்வாசி சமயம் மாதவன், வசந்தாவையும் தன் கொடுக்குகளால் அடித்துப் பிடித்து விடுவதுதான் கேட்காமலேயே காதில் வந்து விழுந்து, நடப்புகளைத் தெரிந்துகொள்ள வைத்து விடுகிறதே!

அது தவிர மகாதேவனின் எழுத்தாளர் புத்தியும் சேர்ந்து கொள்ளும்போது விஷய ஞானத்துக்குக் குறைச்சல் என்ன?

வம்புக்காக நிச்சயமாய் இல்லாவிட்டாலும், பார்த்து, கேட்டு, படித்து, உணர்ந்து, அனுபவித்துத் தெரிந்து கொள்ளும் சமாசாரங்களை எல்லாம் புத்தியினால் அலசி, வடிகட்டி, சேர்க்க வேண்டியவைகளைச் சேர்த்து, தக்க கருக்களாக மாற்றி, கருத்துப் பரிமாற்றம் செய்து வாசகரின் சிந்தனையைத் தூண்டி விடுவதில்தானே ஒரு எழுத்தாளரின் வெற்றியே இருக்கிறது?

ஆனாலும் ஸ்வபாவத்தில் அடுத்தவர் அந்தரங்கத்தில் தலையிடாமல், தன் வழிக்கும் அனாவசியமாய் யாரும் வந்து நுழைவதில் விருப்பப்படாத மகாதேவனுக்கு அடுத்த வீட்டிலிருந்துகாலையும் மாலையும் தப்பாமல் எழுந்த கூச்சல், சண்டைகள் முதல் ஓரிரு நாட்கள் மஹா தொந்தரவாகவே இருந்தன.

ஐம்பத்தி நாலு வயதான மகாதேவன் ஒரு கட்டை பிரம்மச்சாரி. பேராசிரியராக வடக்கே வேலை பார்த்த போதும், விடுமுறை நாட்கள் தப்பாமல் ஹிமாலயக் காடுகளில் தனித்து நடந்து திரிந்தவர், நேபாள மக்களிடையே தானும் ஒருவராக ஊடுருவி வாழ்ந்தவர், திபெத் நாட்டின் அத்வான் புத்த மடாலயங்களை எட்டிப்

பார்த்தவர், கன்னியாகுமரி விவேகானந்த கேந்திராவில் பயிற்சி பெற்றவர்... இன்னும் என்னென்னவோ புதுமை அனுபவங்களை அனுபவித்து அவற்றை முடிந்தவரையில் தன் வாசகர்களோடு வித்தியாசமாகப் பகிர்ந்து கொண்டவர்...

சென்ற வருஷம் சற்றும் எதிர்பாராமல் 'ஹார்ட் அட்டாக்' வந்துவிட, சரி உழைத்ததும், ஓடியதும் போதும், ஓய்வு பெற்றுக்கொண்டு சென்னைக்குச் சென்று, அமைதி யான இடத்தில் நான் உண்டு, என் எழுத்து உண்டு என்று இருந்து விடலாம் என்ற தீர்மானத்தில், இந்த வீட்டை வாடகைக்கு எடுத்து சாமான் சஜ்ஜாக்களோடு வந்து நாட்கள் பதினைந்து போல ஆகின்றன.

தனி வீடு. அதிக மனித சஞ்சாரம் அற்ற சூழல். வலது பக்கம், உள்ளடங்கி மரங்களுக்கு மத்தியில் ஒரு பெருந்தனக்காரர் வீடு... அவர்களால் நிம்மதி அப்படி ஒன்றும் கெட்டுவிடாது. இந்தப் பக்கம்? அதான் கொஞ்சம் உதைக்கிறது... ரொம்பவும் கிட்டத்தில் வீடு இருக்கிறதே - பரவாயில்லையா...?

வேலைபார்க்கும் தம்பதி, வயதான பெரியவர்கள், இவர்களால் அதிகம் தொந்தரவு இருக்காது என்று நம்பலாமே! இந்த ரீதியில் சிந்தித்ததோடு, எங்கு பார்த்தாலும் சேரியும் குட்டையும், சாக்கடை கால்வாய்களும், குண்டும் குழியுமாய் உள்ள சென்னை நகரில் இந்த அளவுக்குத் தனிமை கிடைப்பதே அபூர்வம் என்கிற சமாதானமும் சேர்ந்துகொள்ள, பத்து மாச அட்வான்ஸைத் தந்துவிட்டுக் குடிபெயர்ந்தவருக்கு பக்கத்து வீட்டுச் சண்டை எரிச்சலைத் தந்ததில் ஆச்சரியம் என்ன?

அதுவும் இந்த மகாதேவன் இருக்கிறாரே; அவர் இன்றைய எழுத்தாளர்களிடையே இருந்து கொஞ்சம் மாறு பட்டவர் என்பதை ஒப்புக் கொண்டே தீர வேண்டும்.



இலக்கிய உலகம் போற்றும் இருபத்திரண்டு புதினங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள் என்று எழுதியும் இதுநாள் வரை ஒரு சில பத்திரிகை ஆசிரியர்களைத் தவிர மற்றவர்களுக்கு அவரை யார் என்றே தெரியாது. விதத்தில் தன்னை பின்னணியில் மகாதேவன் வைத்துக் கொண்டிருப்பது நிஜம்.

எழுத்தாளர் 'தேவதேவனை' அவரது நாமான எழுத்துக்கள் மூலமாக மக்கள் அறிந்துகொண்டால் போது மானது, மனிதர் மகாதேவன் நெருக்கமானவர்களைத் தவிர வேறு யாரும் தெரிந்துகொள்ளத் தேவையில்லை என்பது அவரின் பிடிவாதம் என்பதால், பத்திரிகைகளில் ஒரு போட்டோ? இலக்கிய கூட்டங்களில் மேடை ஏறி பேசுவது? ரசிகர்கள் 'உங்க விசிறி சார் நான்' என்று கூற ஒரு போன்? ம்ஹூம் ஒன்றும் கிடையாது.

அதற்காக இலக்கியக் கூட்டம், பொது இடங்கள் எங்குமே போகமாட்டாரா, சதா சர்வகாலம் சிடுசிடு வென்று தனக்குத்தானே குருட்டு யோசனை பண்ணிக்கொண்டு தனித்து உட்கார்ந்திருப்பாரா என்றால், இல்லை, அதுவும் இல்லை...

எங்கும் போவார்; ஆனால் பின் வரிசையில் அமர்ந்து எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் அனைவரது பேச்சையும் கேட்பார்; இவரை நன்கு புரிந்துகொண்ட நண்பர்கள், உறவினர் என்னளி பத்து பேர்களோடு - நெருக்கமாகப் பழகுவார்; அவர்கள் இல்லத்து நல்லது கெட்டது அத்தனைக்கும் முன்னால் நிற்பார்; சம்பாதிக்கும் ணத்தில் பாதியை நன்றாய் படிக்கும் ஏழை மாணவர்களின் ம்பளத்துக்கும், முடியாதவர்களின் வைத்தியத்துக்கும் ரண்டாம் பேர் அறியாமல் செலவழிப்பார்; மூன்று

மரத்துக் கொருகலம் ரத்தம் கொடுப்பதில் இதுவரை - கம்பாவேண்டும் - முப்பத்தி எட்டு முறைகள் ரத்ததானம் செய்திருக்கிறார். அப்புறம்...

ஜன்னல் வழியாகத் தெரிந்த தணிகாசலத்தின் முகத்தில் இப்படி அப்படி என்று அளவிட முடியாத எரிச்சல் மண்டி இருக்க, மகாதேவன் அவசரமாய் எதிரில் நின்ற பரிமளத்தைப் பார்த்தார்.

"உக்காந்து தின்னா மனுஷங்களுக்கு கொழுப்பு ஏறிடும்னு கேள்விப்பட்டிருக்கேன்; இப்ப அனுபவிக்கிறேன் - வாயத்திறந்தா வம்பு வருதுனு நா பாட்டுக்கு வேலைகளை செஞ்சிட்டிருக்கறதுகூடப் பொறுக்காம சண்டைக்கு இழுக்கறது உங்களுக்கு நல்லா இருக்கா? அட, எதுவானாலும் என்னோட நிறுத்திக்கறது; இதுல வசந்தாவ ஏன் இழுக்கறீங்க? ஆமா சாமி, உங்களுக்கு மொடக்குவாதம் வரணும், என் மருமகளும் நானும் விட்டா செஞ்சு சாப்பிடணும்னு காத்துகிட்டுதான் இருக்கோம்... புரிஞ்சு போச்சு இல்ல, ஆளவிடுங்க..."

அடிவயிற்றிலிருந்து காட்டமாகப் பரிமளம் பதிலுக்குக் கத்த, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்துவிட்ட சங்கடத்துடன் தணிகாசலம் பேசாமல் நகர, அந்த சண்டையை நின்று வேடிக்கை பார்த்தது சட்டென்று ஒருவிதக் குற்ற உணர்வைத் தர, மகாதேவன், முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

எதற்காக அவர்கள் இருவரும் ஒன்றுமில்லாததற்கெல்லாம் இத்தனை ஆக்ரோஷமாக சண்டை போட்டுக் கொள்கிறார்கள்?

செடிகளுக்குத் தண்ணீர் விடுகையில் இங்கு அங்கு நீர் தெறிப்பது இயற்கைதான்; காலைப் பார்த்து வைத்து நடந்தால்



ஆயிற்று... அதை விட்டுவிட்டு அந்தப் பெரியவர் வேண்டுமென்றே அந்த அத்தை செய்துவிட்டதாக ஏன் குற்றம் சாட்டுகிறார்?

அந்த அம்மாள்தான் ஆகட்டும், வயசானவர் விழுந்து விடுவாரோ என்கிற பயத்தில் பேசுகிறார் என்று விட்டுத் தள்ளாமல் எதற்காக அப்படி பதிலுக்கு வெறியோடு கத்த வேண்டும்?

முகவாயைத் தடவியபடி, நாற்காலியில் சாய்ந்தபோது கடந்த நாட்களில் எழெட்டு தரமாவது பார்த்துவிட்ட நிலுசில் இன்று மாலையும் அவரவர் பிள்ளை, மருமகள் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியதும் இரண்டு பெரியவர்களும் இதைக் கட்டாயம் பெரிசு பண்ணப் போகிறார்கள் என்று ஊகிக்க முடிந்தது...

பெரியவர்கள் முடியாமையினாலோ, அல்லது தெரியாத்தனத்தாலோ பேசுகிறார்கள் என்று அந்த இளம் தம்பதியாவது புரிந்து, 'போகட்டும் விடுங்கள்' என்று ஒதுக்கினால் நன்றாக இருக்கும். ஆனால் எங்கே?

நேற்றா? எஸ்... நேற்றுதான், காபியில் சர்க்கரை போட்டுக் கொடுத்துவிட்டதற்காக "எனக்கு சர்க்கரை வியாதி இருக்குது தெரியுமில்ல, அப்புறமும் சீனி போட்டுத் தந்தா என்ன அர்த்தம்?" என்று பெரியவர் கத்த, அவரோடு மகனும் சேர்ந்துகொள்ள...

அதற்கும் முந்தின நாள் கடையிலிருந்து பெரியவர் சாமான்கள் வாங்கி வருகையில் உடம்புக்கு தேய்த்துக் கொள்ளும் சோப் விட்டுப்போனதில் "அத்தம்மாவுக்கு வாங்கிற பொருள் மட்டும் உங்கப்பாவுக்கு மறந்திடும்; அதானே?" என்று மாமனார் காதுபட வசந்தா விஷமமாய் கேலி பண்ண...

இன்னும் ஒருநாள் - ''பூக்கற பூ எல்லாத்தையும் என் முருகன் படத்துக்கு வெக்காம தானே அந்தக் கிழவி பறிச்சிர்றாப்பா...'' என்று தணிகாசலம் புலம்ப, ''நா தண்ணி ஊத்தறேன், மன்றாடறேன், பறிச்சுக்கிறேன்... என் ஏகவுக்கு வெக்காம இந்தக் கிழத்தோட முருகனுக்கு என் தாறும்?'' என்று பதிலுக்கு பரிமளம் கோபத்துடன் வினவ...

''பிரார்த்தனைக்கு மாதா கோயிலுக்கு போலாமா ராஜா... சமத்தா வந்தின்னா உனக்கு அஞ்சு ரூபா தருவேன்'' என்று அத்தையும்;

''டே... வீணா அங்கல்லாம் போய் உருப்படாம ஆயிடாதேடா... என்னோட வடபழனி கோயிலுக்கு வந்தா நா பத்து ரூபா தர்றேன்... வா ராஜா...'' என்று தாத்தாவும்,

மற்றவர்களும், போட்டா போட்டியில் சிறுபிள்ளைத் தனமாய் பேசி, நடந்து இந்த சில நாட்களிலேயே வேண்டிய அளவுக்குக் கேட்டு, பார்த்தாயிற்று......

இவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்?

ஒருத்தரோடு மற்றவர் இருப்பது பிடிக்கவில்லை என்றால், பேசாமல் விலகிப் போய்விடுவதுதானே? அதை விட்டுவிட்டு தங்களின் கண்களைக் கட்டிவிட்டத்தனத்தினால் தாங்களும் கஷ்டப்பட்டு சுற்றி இருப்பவர்களையும் ஹிம்சித்து...

மகாதேவன் தலையை அசைத்து தன்னைத்தானே உலுக்கிக் கொண்டார்.

எழுத, செய்ய வேண்டிய வேலைகள் தோளுக்கு மேல் இருக்கையில் இது என்ன வேண்டாத ஆராய்ச்சி என்கிற



கேள்வியுடன் பேனாவை மறுபடியும் கையில் எடுத்த போது சுவர்க் கடிகாரம் அவர் 'வாக்' போக வேண்டிய நேரம் வந்து விட்டதைத் தெரிவிக்கிற மாதிரி ஆறு தரம் அடித்து ஓய்ந்தது...

# 24

''ஹலோ.''

யாரோ யாரையோ கூப்பிடுகிறார்கள் என்கிற எண்ணத்தில் அழைப்பு காதில் விழுந்தும், விழாத மாதிரி அமர்ந்திருந்த மகாதேவன், மீண்டும் அதே குரல் ''ஹலோ அங்கிள், குட்மார்னிங்'' என, நிமிர்ந்தார்.

புல்வெளி கூடை நாற்காலியில் உட்கார்ந்து பேப்பர் படிப்பவரைகாம்பவுண்டு சுவருக்கு மேலாக எட்டிப் பார்த்துக் கொண்டு ராஜா, அடுத்த வீட்டுப் பையன்...

கண்களில் ஏதோ ஒரு ஆர்வம் பளபளவென்று மின்ன தன்னோடு பேசும் ஆசையில் 'ஹலோ' சொன்னவனை ஏறிடுகையில், சில நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி ஒன்று, நினைவுக்கு வந்தது.

'வாக்' போக வழக்கம்போலக் கிளம்பி அடுத்த தெரு மைதானத்தைத் தாண்டியபோது பத்து, பதினைந்து பசங்கள் அங்கு ஒன்று கூடி கிரிகெட் விளையாடிக் கொண்டிருந்தது கண்களில் விழ, நின்றார்.

எல்லாம் சரியான பொடிசுகள், நண்டும் சிண்டுமாய்... பெரியவனாய் இருந்த பையனுக்கே மிஞ்சிப் போனால் பதினைந்து, பதினாறு வயசிருந்தால் அதிகம்...

வேடிக்கை பார்த்துக்கொண்டே நின்ற நிமிஷத்தில் பாட்ஸ்மென் அடித்த பந்து சர்ரென்று இவரை நோக்கி வர, ஒருவித குஷியுடன் அதைத் தடுத்து போலரிடம் மகாதேவன் வீச, நிச்சயமாய் பவுண்டரியைத் தொட்டுவிடும், நாலு ரன்கள் கணக்கில் ஏறும் என்கிற எதிர்பார்ப்புடன் ஓடாமல் நின்றிருந்த பாட்ஸ்மென் பெரிசாய் ஆட்சேபித்து கத்தினான்.

''யார் ஸார் நீங்க? ஓரமா நிக்காம ஏன் குறுக்க பூந்து எதையோ செஞ்சு எங்க ஆட்டத்தைக் கெடுக்கறீங்க?''

அந்தக் கோபமும், கத்தலும் ரசிக்கும்படி இருக்கவே, வேண்டுமென்றே மகாதேவன் அவனை சீண்டினார்.

''நா என்னப்பா செஞ்சேன்? ஓரமாதான் நின்னுட்டு இருந்தேன்... பந்து என்னைப் பாத்து வந்து என்னப்பிடினு கேட்டுது... பிடிச்சுப் போட்டேன்... தப்பா?''

பாட்ஸ்மென் அவரை லட்சியம் பண்ணாமல் பந்து வீசியவனிடம் வந்தான்.

''பவுண்டரி போயிருக்க வேண்டிய 'பால்'... அநியாயமா அவர் தடுத்திட்டார்... நாலு ரன்களைச் சேர்க்கறதுதான் சரி...''

''அதெப்படி? நாங்க ஒத்துக்கமாட்டோம்... அத்தனை வேகமா பந்து போன மாதிரி எனக்குத் தோணலை...''

போலருக்கு உதவும் வகையில், ''அதானே'' - என்றவாறு நாலைந்து ஃபீல்டர்கள் அவனருகில் செல்ல இரண்டாவது பாட்ஸ்மென் தன் ஆளுக்கு பலம் சேர்க்கும் உத்தேசத்தோடு அவன் பக்கத்தில் சென்று நின்றுகொண்டான்.

''நாலு ரன்களைச் சேர்த்தாதான் நாங்க தொடர்ந்து ஆடுவோம்...''



''சரி, வேணாம்... தோத்திட்டம்னு ஒத்துக்கங்க... நிறுத்திடலாம்...''

''அ... அ... ஒத்துப்பாம் ஒத்துப்பம்... எங்களை என்ன இளிச்சவாயங்கனு நினைச்சிங்களா?''

''இப்ப என்ன சொல்றீங்க?''

''நீங்க என்னடா சொல்றீங்க?''

விளையாட்டுக்காகத்தான் செய்யப்போனது வம்பில் முடிந்திருப்பதை உணர முடிய, மகாதேவன் அவசரமாய் அருகில் சென்றார்.

''ஹலோ... ஹலோ... எதுக்காக ஒண்ணும் இல்லாதத்துக்குச் சண்டை போட்டுக்கிறீங்க? நா ஏதோ தமாஷுக்கு...''

அவரை முடிக்க விடாமல் இரண்டாவது பாட்ஸ்மென் கத்தினான்.

''உங்க தமாஷுக்கு நாங்கதான் ஆப்டோமா? இந்த பெரியவங்க சமாசாரமே இப்படித்தான்... வலிய வந்து எல்லாத்துலேயும் தலையை விட்டு தகராறு உண்டாக்கிட்டு, கடைசில 'எல்லாம் இந்த பசங்களால -'னு கரிச்சுக் கொட்டுவாங்க... வேலையப் பாத்துகிட்டு போங்க. யார் கூப்டா உங்களை இங்க?''

பேசியவனின் பக்கம் திரும்பிய மகாதேவன் புருவங்களை உயர்த்தினார்.

ராஜா, அவர் பக்கத்து வீட்டுப் பையன்...

அந்த வீட்டுக்குக் குடிவந்த நாளாய் அவர் இரண்டு, மூன்று தரம் வலிய புன்னகைத்தும், அதைக் கண்டும் காணாமல் போனவன்...

"நீ ராஜா... தானே! நா யாரு தெரியலை? ஐம் ஸாரி... நா வந்து..."

'உங்க ஸாரிய நீங்களே வச்சுகிட்டு, இடத்த காலி பண்றீங்களா? இருட்டிகிட்டு வருது. இஷ்ஹும் கேம் முடியலியேனு நாங்களே கவலையோட இருக்கோம்... இவர் என்னடான்னா..."

அதற்கு மேல் அங்கு நிற்பது அநாகரிகம் என்று மகாதேவன் நகர்ந்தபோது ஒருவன் ராஜாவை "உனக்கு அவரத் தெரியுமாடா, பேர் சொல்லி கூப்பிடறாரே?" என்றதும், "அவரத் தெரிஞ்சா என்ன, தெரியாட்டி என்ன, வேண்டாததைப் பேசி நேரத்தை வேஸ்ட் பண்ணாம விளையாட வாங்கடா" என்று எரிச்சலுடன் ராஜா பதில் கூறியதும் கேட்டது.

இந்தச் சின்ன வயசில் என்ன பொறுமையின்மை, என்ன கோபம்!

சாதாரண விஷயத்துக்குக்கூட புலியும், கரடியுமாய் உறுமிக்கொள்ளும் பரிமளம், தணிகாசலத்தின் பாதிப்போ இது!

அன்றைக்கு அப்படித் தூக்கியெறிந்து பேசிய ராஜா இன்று கண்களும், முகமும் நட்பில் மலர "ஹலோ... அங்கிள்" என்று வந்து நிற்பது வியப்பைத் தந்ததால் மகாதேவன் மௌனித்தார்.

இவர் மனசில் ஓடிய நிகழ்ச்சியை ஊகிக்க முடிந்த மாதிரி ராஜா குற்றஉணர்வோடு கண்களைத் தழைத்து முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொண்டு பேசினான்.

"வந்து... அன்னிக்கு... நா... வந்து ஆட்ட ஜோர்ல வந்து... ஸாரி அங்கிள்..."



நினைப்பதைத் தெளிவாகச் சொல்லத் தெரியாமல் அவன் தடுமாறியது, பார்க்கப் பாவமாக இருந்ததில் 'போனால் போகிறது; அதற்காக அவஸ்தைப்படாதே' என்கிற தினுசில் மகாதேவன் புன்னகைத்தார்.

அந்தப் புன்னகை சட்டென்று நம்பிக்கையை அதிகமாக்கி இருக்கவேண்டும்; ராஜா காம்பவுண்ட் சுவர்மேல் இன்னும் எக்கி அவரை நன்றாக எட்டிப் பார்த்தான்.

"அங்கிள், 'தேவா'ன்ற பேர்ல ஸ்போர்ட்ஸ் செய்தி எழுதறது, நீங்க தானாமே! நிஜமா அங்கிள்?"

"........"

"ப்ளீஸ் அங்கிள்... சொல்லுங்க... அது நீங்க தானே?... அன்னிக்கு நா பேசினதை மனசுல வச்சுக்காதீங்க... ப்ளீஸ்."

தன்னோடு பேசக்கூட அவர் மறுத்து விடுவாரோ என்கிற பயம் அந்த விழிகளில் எட்டிப் பார்ப்பதை உணர முடிய, மகாதேவன் மறுபடியும் புன்னகைத்தார். இப்போது நம்பிக்கை அதிகமான தினுசில் எம்பி சுவர் மேல் உட்கார்ந்த ராஜா, இந்தப் பக்கம் குதித்து, அவரிடம் ஓடி வந்தான்.

பள்ளிக்குப் போகத் தயாராக அணிந்திருந்த யூனிஃபார்மில் சுவரின் சுண்ணாம்பு மஞ்சளாய் படர்ந்திருந்தது. ஷூ நுனியில் ரோஜா பாத்தியின் சேறு...

"அடடே... யூனிபார்ம் அழுக்காயிட்டது பாரு... கேட் வழியா வரக்கூடாதா ராஜா!"

சொல்வது காதில் விழாத பரபரப்புடன் ராஜா அருகில் வந்து அவர் கையைப் பற்றிக்கொண்டான்.

"ப்ளீஸ் அங்கிள்... சொல்லுங்க... 'தேவா' நீங்கதானா?"

"யார் சொன்னா?"

"உங்க வீட்டுல வேலை பண்ற முத்து... சொல்லுங்க..."

தனக்கு விளம்பரம் பிடிக்காது; எழுத்தாளர் என்பதை முன்பின் தெரியாதவர்களுக்குச் சொல்லக்கூடாது என்கிற கட்டுப்பாட்டை நன்கு அறிந்திருந்த முத்து இப்படிச் செய்தது ஆச்சர்யத்தை எழுப்பியதை அடக்கிக்கொண்டு "ம்" என, ராஜாவின் கண்கள் சந்தோஷத்தில் தகதகவென்று ஜொலிக்க முற்பட்டன.

"ஐயோ! 'தேவா'வோட கிரிக்கெட் விமர்சனம்னா எங்க எல்லோர்க்கும் ரொம்ப விருப்பம்... அங்கிள்... என் ப்ரெண்ட்ஸ் எல்லாம் நம்பக்கூட மாட்டாங்க... இன்னிக்கு ஸ்கூலுக்குப் போய் விஷயத்தைச் சொன்னா..."

மகாதேவன் அவன் கையில் மென்மையாய் தட்டி 'ஷ்...ஷ்' என்று அடக்கினார்.

"நோ ராஜா... அப்படி எல்லார்கிட்டையும் சொல்லி விளம்பரம் பண்ணறது எனக்குப் பிடிக்காது..."

"இதில விளம்பரம் என்ன அங்கிள்? வி ஆர் ஆல் கிரேஸி அபௌட் கிரிக்கெட் அண்ட் யூ... நாங்க..."

"நோ ராஜா... எனக்குப் பிடிக்காதுனப்புறமும் நீ வற்புறுத்தறது தப்பு..."

ராஜா உதட்டை நாவால் ஒருதரம் ஈரப்படுத்திக் கொண்டான். தயக்கத்தோடு கேட்டான்:

"நா... நா மட்டுமாவது அப்பப்ப வந்து உங்ககூட கிரிக்கெட் பத்திப் பேசலாமா?"



மகாதேவன் சிரித்தார்.

"தாராளமா..."

"தாங்ஸ் அங்கிள்... வந்து... கபில்தேவ், ஸ்ரீகாந்த் எல்லோரையும் உங்களுக்கு பர்ஸனலா தெரியுமா? அவங்க பக்கத்தில உட்கார்ந்துகிட்டுப் பேசியிருக்கீங்களா? ஐயோ என்ன மடத்தனமா கேள்வி கேக்கறேன் நல்லா பழக்கமில்லாட்டி அத்தனை ஆர்டிகிள்ஸ் எழுதமுடியுமா? அவங்களோட..."

பேசிக் கொண்டிருக்கையிலே வாசலில் ஸ்கூல் பஸ் வந்து நின்று ஓசை எழுப்ப, கூடவே "ராஜா... எங்கடா போயிட்டே? புஸ்தகப்பையும், வாட்டர் பாட்டிலும் அப்படியே கிடக்கு..." என்று பரிமளத்தின் குரல் கேட்க, மனமில்லாமல் ராஜா காம்பவுண்ட் சுவரிடம் ஓடினான்.

"சாயங்காலம் வரட்டுமா அங்கிள், ப்ளீஸ்?" என்று கேட்டு, அவர் தலையசைத்ததும் எம்பி சுவரைத் தாண்டி அந்தப் பக்கம் குதித்தான்.

"எங்க போயிட்டு வரே? பக்கத்து வீட்டுக்கா! அங்க உனக்கு என்ன வேலை? யூனிஃபார்மை ஏண்டா இப்படி அழுக்காக்கிட்டே? நித்தமும் உன்னோட எனக்கு ரோதனையா இல்லை போச்சு!... ஸ்கூல் பஸ் வர்ற நாழி ஆவறதேன்ற பதைப்பு துளி இல்லாம, ஏசுவே! இந்தப் பையனை ரட்சிக்கக் கூடாதா? வெட்டியா சுத்தற பழக்கமெல்லாம் பரம்பரையா இல்ல வருது... ஹூம்...ஏசுவே..."

ராஜா மறைந்து அரை நிமிஷம் ஆகியும் எங்கேயோ ஆரம்பித்து, எதிலோ பரிமளம் முடிக்க, தொடர்ந்து தணிகாசலத்தின் குரல் கிண்ணென்று காதுகளில் அறைந்தது.

''யாரும் இங்க வெட்டியாவும் கத்தல, தண்டமாவும் இருக்கல... பொம்பளைங்கன்னா அடக்க ஒடுக்கமா இருப் பாங்கன்னு கேள்வி... எங்க! வாசல்ல நின்னு ராட்சஸியா கத்தறதக் கேட்டா, மந்த பொம்பளைங்க நாக்கப் புடுங்கிப் பாங்க...''

''யாரு... யார ராட்சஸின்னு சொல்றீங்க! வாய அடக்கிப் பேசினா தேவல...''

''மொதல்ல நீங்க அதச் செய்யுங்க... அப்புறமா மத்தவங்களுக்குப் புத்தி சொல்ல வரலாம்...''

''அடடா... வாசல்ல நின்னுகிட்டு எதுக்காக ரெண்டு பேரும் கத்தறீங்க... நாங்க ஆபீஸுக்குப் பொறப்படற நேரத்துல?''

''பாருதம்பி... சும்மா ரூம்புல உட்கார்ந்திட்டு இருக்கிற என்னை, வலிய வம்புக்கு இழுத்து...''

''உள்ளாரப் போங்கப்பா... எனக்கு நாழி ஆச்சு... ஏம்பா, என்னத்த பேசறதுன்ற புத்தி இல்லாம! ஏய், வசந்தா இப்ப நீ வரப்போறியா, இல்ல, நா கிளம்பட்டுமா?''

''எதுக்காக இந்தக் கத்துக் கத்தறீங்க மாது? வந்துகிட்டே இருக்கேன் இல்ல. ஆமா, இது என்ன டிபன் டப்பா...? ராஜா எடுத்துகிட்டு போகலியா! என்ன அத்தம்மா, நீங்க அவனண்ட கொடுக்கலியா?''

''ஆமா வசு... ஊருக்கு இளைச்சவ நான்தானே... எந்தத் தப்புன்னாலும் எம்மேலத்தானே சாய்ப்பீங்க?''

''இப்ப உங்கள நா என்ன சொல்லிட்டேன்னு இப்படி ஆத்திரப்பட்டுக்கறீங்க அத்தம்மா? ஏன் டப்பாவக் கொடுக்கலைனு கேட்டா, தப்பா!''



''தப்பில்லை வசு... தப்பேயில்ல... எல்லாம் நான் பொறந்த வேளை, எல்லார் வாயிலேயும் விழுந்து எழுந்திருக்க வேண்டியிருக்கு... என்ன நாதான் கொடுக்கணுமா? நீ ஞாபகமா கொடுத்திருக்கலாம், இல்லை?''

குழந்தை சாப்பாட்டு டப்பாவை எடுத்துக்கொள்ளாமல் பள்ளிக்குப் போயிருக்கிறானே, மதியம் பசித்தால் என்ன செய்வான் என்கிற பதைப்பு இல்லாமல் அந்தப் பேச்சுக்கள் அமைய,

கேட்டவரை போதும் என்கிற வெறுப்பில் மகாதேவன் உள்ளே எழுந்து வந்த பிறகும் தெளிவில்லாமல் ஏதோ வார்த்தைகள் அடுத்த வீட்டிலிருந்து ரொம்ப நேரத்துக்கு கேட்கவே செய்தன...

மத்தியானம் மகாதேவன் சாப்பிட உட்கார்ந்தபோது ராஜா டிபன் டப்பாவை வைத்துவிட்டுப்போனது நினைவுக்கு வந்து, லேசாக சங்கடத்தில் ஆழ்த்தியது...

சின்னப் பையன்... பசித்தால் என்ன செய்வான்?

இதுநாள்வரை பார்த்து, பழகியவரைக்கும் ராஜாமேல் அவருக்கு அத்தனை நல்ல அபிப்பிராயம் இல்லைதான்...

அதிகப்பிரசங்கி, பிஞ்சிலே வெம்பிய ரகம் என்று நினைத்தது உண்டுதான்.

ஆனால், காலையில் கண்ணகல வெகுளித்தனம் நிறைந்த ஆர்வத்துடன் வந்து பேசியதை மனசுக்குள் நிறுத்திப் பார்த்தபோதுதான் நினைக்கும் அளவுக்கு அந்தக் குழந்தை அடிப்படையில் மோசமானவன் இல்லையோ என்கிற சந்தேகமும் தோன்றியது.

பெரியவர்கள், அவர்கள் வளர்ப்பில்தான் கோளாறா?

அந்தக் கோணத்தில் யோசிக்காமல், ராஜாவின் பேச்சு நடத்தையை மேலோட்டமாகப் பார்த்து அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விட்டேனா!

அன்று மாலை ஸ்கூலிலிருந்து திரும்பிய உடனே ராஜா அவரைக் காண வந்துவிட்டான்.

கலைந்த முடி, அழுக்கு யூனிஃபார்ம், ஷூ... காலையில் அவர் சொன்னது நினைவில் இருந்த மாதிரி 'கேட்' வழியாக வந்தான்.

''கிரிக்கெட் டியர்ஸ் போட்டோஸ் வச்சிருக்கிங்களா அங்கிள்?''

''காட்றேன் - அதுக்கு முன்னால நீ இதுக்குப் பதில் சொல்லு ராஜா... காலைல டிபன் பாக்ஸை வச்சிட்டுப் போயிட்டியே, மத்தியான சாப்பாட்டுக்கு என்ன பண்ணினே?''

''ஹோட்டல்ல சாப்டேன்...''

''பணம்?''

''மாசம் ஐம்பது ரூபா டாடி பாக்கெட் பணம் தருவார் - அப்பப்ப தாத்தா, பாட்டிகிட்டயும் சுலபமா வேண்டியதக் கறந்திருவேனே... அது இருக்கட்டும், போட்டோஸ் காட்டுங்க அங்கிள்...''

பத்து வயசுப் பையனுக்கு எதற்கு இத்தனை பணம்? இது பற்றி யாராவது அந்த வீட்டில் யோசிக்கிறார்களோ என்கிற சன்னமான கவலையுடன் மகாதேவன் எழுந்து, போட்டோ ஆல்பங்களை எடுத்தார்.

அடுத்து வந்த மாசங்களில் கிரிக்கெட்டின்பால் உள்ள மோகத்தால் முடிந்தபோதெல்லாம் ராஜா அவரைத் தேடி வர,



கொஞ்சம் கொஞ்சமாய் அந்தப் பத்து வயசுப் பையனின் நிஜமான முகம், குணம் நன்றாகவே புரிபட ஆரம்பித்ததில், மகாதேவனின் கவலை அதிகமாகத் தொடங்கியது.

இது விஷயமாய் தன்னால் ஏதேனும் செய்யமுடியுமா, பக்குவமாய் ராஜாவிடம் பேசி அவனை வழிக்குக் கொண்டு வரும் அதே சமயத்தில் வேறு ஏதாவது தினுசில் அவனை அணுகுவது இயலுமா என்கிற யோசனை எழுந்த ஒரு நாளில் பத்திரிகை அலுவலகம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு காரை ஓட்டிக் கொண்டு வீடு திரும்பினபோது, ட்ராஃபிக் ஸிக்னலில் கொஞ்சம் நிதானித்தவர், பிளாட்பாரத்தில், அந்தத் தியேட்டருக்குச் செல்லும் வழியில், இரண்டு பசங்களோடு நின்றிருந்த ராஜாவை எதேச்சையாகப் பார்த்தார். அதிர்ந்தார்.

ராஜாவா?

எஸ்-ராஜாவேதான்...

கையில் புகையும் சிகரெட்டுடன்...

பத்து வயசுப் பிள்ளை, பள்ளிக்கூடத்துக்கு மட்டம் அடித்துவிட்டு, சினிமா தியேட்டர் வாசலில், அதுவும் கையில் சிகரெட்டுடன்...

என்ன அக்ரமம் இது!

கூட நிற்கும் பையன்களைப் பார்த்தால் வடிகட்டின தத்தாரிகளாகத் தெரிகிறார்களே, இவர்கள் ராஜாவின் நண்பர்களா?

தடிதடியாய், ராஜாவைவிட நாலைந்து வயது பெரியவர்களாய்... இந்தசகவாசம் சரியானதுதானா?

ம்ஹூம்... எதுவுமே சரியாக இருக்கிற மாதிரி தோன்றவில்லையே...

நவக்கிரகங்கள் மாதிரி அந்த வீட்டில் திசைக்கு ஒன்றாக வக்கரித்துக்கொண்டு நிற்கும் பெரியவர்கள், தெரிந்தோ தெரியாமலோ தங்கள் நடத்தையால் இந்த சின்னப் பிள்ளை அடிவாங்குகிறான் என்று புரிந்து கொள்ள மறுப்பது எத்தனை துர்பாக்கியமான சமாசாரம்...

இதற்கு என்ன செய்யலாம்!

மாதவனிடம் தனியாய்ப் பேசிப் பார்க்கலாமா?

தணிகாசலம், பரிமளம், இருவரையும் தனித்து சந்தித்து நிலைமையை விளக்கலாமா?

'நீ யாரடா எங்கள் விஷயத்தில் தலையிட?' - என்று கேட்டாலும் பரவாயில்லை என்று முனைந்து விடலாமா?

அடுத்து வந்த வாரங்களில் புரட்டிப் புரட்டி சிந்தித்து தன் ஸ்வபாவத்தை மீறிய காரியத்தைச் செய்ய ஒரு வழியாய் மகாதேவன் தயாரானபோதுதான் யாரும் அறியாமல் ராஜாவினுள் புகுந்து, எவர் கண்ணிலும் படாமல் திறமையுடன் கண்ணாமூச்சி ஆடிவிட்டு முத்தின நிலையில் நன்றாக வேர்விட்டுக்கொண்ட மஞ்சள் காமாலை வியாதியின் சொரூபம் வெளியில் தெரிய வந்தது!

## 25

"ராஜா... ஆ..."

"......"

"டே ராஜா ஆ... எங்கடா போயிட்ட?"

குரல் கொடுத்துக்கொண்டே உள்ளே வந்த பரிமளம் அவன் வராந்தாவில் ஒரு மூலையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு அதட்டலாய் கேட்டார்:



"இங்கேதானே இருக்கே? கூப்பிட்டது காதுல விழலை என்னு கேட்டா என்ன, குறைஞ்சு போயிடுவியா?"

ராஜா ஒருகாம் சோர்வுடன் கண்ணை மூடித் திறந்தான்.

"என்னா?"

"என்னவா? ஸ்கூலுக்கு நேரம் ஆகலியா? பஸ் வந்திடப் போகுதேனு டிபனைப் பண்ணி வச்சிட்டு கூப்டா இங்க உட்கார்ந்து பராக்கு பார்த்துகிட்டு என்னன்னு மெதுவா கேக்றியே!"

"எனக்கு டிபன் வேணாம் பாட்டி..."

"ஏன் வேணாம்?"

இப்போது பொறுமை இழந்து ராஜா கத்தினான்;

"வேணாம்னா விட்டுடுங்களேன்... என்னத்துக்காக நொண நொணனு நச்சரிக்கறீங்க?"

"மொளச்சு ரெண்டு எலை விடல... அதுக்குள்ளார வாயப் பாரு!... யார்தான் இப்படியெல்லாம் பேசக் கத்துக் குடுக்கறாங்களோ... எங்கே... மொண்டு பண்ணாம எழுந்து வந்து சாப்பிட்டுக் கிளம்பற வழியப்பாரு, பஸ் வந்திடப் போகுது..."

தான் சொல்வதைக் காதில் வாங்காமல் பாட்டி பேசிக்கொண்டே போவதைக் கேட்கப் பிடிக்காதவன் போல ராஜா எழுந்து புத்தகப்பையோடு படிகளில் இறங்கி வேகமாய் நடந்ததும், பரிமளத்தின் கோபம் அதிகமானது.

"டே... நா பாட்டுக்கு கேட்டுக்கிட்டே இருக்கேன், நீ கம்முனு போனா என்ன அர்த்தம்? ம்? ராஜா... டே..."

அந்தக் கூப்பாட்டை லட்சியம் பண்ணாமல் ராஜா கேட்டைத் தாண்டி தெருவில் நடந்ததும், அப்படியே சில

நொடிகளுக்கு நின்று அவன் கண்களிலிருந்து மறையும்வரை வெறித்துவிட்டு பரிமளம் உள்ளே வந்தார்.

சமையல்கட்டில் தங்களுடைய மதிய உணவை டப்பாக்களில் எடுத்து வைத்துக்கொண்டிருந்த மருமகளிடம் வந்து நின்றுகொண்டார்.

''இந்த வீட்டுல நா இருக்கறதும் ஒண்ணுதான் இல்லாததும் ஒண்ணுதான். எல்லோருக்கும் நான்னா இளப்பம்...''

அவர் நீளமாய் அங்கலாய்க்கும் முன்னர் வசந்தா ஆயாசத்துடன் குறுக்கிட்டாள்.

''தயவு பண்ணி காலவேளைல ஆரம்பிச்சுடாதீங்க அத்தம்மா... தலைக்கு மேலே வேல கிடக்கு... இப்ப என்னத்துக்காகப் புலம்பறீங்க? யார் உங்கள என்ன சொன்னாங்க?''

''இன்னும் யாரு என்ன சொல்ல பாக்கி இருக்கு! அதான் வேண கேட்டாச்சே! எல்லாரும் கால்ல போட்டு தேய்ச்சி முடிச்சிட்டாங்க. இப்ப இந்தப் பொடியன் துவங்கி இருக்கான்... டிபன்சாப்பிட்டுப் போடானு வாசலுக்குப் போய் கெஞ்சறேன்... காதுல வாங்காம அழும்பா நடந்து போறான்...''

''யாரு? ராஜாவா? டிபன் சாப்பிடாமலா போயிட்டான்? காலைல எழுந்து எதாச்சும் நொறுக்குத்தீனி தின்னானா?''

''இன்னிக்கினு இல்ல, நாலைஞ்சு நாளாவே இப்படித் தான்... ராத்திரிகூட ஒழுங்கா சாப்பிடறதில்ல... வயித்தப் பிரட்டுது, தலைய வலிக்குதுனு ஏதேதோ நொண்டிக் காரணங்களைச் சொல்றான் வசு...''



வசந்தா கைக்காரியத்தை நிறுத்திவிட்டு புருவங்கள் முடிச்சுப் போட நிமிர்ந்தாள்.

''உடம்பு மெய்யாலுமே சரியில்லையோ என்னமோ!''

பரிமளம் கழுத்தை நொடித்து நையாண்டியாய் சிரித்தார்.

''முதல்ல உன் மாமனாரை நினைச்சநினைச்ச போளன் கைல பணம் கொடுக்கறத நிறுத்தச் சொல்லு... சாயங்காலம் 'வாக்' போறேன்னு போயிட்டு ரெண்டு பேருமா ஓட்டல்ல மூக்குப்பிடிக்கத் தின்னுட்டு வர்றத நிறுத்தச் சொல்லு... பையன் தன்னால சரியாயிடுவான்.''

அத்தை சொன்னதை மனசில் வாங்கிய வசந்தா, மறக்காமல் ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் மாதவன் டிபன் சாப்பிட உட்கார்ந்தபோது அந்தப் பேச்சை எடுத்தாள்.

''ராஜா சரியாவே சாப்பிட மாட்டேன்றான்... உங்கப்பா அடிக்கடி அவனுக்குப் பணம் கொடுக்கறதோட ஹோட்டலுக் கும் அழைச்சிட்டுப் போயிடறதுல, வீட்டுச் சாப்பாடு அவனுக்கு ருசிக்கவே மாட்டேங்குது. வளர்ற பையன் கண்டதத் தின்னு உடம்பக் கெடுத்துக்கறது நல்லதுக்கு இல்ல... கொஞ்சம் சொல்லி வையுங்க...''

பேசியவளை மாதவன் நிமிர்ந்து பார்த்தான்.

''அவரண்ட நா சொல்றது இருக்கட்டும்; நீ நினைச்ச, நினைச்ச 'ஐஸ்கிரீம் சாப்பிடு ராஜா'னு அஞ்சு, பத்து கொடுக்கறதையும், உங்க அத்தம்மா 'இன்னிக்கு என்னோட நீ ஜபம் சொன்னா, உனக்கு ரெண்டு ரூபா தருவேன்'னு லஞ்சம் தர்றதையும் கூடவே நிறுத்திட்டீங்கன்னா, பையன்மேல மெய்யாலுமே நீங்க அக்கறை உள்ளவங்கனு நா நினைச்சுப்பேன்.''

''அப்ப, அப்ப? ராஜா மேல எங்களுக்கு அக்கறை இல்ல, உங்களுக்கும், உங்கப்பாவுக்கும்தான் இருக்குனு சொல்றீங்க?''

மாதவன் கையை உதறிக்கொண்டு எழுந்து நின்றான்.

''நா எதுவும் சொல்ல வரல... ஆளை விடு... நீ மட்டும் வண்டி புகார் படிக்கலாம்... ஆனா, நா வாயத் திறந்து எதையும் சுட்டிக்காட்டி பேசிடக்கூடாது... அதானே?''

உறுமலாய்ப் பேசிவிட்டு அவன் கையைக் கழுவிக் கொண்டு வாசலுக்குச் சென்று ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்ய, 'இந்த மனுஷனோட வாழறதவிட சிங்கம், புலிங்க நடுவுல இருந்திடறது தேவலாம்' என்று முணுமுணுத்தவாறு வசந்தாவும் ஸ்கூட்டர் பிலியனில் அமர்ந்து கொண்டாள்.

இது நடந்து நாலு நாட்கள் போல ஆன பிறகு, ஞாயிறு அன்று சர்ச்சுக்குப் போய்விட்டு வீடு திரும்பின பரிமளத்தின் கையில் பளபளவென்று ஒரு புது எவர்ஸில்வர் டப்பா.

கூடத்தில் அமர்ந்து புடவை ஒன்றுக்கு ஓரம் மடித்துத் தைத்துக்கொண்டிருந்த வசந்தா அவளைக் கண்டதும் ''என்ன அத்தம்மா பாத்திரத்துல?'' என்றாள்.

பரிமளம் அவள் அருகில் வந்து டப்பாவைத் திறந்து காட்டினார்.

லேசான மஞ்சள் நிறத்தில் ஸ்பான்ஜ் மாதிரி ஒரு துண்டு...

''என்ன அத்தம்மா இது?''

பரிமளம் ஒருதரம் சிலுவைக்குறி இட்டுக்கொண்டார். பிறகு பக்தி நிறைந்த குரலில் ''ஆண்டவரோடு மகிமையை நிரூபிக்கறதுக்காக தோன்றியிருக்கிற சப்பாத்தி வக'' என்றார்.



''சப்பாத்தியா?''

''சாதாரணமானதுன்னு நினைச்சிடாத வக... பம்பாயில பாதிரியார் ஒருத்தர் மனமுருக பிரார்த்தனை பண்ணப்போ அவர் முதுகில இந்தச் சப்பாத்தி தானா வந்து ஒட்டிகிச்சாம். அதைப் பிச்சு எடுத்து, பீடத்துல தனி பாத்திரத்துல வச்சு, ஆண்டவரோட உத்தரவுப்படி ஜபம் சொன்னப்ப, மளமளனு வளர்ந்திட்டது, எல்லாருக்கும் துளித் துளியாக் கொடுத்ததுல இன்னிக்கு நாடு பூரா பரவியிருக்கு தெரியுமா?... ஆண்டவரோட அற்புதங்கள்ல இதுவும் ஒண்ணு வக...''

''இது எதுக்காக வாங்கிட்டு வந்திருக்கீங்க அத்தம்மா?''

''எதுக்காகவா? ராஜா ஒரு வாரமா சரியாவே சாப்பிட மாட்டேங்கறான் இல்ல, அதுக்காகத்தான். அடைக்கலம் ஐயாகிட்ட 'பேரன் சோர்ந்துபோய் இருக்கான்'னு சொல்லி வருத்தப்பட்டுக்கிட்டப்போ, எதாச்சும் செய்வினையா இருக்கும்; புனித சப்பாத்தி நீரைக் கொடுத்துப்பாரு சரியாயிடுமின்னு சொன்னாரு. ஜோசப்கிட்ட சொல்லி வாங்கிட்டு வரேன். தெனைக்கும் இதுல ஒரு ஸ்பூன் மூடிகாஷன ஊத்திவச்சு, ஜபம் சொல்லி அப்புறமா ராஜாவுக்கு அதக்கொடுத்தா, பத்தே நாள்ல எந்த செய்வினையானாலும் கர்த்தரோட அருளால சரியாயிடுமாம்... பார்த்துகிட்டே இரேன்...''

உற்சாகத்தோடு பரிமளம் பேசியதைத் தன் அறை சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி கேட்டுக்கொண்டிருந்த தணிகாசலம் பதைத்துதான் போனார்... 'ஏசுவின் அருள்' கொடி கட்டிப் பறப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தால் அப்புறம் 'முருகன் கிருபை' என்னாவது? - என்கிற ரோஷம் எழ, சுட்டெரிக்கிற வெயிலை லட்சியம் பண்ணாமல் அன்று

வடபழனிக்குச் சென்று 'சகல வினை தீர்க்கும் முருக ஆண்டவரை' சந்தித்தார்.

மாலை சுமார் ஏழு மணியளவில் வீடு திரும்பியவர் கையில் ஒரு காகிதப் பொட்டலம்.

''ராஜா, தம்பி ராஜா'' என்று அழைத்தவாறு உள்ளே வந்து, பரிமளம், வசந்தா, மாதவன் பார்த்துக்கொண்டு படுக்கையிலேயே படுத்திருந்த ராஜாவிடம் சென்றார். பொட்டலத்தைப் பிரித்து ''அப்பனே முருகா, புள்ளய எல்லா தீய சக்திலேந்தும் காப்பாத்தப்பா'' என்று உரக்க முனகி, அதிலிருந்த திருநீறை ராஜாவின் நெற்றியில் பூசினார்.

பின், கறுப்புக் கயிற்றில் கோர்க்கப்பட்டிருந்த தாயத்தை 'கை நீட்டு தம்பி' என்று அவனை வலக்கையை நீட்ட வைத்து புஜத்தில் கட்டினார்.

ஒரு நிமிஷம் நடப்பது எதுவும் புரியாமல் விழித்து விட்டு வசந்தா கணவனின் தோளை உலுக்கி என்ன கூத்து இதெல்லாம் கேளுங்கள் என்று ஜாடை காட்ட, மாதவன் ''என்னப்பா இது? தாயத்தா? எதுக்கு?'' என்றான் சின்னக் குரலில்...

''எதுக்கா? வம்சம் தழைக்கப் பிறந்திருக்கிற பேரான்டா, ஒன்னே ஒண்ணு கண்ணே கண்ணுனு இருக்கிற கொழுந்த, நல்லா இருக்க வேணாமா, அதுக்காகத்தான்... இந்த தாயத்தக் கட்டிவிட்டேன்...''

ஒருவித உரிமையுடன் பேசிக்கொண்டு போனவரை வாயில் அழைப்பு மணி தடுத்தது.

தொடர்ந்து ''ஹலோ... ராஜா இருக்கானா?'' என்று விசாரித்த மகாதேவனின் குரல்...



அது நாழிகை படுக்கையில் சோர்வுடன் படுத்திருந்த ராஜா மெள்ள எழுந்து வராந்தாவுக்குப் போக, அவனை மாதவன் பின்தொடர்ந்தான்.

கதவைத் திறந்ததும் மகாதேவன் அறைக்குள் வந்தார்.

''குட் ஈவினிங்... என்ன ராஜா உடம்பு சரியில்லையா, என்ன? ரெண்டு மூணு நாளா வீட்டுப் பக்கமே வரலியே...''

''.........''

''சாயங்காலம் தோட்டத்தில வாந்தி எடுத்தியாமே! முத்து சொன்னான்... போன வாரம் 'அடிக்கடி வாந்தி வருது அங்கிள்'னு சொன்னது இன்னுமா சரியாகல?'' பேசியவர் மாதவன் பக்கமாய்த் திரும்பிக் கேட்டார்.

''டாக்டர்கிட்ட அழைச்சுகிட்டுப் போனீங்களா மிஸ்டர் மாதவன்...?''

சென்ற வாரமோ அல்லது இன்றோ மகன் வாந்தி எடுத்த விவரம் எதுவும் தெரியாததால் என்ன பதில் கூறுவது என்று புரியாமல் மாதவன் திருதிருத்தான். பிறகு சமாளிக்கும் உத்தேசத்தோடு, ''கன்னா, பின்னானு வெளில சாப்பிட்டா அஜீரணம் வராம என்ன செய்யும்? பெரியவங்க சொல்ற பேச்சக் கேட்டாதானே?'' என்றவன் ''உள்ள வாங்க ஸார், இங்கேயே நின்னுகிட்டிருந்தா எப்படி?'' என்றான்.

மகாதேவன் புன்னகையுடன் தலையசைத்து மறுத்தார்.

''மன்னிக்கவும் மிஸ்டர் மாதவன்... இப்பதான் வெளிலேருந்து வந்தேன்... ராஜாவுக்கு உடம்பு சரியில்லே, வாந்தி எடுத்தான் - னு முத்து சொன்னதால் பார்த்துட்டு போகலாம்னு வந்தேன். நாளைக் காலைல டெல்லிக்குப் போறேன்; திரும்பினப்புறம் இன்னொரு நாள் சாவகாசமா வரேன். தாங்க்ஸ்.''

பேசியவாறே ராஜாவை நெருங்கி அவன் தலைமுடியில் விரல்களை விட்டுக் கோதி ''பெரியவங்க பேச்சக் கேட்டுகிட்டு சமர்த்தா இருக்க வேணாமா ராஜா... அப்பா வருத்தப்பட்டுக்கறார் பாரு... ஆமா, இதென்ன கையில புதுசா? தாயத்தா?'' என்று வினவ, ராஜா அப்பாவை ஒரு தரம் அழுந்தப் பார்த்துவிட்டு கேலியோடு பதில் கூறினான்.

''காலைல பாட்டி 'புனித சப்பாத்தி' கொண்டு வந்தப்புறம் தாத்தா சும்மா இருப்பாரா? பதிலுக்கு தாயத்து கட்டியிருக்கார். நீங்க ஊர்லேயிருந்து வர்றதுக்குள்ளே, இதுக்குப் போட்டியா பாட்டியும், அதுக்கு எதிர் போட்டியா தாத்தாவும் ஏதாச்சும் மேலமேல செஞ்சு, என்ன உண்டு இல்லேன்னு ஆக்கிடுவாங்க... நீங்க வேணா பாருங்க...''

கேலியும், சலிப்புமாய் அந்தச் சிறுவன் பேசுவது புரிய மகாதேவன் நிமிர்ந்து மாதவனை ஏறிட்டார்.

தான் உணர்ந்ததை மாதவனும் புரிந்துகொண்டு அவஸ்தைப்படுகிற மாதிரி தோன்ற அவசரமாய் பேச்சை மாற்றினார்.

''அந்தப் பேச்ச விடு... உனக்கு டெல்லிலேருந்து என்ன வேணும் சொல்லு...''

ராஜா உதட்டைப் பிதுக்கி, தோளைக் குலுக்கினான். பின், நிற்கமுடியாதது போல வராந்தா நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

அவனிடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டைப் பார்க்க நடந்த நிமிஷத்தில் ராஜாவிடம் காணப்பட்ட சோர்வு, இளைப்பு, ஆர்வமின்மை - அவனுக்கு உண்மையிலேயே உடம்பு நன்றாக இல்லை என்பதை மகாதேவனுக்கு உணர்த்தியது.



''டெல்லிக்கு எப்பம் போறீங்க அங்கிள்? போனா, எனக்காக கபில்தேவ்கிட்டயிருந்து ஆட்டோகிராப் வாங்கிட்டு வர முடியுமா? 'டு ராஜா - வித் லவ் கபில்' னு பேர் போட்டு சைன் பண்ணித் தருவாரா அங்கிள்?'' என்று பத்து நாட்கள் முன்புவரை லொட லொடத்துக் கொண்டிருந்த பிள்ளை இன்று உதட்டைப் பிதுக்கி, ஒரு வார்த்தை பேசாமல் ஆயாசத்துடன் உட்கார்ந்துவிட்டது எகத்துக்குப் பிராண்ட, அந்த நினைப்பு மாறாமலேயே 'பாக்' செய்தார், டெல்லிக்குப் புறப்பட்டார்.

மகாதேவனின் பயம் அடுத்த வாரம் அவர் திரும்பி வந்தபோது நிஜமாயிருந்தது.

காமாலை-

ஈரல் பாதிக்கப்பட்டு முத்தின மஞ்சள் காமாலை...

இரண்டு வாரங்களாக வாந்தி, பசியின்மை, ஜுரம் என்று அவ்வப்போது தன் ரூபத்தை அது வெளியில் காட்ட முயன்றும், ஏனோ அந்த வீட்டிலிருந்த அனைவருக்குமே அது இன்ன வியாதி என்று புரிந்துகொள்ள முடியாமல் போனது பெரியவர்களின் தெரியாத்தனத்தாலா, அல்லது ராஜாவின் போறாத காலத்தாலா?... ஏதோ ஒன்று போங்கள்...

கடைசியாய் - கண்களும், உடம்பும் மஞ்சள் தேய்த்துக் குளித்த ஜோரில் நிறம் மாறிப்போய், 'எனக்கு உடம்ப என்னமோ பண்ணுது' என்று சுருண்டு ராஜா படுத்த பிறகே 'ஓஹோ - செய்வினையும் இல்ல, மண்ணாங்கட்டியும் இல்ல - இது - மஞ்சள் காமாலை' என்பது பெரியவர்களுக்கு விளங்கியது.

புரிந்த நிமிஷத்திலிருந்தாவது நிதானமாய் விவேகத் துடன் காரியத்தில் இறங்கினார்களா, என்றால் - அதுவும்

இல்லை. உண்மை புரிபட்டதிலிருந்து இன்னொரு விதமாய் அந்த வீடு அமர்க்களப்பட ஆரம்பித்ததுதான் நிஜம்.

''முதல்ல அந்தச் சப்பாத்தித் தண்ணி குடுக்கறத நிறுத்து'' - என்று தணிகாசலம் கத்த,

''அந்த தாயத்தக் கழட்டி எறியச் சொல்லு'' என்று பரிமளம் முறைக்க,

''அய்யர அழைச்சிட்டு வரேன். ஊசிய மந்திரிச்சு தண்ணில போட்டார்னா தன்னால காய்ச்சல் குறைஞ்சிடும்'' என்று இவர் கூற,

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம்... மாதா கோவில்ல ஒருநாள் திருப்பலி பூசைக்கான செலவத் தந்திடறேனுனு பிரார்த்திச்சுக்கிட்டா, தன்னால பையனுக்குச் சுகமாயிடும்'' என்று அவர் கூற,

''மஞ்சள் கரிசலாங்கண்ணி தழையோட சாறை மூணு வேளை கொடுத்தா எப்பேர்பட்ட காமாலையும் ஓட்டமா ஓடிடும் -'' என்று தணிகாசலம் வாதாட,

''கண்டதக் கொடுத்து நோய அதிகமாக்காத வக-'' என்று பரிமளம் பதிலுக்குச் சாட...

மொத்தத்தில் அடுத்து வந்த நாட்கள் ராஜாவைப் பொறுத்தவரை வேதனையான நாட்கள்; தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ, அந்த வீட்டுப் பெரியவர்கள் தங்களின் கண்ணைக் கட்டிவிட்ட குதிரைத் தனத்தால் அவனைப் பரிசோதனை எலியாக மாற்றிய நாட்கள்...

# 26

சின்ன 'கிரிக்கெட் பேட்!'

மரத்தாலான 'மினியேச்சர்' கிரிக்கெட் பேட்!

சாண் உயரம், இரண்டங்குலம் அகலம், கறுப்புப் பிடியுமான பேட்!

'ராஜாவுக்கு - மிகுந்த அன்புடன் - கபில்தேவ்' - என்று எழுதிக் கையெழுத்திடப்பட்ட பேட்!

பெட்டியிலிருந்து வெளியில் எடுத்ததை மேஜைமீது வைக்கும்முன், அரை நிமிஷம் அதையே ஊன்றிப் பார்த்த போது சந்தோஷமாக இருந்தது.

டெல்லியில் நடந்த சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ட்ரெஸ்ஸிங் ரூமில் உட்கார்ந்திருந்த கபில்தே விடம் சென்று ராஜாவைப் பற்றிக் கூறி ''அவன் பேரை எழுதி ஒரு கையெழுத்துப் போட்டுத்தர முடியுமா கபில்?'' என, ''கொஞ்சம் இருங்கள்'' என்று எழுந்து போனவர் திரும்பி வந்தபோது கையில் குட்டியாய் ஒரு மினியேச்சர் பேட்!

''பேர் என்ன சொன்னீங்க?'' என்று கேட்டு, அதிலேயே கையெழுத்திட்டுத் தந்ததை ராஜாவிடம் ''இந்தா உனக்கு ஒரு பரிசு'' என்றவாறு தூக்கித் தந்தால், அவன் திக்குமுக்காடப் போகிறான் - கட்டாயம்.

கற்பனை உதட்டில் ஒரு முறுவலைத் தவழவிட, பெட்டியிலிருந்து இதர சாமான்களை வெளியில் எடுக்க முற்பட்ட நிமிஷத்தில் அறைவாசலில் முத்து வந்து நின்றான்.

''சாப்பாடு எதுவும் வேணாம் முத்து...ஃப்ளைட்லேயே சாப்பாடு கொடுத்திட்டாங்க... ஜக்குல ஐஸ் வாட்டர் வச்சிட்டு, நீ படுக்கப் போ... பாக்கி விஷயங்களைக் காலைல பேசிக்கலாம்... இந்த டெல்லி விமானம்னாலே வீட்டுக்கு வந்து சேர்ந்து, படுக்க, அர்த்தராத்திரி ஆகுது...''

முனகலாகத் தனக்குத்தானே பேசிக்கொண்டு உடைகளை அலமாரியில் மாட்டிவிட்டு திரும்பின மகாதேவன், முத்து இன்னமும் இங்கேயே நிற்பதைப் பார்த்துவிட்டு புருவங்களை உயர்த்தினார்.

''என்னப்பா... ஏதாவது சொல்லணுமா?''

முத்து ஓரடி எடுத்து வைத்து அறைக்குள் வந்தான். கிட்டத்திலிருந்து பார்க்கையில் அவன் முகம் சோகத்தில் கோணியிருப்பதை உணர முடிந்தது.

''என்ன விஷயம் முத்து?''

''ராஜாவ ஆஸ்பத்திரில சேர்த்திருக்காங்க ஸார்.''

மகாதேவன் திடுக்கிட்டார்.

''எதுக்கப்பா?''

''ராஜாவுக்கு மஞ்சக்காமாலை ஸார்... நீங்க ஊருக்குப் போனதும்தான் தெரிஞ்சது... அப்பக்கூட அந்த வீட்டுப் பெரியவங்க வைத்தியம் பார்க்காம மந்திரம், தந்திரம்னு சொல்லிட்டு என்னென்னமோ செஞ்சதுல, ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சு... ரெண்டு நாளா ராஜா உடம்புல நீர் கோத்துகிட்ட மாதிரி ஒரே வீக்கம்... கண்ணும், உடம்பும் ரொம்ப மஞ்சளாயிடுச்சு... அரிப்பு வேற... நேத்து ராத்திரிலேயிருந்தே ராஜா தெளிவா பேசல. விடிஞ்சதும் மயக்கம் அதிகமா



இருக்கிற மாதிரி தோணை, பெரியவங்க பயந்துகிட்டு முத முறையா வைத்தியரை கூட்டிட்டு வந்தாங்க... அவுரு கன்னாபின்னானு திட்டிட்டு உடனே ஆஸ்பத்திரியில சேர்த்திட்டாரு... நா போய்ப் பாத்திட்டு வந்தேன் ஸார்... நினைவு இல்லாம படுத்திருக்கிற புள்ளையப் பாக்கறப்போ பகீர்னுது ஸார்...''

மேற்கொண்டு கால்மணி போல பேசி, கடந்த ஆறு நாட்களில் நடந்த விவரங்கள் அத்தனையும் அறிந்து கொண்டபோது கோபம், வருத்தம், ஆத்திரம் எல்லாமாக மகாதேவனுள் கலந்து வியாபித்தன.

ஜாண்டிஸ் என்று புரிந்த உடனேயே வைத்தியரை வரவழைத்து என்ன செய்யவேண்டும் என்பதைக் கேட்டறிந்து, தக்க நடவடிக்கைகளை எடுக்காமல், என்ன செய்துகொண்டிருந்தார்கள் அந்த வீட்டுப் பெரியவர்கள்?

தணிகாசலமும், பரிமளமும்தான் அந்தக் காலத்து மனிதர்கள்; வைத்தியத்துறையின் முன்னேற்றம் புரியாமல் மந்திரம், மாயம் என்று நம்பிக்கை வைத்துப் பேசியிருக்கலாம், நடந்துகொண்டிருக்கலாம்... ஆனால் இந்த மாதவன், வசந்தாவுக்கு மூளை எங்கே போயிற்று?

கோபத்தின் ஊடே சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு கதைக்காக, ராஜஸ்தான், குஜராத் என்று அலைந்து திரிந்து, கண்விழித்து, கண்டபடி சாப்பிட்டதில் காமாலை வந்து மூன்று வாரங்கள் படுத்திருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

நாலு நாட்கள் அஜீரணம், வாந்தி, ஜுரம், லேசாக கண் மஞ்சள், இதற்கே டாக்டர் சந்தேகப்பட்டு, ரத்த, மூத்திர

பரிசோதனை செய்ய, மண்டையில் அடித்த மாதிரி 48 மணி நேரத்தில் முடிவு வந்துவிட்டது.

மஞ்சள் காமாலை.

அடுத்த நாளே அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்து, நரம்பு வழியாய் வைட்டமின் க்ளுகோஸ் ட்ரிப் ஏற்றி, நோய்த் தடுப்புக்காக ஆண்டி பயாடிக், இன்டெஸ்டினல் ஆண்டிசெப்டிக் மருந்துகளைக் கொடுத்து, அதிக காரம், உப்பு, புளிப்பு இல்லாமல் பழரசம், மோர், இளநீர் என்று குடிக்க வைத்து, ''இன்னும் ரெண்டு மாசம் கண்டிப்பா எதையும் சாப்பிடாம ஓய்வா இருந்து உடனே பார்த்துக்கங்க. மஞ்சக்காமாலை தானேனு அலட்சியமா இருக்கறது கூடாது'' என்று அக்கறையுடன் அறிவுரை கூறி...

அப்படிச் செய்யவேண்டிய எதையுமே செய்யாமல், மாதவனும், வசந்தாவும் தங்கள் அறியாமையின் காரணமாய் ராஜாவை துன்பப்பட வைத்திருப்பது கோபத்தை அதிகமாக்க மகாதேவன் எழுந்து இப்படியும் அப்படியும் நடந்தார்.

நகத்தைக் கடித்தார். யோசித்தார்.

ராஜாவை உடனடியாய்ப் பார்க்கவேண்டும் போலத் தோன்ற, பார்வையை கடிகாரத்தின் மேல் வீசினார்.

பன்னிரண்டு பத்து...

எந்த ஆஸ்பத்திரியும் இந்த நேரத்தில் பார்வையாளரை அனுமதிக்காது...

முத்துவை அனுப்பிவிட்டு, ஜக்கிலிருந்து ஒரு டம்ளர் குளிர்ந்த நீரை எடுத்துக் குடித்தும் கோபம் அடங்காமல் இருக்க, கதவைத் திறந்துகொண்டு பால்கனிக்குச் சென்று நின்றார்.



ஊரே உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கையில் பக்கத்து வீட்டில் மட்டும் வாசல் அறை, பின்கட்டு விளக்குகள், எரிந்து கொண்டிருந்தன.

திறந்த ஜன்னல் வழியாக தணிகாசலம் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருப்பதையும், அடிக்கடி முன்னால் சாய்ந்து தலையை கைகளில் தாங்கிக்கொள்வதையும், கண்களைத் துடைத்துக் கொள்வதையும் தெளிவாகக் காண முடிந்தது.

அழுகிறாரா?

பேரனுக்கு ரொம்ப உடம்பு சரியில்லையே என்று வேதனைப்படுகிறாரா?

இவரைப் போலவே பரிமளமும் பின்கட்டில், அழுதும் புலம்பிக் கொண்டிருக்கலாம், அல்லது பீடத்துக்கு முன் மண்டியிட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கலாம் என்பதை ஊகிக்க முடிய, மகாதேவனுள்ளிலிருந்து நீளமாய் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

...காலைல பாட்டி 'புனித சப்பாத்தி' கொண்டு வந்தப்புறம் தாத்தா சும்மா இருப்பாரா? பதிலுக்கு தாயத்து கட்டியிருக்கார். நீங்க ஊர்லேந்து வர்றதுக்குள்ள, இதுக்குப் போட்டியா பாட்டியும், அதுக்கு எதிர் போட்டியா தாத்தாவும் ஏதாச்சும் மேலமேல செஞ்சு, என்னை உண்டு, இல்லேனு ஆக்கிடுவாங்க... நீங்க வேணா பாருங்க...

டெல்லிக்குப் புறப்படும்முன் ராஜாவைக் காணச் சென்றபோது கொஞ்சம் கேலியும், நிறைய சலிப்புமாக அந்தச் சிறுவன் பேசின வார்த்தைகள் திடுமென நினைவுக்கு வர

ஒருவித அவஸ்தையுடன் மகாதேவன் அங்கிருந்த கூடை நாற்காலியில் அமர்ந்தார்.

சற்றே சரிந்து கழுத்தைப் பின்னுக்குத் தள்ளி மேலே தெரிந்த வானத்தை வெறித்தார்.

கருநீல ஆகாயம்...

ஆயிரக்கணக்கில் நட்சத்திர கூட்டம்...

மகாதேவன் கண்களை மூடிக்கொண்டார்.

-அங்கிள், நேத்து தாத்தாவோட கோவிலுக்குப் போயிருந்தேன். அங்க ஒரு பெரியவர் கதா காலட்சேபம் செஞ்சிட்டிருந்தார். 'ஒரு குளம், இதுக்கு நாலு பக்கமும் படிக்கட்டுகள், எந்தப் படிக்கட்டு வழியாயும் எறங்கி தண்ணி எடுக்கலாம். இது அவரவர் வசதி, இஷ்டத்தைப் பொறுத்திருக்கு இல்லையா! இதேபோல, தெய்வத்தைக் குளத்தோட நீருக்கும்; மதங்களை நாலுபக்க படிக்கட்டுகளுக்கும் ஒப்பிடலாம். வழி எதுவானாலும் அடையப்போற இலக்கு கடைசில ஒண்ணுதான்...'னு சொன்னார். தெய்வம் ஒண்ணு, வழிதான் வேற வேறன்னா எதுக்காக அங்கிள், பாட்டியும், தாத்தாவும் 'என் தெய்வம்தான் உசத்தி, உன்னுது மட்டம்; என் வழி சரி, உன்னுது தப்பு'னு சதா சண்டை போட்டுக்கறாங்க?...

அன்றைக்கு ராஜா இவர்முன் வந்து நின்று, தீவிர யோசனை கண்களில் புகை மூட்டமாய்ப் படிய இப்படிக் கேட்டதும், மின்சாரம் பாய்ந்த மாதிரி உடம்பு உதறிப் போட்டதை இப்போது மகாதேவன் நினைத்துக்கொண்டார்.

இந்தச் சின்னப் பையனுக்குத் தோன்றின உறுத்தல்கூட அந்த வீட்டுப் பெரியவர்களுக்கு ஏற்படவில்லையே என்கிற



அவஸ்தை எழ, அன்றுதான் அவர்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை, கையைக் கட்டிக்கொண்டு இனியும் உட்கார்ந்திருந்தால் பாழாய்ப் போகப்போவது ராஜாதான் என்பதால் அவர்களோடு பேசியே தீருவது என்று தீர்மானம் பண்ணிக்கொண்டார்.

ஆனால் நினைத்ததைச் செயலாக்க முடியாதபடி வேலை தலைக்குமேல் சேர்ந்து போயிற்று; தொடர்ந்து டெல்லிக்குப் போகவேண்டி வந்து விட்டது... அப்புறம்...

மகாதேவன் சட்டென்று தன்னை ஒருதரம் உலுக்கிக் கொண்டார்...

அடுத்த வீட்டு விவகாரத்தில் தலையிடுவது எதற்கு என்கிற தயக்கத்தில் என்னையும் அறியாமல் நானும் உப்பு சப்பு பெறாத விஷயங்களைக் காரணமாகக் காட்டுகிறேனோ!

ஒன்றைச் செய்யத் துணிவில்லாததை ஒப்புக்கொள்ள மறுக்கும் இனுசில் வேலை, ஊருக்குப் போனது என்று நொண்டிச் சாக்கு சொல்கிறேனோ?

நியாயமான கேள்விகள் ஏற்கனவே ஜனித்திருந்த அவஸ்தையை இன்னும் ஆழமாக்க, மகாதேவன் கண்களைத் திறந்து மறுபடியும் வானவெளியை வெறித்தார்.

எச்சிலைக் கூட்டி விழுங்கி, கவனத்தை நட்சத்திரங்களின் கண் சிமிட்டல்களில் செலுத்த முயன்றார்.

எங்கோ ஒரு நாய் பரிதாபமாய் ஊளையிட்டது.

புத்தி மீண்டும் மீண்டும் ராஜாவிடமும், அடுத்த வீட்டுப் பெரியவர்களிடமுமே ஓடியது...

— இதுக்குப் போட்டியா பாட்டியும், அதுக்கு எதிர் போட்டியா தாத்தாவும் எதாச்சும் மேலமேல செஞ்சு என்ன உண்டு இல்லேனு ஆக்கிடுவாங்க...

— தெய்வம் ஒண்ணுதான்னா எதுக்காக அங்கிள், தாத்தாவும் பாட்டியும் இப்படி சண்டை போட்டுக்கறாங்க?...

நியாயமான கேள்வி.

ஏன் சண்டை? எதனால் வெறுப்பு? இன்றைக்கு ஒவரையே துளைத்துவிடுமளவுக்கு கசப்பும், வெறுப்பும் மண்டக் காரணம் என்ன?

இத்தனைக்கும் ஆரம்பம் எங்கே?

அடுத்த விட்டுப் பெரியவர்கள் நால்வரையும் தனித்தனியே எடை போட்டால் ஒவ்வொருவருமே நல்ல குணம் கொண்டவர்தாம்; ஆனாலும் ஏதோ ஒரு அசட்டுப் பிடிவாதத்தில் அமிழ்ந்துபோய் கண்களைக் கட்டிவிட்ட மாதிரி நடந்துகொள்வதில் விவேகம் தலையெடுக்க வழி இல்லாமல் போய்விட்டது. இதுதானே உண்மை?

'மதம், ஜாதி, மொழி எல்லாவற்றையும் கடந்து விசாலமான மனசுடன் வாழ்வோம்' என்கிற இனுசில் முதன் முதலில் விதை ஊன்றப்பட்டது என்னவோ வாஸ்தவம்தான் என்றாலும், சரியான சிந்தனையும் தகுந்த கவனிப்பும் இல்லாமல் போனதில், தேவையான தண்ணீர், உரம் இன்றி வளர்ச்சி முடக்கப்பட்டு, வேர்ப் பூச்சி கண்டுவிட்ட மரமாக அவர்கள் மாறிவிட்டதுதானே நிஜம்?

ஆதியில் மதமும், தெய்வமும் மனித சமுதாயம் ஒரு கட்டுப்பாட்டுடன் இயங்கவும் தர்ம நியாய உண்மைகளுக்குத் தலைவணங்கி மனிதன் நிம்மதியோடு வாழ வழி



செல்வத்திற்காகவும் தோற்றுவிக்கப்பட்டன என்பதை, வளர்ந்த பின்பும், தனக்காக நல்லது கெட்டதை சிந்திக்கத் திறன் உண்டானாலும், இந்த நலன்கள் புரிந்துகொள்ளாமல் 'என் தெய்வம் உசத்தி; உன் கடவுள் மட்டம்' என்கிற விவேகமற்ற பிடிக்கமான வாதங்களில் ஈடுபட்டு, தானும் நிலைகுலைந்து, அடுத்தவர்களையும் பாழடிப்பது எதற்காக?

மதநோய் வைப்பட்டதால் தலையெடுத்துவிட்ட ஆங்காரம், கசப்பு, இன்று தங்களுடைய பேச்சு, சிந்தனை, நடத்தை என்று அத்தனை மேலும் காளானாகப் படர்ந்து மனிதாபிமானத்தை இழக்க வைத்துவிட்டதை அவர்கள் ஏன் உணரவில்லை?

இந்த வேர்ப்பூச்சி அவர்களோடு நில்லாமல் அடுத்தவர்களையும் பாதித்து எல்லோரையுமே வேரில்லாத மரங்களாக விரைவில் ஆக்கிவிடும் என்பதைப் புரிந்துகொள்ள ஏன் மறுக்கிறார்கள்?

ஆயாசம் ஆளைத் தாக்க, மகாதேவன் யோசனை போதும் என்று எழுந்தார். அறைக்குள் சென்று படுத்துக் கொண்டார்.

மனசின் கனம் சற்றும் குறையாமல் ரொம்ப நேரம் அல்லலுற்றபின், தன்னையும் அறியாமல் உறங்கியவர், நாராசமாய் யாரோ அழுவது காதில் விழ, திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார்.

விடிந்துவிட்டதா என்ன?

வேகமாய் எழுந்து ஜன்னலிடம் சென்றபோது "ஐயோ ராஜா..." என்று கதறியவாறு பரிமளம் விழுந்தடித்துக் கொண்டு வாசலுக்கு வருவது தெரிந்தது.

கேட் அருகில் தனியார் ஆஸ்பத்திரி ஆம்புலன்ஸ்...

ஏ... என்ன ஆயிற்று?

பதட்டத்துடன் திரும்பிய நொடியில் முத்து பால் பாக்கெட்டுகளுடன் ஓடிவந்தான். கண்களில் நீர்.

"ரா... ராஜா செத்துட்டானாம் ஸார்... பாடிய வீட்டுக்குக் கொ... கொண்டு வந்திருக்காங்க..."

சொல்லிவிட்டு அவர் பதிலுக்காக காத்திராமல் வந்த வேகத்தில் அவன் ஓட, மகாதேவன் நிற்க முடியாமல் படுக்கையில் உட்கார்ந்தார்.

பார்வையில் பூச்சிகள் பறந்தன...

அடிவயிற்றில் வெட்டுக்கிளிகள் தாவின...

சில்லிட்ட ரத்தம் இருதயத்தில் தேங்கி நின்றது...

அரைமணி கழித்து, கையில் கபில்தேவ் தந்த சின்ன கிரிக்கெட் மட்டையுடன் அடுத்த வீட்டை மகாதேவன் அடைந்தபோது விஷயம் தெரு பூராவும் பரவி, அந்தக் காலை நேரத்திலேயே கேட்டிலிருந்து, உள்வரை முடிச்சு முடிச்சாய் தெரு மனிதர்கள் நின்றிருந்தார்கள்.

வாச அறை பெஞ்சில் ராஜா......

மஞ்சள் பூத்து உப்பின முகம், உடம்பு......

பேரனின் கால்களில் முட்டிக்கொண்டு கதறும் பரிமளம்... பிள்ளை மேல் கவிழ்ந்து அரற்றும் வசந்தா...

வாயில் துண்டை அடைத்தபடி சுவரில் சாய்ந்து உட்கார்ந்துவிட்ட தணிகாசலம்...



கண்களிலிருந்து வழியும் நீரைத்துடைக்கத் தெரியாமல் மாதவன்...

மௌனமாக கிட்டத்தில் சென்ற மகாதேவன் கையிலிருந்த கிரிக்கெட் பேட்டை ராஜாவின் பக்கத்தில் வைத்தார்.

கலைந்திருந்த தலைமுடியைக் கோதி, கன்னத்தை வருடிவிட்டபோது நெஞ்சுக்குள் குமிழாகக் கோபம் வெடிக்க, நிமிர்ந்தார். உரக்கக் கேட்டார்.

"தீர்மானம் பண்ணிட்டீங்களா?"

ஓங்கி ஒலித்த அவர் குரல் சடக்கென்று அந்தக் கூடத்தில் ஒரு அசாதாரண அமைதியை உண்டாக்கியது. மகாதேவன் கண்களை இடுக்கிக்கொண்டார், ஒவ்வொருவராய் ஆழ்ந்து பார்த்தார். பின் வார்த்தை வார்த்தையாய் இன்னும் உரக்கப் பேசினார்:

"கிறிஸ்துவ முறைப்படி புதைக்கப் போறீங்களா, இல்ல ஹிந்து தர்மப்படி செய்யப் போறீங்களானு தீர்மானம் பண்ணிட்டீங்களானு கேக்கறேன்... என்ன, சவப்பெட்டிக்கு ஆர்டர் பண்ணணுமா, இல்ல வெட்டியானுக்குச் சொல்லி அனுப்பணுமானு தெரிஞ்சிக்கறது நல்லது இல்லையா! தயவுபண்ணி, இந்த ஒரு முறையாவது சண்டை இல்லாம ஒரு முடிவுக்கு வந்தீங்கன்னா, ராஜவோட ஆத்மாவுக்கு அது நிம்மதி தர்ற செயலா இருக்கும்னு நா நம்பறேன்... மனசு உடைஞ்சு இருக்கறப்போ இப்படிப் பேசறதுக்காக மன்னிக்கணும். ஆனா, இந்த வார்த்தைகளை இப்பக்கூடச் சொல்லலேன்னா, ராஜா என்னை மன்னிக்க மாட்டான்... ரிச்சுவல்ஸ் ஆர் நாட் ரிலிஜென்... மதம் வேற, சடங்குகள்

வேற... இத இனியாவது மறக்காம இருக்கப் பாருங்க... பெரியவங்க இளையதலைமுறைக்கு வழிகாட்டியா நடந்துக்கணுமே தவிர, அவங்க சீரழிவுக்கும், அழிவுக்கும் நாம, நம்மோட வெறித்தனமான சிந்தனைங்க காரணமாயிடக் கூடாது... எல்லாத்தையும்விட, மனிதாபிமானம் நிறைஞ்ச மனுஷனா இருக்கறது முக்கியம். அவ்ளோதான்... என்னை மன்னிச்சிடுங்க..."

மேலே பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க, குனிந்து ராஜாவின் சில்லிட்டுவிட்ட நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு, யாரோ நிர்வாணமாய் நிற்க வைத்து சவுக்கால் மனசையும், உடம்பையும் விளாசிவிட்ட மாதிரி அதிர்ந்து விட்ட எவரையும் நிமிர்ந்து பார்க்காமல் திரும்பி, மெள்ள அந்த அறையை விட்டு மகாதேவன் நடக்க ஆரம்பித்தபோது, அவர் கண்களில் பெருகிய நீர் கன்னத்தில் விழுந்து, பூமியில் தெறித்தது.

முடிந்தது